# தற்காலத் தமிழ் இலக்கியம்

3713

PRESENTED BY:
V. [illegible]
[illegible]SIVISWANATHAN[illegible]
[illegible]

கு-105

PRESENTED
BY
PL. M. Periakaruppan

PRESENTED BY:
V. ... PL. M.
KASIVIS... ...
...CHETTIAR

# தற்காலத் தமிழ் இலக்கியம்

[ தமிழரின் கலை வளத்தைப்பற்றி ஒரு கட்டுரை முகவுரையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது ]

3713

ஏ. வி. சுப்பிரமணிய அய்யர்

ஜார்ஜ் டவுன் : : சென்னை

பதிப்புரிமை ] [ரூ. 1-8-0

ஜுபிடர் பிரஸ்
சென்னை

3713

# முகவுரை

இந்த நூலின் முதல் பதிப்பு 1933-ஆம் வருஷம் வெளி வந்தது. தற்காலத் தமிழ் இலக்கியத்தைப்பற்றி நவீன முறையில் எனது சிற்றறிவுக்கு எட்டிய அளவு ஆராய்ச்சி செய்திருந்தேன். புதிய முறையில் எழுதப்பட்டிருந்த இந்த நூலைப் பல அறிஞர்கள் நான் எதிர்பாராத முறையில் வரவேற்றார்கள். பத்திரிகைகளும் பாராட்டின. கடந்த பத்து வருஷங்களில் அநேக புத்தகங்கள் தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த நூலுக்கு இரண்டாம் பதிப்பு கொண்டுவரவேண்டுமென்று சில நண்பர்கள் வற்புறுத்தியதின் பேரில், இதைத் திருத்தியும், புதுக்கியும், விரித்தும் எழுதியிருக்கிறேன். நூலுக்கு முகவுரையாகத் தமிழரின் கலைவளத்தைப்பற்றி ஒரு கட்டுரை சேர்க்கப்பட்டிருக்கிறது. இது ஒரு சரித்திரக் காட்சியாக அமைந்திருக்கிறது.

தமிழில் தற்கால முறைகளை அநுசரித்த இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் அதிகமாக இல்லை. இருப்பவையெல்லாம் **இலக்கிய சம்பந்தமான** ஆராய்ச்சிகளும் சரித்திர ஆராய்ச்சிகளுமே. தமிழ் நாட்டின் சரித்திரத்திற்கு ஆதாரங்கள் இப்போது இருக்கும் நிலைமையில், தமிழ் இலக்கிய சம்பந்தமாக மிகவும் முக்கியமான விஷயங்களைப்பற்றிக்கூடத் திட்டமான முடிவுக்கு வர அறிஞர்களால் இயலவில்லை. இலக்கியத்தின் அடிப்படையான தத்துவங்களை அறிந்து, அவைகளை வைத்துக்கொண்டு தமிழ் இலக்கியங்களின் நயங்களையும் தராதரங்களையும் ஆராய்தல் தமிழ் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. தற்கால இலக்கிய சம்பந்தமாக இவ்வித ஆராய்ச்சி இந்த நூலில் செய்யப்பட்டிருக்கிறது.

தற்காலத் தமிழ் இலக்கியம் என்பதில், என்ன அடங்கும் என்பதைப்பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். தற்காலத் தமிழ் இலக்கியம் என்றால் இந்தக் காலத்தில் எழுதப் பெறும் தமிழ் நூல்கள் என்று பொருள் இல்லை. பிரசுரிக்கப் படும் புத்தகங்கள் எல்லாம் இலக்கியம் ஆகா. அவைகளின் பொருளிலும் நடையிலும் கற்றோர் மனத்தைக் கவரக்கூடிய சக்தியும் விசேஷ குணங்களும் இருந்தால்தான் இலக்கியம் என்பதற்கு உரியன ஆகும்; அவை சிருஷ்டி சக்தியுடன் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். மேனாட்டு நாகரிகத்தாலும் கலைகளாலும் மோதுண்ட நமது சமுதாயத்தில் புதிய சக்திகள் தோன்றிவருகின்றன; மக்களின் லட்சியப் போக்கிலும் வாழ்க்கையிலும் மாறுதல்களைக் காண்கிறோம். இவைகளைப் பொருளாகக் கொண்ட இலக்கியம் தான், தற்காலத் தன்மையை அல்லது தற்காலப் பண்பை உடையது என்று சொல்லலாம். இப்போதுள்ள நூலாசிரியர்கள் தங்களுடைய சிருஷ்டியில் இந்தத் தன்மையைப் பிரதிபலிப்பது மன்றி, மக்களின் மனத்திலும் அதைத் தழுவிய உணர்ச்சியை எழுப்பவேண்டும்.

எந்தக் காலத்திலும் எந்த விஷயத்தைப் பற்றியும் அபிப் பிராய பேதங்கள் இருப்பது உலக இயல்பு. ஆதலால் இந்த நூலில் காணப்படும் எல்லாக் கருத்துக்களையும் எல்லோரும் ஏற் றுக்கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இருந்த போதிலும், விருப்பு வெறுப்பின்றி, சிந்தனைத் தெளிவுடனும், கலைப்பாங்குடனும், புலவர்களைப்பற்றிய ஆராய்ச்சி இந்த நூலில் செய்யப்பட்டிருப்பதால், அதில் கூறப்பட்டிருக்கும் அபிப்பிரா யங்களில் பெரும்பாலானவை ரஸிகர்களுக்கும் அறிஞர்களுக்கும் உகந்தனவா யிருக்கும் என்று நம்புகிறேன்.

திருநெல்வேலி,<br>1—1—1942.

ஏ. வி. சுப்பிரமணிய அய்யர்

3713

# பொருளடக்கம்


I. தமிழரின் கலை வளம் ... பக்கம் 1

1. சரித்திரக் காட்சி .... 1-14

இலக்கிய வளர்ச்சி - தமிழ்ச் சங்கம் - சங்க நூல்கள் - தமிழர் வாழ்க்கையின் விரிவு - தமிழ் நாட்டு மன்னர்கள் - சமய எழுச்சி - சைவம் - வைஷ்ணவம் - சமயங்களும் இசைக்கவிகளும் - பக்தி மார்க்கம் - சமய கோஷம் - சமுதாய வாழ்வின் முன்னேற்றம்.

2. ஆலயங்கள் .... 14-21

ஆலயங்களும் கலைச் செல்வமும் - பக்திமார்க்கமும் ஒழுக்க நெறியும் - விக்ரக ஆராதனையும் ஆகமங்களும் - விக்ரக ஆராதனையும் சிற்பமும் - சமய வேறுபாடுகள் - தத்துவ சாஸ்திரங்களின் எழுச்சி.

3. காலவரை அளவுகள் .... 21-43

உரையாசிரியர்கள் - வடமொழிக் கலைகளின் கலப்பு - இடைக்கால இலக்கியச் செல்வம் - கம்பர் - பிற கவிகள் - மடங்களின் எழுச்சி - தமிழ் நாட்டின் ராஜீய நிலைமை - முஸ்லிம்களின் படையெடுப்பு - விஜயநகரத்தின் எழுச்சி - தமிழ்நாட்டின் பிற்கால நிலைமை - கலைவாழ்வின் க்ஷீணம் - சமய வாழ்வின் க்ஷீணம் - ஒழுக்கத்தின் க்ஷீணம் - பிற்காலக் கலைகள் - கட்டிடக் கலை - நாட்டியம் - சங்கீதம்.

II. தற்கால நாகரிகமும் தமிழரும் ... 44

நவீன நாகரிகமும் இந்திய சமுதாயமும் – நாகரிகம் என்பது என்ன? - மேனுடுகளின் நவீன நாகரிகத்தின் எழுச்சி - நவீன நாகரிகத்தால் இந்திய சமுதாயத்தில் உண்டான மாறுதல் - தமிழும் பிற மொழிகளும் - தமிழ் வடமொழியை ஆகருஷித்த முறை - தமிழரின் தற்கால ஆகருஷண சக்தி - விஞ்ஞான சாஸ்திர அறிவும் தமிழும் - தமிழும் பிறமொழிச் சொற்களும் - தமிழும் தற்கால அறிவும் - தமிழரின் பிதிரார்ஜிதம் - தமிழ் இலக்கிய உலகின் தற்கால நிலைமை.

III. தமிழ் இலக்கியம் - கவிதை ... 63

1. சுந்தரம் பிள்ளை .... 63-68

தற்காலத் தமிழ்க் கவிகள் - மனோன்மணீயத்தின் நடை - நாடக பாத்திரங்கள் - சிவகாமி சரிதம் - தமிழ் இலக்கியத்தில் சுந்தரம் பிள்ளையின் ஸ்தானம்.

2. கிருஷ்ண பிள்ளை .... 69-73

இரட்சண்ய யாத்ரிகம் - கவிதை உலகில் கிருஷ்ண பிள்ளையின் ஸ்தானம்.

3. சுப்பிரமணிய பாரதி .... 73-98

தேசீய மறுமலர்ச்சியும் கவிகளும் - தேசீய கீதங்கள் - தோத்திரப் பாட்டுக்கள் - கண்ணன் பாட்டு - விடுகவிகள் - குயில் பாட்டு - பாஞ்சாலி சபதம் - பாரதியின் புலமை - கவிதை - தமிழ் இலக்கியத்தில் பாரதியின் ஸ்தானம்.

4. தேசிகவிநாயகம் பிள்ளை .... 98-102

அவருடைய பாட்டுக்கள் – சிறு பாட்டுக்கள்.

5. பாரதிதாசன் .... 102-112

சஞ்சீவி பர்வதத்தின் சாரல் - பிற பாட்டுக்கள் - பாரதியும் பாரதிதாசனும்.

6. செய்யுட் புலவர் .... 112-114

நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை - சுவாமி சுத்தானந்த பாரதியார் - மாயூரம் வேதநாயகம் பிள்ளை - வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் - வெ. ப. சுப்பிரமணிய முதலியார் - மஹாவித்வான் ரா. ராகவய்யங்கார்.

IV. தமிழ் இலக்கியம் - வசனம் ... 115

முதல் பகுதி .... 115-152

தமிழும் வசன நடையும் - சமீப காலத்திலுள்ள தமிழ் வசனம் - வசன நூல்கள் - வேதநாயகம் பிள்ளை - பிரதாப முதலியார் சரித்திரம் தற்கால நாவலா? - நூலின் நடை - பொருட்செறிவு - வீராசாமி செட்டியார் - பி. ஆர். ராஜமய்யர் - கமலாம்பாள் சரித்திரம் - பாத்திரங்கள் - நூலின் வசன நடை - வசனகர்த்தா பாரதி - ஞானரதம் - சந்திரிகையின் கதை - வ. வெ. சு. ஐயர் - அவர் புலமை - மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள் - சிறு கதைகள் - வேறு வசன நூல்கள் - சுத்தானந்த பாரதி - டாக்டர் உ. வே. சாமிநாதையர் - ஏனைய வசனகர்த்தர்கள்.

V. தமிழ் இலக்கியம் - வசனம் ... 153

இரண்டாம் பகுதி .... 153-173

இலக்கிய ஆராய்ச்சி - இலக்கிய சம்பந்தமான ஆராய்ச்சி - இப்போதுள்ள ஆராய்ச்சி

நூல்கள் - நாவல்களும் சிறு கதைகளும் – சிறு கதைகள் - நாடகங்கள் - பத்திரிகைகளும் தமிழ் வளர்ச்சியும்.

VI. முடிவுரை ... 174

பெயர் அட்டவணை .... 179

நூல் அட்டவணை .... 183

3713



ஆசிரியர் - ஏ. வி. சுப்பிரமணிய அய்யர்

# தமிழரின் கலைவளம்

3713

## 1. சரித்திரக் காட்சி

பண்டைக் காலத்திலும் இடைக்காலத்திலும் தமிழரிடம் கலைவளம் நிரம்பித் ததும்பி இருந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் அறியலாம். உலகத்தின் குழந்தைப் பருவத்தில், மிக்க புராதனத்தையும் தனிச் சிறப்பையுமுடைய ஒரு நாகரிகத்தை அவர்கள் பெற்றிருந்தார்கள். அதைச் சுதந்தர வாழ்வினால் ஏற்பட்ட இன்பத்தாலும் ஆர்வத்தாலும் வளர்த்தார்கள். ஆண்களின் தோள் வலியினாலும், மாசற்ற வீரத்தாலும், அந்த வீரத்தை எழுப்பிப் பெருக்கிய பெண்களின் அழகாலும், களங்கமற்ற காதலாலும், தமிழர்கள் தங்கள் நாகரிகத்தைக் காத்ததுமன்றி, அதைப் பல கலைகளாலும் பேணினார்கள். பேராசையும், பொருளுடைமையும் ஜனங்களின் மனத்தில் போதிக்கம் பெற்றிராத அக்காலத்தில், கிராமங்களில் நிலவளமும் நீர்வளமும் அளித்த செல்வத்தாலும், பட்டினங்களில் கடல் கடந்து செய்த தூரதேச வாணிபம் கொடுத்த செல்வத்தாலும், பசியும் வறுமையும் இன்னவென்று அறியாமல் ஜனங்கள் கவலையற்று வாழ்ந்தார்கள். தமிழ் நாட்டுக் குறுநில மன்னர்கள், பாமர ஜனங்கள், இவர்களின் வாழ்க்கை, போரையும் காதலையும் மாறி மாறிப் போற்றும் ஒரே திருவிழாவாய் இருந்தது. அது ஆடல்களும் பாடல்களும் மலிந்த விழா. சமயம் உருப்பெற்று வலிமை அடைந்திராத அந்நாளில், அவரவர்கள் தங்கள் இஷ்டப்படி கடவுள்

களை வணங்கிப் பூசைகள் செய்தார்கள் ; பலிகளும் கொடுத்தார்கள். இந்திரன், சிவன், பலதேவன், முருகன் என்ற பெயர்களாலும், வேறு சில பெயர்களாலும் தமிழர் தங்கள் கடவுள்களை வணங்கினார்கள்.

## இலக்கிய வளர்ச்சி

கிறிஸ்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னாலே தமிழ் மொழியும் இலக்கியமும் நல்ல வளர்ச்சியைப் பெற்றிருந்தன. கல்வியில் சிறந்த புலவர்கள் பலர் விளங்கிப் பாடல்களை இயற்றினார்கள். இதற்கு, அந்த மொழியில் இப்போதுள்ளவைகளில் ஆதி நூலாய்க் கருதப்படும் தொல்காப்பியமே பெரிய சான்றாகும். அதன் இலக்கண வளத்திலிருந்து, அதற்கு முன்னாலேயே, இலக்கண முறைகளையும், விதிகளையும் அநுமானிக்கக்கூடிய இலக்கியங்கள் பல இருந்திருக்கவேண்டுமென்பது தெளிவாகும். அதன் பொருள்-அதிகாரம் அக்காலத்துத் தமிழரின் வாழ்க்கையின் சித்திரமாயிருக்கிறது. பல புலவர்களும் மன்னர்களும் தமிழ் மொழியைப் பேணினார்கள். இயற்கையின் வனப்பையும், நாட்டின் பழக்க வழக்கங்களையும், வாழ்க்கையின் இன்பத்தையும், புலவர்கள், தாங்கள் பார்த்தபடியே கற்பனை விகாரமின்றிப் பாடினார்கள். மன்னர்களுடைய பராக்ரமத்தையும் பாட்டுக்களில் புகழ்ந்தார்கள்.

## தமிழ்ச் சங்கம்

பாண்டியர்களின் தலைநகராகிய மதுரையில் தமிழ்ச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. முதல் இரண்டு தமிழ்ச் சங்கங்களைப் பற்றிப் பரம்பரையாகக் கிடைத்திருக்கும் கதைகளும் விவரங்களும் சரித்திர பூர்வமாகப் பூராவும் உண்மையானவையா என்று திட்டமாகச் சொல்ல முடியாவிட்டாலும்,

கடைச் சங்கத்தின் நடவடிக்கைகளைப் பற்றி இவ்விதச் சந்தேகம் எழ இடமில்லை. அதன் காலத்தைப் பற்றித் திட்டமான அறிவு இல்லாததால், அபிப்பிராய பேதங்கள் இருந்து வருகின்றன. அரசர்களின் ஆதரவால் இச்சங்கம் அதிகாரத்துடன் நடைபெற்றது. பல புலவர்கள் இதில் கலந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் பெயர்களும் நூல்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இலக்கியங்களின் நயத்தைச் சோதனை செய்து, மேன்மை இருந்தால் அவைகளைப் போற்றி ஒப்புக்கொள்வார்கள்; இல்லாமல் போனால் அவைகளை நிராகரிப்பார்கள். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே, உலகத்திலுள்ள வேறு எந்த நாடுகளிலும் இவ்வித உன்னதமான ஒரு ஸ்தாபனம் இருந்ததாகச் சரித்திர பூர்வமாகத் தெரியவில்லை. இலக்கியப் பரிசிலனைக்கும் முன்னேற்றத்திற்கும் சிருஷ்டிக்கப்பட்ட சங்கம், தமிழகத்தின் தனிச் சிறப்பாக இருக்கிறது. அக்காலத்தில் அதன் ஆதரவிலும், அதற்குப் புறம்பாகவும், வெளிவந்த இலக்கிய ரத்னங்களே, கலித்தொகை, குறுந்தொகை, பத்துப்பாட்டு, புறநானூறு, அகநானூறு முதலியன.

## சங்க நூல்கள்

சங்க நூல்கள் சிறந்த இலக்கியங்கள்; விசேஷ ஆரியக் கலப்பின்றித் திகழ்ந்து தமிழரின் தனிப் பண்பை உணர்த்தும் நூல்கள். பழந் தமிழரின் நாகரிகத்தின் இயல்பையும் விநோதங்களையும் பளிங்கு போல் காட்டக்கூடிய பாடல்-களஞ்சியம். பெரும்பான்மையான சங்க நூல்களின் செய்யுள் நடையும் கவிப்போக்கும் இயற்கையாயும், செம்மையாயுமுள்ளன. பிற்காலக் காவியங்களிலுள்ள அணி மிகுதியும், மனோபாவத் திரிபுகளும், கற்பனைமுறை விரிவும், சப்த சித்திர அலங்காரங்களும் இன்னிசைப் பெருக்கும், சங்க நூல்களில்

அதிகமாய் இல்லாதிருந்தும், அதனுல், தமிழ் இலக்கியத்தில் அவைகளுக்குள்ள ஸ்தானம், எவ்விதக் குறைவையும் அடையவில்லை. சமதள பூமிக்கு இறங்குமுன், ஒரு நதியானது மூலத்திலிருந்து புறப்பட்டுக் கருமேகங்கள் மூடியிருக்கும் அடர்ந்த காடுகளுக்கு நடுவேயுள்ள பள்ளத்தாக்குகள் வழியே ஓடிவந்து, இடையிடையே நிற்கும் பாறைகளின் மீது துள்ளிப் பாய்ந்து, இரு பக்கங்களிலுமுள்ள சோலைகளில் மொய்த்திருக்கும் வண்டினங்களின் ரீங்காரத்தினிடையே, மதுரமான ஓசையுடன் மலைப் பிரதேசத்தில் திரியும் போது, அதில் ஓடும் தண்ணீர் களங்கமற்று, குளிர்ச்சி மிகுதியுடன் கலந்த தீஞ்சுவையைப் பெற்றிருப்பது போலவே, சங்க இலக்கியங்கள் இருக்கின்றன; அவை தமிழ் அணங்கின் கன்னிப் பருவ எழிலை வீசுகின்றன. தமிழ்ச் சங்கம் பண்டைக் காலத் தமிழரின் கலைவளத்தின் உயர்நிலை; சங்க நூல்கள் அதன் மணிமுடி.

## தமிழர் வாழ்க்கையின் விரிவு

வடநாட்டிலிருந்த ஆரியர்களில் சிலர் தெற்கே வந்து தங்களுடைய நாகரிகத்துடனும், பழக்க வழக்கங்களுடனும், சமுதாயக் கோட்பாடுகளுடனும், தமிழ் நாட்டில் குடியேறினுர்கள். இருந்தபோதிலும், வெகுகாலம் வரை தமிழர் ஆரியர்களின் நாகரிகத்தைப் புறக்கணித்துத் தங்களுடைய பழமையான பழக்க வழக்கங்களையே கைக்கொண்டு வாழ்க்கையை நடத்திஞர்கள். மெள்ள மெள்ள ஆரியக் கொள்கைகளும் பரவத் தொடங்கின. வீரத்திலும் காதலிலும் ஈடுபட்ட தமிழரின் வாழ்க்கையில், நாளடைவில் ஒழுக்க உணர்ச்சியும் தெய்வபக்தியும் பிறந்தன. ஒழுக்க நூலாசிரியர்கள் பலர் தோன்றிஞர்கள். அவர்களில் தலை சிறந்த வள்ளுவர், தமது ஒப்பற்ற குறளைத் தமிழருக்கு ஈந்து,

தமிழ்ப் பாஷைக்கு என்றும் அழியாப் புகழைக் கொடுத்தார். தமிழிலுள்ள தலைசிறந்த ஒழுக்க நூலும் அறிவு நூலும் இதுவே. அநேக குறட்பாக்களில் அற்புதமான கவிதை மணம் கமழ்கிறது. பிற பாஷைகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் தனிச் சிறப்பு இந்தத் தமிழ் நூலுக்குத்தான் கிட்டியிருக்கிறது. ஜனங்களின் மனமும் அவர்கள் அறியாமலே விரிய ஆரம்பித்தது. பாரமார்த்திக விஷயங்களும் பிரபஞ்சத்தின் விகாசத்தின் அற்புதமான தன்மையும், கல்வி அறிவில்லாத அவர்களின் மனத்தைக் கவர ஆரம்பித்தன. சமண மதமும் பௌத்த மதமும், சில நூற்றாண்டுகளாகத் தமிழரிடம், அவர்களுடைய நற்பயனால், ஆதிக்கம் பெற்றன. உயரிய சீலமுடைய இந்த இரண்டு மதங்களின் தத்துவங்களும் கொள்கைகளும் எப்படி இருந்தபோதிலும், அவைகளால் தமிழரின் வாழ்வும் கலைகளும் அதிக மேம்பாட்டை அடைந்தன. அஹிம்சையும், தூய்மையான வாழ்க்கையும், ஒழுக்க நெறியும், எல்லா உயிர்களிடத்தும் பரந்த அன்பும், மனிதனுக்கு அவசியமென்று இந்தச் சமயங்கள் வற்புறுத்தித் தமிழரிடம் இந்தக் குணங்களையும் வளர்க்க முயன்றன. சமுதாயத்தில் கட்டுப்பாடுகள் ஏற்பட்டன.

## தமிழ் நாட்டு மன்னர்கள்

இந்தக் காலத்தில், தமிழகம் சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களால் அரசாளப்பட்டது. அரசு, புஜபராக்ரமத்திற்கும் சைன்யத்திற்குமே உரியது என்ற கொள்கையைக் கைப்பிடித்த இந்த மன்னர்கள், ஒருவரை ஒருவர் வெல்ல அடிக்கடி முயற்சி செய்து, போர்களைப் புரிந்து, தங்களுடைய குடிகளுக்கு ஆரவாரமும் வீரமும் பொருந்திய வாழ்க்கையை அளித்தார்கள். இவ்விதமாய்ச் சண்டைகள் பல நடந்த போதிலும், அதனால் சமுதாய வாழ்வு தடைப்பட

வில்லை. போர்த் தொழிலில் வேட்கை கொண்டவர்களைத் தவிர, மற்றவர்கள் தங்களுடைய தொழில்களில் ஈடுபட்டார்கள். அரசாட்சி முறைகளும் ஒருவாறு தோன்றின. கிராம வாழ்க்கையும், கிராம ஆட்சியும் சமுதாயத்தாலேயே நடத்தப்பட்டன. இயற்கையாயுள்ள நீர்வளத்தாலும், அரசர்களால் ஆக்கப்பட்ட நீர்ப்பாசன வசதிகளாலும், விவசாயம் செழித்தோங்கியது. கால்நடைகள் பொருட் செல்வமாகக் கருதப்பட்டன. வாழ்க்கை இன்பரஸம் மிகுந்த கனியாகவே இருந்தது. தமிழ்நாட்டில் மூவேந்தர்கள் அரசாட்சி செய்துகொண்டிருந்த காலத்தில், அவர்களில் ஒவ்வொருவரின் சாம்ராஜ்யமும் ஒவ்வொரு காலத்தில் மற்றவர்களுடையதை உள்ளடக்கி அதிக வலிமையைப் பெற்றிருந்தது. செங்குட்டுவன் காலத்தில் சேர நாடும், கரிகாலன் காலத்தில் சோழ நாடும், நெடுஞ் செழியன் காலத்தில் பாண்டிய நாடும், மற்ற நாடுகளை விட அதிக சக்தியையும் செல்வாக்கையும் பெற்றிருந்தன. தமிழ்நாட்டிற்கு அடுத்த வடபக்கத்தில், பல்லவ மன்னர்கள் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு, தங்களுடைய சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்தினார்கள். இவர்களுடைய அரசாட்சி சில நூற்றாண்டுகள் வரை பெருங் கீர்த்தியுடன் நடைபெற்றது; சோழ நாடும் சிலகாலம் பல்லவ மன்னர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. அவர்களில் பலர் சமண பௌத்த மதங்களுக்கு ஆதரவு அளித்தார்கள்.

## சமய எழுச்சி : சைவம்

சமண பௌத்த மதங்களின் ஆதிக்கம் தமிழர்களிடம் ஒரு நூதன உணர்ச்சியையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலையும் கிளப்பியது. முன்னாலேயே ஒருவாறாக ஜனங்களின் மனத்தில் பதிந்து கிடந்த ஆஸ்திக மனப்பான்மையும், சைவ, வைஷ்ணவப் பற்றுதலும், புத்துயிர் பெற்றன. சமணமும்

பௌத்தமும் நாட்டில் உலாவியதால் சைவமும் வைஷ்ணவமும் மகத்தான வலிமையை அடைந்தன. மதப் பற்றும் ஆர்வமும் தமிழரிடம் ஊறிப் பொங்கி எழுந்தன. கட்டுக் கடங்காத ஆவேசத்துடன் சைவ மதம் பரவியது. நாட்டில் தோன்றிய சைவ சமய எழுச்சியை வீரத்தோடு வளர்த்து, பிற மதங்களைத் துரத்தி, அவைகளில் ஈடுபட்டிருந்த அரசர்களையும் சைவத்தைக் கைப்பற்றச் செய்து, சைவ மதத்தை நிலைநாட்டி, அது கொண்டாடும் பரம்பொருளையும் அதன் உண்மைகளையும், தேனினும் இனிமையாயும், கவிச் சுவை நிறைந்தனவாயும், அருள் உணர்ச்சியின் சுடராயுமுள்ள, தோத்திரப் பாக்களால் பாடிய ஞான சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர் முதலிய சமய குரவர்கள் எழுந்தார்கள். தமிழரின் மனப்பான்மை மாறுதல் பெற்றது. போரிலும் காதலிலும் உயிரைக் கொடுத்த தமிழர், சமயத்திற்கும் உயிரைக் கொடுக்கும் மனப்பான்மையைப் பெற்றார்கள்.

## வைஷ்ணவம்

சைவம் செழித்த காலத்தில், வைஷ்ணவமும் செழித்தது. சைவ சமயத்துக்கும் வைஷ்ணவ சமயத்துக்கும் உண்மையில் விசேஷ பேதமில்லை. பரம்பொருளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பேரில்தான் வித்தியாசம் ஆரம்பத்தில் இருந்தது. பிற்காலத்தில் வழிபாட்டு முறைகளில் அதிக வித்தியாசங்கள் ஏற்பட்டன. இரண்டு மதங்களும் ஒரே முறைகளைப் பின்பற்றியே வளர்ந்தன. மனித இயற்கையிலிருக்கும் வேறுபாடுகளுக்குத் தக்கவாறு மதாசார வேறுபாடுகளும் தோன்றுவது இயல்பு. உண்மையான ஒழுக்க நெறியும், அந்த நெறியை மனிதன் கைப்பற்றுமாறு செய்ய வேண்டிய தூண்டுதலும், உபதேசமும், எந்த மதத்திலும் முக்கியமான அம்சங்களா யிருக்கின்றன. இவற்றை எடுத்து

விட்டால், பாரமார்த்திகத் தத்துவங்களும் சமுதாய ஆசாரப் பழக்க வழக்கக் குவியல்களுமே மிஞ்சும். பாரமார்த்திகத் தத்துவங்கள் சம்பந்தமாக, புத்தி, யுக்தி பூர்வமான வாதங்கள் அடிக்கடி நடைபெற்ற போதிலும், அவைகளைப் பற்றிய கொள்கைகளும் அறிவும் விவகார ரீதியாய்த் திட்டமாய் நிரூபணம் செய்யக்கூடாதனவாய் இருக்கின்றன. அவைகள் உண்மையாய் இருக்கவேண்டுமென்று ஆப்தவாக்கியப் பிரமாண நியாயத்தினாலேயே கொள்ளப்படுகின்றன. பல மதங்களின் தலைவர்கள் பலவிதக் கொள்கைகளைப் பிரசாரம் செய்திருக்கிறார்கள். ஜனங்களிடம் ஜாதிகளாலும் மதப் பிரிவினைகளாலும் ஏற்பட்ட பல பாகுபாடுகளுக்குத் தக்கவாறு, ஆசாரங்களும் பழக்க வழக்கங்களும் ஏற்பட்டன. தமிழ் நாட்டில் சமணமும் பௌத்தமும் ஒருபுற மிருக்க, சைவமும் வைஷ்ணவமும் தனிப்பட்ட வேறுபாடுகளுடன் ஓங்கி வளர்ந்திருக்கின்றன. வைஷ்ணவத்தைப் பரப்பிய பன்னிரு ஆழ்வார்கள், தங்களுடைய அளவற்ற பக்தியையும், மதக் கொள்கைகளையும், தத்துவங்களையும், கவிதை மணத்துடன் நெஞ்சை உருக்கும் இன்பப் பாசுரங்களால் வெளியிட்டிருக்கிறார்கள்.

## சமயங்களும் இசைக் கவிகளும்

பெரும்பான்மையாக மதப் பற்றால் பிறந்த சக்தியாலேயே கலை வாழ்வு அக்காலத்தில் ஆக்கப்பட்டும் வளர்க்கப்பட்டும் வந்தது. சைவ வைஷ்ணவ மதங்கள் வேரூன்றித் தமிழர்களின் வாழ்க்கைக்கு ஒரு நூதன அறிவையும், அநுபவத்தையும், ஆர்வத்தையும் கொடுத்து, அதைப் பண்படுத்த ஆரம்பித்த காலத்தில், அவர்களின் கலைவளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தது. கடவுளிடம் அன்புகொண்டு ஈடுபட்டுப் பாடுபவன், சாதாரண மனிதனாயிருந்தாலும், அவன் பாட்டு

மனத்தைக் கவருமென்றால், அப் பரம்பொருளின் அருளைப் பூரணமாகப் பெறவேண்டுமென்று பேரவாக்கொண்டு மனம் உருகி நெஞ்சம் கசிந்து பாடும் பக்தர்கள் இசைக் கவிச் சக்ர வர்த்திகளா யிருந்தால், அவர்களின் தோத்திரப் பாடல்கள் எவ்வளவு உயரிய சிறப்பை உடையனவாயிருக்கும்! தமிழரின் சமய வேட்கையால் தமிழ் இலக்கிய உலகு பெற்ற பாக்கியம் அளவற்றது. சைவ நாயன்மார்களின் தேவாரத்திலும், வைஷ்ணவ ஆழ்வார்களின் பிரபந்தங்களிலும், கல் நெஞ்சத்தையும் உருகச்செய்யும் இன்பப் பாசுரங்கள், கவி நயமும், இசை ஏற்றமும், பொருள் விசேஷமும் பொருந்தி, நூற்றுக் கணக்காய் மலிந்து கிடக்கின்றன. இவைகள் இயற்றப்பட்டிராமலிருந்தால் தமிழ் இலக்கியக் களஞ்சியம் எவ்வளவு குறைவுபட்டிருக்குமென்பதை நினைத்தாலே, இவைகளின் ஒப்பற்ற பெருமை விளங்கும்.

சமண, பௌத்த நூல்களும் தமிழில் மலிந்து இவ்வாறே கிடக்கின்றன. அவைகளில் அநேகம் இலக்கியச் சுவையும், கவிச் சுவையும் நிறைந்தவை; சிலப்பதிகாரம், மணிமேகலை, ஜீவக சிந்தாமணி, சூளாமணி இவைகளில் தலை சிறந்தவை. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் சிலப்பதிகாரத்திற்கு மிக உன்னதமான ஸ்தானம் உண்டு. தமிழ் நாட்டுக்குச் சொந்தமான ஒரு சிறந்த தமிழ்க் கதையைப் பொருளாகக் கொண்ட முதல் தமிழ் நூல் இதுவே. தமிழ் அகவல் நடையின் அற்புதமான சிகரங்களையும், பண்ணுடன் கலந்த கவிதையையும், சிலப்பதிகாரத்தில் காணலாம். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் இலக்கிய நூல் அது ஒன்றேதான் இப்போது இருக்கிறது என்று தமிழ் அறிஞர்கள் கருதுகிறார்கள். தமிழரின் புராதனமான நாகரிகம், கலைகள், இவைகளைப் பற்றிய அநேக நுட்பமான விஷயங்கள் அந்த நூலில் காணப்படுவதால், அதற்கு

விசேஷ ஏற்றம் ஏற்பட்டிருக்கிறது. மணிமேகலை சுமாரான எளிய நடையையும் நல்ல கதைப் போக்கையும் உடையது; பௌத்த மதக் கொள்கைகளின் களஞ்சியம். இலக்கியம் என்ற ரீதியில் ஜீவக சிந்தாமணி மற்ற இரண்டையும் விட உயர்ந்தது என்று சொல்லலாம். சிந்தாமணி, இன்னிசையும் நல்ல கவிதையும் மலிந்த வாக்கை உடையது. கம்பர் தமக்கு முன்னுலிருந்தவர்களில் திருத்தக்க தேவருக்கே அதிகமாகக் கடமைப்பட்டுள்ளார். சிந்தாமணியின் விருத்தங்களின் எளிய நடையும், பொலிவும், செம்மையான கற்பனை சேர்ந்த கவிதையும், அதன் ஆசிரியரை ஒரு சிறந்த கவி என்ற ஸ்தானத்திற்கு உயர்த்துகின்றன. இந்த ஜைன காவியத்தில் ஈடுபட்டு மகிழ்ந்துகொண்டிருந்த சோழ மன்னனைச் சைவத்துக்கு இழுக்கவே சேக்கிழார் பெரிய புராணத்தை இயற்றினர் என்ற கதை சிந்தாமணியின் பெருமையை நன்கு விளக்குகிறது. சூளாமணியும் தோலாமொழித் தேவர் என்ற ஒரு ஜைனரால் ஆக்கப்பட்ட நல்ல காவியம். அதன் நடையின் எளிமையும், வாக்கின் இனிமையும், கவிதையின் நயமும் போற்றத்தக்கன.

## பக்தி மார்க்கம்

புதிய ஊக்கத்துடன் தமிழ் நாட்டில் ஏற்பட்ட சமய உணர்ச்சி பலப்பட்டுக்கொண்டே வந்தது. அரசர்களும் அதில் ஈடுபட்டார்கள்; சமய வளர்ச்சிக்கு அவர்கள் ஆதரவு அளித்தார்கள்; மதாசாரியர்களைப் போற்றிவந்தார்கள். மதத் தலைவர்கள் நாடெங்கும் திக்விஜயம் செய்து, கரைகடந்த உற்சாகத்துடன் சமயப் பிரசாரம் செய்தார்கள். கோவில்களுக்குப் பிரதானம் ஏற்பட்டது. சமயத் தலைவர்கள் தங்களுடைய சுற்றுப் பிரயாணங்களில் பல கோவில்களுக்குப் போய்க் கடவுளைத் தரிசனம் செய்து மனம் உருகிப் பாடி

அவைகளைப் புனிதமாக்கினார்கள். அந்த நாளில் கோவில்கள், பிந்திய காலத்தில் ஏற்பட்டன போல், கல்லில் இழைத்த கம்பீரக் காவியங்களல்ல. சாதாரணமாக உள்ள சிறு குடில்களே போல் தோன்றின. சமய சக்தியும் உணர்ச்சியும் பக்தர்களின் உற்சாகத்தால் விரிந்து ஜனங்களிடம் பரவின. நாடெங்கும் சமய கோஷம் முழங்கி எல்லோரையும் தட்டி எழுப்பியது. பிரபஞ்சத்தை மூடியிருக்கும் மாயத் திரை மாய்க்கப்பட்டதென்றும், உண்மையான ஞானமார்க்கம் வெட்ட வெளிச்சமாய்விட்டதென்றும், நம்பிக்கை எழுந்தது. அந்த உண்மையைத் தேடுவதிலேயே தங்களுக்கு வாய்த்திருக்கும் சக்திகளை உபயோகிக்கவேண்டுமென்று ஜனங்கள் நினைத்தார்கள். கடவுள் மனிதனைத் தன் பக்கம் வரும்படி கூவி அழைப்பது போலவும் எண்ணினார்கள். நித்யானந்த மலையின் உச்சியில் என்றும் நிலைத்து வாழலாமென்று கனாக்கள் கண்டார்கள். பக்தி மார்க்கமே சிறந்ததென்று நினைத்தார்கள். கடவுளை இடைவிடாது தொழுது, அருளைப் பெற்று, அவருடைய திவ்ய பாதங்களைச் சேருவதே மனித வாழ்க்கையின் லட்சியத்தின் ஆதியும் அந்தமும் என்று பறை சாற்றப்பட்டது. அப்படிச் சேர நினைத்து, ஆடிப் பாடி, ஆனந்தக்கூத்தாடும் அடியார்களுக்குப் பணிசெய்வதே மனிதனின் கடமை என்று புகட்டப்பட்டது. கடவுளை மனிதன் தன் உருவத்திலேயே நெருங்கி அறியக்கூடுமாதலால், அவர்மீதுள்ள உள்ளன்பை, நாயகன் நாயகி பாவம் கொண்டு வளர்த்து, பக்தர்கள் பாடி அநுபவித்தார்கள். இந்த மனோபாவம் தமிழர்களிடம் தோன்றிப் பரவியது. இதில் ஊறி அபரிமிதமான இசைச் சுவையும் கவிச் சுவையும் பெற்ற பாட்டுக்களைப் பற்றி முன்னால் கூறப்பட்டிருக்கிறது. தேவாரத்திலுள்ள ஒரு சில பகுதிகளும், நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திலுள்ள பெரியாழ்வார் ஆண்டாள் முத

லியவர்களின் பல பாசுரங்களும் இந்த இனத்தைச் சேர்ந்தவை.

## சமய கோஷம்

சமய உணர்ச்சி தீவிரமாய் இருந்தபோதிலும், கல்வியும் சமய அறிவும் ஜனங்களிடத்தில் அந்தக் காலத்தில் பரவவில்லை. படித்தவர்கள் மிகச் சிலரே இருந்தார்கள்; பள்ளிக்கூடங்களும் ஏட்டுப் புஸ்தகங்களும் அதிகமாக இல்லாததால், படிப்பைக் குருமுகமாகவே ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. சமய அறிவைக் கற்றுக்கொள்ளவும் குருக்கள் வேண்டியதாயிற்று. அரசர்கள், சிற்றரசர்கள், பிரபுக்கள் இவர்கள் ஆதரவும் போஷணையுமே கல்விமான்களுக்கு உற்சாகம் கொடுத்தன. சமயப் பற்றுல் கல்வியில் ஈடுபட்டு, அதை மதப் பிரசாரத்திற்கு முக்கிய கருவியாகச் சிலர் கருதினுர்கள். அதன் காரணத்தால் இவர்கள் இலக்கிய வளர்ச்சியில் அதிக ஊக்கம் காட்டினுர்கள். ஜனங்களுக்குக் கல்வியைப் புகட்டி, அதன்மூலம் சமய பக்தியை உண்டாக்கிச் சமயக் கொள்கைகளை நிலைநிறுத்துவது இயலாத காரியம். அதற்குப் போதிய வசதிகளும் சாதனங்களும் கொஞ்சங்கூட இல்லை. எல்லோரும் கல்விக்கு உரித்தானவர்கள் என்ற தற்கால எண்ணம் அப்போது எழவில்லை. சமயம் மக்கள் கூட்டத்தின் நம்பிக்கையால் ஓங்கினதே யொழிய அறிவு மூலம் ஓங்கவில்லை. மதத் தலைவர்கள் பெரும்பான்மையான ஜனங்களைத் தங்கள் தங்கள் மதத்தில் சேர்க்க முயற்சி செய்தார்கள். இதற்குப் பலவித உபாயங்களைத் தேடினுர்கள். போரிலும் புஜவலியிலும் ஆநந்தித்த ஜனங்களுக்குச் சமய உண்மைகளைப்பற்றிய தர்க்கங்களும், எதிர்வாதங்களும், வாய்ச் சண்டைகளும் விருந்தாக அளிக்கப்பட்டன. அரசர்களின் ஆதரவில் சைவ வைஷ்ணவங்களின் ஏற்றம்,

தாழ்வு, இரு மதத் தலைவர்களாலும் பண்டிதர்களாலும் சண்டப் பிரசண்டமாய் வாதம் செய்யப்பட்டன; வெற்றியும் தோல்வியும் தீர்மானிக்கப்பட்டன. பரம்பொருளின் தன்மையை இவ்வித வாதங்களால் நிர்ணயிக்க முடியுமென்றும், வாக்கு வன்மையில் வல்லவரின் மதந்தான் உண்மையான மதமென்றும் நினைத்தார்கள் போலும்! தவிரவும், சமயக் குழாங்களும் திருச்சபைகளும் ஏற்பட்டன. அடியார்கள் கூட்டங்களும் பஜனை கோஷ்டிகளும் கிராமங்களிலும் பட்டணங்களிலும் கிளம்பின. சங்கீதக் கலையின் முன்னேற்றத்திற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிட்டியது. கல்வி கற்றிராத ஜனங்களுக்கு இசை நிறைந்த பக்திரஸப் பாடல்களையும் இன்ப கானத்தையும் அடிக்கடி கேட்டு அறிய முடிந்தது. சமய வாழ்வின் தூய்மையும், ஆத்ம வாழ்வின் ஒளியும் எல்லோருக்கும் கிட்டும் என்ற ஞானம் பரவி, மக்களுக்குச் சாந்தமயமான வாழ்க்கையையும், பரத்தில் திடநம்பிக்கையையும் அளித்தது.

## சமுதாய வாழ்வின் முன்னேற்றம்

இவ்வித நிகழ்ச்சிகளால் தமிழரிடம் சமுதாய உணர்ச்சியும் ஒருவிதமான தேசபக்தியும் தோன்றின. அரசர்களும் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்தார்கள். போர் வீரர்களின் தீரத்தாலும், அமைச்சர்களின் புத்தி பலத்தாலும், குடிகளின் ராஜபக்தியாலும், அரசர்கள் இராஜ்ய பாரத்தை ஆர்வத்துடன் வகித்து வந்தார்கள். அரசாட்சி முறைகளும் திட்டங்களும் அபிவிருத்தி அடைந்தன. செல்வம் செழித்தது. கலைகளும் செழித்தன. நாட்டில் போக்குவரத்து சாதனங்கள் ஏராளமாக ஏற்படுத்தப்பட்டன; சத்திரங்கள் கட்டப்பட்டன; குளங்கள் வெட்டப்பட்டன. கிராமங்களில் சமுதாய வாழ்வு கட்டுப்பாடுடைய

சுதந்தரத்துடன் நடைபெற்றது. அவரவர்கள் தங்கள் தங்கள் தொழிலைப் பேணி வந்தார்கள். ஜீவனோபாயமாகச் செய்யும் தொழிலினால் மாத்திரம் சந்தோஷமும் மனோ ரம்யமும் ஏற்படாது. ஒரு கொள்கையையோ, இலட்சி யத்தையோ கையாண்டு, தன்னுடைய ஆற்றலையும், புத்தி யையும், ஆத்ம சக்தியையும், சுயநலமின்றி உபயோகிப் பதாலேயே மனிதனுக்கு உண்மையான இன்பம் விளையும். சமயங்களை வலுக்கச் செய்வதிலும், பக்தியைப் பெருக்கு வதிலுமே தமிழர் தங்கள் சக்திகளை அர்ப்பணம் செய்தார் கள். ஓர் இயக்கத்தின் ஜோதியைப் புதிதாய்க் கண்டவர் களும், அதன் கொள்கைகளைப் புதிதாய்க் கைப்பற்றினவர் களும் மட்டில்லாத ஊக்கத்துடன் அதை நடத்துவது உலக இயல்பு.

## 2. ஆலயங்கள்

மதத் தலைவர்களின் காலக்ஷேபங்களைக் கேட்கவும், பஜனைகளைச் செய்யவும், ஜனங்கள் திரள் திரளாக அடிக் கடி கூடுவார்கள். அவர்கள் மனத்தில் உதிக்கும் எழுச்சியை நம்பிக்கையின் மூலம் ஸ்திரப்படுத்துவது அவசியமாயிற்று. ஆலயங்களே இதற்குத் தகுந்த கருவிகளாக அமைந்தன. தினந்தோறும் ஜனங்கள் கூடி, அவரவர்கள் மதப் பிரிவுக்குத் தகுந்தபடி வகுத்துள்ள ஆசாரங்களைக் கைக்கொண்டு, கடவுளை வணங்க வசதிகள் செய்யவேண்டிய வேலை முக்கிய மாயிற்று. இதற்காக ஆங்காங்கு இருந்த சிறு கோவில் கள் பிரம்மாண்டமாக, என்றும் அழியாத கல்லால் கட்டப் பட்டன. அரசர்கள் இந்த வேலையில் ஈடுபட்டுத் தங்கள் கீர்த்தியை நிலைநாட்டினார்கள். தமிழ் நாட்டில் கோவில் களைக் கட்டியிராத அரசர்களைக் கண்டுபிடிப்பது அரிது.

முக்கியமாக, தொண்டைமண்டலத்தை மூன்றும் நூற்றுண்டி லிருந்து ஒன்பதாம் நூற்றுண்டுவரை வெகு சிறப்புடன் ஆண்ட பல்லவ அரசர்களாலும், ஒன்பதாம் நூற்றுண்டி லிருந்து பதின்மூன்றும் நூற்றுண்டுவரை தென்னிந்தியா முழுவதும் தங்கள் வெற்றிக் கொடியைப் பறக்கச் செய்து, சாம்ராஜ்யத்தை நிலைநாட்டி, அதைப் பெரும் புகழுடன் ஆண்ட சோழ வம்ச சக்கரவர்த்திகளாலும், வேறு பல அரசர்களாலும் ஏராளமான கல் கோவில்கள் கட்டப்பட்டன. பல்லவ மன்னர்கள் மலைகளையும் பாறைகளையும் குடைந்து அதி அற்புதமாய்க் கட்டியிருக்கும் கல் கோவில்களும், அவைகளிலுள்ள பிம்பங்களின் நேர்த்தியும், அழகும், மிகவும் விசேஷமாய்க் குறிப்பிடத் தக்கவை. ஆலயங்கள் விஷயத்தில், அரசரின் ஆவலைவிட பன்மடங்கு ஆற்றலை ஜனங்கள் பெற்றிருந்தார்கள். கோவில்களைக் கட்டுவதும், கோபுரங்களை வானத்தை நோக்கி எழுப்புவதும், மண்டபங் களையும் தெப்பக் குளங்களையும் அமைப்பதும் கடவுளுக்குச் செய்யும் திருப்பணி ஆயின.

## ஆலயங்களும் கலைச் செல்வமும்

கல் தொழிலாளிகளும், சிற்பிகளும், வர்ணவேலைக் கலைஞர்களும், நூற்றுக்கணக்காய்ப் பல வருஷங்களாகப் பாடுபட்டுத் தங்கள் மனங்களை ஒரே முகமாக நிறுத்தி, உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்ததின் பயனே ஒரு கோவில். இவ்விதக் கோவில்கள், முன்னுல் குறிப்பிட்டபடி, கல்லில் இழைத்த கம்பீரக் காவியங்கள். ஜனங்களிடம் எழுந்த பக்தி வெள்ளம், பல கலைகளின் மூலமாக வடிவம் பெற்று, ஆலயங்களாயிற்று. தமிழ் நாட்டிலுள்ள கோவில்களைப் போலுள்ள மகத்தான கல் கட்டிடங்களை வேறு எந்த நாட்டிலும் பார்க்க முடியாது.

அடிக்கடி பார்த்துப் பழக்கமேற்பட்டதினால் அவைகளின் அதிஅற்புதமான தன்மையை நாம் மறந்துவிடுகிறோம். பாறைகளிலிருந்து உடைத்து எடுத்து ஒழுங்காக இழைக்கப்பட்ட கற்களால் அடுக்கப்பட்ட உயர்ந்த மதில்களும், அவைகளின்மீது எழுப்பப்பட்ட கோபுரங்களும், 'காலத்தின் ஆட்சிக்கு உட்படோம்' என்ற இறுமாப்புடன் நிற்கும் கம்பீரத் தோற்றத்தின் மாண்பை மறக்க முடியுமா? கோவில்களின் தூண்களிலும், முகப்புக்களிலும், கோபுரங்களிலும் காணப்படும் நூற்றுக்கணக்கான சிற்ப சித்திரங்களும், சிற்ப விநோதங்களும், சிலைகளும், வர்ண வேலைகளும், எவ்வளவு கற்பனை ஆர்வத்துடனும், நுட்பமான அழகுடனும், ஜீவ சக்தியுடனும் ஆக்கப்பட்டிருக்கின்றன! மனிதன், தனது சக்திகள் முழுவதையும் ஈச்வர கைங்கரியத்திலேயே செலவழிக்க வேண்டுமென்ற முறையில், தமிழர்கள் தங்கள் கலை ஞான சம்பத்தையும் அறிவையும் ஆலயங்களைக் கட்டுவதில் உபயோகப்படுத்தி யிருக்கிறார்கள். பண்டைக் காலத்தில், தமிழர்களின் கலைவளத்தின் உச்சத்தைத் தமிழ்ச் சங்க ஸ்தாபனங்களிலும், சங்க நூல்களிலும் காண்பதைப் போல், இடைக்காலத்தில், அவர்களுடைய கலைவளத்தின் உச்சத்தைக் கல்கோவில் ஸ்தாபனங்களிலும், அவைகளில் நிறுவப் பெற்ற கடவுள்களைப் பற்றிப் பாடப்பட்ட இசை நிறைந்த பக்திரஸப் பாடல்களடங்கிய நூல்களிலுமே காணலாம்.

## பக்தி மார்க்கமும் ஒழுக்க நெறியும்

மதங்களின் ஸ்தாபகர்கள், தங்களுடைய தூய்மையான வாழ்க்கையுடனும், அருள் உணர்ச்சியுடனும், இயற்கையிலேயே பெற்ற ஞான ஒளியுடனும், தங்களுடைய ஆநந்தமயமான அனுபவத்தைப் பற்றிப் பாடி மற்றவர்களுக்கு வழி காட்டினார்கள். அவர்களுடைய முயற்சியால் பக்திமார்க்க

இயக்கம் பலப்பட்டது. ஒழுக்க நெறியையும் ஞான நெறியையும் கடைப்பிடித்து, வாழ்க்கையினின்றும் உய்வு அடையப் பெரும்பான்மையான ஜனங்களுக்கு முடியாது. ஆனால், மதங்கள் செழித்தோங்கி, லௌகிக விஷயத்தில் பெரிய சக்தியையும், பூரண ஆதிக்கத்தையும் பெறவேண்டுமானால், அவைகளில் ஜனங்களை ஈடுபடச் செய்யவேண்டும். அப்படி ஈடுபடுகிறவர்களின் மனநிலைமைக்கும், சக்திக்கும், பக்குவத்திற்கும் தக்கவாறு மோட்சமார்க்கத்தை அடைய வழிகள் சொல்ல மதத் தலைவர்கள் கடமைப்பட்டுள்ளார்கள். பக்தி மார்க்கத்திற்கு விசேஷ ஏற்றத்தைக் கொடுத்தே மதத் தலைவர்கள் இந்தக் கடமையைச் செலுத்தினார்கள். பக்தி இயக்கத்தினால் சமய உணர்ச்சியும் ஆரவாரமும் அபரிமிதமாகப் பரவிய போதிலும், அந்த இயக்கத்திற்குப் பலஹீனமான ஓர் அம்சமும் இருந்தது. பக்தி இயக்கம் சிற்சில காலங்களில்தான் சக்தியுடன் தோன்றலாமே யொழிய, என்றும் நிலைத்திராது. ஏனென்றால், அதன் சக்தி பாமர ஜனத் தொகுதிகளின் மனோபாவத்தினின்றும் எழுகிறது. ஜனக் கூட்டங்களின் மனத்தில் எழும் கிளர்ச்சி, நிலைத்து ஒரே தன்மையுடன் இருக்க முடியாது. தவிரவும், பக்தி மார்க்கப் பெருக்கினால், ஒழுக்க நெறிக்கு அளிக்கப்பட்ட ஏற்றம், அவர்கள் அறிந்தோ அறியாமலோ, ஜனங்களின் மனத்தில் குறைந்துகொண்டே வந்தது. கடவுளுக்கு மனிதன் செய்ய வேண்டிய கடமை போற்றப்பட்டதே ஒழிய, மனிதன் மனிதனுக்குச் செய்யவேண்டிய கடமை, அவ்வளவு விசேஷமாகப் போற்றப்படவில்லை. உண்மையான கடவுள் பக்திக்கும், மனிதனின் ஒழுக்க வாழ்க்கைக்கும், சமுதாயக் கடமைகளுக்கும், இருக்கும் சம்பந்தத்தை மக்கள் தெளிவாய் உணரவில்லை.

## விக்ரக ஆராதனையும் ஆகமங்களும்

பரம்பொருளை மானஸிகமாக உருவகப்படுத்த ஜனங்களால் முடியாது. ஆகையால், அதற்கு ரூபமும் நாமமும் குணங்களும் கொடுக்கவேண்டியது அவசியமாயிற்று. மனிதன் கடவுளைத் தன்னுடைய ரூபத்திலேயே அறிவது இயல்பு. பிம்பங்கள் மூலம் கடவுள் பாமர ஜனங்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டார். இதனால் விக்ரக ஆராதனை வலுத்து நாடெங்கும் பரவியது. கடவுளின் வடிவங்களைக் கல்லிலோ அல்லது உலோகங்களிலோ செய்து, அவைகளிடம் மூர்த்தியை ஆவாகனம் செய்ததற்கப்புறம், அவை கடவுள்களாக வணங்கப்பட்டன. விக்ரகங்களில் ஈச்வரனை ஆவிர்ப்பாவம் செய்வதற்குண்டான முறைகள் பிறந்தன. இந்த முறைகள் ஜனங்களின் மனத்தில் ஓர் ஆழ்ந்த பயத்தை உண்டுபண்ணக்கூடிய தன்மையைப் பெற்றவைகளாயிருந்தன. இதனால் மந்திர சாஸ்திரங்களும் ஆகமங்களும் தோன்றி, முக்கிய ஸ்தானத்தை அடைந்தன. அவைகளில் கண்ட முறைகள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு, நித்தியப்படி பூஜை சம்பந்தமான வழிபாட்டுத் திட்டங்களும், அநுஷ்டான முறைகளும் நிர்ணயிக்கப்பட்டன. தமிழ் நாட்டில் விக்ரக ஆராதனை மிகப் புராதன காலத்திலிருந்தே இருந்திருக்கிறது. சமய குரவர்கள் காலத்தில், அது வலிமைபெற்று நிலைத்திருந்தது. இருந்தபோதிலும் பிற்காலத்தில்தான், விக்ரக ஆராதனையைப் பற்றிய சூக்ஷமங்களும் தத்துவங்களும், மந்திர ரூபமாயும் சாஸ்திரங்கள் மூலமாயும் பலப்பட்டு, அவைகளின் ஆதிக்கம் நாடெங்கும் செழித்து, விக்ரகங்களைத் தவிர வேறு மூலமாய்க் கடவுளை வழிபடலாமென்ற உணர்ச்சிகூட மறைந்தது. ஞான மார்க்கத்தில் ஈடுபட்டவர்களும், முற்றுந் துறந்தவர்களுங்கூட ஆலய வழிபாட்டைக் கைவிடவில்லை.

## விக்ரக ஆராதனையும் சிற்பமும்

கோவில்கள் பிரம்மாண்டமாய் இயற்றப்படுவதற்கு விக்ரக ஆராதனை மூல காரணமா யிருந்தது. அதனாலேயே சிற்ப சாஸ்திரம் வளர்ந்து அதி உன்னதமான சிறப்பை அடைந்தது. விக்ரகங்களைப் பலவித ரூபங்களிலும், பாவங்களிலும், சிற்பிகள், கற்பனைத் திறத்துடனும், நுண்ணிய அணி அலங்காரங்களுடனும் அமைத்திருக்கும் முறைகள் அதிக அற்புதமாய் இருக்கின்றன. தமிழ்நாட்டுச் சைவ வைஷ்ணவக் கோவில்களில், அபூர்வத் திறமையுடனும், உள்ளக் களிப்பின் அளவற்ற சக்தியுடனும் செய்த விக்ரகங்கள் ஆயிரக்கணக்காய் மலிந்திருந்த போதிலும், அவைகளில் தலைசிறந்து விளங்குவது தில்லை நடராஜமூர்த்தியின் விக்ரகமே. தமிழர்களின் சிற்ப வலிமையெல்லாம் ஒருங்கே சேர்ந்து திரண்டு, ஒரே உருவெடுத்தாற் போலுள்ள இந்த பிம்பம், பரம்பொருளின் ஆநந்த நடன கோலாகலத்தின் திவ்ய ஜோதியையும், ஆற்றலையும், எப்போதும் வீசிக்கொண்டிருக்கும் மாண்பை உடையது. இவ்விதக் கலைச் சின்னங்களை எளிதில் ஆக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்த மக்களின் மதப்பற்றின் தீவிர சக்தியைப் போற்றாமலிருக்க முடியாது.

## சமய வேறுபாடுகள்

சைவமும் வைஷ்ணவமும் நாளடைவில் ஓங்கவே, சமணமும் பௌத்தமும் குன்றின. மத விஷயங்களில் ஜனங்கள் காட்டின ஊக்கத்தையும் ஆத்திர மனப்பான்மையையும், சாஸ்வதமாய் நிலைநிறுத்தி, அவைகளைப் பண்படுத்த மதத் தலைவர்கள் முயன்றார்கள். சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் வித்தியாசங்கள் அதிகப்பட்டுக் கொண்டே போய், விரோதத்தில் முடிந்தன. இரண்டு

மதங்களின் தலைவர்களும் தங்கள் தங்கள் மதத்தின் ஏற்றத்தை வற்புறுத்தி, மற்றதைக் கண்டிக்கத் தொடங்கினார்கள். மத வேறுபாடுகளைப் பற்றி வாதங்கள் தோன்றின. பரம்பொருளின் ரூப நாமங்களைப் பற்றியுள்ள வித்தியாசங்களுடன், ஆகம முறைகள், வழிபாட்டு முறைகள், மதச் சின்னங்களின் தன்மை, இவைகளைப் பற்றியும் வித்தியாசங்கள் அதிகரித்தன. இந்த வித்தியாசங்கள் இன்றுவரையிலும் நிலைத்து உறைந்திருக்கின்றன. இருந்தபோதிலும் இரண்டு மதங்களும் வைதிக மதங்கள்; வேதங்களையும், உபநிடதங்களையும், ஆகமங்களையும் பிரமாணமாகக் கொண்ட மதங்களே.

## தத்துவ சாஸ்திரங்களின் எழுச்சி

மத வித்தியாசங்கள் கல்விப் பெருக்கினால் அதிகப் பட்டன என்று சொல்லலாம். மத ஸ்தாபகர்களின் காலத்திற்குப் பின்னால் தமிழரிடம் கல்வி பெருகிற்று. காலத்தின் இயற்கையும், வடநாட்டு நாகரிகத்தின் மோதுதலும், சம்ஸ்கிருதக் கல்வியின் கலப்பும், இதற்கு முக்கிய காரணங்களாயிருந்தன. மதத்தில் அதிகப் பற்றுடையவர்கள் கல்வியில் ஈடுபட்டதின் பயனாக, முறையான தத்துவ சாஸ்திரங்கள் பிறந்தன. பிரபஞ்சத்தின் தன்மையைப் பற்றியும், பாரமார்த்திக விஷயங்களைப்பற்றியும், மதத் தலைவர்கள், புத்தி யுக்தி பூர்வமாக ஆராய்ச்சி செய்தார்கள். இவ்வித ஆராய்ச்சியின் பயனாக, அவர்கள் சில முதனூல்களுக்குப் பாஷ்யங்களைச் செய்தார்கள். தம்முடைய ஞான வளத்தாலும் கூர்மையான அறிவாலும், சங்கரர், பிரம்ம சூத்ரங்கள் முதலிய நூல்களுக்கு எழுதிய பாஷ்யங்களில், வைதிக மதங்களுக்குப் பெருத்த ஏற்றத்தை அளித்தும், சமண பௌத்தக் கொள்கைகளைப் பலமாகத் தாக்கி உடைத்தும், அத்வைத தத்துவத்

தின் மகிமையை நிலைநாட்டியும், திகழ்ந்தார். அவருக்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னால் தோன்றின வைஷ்ணவ மதாசாரியரான இராமாநுஜர், தமது முப்பாட்டனாரும் குருவு மாகிய ஆளவந்தாரின் ஆணையாகக் கருதி, வைஷ்ணவ மதத் திற்குத் தனி வேதாந்த தத்துவ சிகரமாக, ப்ரம்ம சூத்ரங் களுக்கு ஒரு பாஷ்யம் செய்து விசிஷ்டாத்வைதக் கொள்கை களை விளக்கினார். சைவர்கள் இதற்குப் பின்வாங்கவில்லை. அநேகமாக அக்காலத்திலேயே சைவ சித்தாந்தமும் ஒரு தனிப்பட்ட தத்துவ முறையாக ஸ்தாபிக்கப்பட்டது. மெய்கண்டதேவர் இயற்றிய சிவஞான போதமும், அவ ருடைய சிஷ்யரான அருள் நந்தி சிவாசாரியார் இயற்றிய சிவஞான சித்தியாரும் சைவ சித்தாந்தத்தை ஒரு தனித் தத்துவ முறையாக ஆக்கின. ஓரிரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னால், மாத்வாசாரியார் த்வைத தத்துவத்தை ஸ்தாபகம் செய்தார்; ஆனால் இது தமிழ் நாட்டிற்கு வெளியில் நடந்த நிகழ்ச்சி. அத்வைதமும், விசிஷ்டாத்வைதமும், த்வைதமும் ஒன்றுக்கொன்று சம்பந்தத்தைப் பெற்றிருக்கின்றன. அவைகளுக்கு சம்ஸ்கிருத நூல்களே மூலாதாரமா யிருக் கின்றன. சைவ சித்தாந்தத்திற்கும் சம்ஸ்கிருதத்தில் மூல நூல்கள் இருந்த போதிலும், அதற்கும் மேலே கூறிய தத்துவக் கோட்பாடுகளுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதாகக் கருத முடியாது. மத வேறுபாடுகளை வலுக் கச் செய்ய, வெவ்வேறு தத்துவஞானக் கொள்கைகள் உதவியாயிருந்தன.

## 3. காலவரை அளவுகள்

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டியது அவசியமா யிருக்கிறது. காலவரை அளவுகளை

உத்தேசமாயாவது நாம் தெரிந்து கொள்ளவேண்டும். தமிழர்களின் கலைப்பெருக்கில், சரித்திரங்களும் சரித்திர உணர்ச்சியும் இல்லாமையே பெருத்த குறைகளாகும். இதனால் தமிழ் நாட்டின் சரித்திரத்தில் அநேக முக்கியமான சம்பவங்களுக்கும், இயக்கங்களுக்கும், திட்டமாகக் காலத்தைக் குறிப்பிடுவது முடியாமலிருக்கிறது. அநேக கீர்த்தி வாய்ந்த இலக்கியங்களுக்கும், சமயத் தலைவர்களுக்கும், அரசர்களுக்கும் காலவரை அளவை வகுக்க முடியவில்லை. இந்த ஆராய்ச்சியில் பண்டைக்காலம், இடைக்காலம், பிற்காலம் என்று மூன்று சொற்றொடர்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. பண்டைக்காலம் என்பது கி. மு. நான்காவது நூற்றாண்டிலிருந்து கி. பி. மூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தையும், இடைக்காலம் என்பது கி. பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தையும், பிற்காலம் என்பது அதிலிருந்து கி. பி. பதினேழாம் நூற்றாண்டுவரையுள்ள காலத்தையும் உத்தேசமாகக் குறிக்கும்.

தமிழரின் கலை வாழ்க்கையில், பண்டைக் காலத்தில், அவர்களுக்கு இயற்கையின் மீதுள்ள ஆநந்தத்தையும் ஆச்சரியத்தையும், ஒருவித பயத்தையும், இடைக் காலத்தில் அவர்களுடைய மன உணர்ச்சியையும், கற்பனைத் தன்மையையும், இசைச் செல்வத்தையும், பிற்காலத்தில் அவர்களுடைய கல்வியின் பலத்தையுமே முக்கியமாகப் பார்க்கலாம். இதற்கப்பால் அவர்களின் கலை வாழ்க்கை மெள்ள மெள்ளக் குன்றியது.

## உரையாசிரியர்கள்

தமிழில் இலக்கண வளமும் குறைவுபடாமல் இருந்து வந்தது. தொல்காப்பியத்திற்குப் பின்னால், அகப்பொருள்

நூல்களும், வீரசோழியம் நன்னூல் முதலிய சிறந்த இலக்கண நூல்களும் ஆக்கப்பட்டன. பிற்காலத்திலும் அநேக இலக்கணங்கள் தோன்றின. இலக்கணங்களுள்பட பண்டைத் தமிழ்நூல்கள் யாவும் கடினமாயும், குருமுகமாகவே படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியனவாயும் இருந்தன. குருமுகமாகக் கற்றவர்கள் தொடர்ச்சியாகவே யிருந்து, அறிவு கர்ண பரம்பரையாகப் பரவியதால்தான் அநேக தமிழ் நூல்கள் பொருள் விளங்கக்கூடிய நிலைமையில் இருந்தன. நிகண்டுகள் எல்லாம் இடைக் காலத்தின் இறுதியில்தான் தொகுக்கப்பட்டன. இந்த நிலைமையில், நல்ல தமிழ்ப் பயிற்சி பெற்றவர்களுக்குக்கூட மூதல் நூல்களைத் தெரிவதற்குத் தக்க உதவி அவசியமா யிருந்தது. உரைகளும் செய்யப்பட்டன. உரை நூல்கள் ஆக்கப்பட்டதினால்தான் தமிழ் வசன நடை உருப்பெற்றது. அவைகள் மூலம் பண்டைத் தமிழ்ப் புலவர்களின் வசன நடையை நாம் அறிகிறோம். முதல் நூல்களுக்குத் தக்க உரைகளை எழுதுவதற்கு அபாரமான பாண்டித்யமும், தெளிவான இலக்கண இலக்கியப் பயிற்சியும், செம்மையான புலமையும் வேண்டும். தமிழ்க் கல்வியின் கரைகண்ட பல உரையாசிரியர்கள் இருந்ததினால்தான், பண்டைத் தமிழ் இலக்கியங்கள் அநேகம் பாதுகாக்கப்பட்டு, இன்றுவரை இருப்பதுமன்றி, அவைகளின் பொருள்களையும் அறிய முடிகிறது.

நக்கீரர், இளம்பூரணர், பரிமேலழகர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், கல்லாடர் முதலிய உரையாசிரியர்கள் பலர் தோன்றித் தமிழ் இலக்கியத்திற்கு அரிய தொண்டு ஆற்றியிருக்கிறார்கள். இவர்களின் காலத்தைப் பற்றிப் பலர் பலவாறாகக் கூறினும், ஒன்றும் திட்டமாகத் தெரியவில்லை. இளம்பூரணர் மற்றவர்களைவிட மூந்தியவ ரென்றும், தொல்காப்பியத்திற்கு

முதல் உரை செய்ததால் இவருக்கு உரையாசிரியர் என்ற ஒரு பெயர் இருந்ததென்றும் சிலர் கருதுகிறார்கள். அடியார்க்கு நல்லாரும் பேராசிரியரும் நச்சினார்க்கினியருக்கு முந்தியவர்கள் என்று தெரிகிறது. நச்சினார்க்கினியரும் பரிமேலழகரும் ஏககாலத்தவர்கள் என்றும் சிலர் நம்புகிறார்கள்.

ஆழ்ந்த கல்வித் திறனிலும், பொருள் வளத்திலும், சிந்தனா சக்தியிலும், தர்க்க சாதுரியத்திலும் பரிமேலழகரும் நச்சினார்க்கினியரும் தலைசிறந்தவர்கள் என்பது தமிழ்ப்புலவர்களின் துணிபு. திருக்குறளுக்கு ஒத்த மாண்பு பரிமேலழகர் உரைக்கும் ஏற்பட்டிருக்கிறது. இவருக்கு முன்னால் குறளுக்கு ஒன்பது பேர் உரை செய்திருந்தார் என்றும், அவ்வுரைகளைவிட இவர் உரையே மிகச் சிறந்ததாகக் கருதப்பட்ட தென்றும் தெரிகிறது. நச்சினார்க்கினியர் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தமிழ் அறிவுக் களஞ்சியமாக விளங்கினார். அவர் தொல்காப்பியம், ஜீவக சிந்தாமணி, பத்துப்பாட்டு, கலித்தொகை முதலிய நூல்களுக்கு அற்புதமான உரைகளைச் செய்து, தமிழ் இலக்கிய மண்டலத்தில் தனிச் சிறப்புடன் நிலைத்திருக்கிறார். இவரைப் போற்றாத தமிழ்ப் புலவர் இல்லை. மத நூல்களுக்கு உரை செய்தவர்களில், திவ்யப் பிரபந்தத்திற்கு உரை செய்த பெரிய வாச்சான் பிள்ளை தலைசிறந்தவர்.

## வடமொழிக் கலைகளின் கலப்பு

தமிழ் நாட்டில் ஆரியர்களின் நாகரிகமும் கலைகளும் தமிழர்களின் நாகரிகத்துடனும் கலைகளுடனும் இடைக் காலத்தின் முடிவில் கலந்தன. இதற்கு முன்னால் செழித்தோங்கிய பல்லவ மன்னர்கள், ஆரியக் கலைகளையே பெரும்பாலும் ஆதரித்து, ஆட்சியிலும் வடநாட்டு முறைகளையே

அநுஷ்டித்து வந்தார்கள். பல்லவர்களுடைய இராஜ்யம், அதன் உச்சத்தில், காவேரிவரை எட்டியிருந்தது. அவர்கள் காலத்தில்தான் சைவ வைஷ்ணவ மதஸ்தாபகர்கள் தோன்றினுர்கள். தமிழர்களின் வாழ்க்கையில் ஆரிய நாகரிகம் மெள்ள மெள்ளப் புகுந்தது. பல்லவர்களுடைய சாம்ராஜ்யம் முற்றுப்பெற்று, சோழர்களுடைய ஏகாதிபத்யம் ஆரம்பித்த காலத்தில், அது நாடெங்கும் பரவி வலுத்தது.

தங்கள் சமுதாய வாழ்வும் கல்வியும் கலைகளும் சக்தியுடையனவா யிருந்ததால், தமிழர்கள் இலகுவாயும் பரிபூரணமாயும் வடநாட்டுக் கலைகளை ஆகருஷித்துக்கொண்டார்கள். இதன் பயனுக, தமிழரின் இலக்கிய வளர்ச்சி சம்ஸ்கிருத பாஷையைப் பின்பற்றியே நின்றது. காவியங்களும் இலக்கியங்களும் தத்துவ சாஸ்திரங்களும் தமிழில் வடமொழியிலிருந்தவாறு செய்யப்பட்டன. தமிழ் மொழி ஆயிரக்கணக்கான சம்ஸ்கிருதப் பதங்களைத் தன்வயமாக்கிக்கொண்டது. சம்ஸ்கிருதக் கலப்பினுல், தமிழ் இலக்கியங்களும் கலைகளும் ஒரு நூதன சக்தியையும், பரந்த தன்மையையும், அழிவிலாச் செல்வத்தையும் பெற்றன. இதன் காரணமாக, இலக்கிய வெள்ளம் கல்வி ஊற்றிலிருந்து பெருகி, தத்துவ சாஸ்திரங்களாகவும், காவியங்களாகவும் இரண்டு பிரிவுகளாய்ப் பாய்ந்தது. மதங்களை வேறுபடுத்தி நிலைநிறுத்துவதற்காகத் தத்துவ சாஸ்திரங்கள் உபயோகப்படுத்தப்பட்ட விஷயம் முன்னுல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சைவ சித்தாந்தத்தின் வித்துக்கள் இடைக் கால நூல்களிலே சிதறுண்டு கிடந்த போதிலும், பிற்காலத்தில்தான் அவைகளிலிருந்து முளைகள் தோன்றி, செடிகளாய் வளர்ந்தன. தத்துவ சாஸ்திரங்களைவிட, பிற்காலத்தில் தமிழர்களிடம் பிறந்த காவியங்களே அவர்களுடைய கலைச் செல்வத்தைப் பெருக்கின.

## இடைக்கால இலக்கியச் செல்வம்

பண்டைக் காலத்திலேயே தமிழர் பாரத இராமாயணக் கதைகளைக் கர்ணபரம்பரையாய் அறிந்திருந்த போதிலும், வடநாட்டு நாகரிகமும் கல்வியும் அவர்களிடம் ஆதிக்கம் பெற்ற பின்பே, அவை தமிழில் பெருங் காவியங்கள் ஏற்படுவதற்குக் காரணமா யிருந்தன. சோழவம்ச சக்கரவர்த்திகளின் ஆதிக்கம் தென் இந்தியா முழுவதும் இருந்த காலத்தில், தமிழர்களின் வாழ்க்கையில் இன்பமும் ஆர்வமும் கரைகடந்து பெருகி, அவைகளின் பயனாகத் தமிழ் இலக்கியங்களும் கலைகளும் ஒவ்வொரு துறையிலும் ஓங்கி உன்னத நிலைமையை அடைந்தன. தமிழருக்கு என்றும் அழியாப் பிதிரார்ஜிதமாய்த் திகழும் கம்பரின் இராமாயணம் இந்தக் காலத்தில்தான் தோன்றியது. இந்தக் காவியத்தின் சிறப்பைத் தமிழர் நன்கு அறிவார்கள். இது உலகிலுள்ள மிகப் பெருங் காப்பியங்களில் ஒன்று. பரத கண்டத்தில் இமயமலை நிற்பது போல், தமிழ் இலக்கிய உலகில் கம்பரின் காவியம் நிற்கிறது. கம்பராமாயணமே பிற்காலத்தில் தமிழரின் கலைவளத்தின் உச்சமா யிருக்கிறது.

### கம்பர்

தமிழரின் நல்லதிர்ஷ்டத்தால் கம்பர் வால்மீகியின் ராமாயணத்தைப் பெருங் காப்பியமாக இயற்றினார். ஆழ்ந்த கல்வியும், அபரிமிதமான கவிதா சக்தியும், அருட்புலமையும் பெற்றிருந்த கம்பர், இந்தக் காரியத்தில் உலகம் பிரமிக்கும் படியான வெற்றியை அடைந்தார். தமிழரின் நாகரிகம், பழக்க வழக்கங்கள், இலக்கிய முறைகள் இவைகளைத் தழுவியே கதைப்போக்கும் கவிப்போக்கும் அமைந்திருக்கின்றன. கம்ப ராமாயணத்தில், தமிழ்க் கவிதா மண்டலத்தின் மிக உன்னதமான உச்சியும், கற்பனை உலகத்தின் விரிவும்

பொலிவும், தமிழகத்தின் கலைவாழ்வின் வளமும் சுவையும், தமிழ் வார்த்தைகளின் சக்தியும், தமிழ் நடையின் காம்பீர்யமும் விளங்குகின்றன. கம்பர் ஈடும் எடுப்பும் இல்லாத கவி. எந்தவித அம்சத்தைக் கவனித்த போதிலும், கம்பர், மற்றைத் தமிழ்க் கவிகளைவிடச் சிரேஷ்டரா யிருப்பதுடன், உலக மகா கவிகளின் கோஷ்டியில் இருக்க உரிமை பெற்றிருக்கிறார் என்பது தெளிவாகும். சில அம்சங்களில் அவர் உலகத்திலுள்ள எல்லாக் கவிகளையும்விடச் சிறந்தவர் என்பது காலஞ்சென்ற தமிழ் அறிஞரான வ. வெ. சு. அய்யரின் துணிபு.

## பிற கவிகள்

சேக்கிழார் பெரிய புராணம் என்ற மகுடத்தில் சைவ நாயன்மார்களின் வாழ்க்கைச் சரித்திரங்களைப் பெருங் காப்பிய முறையில் ஆக்கினார். கவிதா ரீதியாகப் பார்க்குமிடத்து, சேக்கிழார் கம்பருக்குத் தாழ்ந்தவரா யிருந்தபோதிலும், பெரிய புராணம் பக்திரஸம் ததும்பும் சிறந்த தமிழ் இலக்கியம். சைவர்களுக்கு அது ஒரு பாராயண காவியமா யிருக்கிறது. சமயப் பற்று மிகுந்த சில தமிழ் அறிஞர்கள் கம்பரைவிடச் சேக்கிழார் உயர்ந்த கவி என்றுகூடக் கருதுகிறார்கள். அநேகமாக இந்தக் காலத்திலேயே ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும் இருந்ததாகக் கர்ணபரம்பரையான கதைகள் தமிழ்நாட்டில் நிலைத்திருக்கின்றன. இவர்களைச் சிறந்த கவிகள் என்று பொதுவாகத் தமிழ்ப் பண்டிதர்கள் கருதிய போதிலும், நளவெண்பாவில் கவிச் சுவையும் ஓசை யின்பமும் மிகுந்து காணப்பட்ட போதிலும், செம்மையான செய்யுட்கள் பலவற்றை ஒட்டக்கூத்தர் பொழிந்திருந்த போதிலும், இவ் விருவரையும் உயர்ந்த தமிழ்க் கவிகள் என்று சொல்ல முடியாது. இவர்களுடைய நூல்களின் நயத்திற்கு அதிகமான புகழைப் பெற்றிருக்கும் பாக்கியம் இவர்களுக்குக்

கிட்டியிருக்கிறது. சயங்கொண்டார் அநேகமாக இந்தக் காலத்திலேயே இயற்றிய கலிங்கத்துப் பரணி, கவிதைச் சுவையும், பெரும் சக்தியும் பெற்ற சிறந்த தமிழ் நூல். சில நூற்றாண்டுகளுக்குப் பின்னால் வில்லிபுத்தூராரின் பாரதமும் தோன்றியது. இது பெருங் காப்பிய முறையில் செய்யப்பட்டதும், சில இடங்களில் நல்ல கவிதைப் பான்மையும் கம்பீரமான நடையும் உடையதும், தமிழ்ப் புலவர்களால் நன்கு போற்றப்பட்டதுமான நூல். பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணத்தையும், கச்சியப்பர் கந்த புராணத்தையும் செய்தார்கள். தமிழ்ப் புராணத் தொகுதியில் இவை இரண்டிற்கும் உயர்ந்த ஸ்தானம் உண்டு. வேறு பல கவிஞர்களும் தோன்றிப் பல நூல்களை இயற்றியிருக்கிறார்கள்.

## மடங்களின் எழுச்சி

தத்துவ நூல்களும், தர்க்க சாஸ்திரங்களும், வாதாடும் வாசகங்களும் மதப் பற்றுடைய கல்விமான்களுடைய ஆர்வத்தால் எண்ணிறந்து உண்டாயின. அருளும் இசையும் சமைத்த மத உணர்ச்சி குன்றத் தொடங்கியது. தத்துவக் கொள்கைகளுக்கும், வழிபாட்டு முறைகளுக்கும், மதாசாரங்களுக்கும் மதிப்பு அதிகரித்தது. இவைகள் மூலம் மதங்கள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தின. ஆதலால் இவைகளின் செல்வாக்குக் குறையாமலிருப்பதற்கு வேண்டிய உபாயங்கள் தேடப்பட்டன. சைவத்திற்குப் பேராதரவு அளித்த சோழ மன்னர்களின் சாம்ராஜ்யம் குறைவுபட ஆரம்பித்தது. அரசர்களின் ஆதரவால் என்றும் மதங்கள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தலாம் என்ற நம்பிக்கை குறைந்தது. மதாசாரங்களை ஆட்சி செய்யவும், தத்துவ ஞானத்தை வளர்த்து ஜனங்களுக்குப் போதிக்கவும், அரச வம்சங்களின் மாறுத

லால் மதங்களுக்கு ஆதரவு குறையாமலிருக்கவும், மடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. சைவத்திற்கும் வைஷ்ணவத்திற்கும் மடங்கள் ஏற்பட்டன. வைஷ்ணவ மதத்தை நிலை நிறுத்த இராமாநுஜர் எழுபத்து நான்கு ஆசாரிய பீடங்களை ஏற்படுத்தினதாகச் சரித்திரம் கூறுகிறது. மடங்களின் ஆட்சி முதிர்ந்த சந்நியாசிகள் வசம் ஒப்புவிக்கப்பட்டது. அரசர்களும் பிரபுக்களும் சொத்துக்களை மடங்களுக்குக் கொடுத்து உதவினார்கள். மடாதிபதிகள் சிலகாலம் வரை மதங்களைப் பரப்புவதற்கு வேண்டிய நடபடிக்கைகளை ஊக்கத்துடன் எடுத்தார்கள். மடங்கள் இன்றியமையாத மத ஸ்தாபனங்களாய்க் கொஞ்ச காலம் திகழ்ந்தன. கோவில்களின் நிர்வாகமும் மடாதிபதிகள் வசம் ஒப்புவிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

## தமிழ் நாட்டின் ராஜீய நிலைமை

சுமார் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில், சோழ வம்ச சக்கரவர்த்திகளின் அதிகாரம் குறைந்து, அவர்களுடைய ஏகாதிபத்யம் சிதறுண்ட காலத்தில், தமிழ் நாட்டின் புகழ் குறைய ஆரம்பித்தது. நாட்டில் பிளவுகளும் அமைதியற்ற நிலைமையும் ஏற்பட்டன. சோழர்களுக்குப் பின்னால் சொற்ப காலம்வரை, சில பாண்டிய மன்னர்கள், தங்கள் பழைய குலக் கீர்த்தியுடன் மதுரையில் ஆண்டார்கள். துரதிர்ஷ்டத்தால் பீடிக்கப்பட்ட பாண்டிய வம்சத்தின் ஆட்சி நூறு வருஷங்களுக்குள்ளேயே முடிவு பெற்றது.

## முஸ்லிம்களின் படையெடுப்பு

வட இந்தியாவிலிருந்து முஸ்லிம்களின் படையெடுப்பு பெரும் ஆரவாரத்துடன் கிளம்பியது. அலாவுதீனின் சேனாதிபதியாகிய மலிக்காபர் தெற்கே படையெடுத்து

வந்து, ஏராளமான பணத்தைக் கொள்ளையடித்ததுமன்றி, நாட்டை த்வம்சம் செய்துவிட்டும் போனான். முஸ்லிம் சைன்யங்களும் பின்னால் நிறுத்தப்பட்டன. தமிழ்நாட்டு அரசர்களின் வலிமை குறைந்துவிட்டது. பாண்டிய மன்னர்கள் தெற்கே ஓடினர். பின்னால் முகமது துக்லாக், மறுமுறையும் படையெடுத்து வந்து, மதுரையில் தனது சைன்யங்களை வைத்துவிட்டுச் சென்றான். சொற்பகாலம் மதுரையில் முஸ்லிம்களின் ஆட்சி நடைபெற்றது. மலிக்காபர் நிறுத்தின முஸ்லிம் சைன்யங்களைக் கேரள அரசன் ரவிவர்ம குலசேகரன் தாக்கித் துரத்தினான். முஸ்லிம்களைத் தெற்கே மீண்டும் வரவொட்டாதபடி, வடக்கேயுள்ள ஹொய்சால, காகதீய மன்னர்கள் வீரத்துடன் தடுத்துக்கொண்டிருந்தார்கள். ஹொய்சால மன்னனாகிய வீர பல்லாலன் மதுரையிலிருந்த முஸ்லிம்களைத் துரத்தப் படையெடுத்து வந்தான். திருச்சிப் பக்கம் நடந்த சமரில் அவன் மாண்டான். இருந்தபோதிலும், பின்னால் அவன் வம்சத்தைச் சேர்ந்த வீரனாகிய குமார கம்பணன், தெற்கே யிருந்த முஸ்லிம் சைன்யங்களைத் தோற்கடித்து, மதுரையைக் கைப்பற்றினான்.

## விஜயநகரத்தின் எழுச்சி

இந்தக் காலத்தில், பெரும் சக்திவாய்ந்த முஸ்லிம்களின் படையெடுப்பால், தென்னாட்டு இந்து அரசர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கும் போது, விஜயநகர மன்னர்கள் தோன்றினார்கள். அவர்களின் சார்பாகவே குமார கம்பணன், மதுரையை முஸ்லிம்களிடமிருந்து கைப்பற்றி, அங்கே விஜயநகரத்தின் ஆட்சியை நிலைநிறுத்தினான். விஜயநகரம் இந்து ஏகாதிபத்தியமாகவே தோன்றி, பெரும் கீர்த்தியுடன் வளர்ந்து, இரண்டு நூற்றாண்டுகள்வரை வீரத்துடனும் புகழுடனும் திகழ்ந்தது. முஸ்லிம்கள் வந்துவிட்டதால்,

சைவம், வைஷ்ணவம், சமணம், பௌத்தம் என்ற மத வேறுபாட்டுணர்ச்சி மறைந்தது. இந்த மதங்களெல்லாம் ஒரே நாகரிகத்திலிருந்து பிறந்தன என்றும், இவைகள் இந்து சமுதாயத்திற்குள் அடங்குமென்றும் எண்ணம் எழுந்தது. முஸ்லிம் ஆட்சியால் தென்னிந்தியாவின் நாக ரிகத்திற்கும், கலைகளுக்கும் மகத்தான ஹானி ஏற்படும் என்ற பயம் இந்து மன்னர்களுக்குத் தோன்றியது. முஸ்லிம் மன்னர்களின் கொடூரத்திலிருந்து இந்து நாகரிகத்தைப் பாதுகாக்கவே, விஜயநகர ஏகாதிபத்தியம் தன் முழு பலத்தை யும் உபயோகப்படுத்தியது. இதற்காக, விஜயநகரத்தின் ஏகாதிபத்தியம், பல ராஜதானிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ் வொன்றும் வீரம் பொருந்திய ராஜப்பிரதிநிதிகள் கையில் அரசாட்சிக்காக ஒப்படைக்கப்பட்டது. விஜயநகர அரசர் கள், சைன்யங்களைச் சேகரித்துப் பலப்படுத்தி, முஸ்லிம் களைத் தாக்க யுத்தத்திற்கு ஆயத்தமாக இருந்தார்கள். பல யுத்தங்களில் விஜயநகர மன்னர்கள் முஸ்லிம்களைத் தோற் கடித்தார்கள். பதினாறும் நூற்றாண்டின் ஆரம்பத்தில், விஜயநகரம், கிருஷ்ணதேவ ராயரின் ஆட்சியில், மகோன்னத நிலைமையை அடைந்திருந்தது. சமர் செய்யும் வீரத்திலும், அரசாட்சியை நடத்தும் திறமையிலும், மதங்களையும் கலைகளையும் காப்பாற்றும் ஆர்வத்திலும், சிற்றரசர்களை நடத்தும் கண்ணியத்திலும், கிருஷ்ணதேவ ராயரைப் போல் தென்னிந்திய சரித்திரத்தில் சக்கரவர்த்திகளைக் காண்பது அரிது.

## தமிழ் நாட்டின் பிற்கால நிலைமை

தமிழ் நாடும் விஜயநகரின் ஏகாதிபத்தியத்தின்கீழ் இருந்தது. விஜயநகரின் நாயக்க ராஜப்பிரதிநிதிகள் மதுரை யிலும் தஞ்சையிலும் ஆண்டார்கள். அரசாட்சி முறைகள்

எல்லாம் முன்னால் பாண்டியர்கள் சோழர்கள் காலத்தி லிருந்தபடியே நடைபெற்றன. ஏகாதிபத்தியத்திற்குக் கப்பங்கட்டப்பட்டது. விஜயநகர சக்கரவர்த்திகள் அரசாட்சியை மேல்பார்வையிட்டுக்கொண்டும், ராஜப்பிரதிநிதிகள் தவறுகள் செய்த காலையில் தலையிட்டுக்கொண்டும் இருந்தார்கள். மதுரையில் சுமார் இருநூறு ஆண்டுகள் விஜயநகரின் பிரதிநிதிகளாக நாயக்க மன்னர்கள் சிறப்புடனும் கீர்த்தியுடனும் ஆண்டார்கள். தலைக்கோட்டைச் சண்டைக்குப் பின் விஜயநகர ஏகாதிபத்தியத்தின் வலி குறையவே, இவர்கள் சுதந்தர மன்னர்களானார்கள். சுமார் பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை, நாயக்கர்கள் மதுரையில் ஆண்டார்கள். அப்புறம் மதுரை, மீனாக்ஷி ராணியின்கீழ் இருக்கும்போது, ஆர்க்காடு நவாப்பின் பிரதிநிதியாக வந்த சந்தா சாகிபை அவள் நம்பி, அவனுக்கு இடம் கொடுக்கவே, அவன் பெருத்த துரோகம் செய்து மதுரை ராஜ்யத்தைக் கைப்பற்றினான். தஞ்சாவூரில் நாயக்கர்களுக்குப் பின், கொஞ்சகாலம் மராத்திய மன்னர்கள் அரசாட்சி செய்தார்கள். நாயக்க மன்னர்கள் காலத்திலேயே ஐரோப்பாவிலிருந்து போர்ச்சுகீஸ், டச்சுக்காரர்கள், இவர்கள் வியாபாரத்திற்குத் தென் இந்தியாவுக்கு வந்து, சமுத்திரக்கரையோரம் இருக்கும் பிரதேசத்தில் குடியேறி, கிறிஸ்துவ மதத்தையும், பல இடையூறுகளுக்கிடையே பரப்பி, தங்களுடைய நிலைமையை ஸ்திரப்படுத்திக் கொண்டார்கள். இவர்களைப் பின்பற்றிப் பிரஞ்சுக்காரரும், பிரிட்டிஷாரும், வியாபார மோகத்தால் வந்து குடியேறினார்கள். நாட்டின் சீர்கேடான நிலைமையைப் பார்த்து அரசாட்சி ஸ்தாபனத்திற்கும் முயற்சி செய்தார்கள். உள்நாட்டு மன்னர்களின் சண்டைகளில் கலந்துகொண்டு கொஞ்சங் கொஞ்சமாக நாட்டைக் கைப்பற்றினார்கள். அதிர்ஷ்டச் சீட்டு பிரிட்டிஷா

ருக்கு விழுந்தது. கடைசியாக, கர்னாடக நவாப்பின் திறமைக் குறைவால் தமிழ்நாடு பிரிட்டிஷ் வியாபாரக் 'கும்பினி'யாரிடம் வந்தது. அவர்கள், வீரத்துடன் பல சமர்களில் தங்களை எதிர்த்த பாளையக்காரர்களை அடக்கித் தங்களுடைய அரசாட்சியை நிலைநிறுத்தினார்கள்.

## கலைவாழ்வின் க்ஷீணம்

நாட்டின் இராஜீய நிலைமை மேற்கூறியவாறு இருந்ததினால், பொதுவாக மதங்களும் கலைகளும் அபிவிருத்தியின்றிக் குறைய ஆரம்பித்தன. சோழ வம்ச மன்னர்களின் காலத்துடன் தமிழரின் கலைவளப் பெருக்கின் ஊற்று வற்ற ஆரம்பித்தது. மிகப் பெரிய சக்தியால் தள்ளப்பட்டு, அதிவேகத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் ஒரு வண்டி, அந்த சக்தி நின்றுவிட்ட பிறகும் கொஞ்ச தூரம் ஓடிவிட்டுப் பின் அசைவற்று நிற்பதைப் போல, தமிழர்களின் கலைவாழ்வின் நிலைமை ஆயிற்று. கலைகளை ஆதரித்துப் பேணின அரசர்களின் முயற்சிகளும் காலமும் சைன்யங்களைச் சேர்த்து நாட்டைக் காப்பதிலேயே செலவாயின. ஆட்சிமுறைகள் முன்போலவே நடைபெற்ற போதிலும், தீர்வைகளின் பளு அதிகமாயிற்று. இருந்தபோதிலும், இந்து சமுதாயத்தின் கட்டுப்பாடுகளைப் பலப்படுத்தி, அதன் நாகரிகமும் கலைகளும் முஸ்லிம்களால் பங்கப்பட்டு உடையா வண்ணம், விஜயநகர மன்னர்கள் பாதுகாத்து வந்தார்கள். எல்லா மதத்தினர்களுக்கும் அவர்கள் ஆதரவு காட்டி, சீர்கேடடைந்த கோவில்களைப் பழுதுபார்த்தார்கள். வேதங்கள் முதலியன மறைந்து போகா வண்ணம் ஏடுகள் பந்தோபஸ்து செய்யப்பட்டதுமன்றி, விஜயநகர மன்னர்களின் ஆதரவால், அவர்களுக்குப் போர்த் தலைவராயும், பேரமைச்சராயுமிருந்த சாயனர் வேதங்களுக்கு உரை எழுதி ஆரியக் கலைஞானத்தை அபிவிருத்தி செய்தார்.

## சமய வாழ்வின் க்ஷீணம்

மதபரிபாலனம் மடங்களின் வசம் இருந்து சில நூற்றாண்டுகளாகச் செம்மையாய் நடைபெற்றது. அம் மடங்களின் ஏற்றம் நாளடைவில் குறைந்தது. உண்மையான சமய உணர்ச்சியும் ஞான ஒளியுமில்லாத சந்நியாசிகள் மடாதிபதிகள் ஸ்தானங்களைப் பெற்றார்கள். வெறும் படாடோபங்களும் வீண் டம்பங்களுமே மடங்களில் பெருகிக் குடிகொண்டன. மதங்களின் உண்மை ஒளி மங்கலாயிற்று. கலைகளும் மங்கின. மதவாழ்வில் வெளிப்படையாக ஆரவாரம் குறையவில்லை; ஆனால் அதன் சக்தி குறைந்துகொண்டே வந்தது. தத்துவக் கல்வி மிகுந்த மதாசாரியர்கள் வேதாந்த தேசிகர் முதலியவர்கள் வைஷ்ணவத்திலும், சற்றுப் பின்னால் அப்பய தீக்ஷிதர், சிவஞான முனிவர் போன்றவர்கள் சைவத்திலும், தோன்றி, பல சிறந்த கிரந்தங்களை இயற்றினார்கள். தாயுமான ஸ்வாமிகள், குமரகுருபரர் முதலிய சமயப்பற்று மிகுந்த கவிகளும், வேறு கவிஞர்களும், சமீபகாலத்தில் இசைத் தோத்திரங்களை மலைமலையாகக் குவித்த இராமலிங்க ஸ்வாமியும் தோன்றினார்கள். கடவுள்மீது அளவற்ற பக்தி கொண்டு இசைச் சுவை நிறைந்த பாடல்களை அவர்கள் இயற்றினார்கள். ஆனால், அவைகளில் நூதன ஆர்வமும் ஜீவசக்தியும் இல்லை; பழைய துறைகளிலேயே கற்பனையையும் மனோபாவத்தையும் செலுத்தி, பழைய பல்லவிகளையே பாடினார்கள். சமுதாய வாழ்வில் இன்பமும், ஆர்வமும், ருசியும் இல்லாததால், கவிஞர்கள் இவைகளைப் பிழிந்தெடுத்துத் தங்களுடைய இலக்கியங்களுக்கு உயிர் கொடுக்க முடியவில்லை. தமிழரின் வாழ்வில் தோன்றிய க்ஷீணத் தன்மை தமிழ் இலக்கியங்களையும் கலைகளையும் பாதித்தது.

## ஒழுக்கத்தின் க்ஷீணம்

பரந்த ஒழுக்க நெறிக்கு முக்கியம் குறைய ஆரம்பித்தது. ஒழுக்க நூல்களெல்லாம் அநேகமாகப் பண்டைக் காலத்து இறுதியில் தோன்றின. சமயங்கள் பின்னால் வளர்ந்து முதிர்ந்தவுடன், ஒழுக்கத்தின் முக்கியமும் அவசியமும் வற்புறுத்தப்படவில்லை. கடவுள்மீது பாராட்டும் பக்திக்கும், சமய வழிபாட்டு முறைகளுக்கும், மதத்தைத் தழுவிய ஆசாரங்களுக்குமே ஏற்றம் இருந்தது. இவைகளை ஒழுக்கமில்லாதவர்கள்கூட எளிதில் கைக்கொள்ளக்கூடும். உண்மையான ஒழுக்கம், மதத்திற்கு அஸ்திவாரமென்று கருதப்படவில்லை. ஆங்காங்கே சிற்சில நூல்களில் ஒழுக்கத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், சுமார் பதினைந்து நூற்றாண்டுகளாகத் தமிழரின் வாழ்வில் உண்மையான ஒழுக்கநெறி இன்றியமையாததென்றும், முக்தியடைவதற்கு அந்நெறி அவசியமென்றும் வற்புறுத்தப்படவில்லை. எவ்வளவு ஒழுக்கமின்மை இருப்பினும், ஒருவன் எவ்வளவு பாவத்தைச் செய்தாலும், கடவுள்மீது பக்தி காட்டி, அவர் அருளைப் பெற்றுவிட்டால், உய்யலாமென்ற கொள்கை ஒழுக்க நெறியின் ஏற்றத்தைத் தாழ்த்தியது. கடவுளின் அருளைப்பெற, தீவிர பக்தி அவசியமேயொழிய, ஒழுக்கம் அவ்வளவு அவசியமில்லையென்ற பாடத்தையே மதம் புகட்டியது. அநேக பக்தர்களின் சரித்திரங்களிலிருந்து இது நன்றாய்ப் புலப்படுகின்றது. மதங்களும் மதத் தலைவர்களும் நூல் வழக்காக அன்பே ஈச்வரனென்றும், அன்பு அவசியமென்றும் வற்புறுத்தின போதிலும், அக்குணத்தை அவர்கள் உலக வழக்கில் மிகுதியாக வளர்க்கவில்லை. அன்பு, மதப் பற்றுக்கும் பக்தர்களுக்கும் உரியது என்ற குறுகிய எண்ணத்தை அவர்கள் கைக்கொண்டார்கள். ஒருவன் தன்னுடைய மதம்

இனம், ஜாதி இவைகளைச் சேர்ந்தவர்களைத் தவிர, மற்றவர்களிடம் காட்டும் உள்ளன்பினாலேயே அவனது கனிந்த ஒழுக்கத்தின் தன்மையும் உயர்வும் விளங்கும். மதாசாரங்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் கீழ்ப்படிதல் ஒழுக்கமென்று நினைப்பது தவறு. தமிழ் நாட்டில் சமணர்களும் பௌத்தர்களும் ஒழுக்க நெறியைப் பரப்பியது போல் சைவர்களும் வைஷ்ணவர்களும் பரப்பவில்லை. ஒழுக்கத்தைவிடக் கடவுள் வழிபாடும் பக்தியும் உயர்ந்தன என்றும், உயரிய மார்க்கத்தை அறிந்தவர்கள் தாழ்ந்த மார்க்கத்தை ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்றும், மதப் பற்றுடையவர்கள் பதில் சொல்லக் கூடும். ஆனால் இந்த வாதம் தற்காலத்தில் செல்லாக் காசு ஆகும். ஒழுக்க நெறியில் வேரூன்றி வளராத சமுதாயத்தின் அழிவிற்கு வித்துக்கள் அதனுள்ளேயே இருக்கின்றன என்று சரித்திர பூர்வமாய் அறியலாம். இந்த நியாயத்திற்கு ஒப்ப, தமிழர்களின் வாழ்வு சீர்கேடான நிலைமையை அடைந்தது.

## பிற்காலக் கலைகள்

பொதுவாகத் தமிழர்களின் கலைப் பெருக்கின் ஒளி குன்றத் தொடங்கிய போதிலும், சில துறைகளில் அது பிற்காலத்தில் மேம்பாட்டை அடைந்தது. அரசர்களின் வலிமையும் சாம்ராஜ்யமும் குறைந்துகொண்டே வந்தபோதிலும், அவர்களுடைய வாழ்வு ஆடம்பரத்திலும் இன்பத்திலும் குறைவுபடாமல் நடைபெற்றது. நாட்டின் செல்வத்தின் பெரும் பாகம் அரசர்களின் செலவுக்கே சென்றது. கோவில்களுக்கும், தர்மங்களுக்கும் கொஞ்சப் பணத்தை அரசர்கள் செலவு செய்த போதிலும், அவர்கள் பெரும்பான்மையான பாகத்தைத் தங்களுடைய ஆடம்பரத்திற்கும் இன்பத்திற்கும் உபயோகப்படுத்தினார்கள். அரசர்களின் ஆடம்பர வாழ்க்கை

யால் சில கலைகள் வளர்ந்தன. கட்டிடங்கள் சமைக்கும் கலை, சங்கீதம், நாட்டியம் முதலியவைகள் இந்தப் பகுதியைச் சேர்ந்தவை.

## கட்டிடக் கலை

நாயக்க மன்னர்கள் மதுரையிலிருந்து ஆண்ட காலத்தில் கட்டிடக் கலையை ஆர்வத்துடன் பேணினார்கள். அரசர்களின் அரண்மனைகளும், உப்பரிகைகளும், பூங்காவனங்களும், உல்லாஸ மஹால்களும், வெகு நேர்த்தியான தன்மையுடனும், கம்பீரத்துடனும், நுண்ணிய கலைப் பாங்குடனும், பலவிதமான சித்திர வேலை, ஓவிய வேலை, வர்ண வேலைப் பெருக்குடனும் அமைக்கப்பட்டன. வீர மன்னர்களுக்கு இருப்பிடம் அளிக்கவேண்டுமென்று, அழகுத் தெய்வமே கோலாகலத்துடன் எழுந்து ஜோதியுடன் வீற்றிருப்பது போலுள்ள தோற்றத்தைக் கொடுக்கக்கூடிய மாளிகை ஒன்றைக் கீர்த்தி பெற்ற மன்னன் திருமலை நாயக்கன் கட்டினான். இப்போது மதுரையிலுள்ள அதன் சீர்கேடான பின்னங்களிலிருந்து அதன் மாட்சியை நாம் ஒருவாறாக அநுமானிக்கலாம்.

## நாட்டியம்

நாட்டியக் கலையும் சங்கீதக் கலையும் வெகுகாலமாகத் தமிழகத்தில் ஓங்கி வளர்ந்திருக்கவேண்டுமென்பதில் ஐயமில்லை. இனிய கானத்தைக் கேட்டும், கணிகைகள் உல்லாசமாய் நாட்டியம் ஆடுவதைப் பார்த்தும் களித்து, அரசர்களும் பிரபுக்களும் தங்கள் காலத்தைப் போக்குவது சகஜம். பரத நாட்டியம் ஆரியர்களுடைய கலை என்றே சொல்லவேண்டும். தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் ஒருவிதக் கூத்துக்களும், ஆடல்களும் இருந்திருக்கின்றன. ஜனங்கள்

அவைகளில் அவாவுடன் ஈடுபட்டிருந்தார்கள். கீதமும் நடனமும் பக்தி மார்க்கத்தை வளர்க்கக் கருவிகளாகப் பின்னால் உபயோகப்படுத்தப்பட்டன. ஆலயங்களின் பணிக்குக் கூட, தேவதாசிகள் என்ற நாட்டியப் பெண்கள் ஏற்பட்டார்கள். இவர்கள் உத்சவ காலங்களில் நாட்டியம் ஆடும் வழக்கமும் பின்னால் இருந்தது. நடனம் அதிநுட்பமான கலை. நேர்த்தியுடனும் ஆர்வத்துடனும் நடிப்பது மிகவும் கஷ்டமான முயற்சி. மனத்தில் எழும் பக்தி, காதல், சிற்றின்ப மோகம் இவைகளின் விகாசத்தையும் பாவங்களையும், கவிச் சுவையுடனும் கானச் சுவையுடனும், ஊறிப் பொங்கும் உணர்ச்சியுடனும் அநுபவித்து, சிருஷ்டி பாவத்துடன் அபிநயங்களால் வெளிப்படும் கலையே நடனம். அரசர்களும் பிரபுக்களும் நடனப் பெண்களை ஆதரித்து வந்தார்கள். பிற்காலத்தில் இக்கணிகைகள், ஒழுக்கத்தை அறவே மறந்து, உன்மத்தம் மிகுந்த காம வாழ்க்கையில் ஈடுபட்டு, பொருள் தேடும் தொழிலைக் கைக்கொண்டதால், நடனம் க்ஷீணமடையத் தொடங்கியது. இவர்களுடைய வாழ்க்கையும், அதனால் வாலிபர்களுக்கு ஏற்பட்ட சுக துக்கங்களும், 'விறலிவிடு தூது' போன்ற நூல்களில் கவிதைப் பொருளாக இருக்கின்றன.

## சங்கீதம்

சங்கீதம் இந்தியாவின் புராதனமான கலைகளில் ஒன்று. இதைப் பண்டைக் காலத்திலிருந்தே தமிழர்கள் நன்றாகப் பேணி வந்திருக்கிறார்கள். ஆடல்களுக்கும் கூத்துக்களுக்கும் உயிர் கொடுப்பது சங்கீதம். தமிழ்ச் செல்வத்தை இயல், இசை, நாடகம் என்று மூன்று வகையாகப் பாகுபாடு செய்ததிலிருந்து ஆதிகாலத் தமிழரின் நுண்ணிய கலையுணர்ச்சியின் விசேஷம் விளங்கும். அவர்களிடம் பலவிதமான இசைக்

கருவிகள் இருந்திருக்கின்றன. அவைகளில் யாழ் என்பது மிகவும் சிறப்பாய் இருந்ததென்று இலக்கியங்களிலிருந்து தெரிகிறது. தேவாரங்களும் பிரபந்தங்களும் பின்னால் தோன்றிய காலத்தில் சங்கீதம் வளர்ச்சியை அடைந்தது. அவைகளைப் பாடத் தமிழர் பலவிதமான பண்களையும் இசை முறைகளையும் கைக்கொண்டார்கள். இவைகளில் பெரும் பான்மையானவை இப்போது உலக வழக்கில் இல்லை. ஒரு சிலவற்றின் சின்னங்கள் அருகிக் கேட்கப்படுகின்றன.

இடைக் காலத்தின் இறுதியில், தமிழர் வடநாட்டுக் கலைகளைக் கைக்கொண்ட போது, சங்கீதமும் அவைகளில் ஒன்றாயிருந்தது. வடநாட்டுச் சங்கீதத்திற்கு விஜயநகர மன்னர்கள் பேராதரவு அளித்தார்கள். சங்கீத சாஸ்திரங்களும் இலக்கணங்களும் நாளடைவில் பல மாறுதல்களை அடைந்து வளர்ந்திருக்கின்றன. தமிழ் நாடு விஜயநகர மன்னர்களின் ஆட்சியில் இருந்த காலத்தில், இங்கே சங்கீதம் வெகுவாகப் பரவியது. கர்னாடக சங்கீத சாஸ்திரமும் நாளடைவில் உருப்பெற்று வடநாட்டு முறைகளிலிருந்து சில மாறுதல்களை அடைந்து தோன்றியது. இப்போது தமிழ் நாட்டில் பிரபலமாகக் கைக்கொள்ளப்படும் கர்னாடக சங்கீத முறைகளையும், ராக லட்சணங்களையும், ஸ்வர, ச்ருதி தத்துவங்களையும் பதினாறும் நூற்றாண்டிலிருந்த ராம அமாத்யர் தமது 'ஸ்வரமேள கலாநிதி' என்னும் நூலிலும், சற்றுப் பின்னால் வந்த பண்டித வேங்கடமாகி என்பவர் தமது 'சதுர்தண்டிப் பிரகாசிகா' என்னும் நூலிலும் பாகுபாடு செய்து விரித்திருக்கிறார்கள். தஞ்சாவூரில் ஆண்ட மராத்திய மன்னர்கள் சங்கீதக் கலையை மிகுந்த ஆர்வத்துடன் பேணினார்கள்.

சங்கீதத்திற்குச் சாஸ்திரங்களும் இலக்கணங்களும் தோன்றியிருந்த போதிலும், அந்தக் கலையை ஜனங்களிடம் பரப்பி, அவர்களின் ஊக்கத்தைக் கிளப்ப அவசியமான சாத

னங்களும் வசதிகளும் இல்லாமலிருந்தன. பதினெட்டாம் நூற்றுண்டில்தான் கர்னாடக சங்கீதம் புத்துயிர் பெற்று நாடெங்கும் ஒளி வீசியது. அதை அநுஷ்டித்துப் போற்றிய வித்வான்கள் பலர் தோன்றினார்கள். அவர்களில் தலைசிறந்து விளங்குபவர் சோழநாட்டில் பிறந்து வளர்ந்து திகழ்ந்த தியாகய்யர். விஷ்ணு பக்தியின் மிகுதியால் அவரிடம் சங்கீதச் செல்வமும், கான வெள்ளமும், அபரிமிதமாய்ப் பொங்கின. அவர் செய்த நூற்றுக்கணக்கான கிருதிகளே கர்னாடக சங்கீத சாஸ்திரத்தின் தத்துவ நுட்பங்களுக்கும், புதுமையான பல கான விந்யாசங்களுக்கும் இலக்கியமாய் இருக்கின்றன. அவைகள் தெலுங்கு பாஷையில் இருந்த போதிலும், தியாகய்யர் தமிழர்களின் கலைவளத்தின் கனியே. அவருடைய சேவையும் புகழும் என்றும் அழியாத தன்மையன. அவர் காலத்திலேயே சங்கீத சாஸ்திரத்திற்கு ஓர் அருமையான நூலையும் பல கிருதிகளையும் செய்த முத்துசாமி தீக்ஷிதரும், சற்றுப் பின்னால், இன்னும் வேறு பல கிருதிகளை இயற்றிய சாமா சாஸ்திரியும், பட்டணம் சுப்பிரமணிய அய்யரும், சங்கீதத்திற்கு வளமும், அபிநயத்திற்கு உயிரும் கொடுத்திருக்கிற சிறந்த தமிழ்ப் பதங்களை இயற்றிய முத்துத் தாண்டவர், கவி குஞ்சர பாரதி, சுப்பராம அய்யர் முதலியோர்களும் இருந்தார்கள்.

ஒருவிதமாய்ப் பார்க்குமிடத்து, கானம் எல்லாக் கலைகளிலும் உயர்ந்தது; அளவற்ற சக்தி வாய்ந்தது. படித்தவர்களையும் பாமரர்களையும், மிருகங்களையும், பாம்புகளையுங் கூடத் தன்னுடைய சக்திக்குள்ளாக்கி, தம்மை மறந்து இன்பக்கடலில் மூழ்கச் செய்து, ஆநந்த நிலையில் நிறுத்தும் தன்மையை உடையது கானம். தியாகய்யருக்குப் பின்னால், மகா வைத்தியநாதய்யர், சரப சாஸ்திரிகள், திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர், புஷ்பவனம், நாயனு பிள்ளை, வீணை

தனம் போன்ற பல சங்கீத வித்வான்கள் தோன்றி, கர்னாடக கானத்தை இன்னும் உயிருடன் ஓங்கும் கலையாக ஆக்கியிருக்கிறார்கள்.

தமிழரின் கலைகள் குன்றிய காலத்திலும், இலக்கியங்கள் பல செய்யப்பட்டன. முக்கியமாக ஸ்தல புராணங்களும், வேறு புராணங்களும் பெருங் காப்பிய நடையில் எழுதப்பட்டன. அவை அநேகமாக, தெய்வப் புலமையும், கவித்வ - ஒளியும் இல்லாத செய்யுள்-குவியல்களா யிருக்கின்றன; மொத்தமாக நோக்குமிடத்து, சொல்நயம் பொருள்நயம் ஆங்காங்கு காணக் கிடப்பினும் அவை உயர்ந்த காவியங்களல்ல. தமிழகத்தில் செய்யுள் இயற்றும் தொழிலைக் கைக்கொண்டவர்கள் தொடர்ச்சியாகவே இருந்திருக்கிறார்கள். செய்யுள்-கலைக்கு, அதை வகுக்கும் முறைகளும், இலக்கணங்களும், அணி அலங்கார நூல்களும் விரிவாயிருப்பதால், அவைகளின் உதவியால் கல்விமான்கள் எளிதில் செய்யுள் நடையில் நூல்களை இயற்றி வந்தார்கள். எல்லாவித நூல்களும் சரித்திரங்களும் செய்யுள் ரூபமாகவே எழுதப்பெறும் வழக்கம் இருந்ததால், தமிழ்ப் புலவர்களுக்குச் செய்யுள் இயற்றுவது மீனுக்கு நீச்சுப் போலாயிற்று.

காஞ்சிப் புராணம் முதலிய புராணங்களை ஆக்கிய சிவஞான முனிவரும், சென்ற நூற்றாண்டில் செய்யுட்களையும் புராணங்களையும் ஏராளமாக எழுதிக் குவித்த மகா வித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையும் தமிழ் இலக்கிய இலக்கண அறிவின் எல்லையைக்கூடக் கண்டிருப்பார்களென்று சொல்லத் தகுந்த மகா பண்டிதர்களா யிருந்தார்கள். ஆனால் அவர்களைப் பெரிய கவிகள் என்று சொல்ல முடியுமா?

மத சம்பந்தமான நூல்கள் எல்லாம் புராணங்களாக ஆக்கப்பட்டதால், தமிழ் நாட்டிலிருந்த முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் தங்கள் தங்கள் சமய நூல்களையும் தமிழில் புரா

ணங்களாகச் செய்ய ஆவல் கொண்டார்கள். இந்த ஆவல் பூர்த்தி செய்யப்படுவதற்குச் சந்தர்ப்பங்களும் நேர்ந்தன. நமது நாட்டிற்குக் கிறிஸ்தவ மதப் பிரசாரத்திற்கென்று வந்த இத்தாலிய தேசத்துப் பாதிரி வீரமாமுனிவர் (Father Beschi), தமிழை நன்ருய்க் கற்றுச் சிறந்த தேர்ச்சி பெற்று, சதுரகராதி, பரமார்த்த குரு கதை போன்ற நூல்களை இயற்றினதுமன்றி, 'தேம்பாவணி' என்ற சிறந்த கிறிஸ்தவ மத காவியத்தையும் பாடினார். கடிகைமுத்துப் புலவரின் சீடரும், எட்டயபுர மன்னரின் சமஸ்தான வித்வானுமாயிருந்த உமறுப் புலவர், ராமநாதபுர மன்னர் ரகுநாத சேதுபதியிடத்தில் மந்திரியாயிருந்து பெருங் கீர்த்தி பெற்ற செயத்காதர் மரக்காயரால் தூண்டப்பட்டு, அரபியிலுள்ள நபிநாயகத்தின் சரித்திரக் கதைகளையும், முஸ்லிம் சமய சம்பந்தமான நூல்களின் பொருளையும், மற்றவர்களிடமிருந்து அரும் பாடுபட்டு அறிந்து, 'சீருப் புராணம்' என்ற சுமார் ஆருயிரம் பாட்டுக்கள் அடங்கிய ஒரு நூலைச் செய்து, பரங்கிப்பேட்டை அபுல் காஸிம் மரக்காயர் என்ற பிரபுவின் ஆதரவில் அரங்கேற்றினார். சீருப் புராணம் கவிதைச் சுவையும் இலக்கியச் சுவையும் உள்ள தமிழ்க் காவியம்; செய்யுளின் நடையும் வாக்கும் பல பாகங்களில் நயத்துடன் இருக்கின்றன.

இலக்கிய உலகில் பண்டிதர்கள் வித்வான்கள் இவர்கள் ஆதிக்கமே நடைபெற்றுவந்தது; இலக்கிய வாழ்வு மக்களின் வாழ்வுடன் நெருங்கிச் சேராமலிருந்தது. இலக்கியச் சுவையும் கவிதை இன்பமும் பாமர ஜனங்களுக்கு இல்லை யென்றும், முற்றும் கற்ற பண்டிதர்களுக்கே இலக்கியம் உரிய பொருள் என்றும் கருதினார்கள். மக்களின் படிப்பின்மையும், கற்றோர்களின் கல்விச் செருக்கும், சமுதாய வாழ்வின் க்ஷீணமும் இந்த நிலைமைக்குக் காரணமாயிருந்தன. இருந்தபோதிலும் பாமர மக்களின் மனத்தின்மீதும், இலக்கிய வானம் கவிந்து,

அவர்கள் ரஸித்து அநுபவிக்கக்கூடிய முறையில் கவிதை மழை பொழிய வேண்டுமென்ற கருத்து மெள்ள எழுந்து ஒருவிதமான வெற்றியும் பெற்றது.

சாதாரண ஜனங்கள் பழைய கதைகளை எளிதில் அறிந்து அநுபவிக்குமாறு, அவை, புதிய ரூபங்களில், நாடகங்களாயும் காலட்சேப வாசகங்களாயும், இசையுடனும் நூதன சந்தங்களுடனும் எழுதப்பட்டன. இவைகளில் திரிகூட ராசப்பக் கவிராயரின் 'குற்றாலக் குறவஞ்சி' தலைசிறந்தது; இசை நிறைந்த கவிதையை உடையது. அருணகிரியின் 'திருப்புகழ்', 'முக்கூடல் பள்ளு', அருணாசலக் கவிராயரின் 'ராம நாடகம்', கோபாலகிருஷ்ண பாரதியின் 'நந்தன் சரித்திரம்', அண்ணாமலை ரெட்டியாரின் 'காவடிச் சிந்து' இவை இசைத் தன்மையும் சுமாரான இலக்கியச் சுவையும் உள்ளவை. அருணகிரிநாதரின் திருப்புகழில் சில பாகங்கள் கடினமானவையாயிருந்தும், மக்கள் அவைகளைப் பாடி அநுபவிக்கிறார்கள்.

தமிழரின் கலைவளத்தின் வளர்ச்சியைப் பற்றிச் சுருக்கமாக, அதன் பொதுவான தன்மைகளைக் குறிப்பிட்டு மேலே வரையப்பட்டிருக்கிறது. விவரங்களை அதிகமாக்கி விஷயத்தை விஸ்தரிக்க இக்கட்டுரையில் இடம் இல்லை. பண்டைக் காலத்திலும், இடைக் காலத்திலும், பிற்காலத்தின் முற்பகுதியிலும், தமிழர்களின் நாகரிகமும் கலைகளும் ஓங்கி வளர்ந்தன. இவை சுமார் ஆயிரம் வருஷ காலமாக மதங்களால் விளைந்த சக்திகளால் பாதிக்கப்பட்டும் ஆக்கப்பட்டும் வந்தன என்பது மேலே கூறியதிலிருந்து விளங்கும். மதமும் மத ஸ்தாபனங்களும் க்ஷீணமடைந்ததினால் கலைகளும் குன்றின. பிற்காலத்தின் பிற்பகுதியில் க்ஷீணம் தோன்றி, சுமார் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அது முதிர்ச்சி பெற்றது. தமிழர்களின் சமுதாயமும் கலைகளும் காரிருளால் மூடப்பட்டிருந்தன.

# II

## தற்கால நாகரிகமும் தமிழரும்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியா முழுமையும் ஆங்கிலேயரின் ஆட்சியைப் பெற்றது; பெரும்பான்மையான பாகத்தை அவர்கள் நேரில் அரசாட்சி செய்தார்கள்; ஏனைய பாகங்களில் சுதேசமன்னர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குள்ளடங்கி, அதற்குக் கப்பம் கட்டி, கீழ்ப்படிந்து, தங்களுடைய ஆட்சியை நடத்தி வந்தார்கள். ஆங்கிலேயரின் அரசாட்சி நாடெங்கும் பரவினதால், தற்கால நவீன நாகரிகம் இந்தியாவிற்குள் நேரே அதிகாரத்துடன் நுழைந்தது. இந்தியாவின் நாகரிகமும் கலைகளும், பெரும்பான்மையாக க்ஷீணித்துச் சக்தியற்று இருந்த போதிலும், சமுதாயக் கட்டுப்பாடுகளும், ஜாதி - ஆசாரங்கள் முதலியனவும் பலமாய் வேரூன்றி நிலைத்திருந்தன. இவைகளில் அநேகம் காலப் போக்குக்குத் தக்கவாறு இல்லாத போதிலும், பிரிட்டிஷார் மத விஷயங்களிலும் சமுதாய விஷயங்களிலும் தலையிடாமல், தங்கள் வியாபாரத்திலேயே கண்ணுங் கருத்துமாய் இராஜ்யபாரம் செய்தார்கள். இந்தியர்கள் அதிக மதப் பற்றுடையவர்கள் என்று அறிந்ததினால், அவர்களுடைய மத சம்பந்தமான பழக்க வழக்கங்களில் தலையிடுவது அரசாட்சிக்கு ஹானி விளைக்குமென்று ஆங்கில ராஜதந்திரிகள் எண்ணினார்கள். இருந்தபோதிலும், இந்தியருக்கு ஆங்கிலத்தில் மேனாட்டுக் கல்வியைக் கொடுக்கவேண்டுமென்று, மெக்காலே பிரபு தீர்க்க புத்தியோடு செய்த சிபார்சின் பேரில், 'கும்பினி' சர்க்கார் தீர்மானித்ததினால், இந்தியாவின்

க்ஷீணமடைந்த நாகரிகமும், உயிரற்ற ஆசாரப் பழக்க வழக்கங்களும், நவீன நாகரிகத்தால் மறைமுகமாகத் தாக்கப்பட்டன.

## நவீன நாகரிகமும் இந்திய சமுதாயமும்

ஆங்கிலேயரின் அரசாட்சி பூரணமாய் ஸ்தாபிக்கப்படு முன்பே கிறிஸ்தவ மதம் இந்தியாவில் பரவ ஆரம்பித்தது; முக்கியமாகத் தமிழ் நாட்டின் கீழ்க் கரையோரமும் மேற் கரையோரமும் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. கிறிஸ்தவ மதப் பாதிரிகளின் பிரசாரமும், அந்தப் பிரசாரத்தின் ஒரு பகுதியாக அவர்கள் அளித்த கல்வியும், சர்க்காரால் நடத்தப்பட்ட கலாசாலைகளும், ஆங்கில அரசாட்சி முறைகளும், வியாபாரமும், தற்கால நவீன நாகரிகத்தை இந்தியாவிற்குள் கொண்டு வந்தன. ஆங்கில அரசாட்சிக்குக் குமாஸ்தாக்களைத் தயார் செய்யும் நோக்கத்துடன் சர்க்கார் தங்கள் கல்வி முறைகளை நிர்ணயித்திருந்த போதிலும், அவைகளால் வேறு பயன்களும் ஜனங்களுக்குக் கிட்டின. நவீன நாகரிகத்தின் ஸ்பரிசத்தைப் பெறவும், விஞ்ஞான சாஸ்திரங்களை அறியவும், சுதந்திரத்துடன் ஜனநாயக ஆட்சி எழுந்து மேல் நாடுகளில் தனது சக்தி ஒளியை வீசிக்கொண்டிருப்பதைப் பார்க்கவும், இந்தியர்களுக்கு முடிந்தது. அவர்களுடைய சமுதாயமும் கலைகளும் ஒரே இருளில் மூடியிருந்த காலத்தில், மேனாட்டு நாகரிகம் தனது ஒளியால் அந்த இருளைப் போக்க முயன்றது. தங்கள் சொந்த நாகரிகத்தையும் கலைகளையும் அறியக்கூடாத உயிரற்ற நிலைமையில் இருந்த இந்தியர்களில் சிலர், சொற்பக் காலம் நவீன நாகரிகத்தில் மோகங்கொண்டு, தங்களுடைய பழமையை வெறுத்தார்கள்; தாங்கள் பெற்ற நவீன அறிவால் தங்களுடைய கலைகளையும் பண்டை நாகரிகத்தையும் பின்னால் ஆராயவே, அவைகளின்

ஏற்றத்தைத் தெரிந்தார்கள். தெரிந்தென்ன பயன்? அந்தக் கலைகளையும் நாகரிகத்தையும் ஓங்கச் செய்த சமுதாய சக்தியும், வாழ்க்கையின் இன்பமும், சுதந்திரமும் மறைந்து விட்டனவே!

## நாகரிகம் என்பது என்ன?

ஆங்கிலேயர்களின் ஆட்சியின் பயனாக இந்தியாவில் நவீன நாகரிகம் நுழைந்து பரவியது என்று சொல்லி வந்தோம். இந்த நவீன நாகரிகத்தின் தன்மை என்னவென்றும், அதன் சக்தியும், உட்பொருளும், வெளித் தோற்றமும் என்னவென்றும் கவனிக்கவேண்டும். மக்கள் சமூகத் தொகுதிகளின் முன்னேற்ற வாழ்க்கையில், சில காலங்களில், சில இயக்கங்கள் தோன்றி, அவற்றின் பயனாக அவர்களுடைய சமுதாயப் பழக்க வழக்கங்கள், மனப்பான்மை, உணர்ச்சி, நடையுடை பாவனைகள், விவாக முறைகள், கலைகளின் வளம், சமுதாய, அரசியல், சமய, தத்துவ இலட்சியங்கள் முதலியன ஒரு பெருத்த மாறுதலை அடைகின்றன; பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்தின் இயல்பு. இவ்விதமாய்த் தோன்றும் இயக்கங்களும், அவைகளால் சமூகங்களில் ஏற்படும் மாறுபாடுகளும் நாகரிகம் என்பதின் கருத்தில் அடங்கும். மனிதன் நிர்வாணமாய்க் காட்டுமிராண்டி போல் திரிந்து, கிடைத்ததை அருந்தி, இச்சை நேர்ந்தபோது தன் குலத்தைப் பெருக்கி, கவலையும், அறிவும், நாணமும் அற்று, மிருகம் போல் வாழ்ந்த வாழ்வை உகுத்து, நாணம் பெற்று, ஆடைகளை உடுத்து, சமைத்து உண்டு, பெண்டிரை மணந்து, வம்சத்தைத் திரட்டி, கவலையை அறிந்து, அறிவில் விகாசமடைந்து, சமுதாய உணர்ச்சி பெற்று, குடும்பங்களைத் தொகுத்து, ஜாதிகளை வகுத்து, விழாக்களைக் கொண்டாடி, ஆடிப்பாடிக் கூடிக் குலாவி இருந்த போது, மனித சமுதாயத்

தில் வேறு நாகரிகம் புகுந்தது. இப்படியே அறிவின் வளர்ச்சியாலும், இயற்கையின் வளத்தாலும் விளைந்த சக்திகளால் நாகரிகங்கள் பாதிக்கப்பட்டு, பல நூற்றுண்டுகளுக்கு ஒரு முறை மாறுதல் பெற்றுப் புதிதாகின்றன.

## மேனுடுகளில் நவீன நாகரிகத்தின் எழுச்சி

தற்கால நவீன நாகரிகம் மேனுடுகளில் சுமார் நானூறு வருஷங்களுக்கு முன், அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதின் பயனுகச் சமுதாயத்தில் பரவின அறிவாலும், விஞ்ஞான சாஸ்திரத்தின் எழுச்சியாலும், மத ஸ்தாபனங்களின் தலைவர்களின் குறுகிய நோக்கங்களையும் கொடூரங்களையும் கண்டித்துக் கிறிஸ்தவர்களுக்குள் தோன்றின ஒரு சீர்திருத்த இயக்கத்தாலும் (The Reformation Movement) பிறந்து வளர்ந்தது. மதத் தலைவர்கள் ஜனங்களுடைய இருளடைந்த மூட நம்பிக்கையால் பெற்ற அதிகாரத்தால், விஞ்ஞான சாஸ்திரங்களின் முன்னேற்றத்தைத் தடுத்ததுமன்றி, மதப் புஸ்தகங்களில் வான சாஸ்திரம் சம்பந்தமாகக் காணப்படும் தவறுகளை எடுத்துக் காட்டி உண்மை அறிவை நிலைநாட்டிய அறிஞர்களாகிய கலிலியோ, ப்ரூனே முதலியவர்களுக்கு மரண தண்டனையை அளித்துக் களித்தார்கள். வல்லரசர்கள், தாங்கள் பல நாடுகளையும் சமுதாயங்களையும் இஷ்டம்போல் அரசாட்சி செய்யும் வழக்கம், தெய்விக ஆணையைத் தழுவிய உரிமையென்று பிதற்றுவதற்கும், அதை மதத் தலைவர்கள் ஆதரிப்பதற்கும் காரணமாயிருந்த கொள்கை உடைபட்டது. ஜனங்களிடம் சுதந்திர உணர்ச்சி பிறந்து வலுத்து, வல்லரசுகளைத் தாழ்த்தி, ஜனநாயக ஆட்சித் தத்துவத்தை ஸ்தாபித்தது. நாட்டிலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும், கல்வியைப் பெறவும் சுகவாழ்வை அடையவும் உரிமை உண்டென்று கொள்ளப்பட்டது. மத விஷயமான பிரமாணங்களின்

முழு ஆதிக்கம் ஒழிந்தது. சமய வாதங்களும், நம்பிக்கை களும், வழிபாட்டு முறைகளும் பழைய சமுதாயக் கட்டுப் பாடுகளும், புத்தி, யுக்தி, தர்க்க பூர்வமான வாதங்களால் தகர்த்து எறியப்பட்டன. ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமத்வம் உண்டென்ற கொள்கை தலையெடுத்தது; பெண் கள் பலவிதங்களிலும் சுதந்திரத்தைப் பெற்றார்கள்.

தர்க்க அறிவால் சமைந்த மனப்பான்மை, பெரும் பான்மையான மக்களிடம் வலுத்தது. விஞ்ஞான சாஸ்திரங் களின் முன்னேற்றத்தால் பலவிதமான யந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. நீராவி, மின்சார சக்திகளால் விதவிதமான யந்திரங்கள் நுட்பமான திறமையுடன் ஆக்கப்பட்டதினால், கைத்தொழில் முறைகள் முற்றிலும் மாறுதலை அடைந்தன. மனிதன் தன் தேவைகளை அதிகப்படுத்திச் சௌகரியங் களையும் பெருக்கினான். பெருத்த வியாபார முதலாளிக் கூட் டத்தினர்களும் தோன்றி, தொழிலாளர்களின் முயற்சியால் விளைந்த செல்வத்தின் பெரும்பாகத்தைப் பங்கிட்டுக்கொண் டார்கள்; வியாபாரச் சாமான்களைச் சுருங்கிய காலத்தில் மலை மலையாகச் செய்து குவித்தார்கள். ஆகாயத்தையும் கடலை யும் கடக்கும் யந்திரங்கள் தோன்றின. கம்பியில்லாமல் சப்தங்களைத் தூர தேசங்களுக்கு அனுப்பும் அதிசய முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. சமாசாரப் பத்திரிகைகள் தோன்றி இன்றியமையாதனவாய் விளங்குகின்றன. நீராவி விசை வண்டிகள், மின்சார விசை வண்டிகள், கப்பல்கள், ஆகாய விமானங்கள், இவைகள் மூலம் சஞ்சாரம் எளிதாய் நடைபெறுவதால், உலகம் ஒன்றுபட்டு, நெருங்கிச் சுருங்கிக் கொண்டு வருகிறது.

நவீன நாகரிகம் புதிய புதிய விசித்திரங்களையும் விநோதங்களையும் காட்டிக்கொண்டிருக்கிறது. இந்த நாக ரிகத்தில் பலவித வழுக்களும் குறைகளும் இருக்கின்றன.

யந்திரங்களையும், பொருட் செல்வத்தையும், குறுகிய தேசியத்தையும் குல தெய்வங்களாக மேனாட்டார்கள் கொண்டாடுகிறார்கள்; ஆத்ம ஞானத்தைத் திரஸ்கரிக்கிறார் கள். ஒவ்வொரு வல்லரசும் தனது ஆயுத பலத்தைப் பெருக்கிக்கொண்டிருக்கிறது. ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லரின் இறுமாப்பாலும், அவர் விஞ்ஞான சாஸ்திர அறிவைப் பயன்படுத்திச் செய்து வைத்திருக்கும் அபரிமிதமான ஆயுத பலத்தாலும், உலகம் மகத்தான யுத்தத்தில் இறங்க நேர்ந்தது. மக்கள் எங்கே பார்த்தாலும் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். சர்வாதிகாரித் தத்துவத்தைக் கைக்கொண்ட வல்லரசுகள் ஜனநாயக முறைகளைத் தகர்த்தெறிய வெறிகொண்டிருக்கின்றன. தற்கால நாகரிகத்தைச் சிருஷ்டிப்பதில் அதிகம் பங்கெடுத்துக்கொண்டு பெரும் புகழுடனிருந்த பிரான்ஸ் தேசம் தலைசாய்ந்து இன்று உயிரற்றுக் கிடக்கின்றது. இந்த யுத்தத்தின் முடிவில் இதுவரை நிலவியிருந்த மேனாட்டு நாகரிகம் அழிந்துபோய், அதன் ஸ்தானத்தில் ஒரு புது நாகரிகம் பிறக்குமென்பதில் ஐயமில்லை.

சுருங்கக் கூறுமிடத்து, எல்லாத் துறைகளிலும் மக்களுக்குச் சுதந்திரமும், ஆண்-பெண்களுக்கு ஒரேவிதமான சுதந்திரமும், ஒழுக்க முறையும், சமுதாய நெறியும், யந்திரங்களின் உதவியால் இயற்கையின் சக்திகளை மனிதன் இன்ப வாழ்க்கைக்குப் பிரயோசனப்படுத்திக் கொள்வதும், அரசியலில் பரிபூரண ஜனநாயக-பொருளுடைமை - ஆட்சித் தத்துவமும், ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஸ்திரீக்கும் தன் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் வசதிகளும், பொருட் செல்வமும் இருக்கவேண்டும் என்ற கொள்கையும், பிறப்பால், அல்லது சமூகப் பழக்க வழக்கங்களால், அல்லது சட்ட ஏற்பாடுகளால் உள்ள ஏற்றத் தாழ்வுகளை ஒழித்தலும், இதுவரை மதங்களாலும் அரசு முறைகளாலும் விளைந்

திருக்கும் அநியாயங்களைத் தொலைப்பதும், மனிதன் மக்களுக்குச் செய்யவேண்டிய சேவையையே மதமாகக் கொள்ளும் இலட்சியமும், அறிவுக்குப் புறம்பாயுள்ள மதத்தையும் மதக்கோட்பாடுகளையும் புறக்கணிப்பதும், இகத்தில் இன்பம் தேடுவதற்கு ஏற்றமும் நவீன நாகரிகத்தின் சில முக்கியமான அம்சங்கள். அவை இந்தியாவின் நாகரிகத்திற்குப் புறம்பானவை.

## நவீன நாகரிகத்தால் இந்திய சமுதாயத்தில் உண்டான மாறுதல்

நவீன நாகரிகம் நாட்டில் பரவ ஆரம்பித்ததினால், இந்திய சமுதாயங்களிலும் இந்தியர்களுடைய கலை வாழ்விலும் தோன்றின சலனமும் மாறுதல்களும் எல்லா மாகாணங்களிலும் அநேகமாக ஒன்றாகவே இருந்தபோதிலும், அவை வட இந்தியாவிலும், முக்கியமாக வங்காளத்திலும் தான், முதன்முதல் மிகுந்த சக்தியுடனே தாக்கின; தமிழ் நாட்டில் கடைசியாகவும் சக்தி குறைந்தும் இந்த மாறுதல்கள் காணப்பட்டன. ஆங்கிலக் கல்வி பெற்றவர்கள் தங்கள் வாழ்க்கையின்மீது ஓர் அதிருப்தியை அடைந்தார்கள். பிரம்ம ஸமாஜம், ஆரிய ஸமாஜம் என்ற மத சம்பந்தமான சீர்திருத்த இயக்கங்களும் சமுதாய ஆசாரச் சீர்திருத்த இயக்கங்களும் கிளம்பின. இதனால் தங்களுடைய நாகரிகமும் சமுதாய வாழ்வும் குறைவுள்ளன என்றும், தற்காலத்திற்கு ஏற்றவையல்ல என்றும், ஜனங்களின் மனப்பான்மை விரிந்து நவீன ஒளியைப் பெறவேண்டுமென்றும் ஓர் உணர்ச்சி பிறந்தது. இந்த உணர்ச்சி இலக்கியங்களிலும் தோன்றியது. பழைய கதைகளும், புராணங்களும், பாட்டுக்களும் ருசியில்லாமல் போயின. நவீன உணர்ச்சி ததும்பக் கூடிய கவிதையும், நாவல்களும், கதைகளும் உண்டாயின.

## தமிழும் பிற மொழிகளும்

தன்னுடைய பெரும் சக்தியால் பல புதிய நவீன பாஷைகளைப் பாரத நாட்டில் பிறப்பித்து, அவைகளுக்கு உயிரும் ரூபமும் அளித்துவிட்டு, வடமொழி உலக வழக்கி லிருந்து அகன்ற போதிலும், அதில் பொதிந்து கிடக்கும் கலைகளின் ஜோதியும் செல்வமும் குறைவுபடாமல் நிலைத் திருக்கின்றன. மிகப் புராதன காலத்தில் இந்தியாவில் இருந்த பாஷைகளில் இன்றுவரை உயிருடன் உலக வழக்கில் இருப்பது தமிழ் ஒன்றுதான். இந்த அரிய பெருமை தமிழுக்கு உரித்தாயிருந்தும், அதன் தற்கால நிலைமையில் வயோதிகத்தின் தளர்ச்சி காணப்படுகின்றது. தமிழகத் தைத் தவிர இந்தியாவின் மற்றப் பாகங்களிலுள்ள பாஷை கள், மத்ய காலத்தில் தோன்றியவையாதலால், தமிழ் மொழி யைப்போல் அவை கலைவளத்தையும் இலக்கியச் செல்வத்தை யும் பிதிரார்ஜிதமாய்ப் பெற்றிராவிட்டாலும், வாலிபத்தின் தன்மைகளையும் சக்திகளையும் பெற்றிருக்கின்றன. தற்காலத் தில் உருது, ஹிந்தி, வங்காளம், மாராத்தி, தெலுங்கு, மலை யாளம் முதலிய மொழிகளுக்குள்ள ஜீவ - சக்தி தமிழ் பாஷைக்கு இல்லை என்று கருதவேண்டி யிருக்கிறது. தமிழ் மொழியும் கலையும் செழித்தோங்கிய காலத்தில் அவை வட மொழியையும் வடநாட்டுக் கலைகளையும் வெகு இலகுவாய் ஆகருஷித்து, அதனால் புத்துயிர் பெற்றுப் பெரும் வளர்ச் சியை அடைந்தன. அதே மாதிரி, தமிழ் மொழி தற்காலத் தில் மேனாட்டுக் கலைகளையும் நவீன நாகரிகத்தின் ஒளியை யும் ஆகருஷித்து, அவைகளைத் தன்மயமாக்கி, ஒரு நூதன சக்தியைப் பெற முடியாம லிருப்பது தமிழர்களின் கலைவாழ்வின் க்ஷீணத்தையும் சமுதாய வாழ்க்கையின் உயி ரற்ற தன்மையையும் காட்டுகிறது. தமிழர் தங்கள் சுதந்

திரத்தை இழந்து பல நூற்றுண்டுகளானது அவர்களின் தற்காலத் தாழ்ந்த நிலைக்கு ஒரு தகுந்த காரணமாயிருக்கலாம். இந்தியாவிலுள்ள மற்றச் சமூகத்தினர்களுக்குச் சமீப காலம் வரை சுதந்திர வாழ்வு இருந்திருக்கிறது. மராத்தியர்கள், மொகலாயர்கள், விஜயநகர மன்னர்கள் இவர்களுடைய சாம்ராஜ்யம் சுமார் மூந்நூறு வருஷங்களுக்கு இப்பால் வரை ஓங்கியிருந்தது. இது, அந்தந்த நாட்டிலுள்ள மொழிகளும் கலைகளும் பூராவும் வலி குன்றமல் நவீன நாகரிகத்தையும் கலைகளையும் ஆகருஷிக்கும் தன்மையுடனிருப்பதற்கு, ஒரு காரணமாகும். இந்தியா நவீன நாகரிகத்தால் மோதுண்டதால் மக்களிடம் தோன்றிய கிளர்ச்சியும், தேசீய ஒற்றுமை உணர்ச்சியும், சமுதாய மறுமலர்ச்சியும், மராத்தியர்கள், வங்காளிகள், ஆந்திரர்கள் இவர்களுடைய இலக்கியங்களிலும் கலைகளிலும் திகழ்வதைப்போல் தமிழர்களின் இலக்கியங்களிலும் கலைகளிலும் இல்லை என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. இது நிதர்சனமான உண்மை என்பதில் ஐயமில்லை. இந்த நிலைமை மிகவும் வருந்தத்தக்கது.

## தமிழ் வடமொழியை ஆகருஷித்த முறை

வள்ளுவரின் குறளையும் கம்பரின் ராமாயணத்தையும் பெற்ற தமிழரின் கலை இப்போது தள்ளாடின நிலைமையிலிருப்பது கால சக்கரத்தின் இயல்பு என்று கூறிவிடலாம்; இருந்த போதிலும் இதற்குக் காரணத்தை ஆராயவேண்டியது அவசியம். தமிழ் மொழிக்கும் தமிழரின் கலைகளுக்கும் ஜீவ - சக்தி குறைந்தது என்று முன்னுல் சொல்லியதைச் சற்றுத் தெளிவாய் விரித்தால் காரணங்கள் புலப்படும். வடமொழியையும் அதிலுள்ள கலைகளையும் தமிழ் எப்படி ஆகருஷித்தது? வடமொழிச் சொற்களை, அப்படியே அவைகளின் ரூபத்துடனும், அர்த்தத்துடனும் திரிபு இல்

லாமலே ஆயிரக்கணக்காய்த் தமிழ் சேர்த்துக்கொண்டது. இதற்குத் தமிழ் இலக்கண விதிகளும் விரிந்து இடங்கொடுத் தன. வடமொழியிலுள்ள மெய்யெழுத்து தீர்க்க ஓசைகளும், ஜ, ஹ போன்ற சில சிறப்பு ஓசைகளும் தமிழ்ச் சொல்லில் இல்லாதிருந்தும், அவைகளுக்குப் பதிலாகக் கிட்டத்தட்டச் சமானமாயுள்ள ஒலியைக் கொடுக்கும் எழுத்துக்கள் உப யோகிக்கப்பட்டன. தமிழ்க் கவிஞர்களும், புலவர்களும் கொஞ்சமேனும் அஞ்சாது தாராளமாய் வடமொழிச் சொற்களை எடுத்து ஆண்டார்கள். சிறந்த தமிழ் இலக்கி யங்களிலிருக்கும் முக்கியமான சொற்களடங்கிய - திருவா ளர் சுன்னாகம், அ. குமாரசாமிப் பிள்ளை தொகுத்த - இலக் கியச் சொல்லகராதியில் காணப்படும் வார்த்தைகளில், சுமார் பாதிவரை வடமொழியைச் சேர்ந்தவையா யிருப்பதிலிருந்து இது நன்கு விளங்கும். சொற்களைத் தவிர, பலவிதமான கருத்துக்களும், இதிகாசங்களும், நீதிகளும், அணி அலங் கார சாஸ்திரங்களும், காவிய முறைகளும், சூத்ரங்கள் இயற் றும் முறைகளும், வேறு கலைகளும் வடமொழியிலிருந்து தட்டுத்தடையின்றித் தமிழுக்கு வந்திருக்கின்றன. இதனால் தமிழரின் தனி நாகரிகத்தில் அடங்காத புதிய சாஸ்திரங்களும் கலைகளும் தமிழில் உண்டாகி அதன் இலக்கியச் செல்வம் பெருகிற்று.

## தமிழரின் தற்கால ஆகருஷண சக்தி

இந்த நிகழ்ச்சியைப் பின்பற்றி, இதையே மேற்கோ ளாகக் கொண்டு, இப்போது தமிழ் மொழி, நவீன நாக ரிகத்தை இந்தியாவிற்கு அழைத்துவந்த ஆங்கிலேய மொழி யின் சொற்களை ஏராளமாய் ஆகருஷிக்கவும், அதன்மூலம் விஞ்ஞான சாஸ்திரங்களையும் கலைகளையும், நவீன சமுதாய, அரசியல், பொருள் நூல் முதலிய சாஸ்திரங்களையும் தமிழ

ருக்குக் கொடுத்து அவர்களின் அறிவை வளர்க்கவும் முடியாமலிருக்கிறது என்பதை ஒவ்வொரு தமிழனும் உணர வேண்டும். மத்ய காலத்தில் வடமொழிச் சொற்களையும், அதன் சாஸ்திரங்களையும் தமிழ்க் கவிஞர்களும் புலவர்களும் எவ்வளவு ஆற்றலுடன் கைக்கொண்டார்களோ, அவ்வளவு ஆற்றலுடன் தற்காலத் தமிழ்ப் புலவர்களும், ஆங்கிலச் சொற்களையும், நவீன சாஸ்திரங்களையும், கலைகளையும் கைக்கொள்ள வேண்டும். அதனால் தமிழ் மொழிக்கு ஒருவிதக் குறைவும் நேராது; இப்போதிருக்கும் க்ஷீண நிலைமையிலிருந்து அது எழுந்து அபார சக்தியைப் பெறுமென்பது உறுதி.

## விஞ்ஞான சாஸ்திர அறிவும் தமிழும்

ஆங்கிலத்திலிருந்து நவீன சாஸ்திரங்கள், கலைகள் சம்பந்தமான சொற்களை அப்படியே எடுத்துத் தமிழ் ஒலிகளின் இயல்புக்குத் தக்கபடி சிற்சில மாறுதல்களுடன் பிரயோகிக்காமல் அவைகளின் பொருளை மிகுந்த கஷ்டத்துடன் ஒருவாறு அநுமானிக்கக் கூடியனவாயுள்ள தமிழ்ப் பதங்களையும், பதத் தொகுதிகளையும் வெறும் தேசபக்தி உணர்ச்சியாலும், மொழிப் பற்றாலும் தூண்டப்பட்டுத் தயார் செய்வது தவறாகும். விஞ்ஞான சாஸ்திரங்கள் சம்பந்தமாக ஆங்கிலத்தில் காணப்படும் அநேகம் சொற்கள் அந்த மொழியைக் கூடச் சேர்ந்தவையல்ல; கிரேக்க லத்தீன் முதலிய மொழிகளைச் சேர்ந்தவை; அவைகளை ஆங்கிலேயர் அப்படியே கையாண்டிருக்கிறார்களே ஒழிய அவற்றின் பொருள்களைக் கொடுக்கும் ‘ஆங்கிலோ ஸாக்ஸன்’ பதங்களைத் தேடிக்கொண்டிருக்கவில்லை. விஞ்ஞான சாஸ்திரக் கருத்துக்களுக்குத் திட்டமாய்ச் சரியான பொருளுடைய பதங்கள் தமிழில் வழக்கிலிருந்தால், அவைகளைப் போற்றி எடுத்துக்கொள்வது தமிழர் கடமை. அப்படி யில்லையானால், பிற மொழியிலுள்ள சொற்

களை அப்படியே கையாளுவது உத்தமம். மொழிகளின் அமைப்பையும் மூலாதாரமான ஒலித் தத்துவத்தையும் கவனிக்குமிடத்து, வடமொழிக்கும் தமிழ் மொழிக்குமுள்ள பேதங்களைவிட, தமிழுக்கும் ஆங்கிலத்திற்குமுள்ள பேதங்கள் அதிகமானவை என்று சொல்ல முடியாது. ஜல வாயு, பிராண வாயு என்ற வடமொழித் தொடர்களையாவது, நீரகம், தீயகம் என்ற புதுத் தமிழ் வார்த்தைகளையாவது உபயோகித்து, மாணுக்கர்களை, நமது சுதேச அபிமானத்தால் வெருட்டுதலைவிட, ஹய்டிரஜன், ஆக்ஸிஜன் என்ற பதங்களை அப்படியே தமிழில் எடுத்துக்கொள்வது உசிதமாயிருக்கும். ஏனென்ருல், விஞ்ஞான சாஸ்திர அறிவு தமிழரிடம் பரவியிருந்து, சில பதங்களுக்கு மாத்திரம் தேவையிருந்தால், வடமொழிப் பதங்களை, அல்லது தனித் தமிழ்ப் பதங்களைக் கைக்கொள்ளலாம்; இப்போதிருக்கும் நிலைமை அவ்வாறில்லை.

நவீனக் கலைச் சொற்களைத் தமிழில் ஆக்கவேண்டுமென்ற அவாவுடன், சில அறிஞர்கள் ஊக்கத்துடன் வேலை செய்து தயாரித்த ஒரு தொகுதியை, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டிருக்கிறது. பௌதிக சாஸ்திரத்தை மாணுக்கர்களுக்குத் தமிழில் போதிக்கலாம் என்று காட்ட ஸ்ரீ. சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார், "தமிழில் முடியுமா?" என்ற தலைப்புடன் ஒரு சிறு நூலை எழுதியிருக்கிருர். வருந்திஞல் வாராதது ஒன்றுமில்லை. தமிழில் முடியும் என்று ஒப்புக்கொள்ளலாம். இது போதுமா? சுமார் நான்கு தலைமுறைகளாக மேஞட்டுக் கல்வி ஆங்கிலத்தின் மூலம் பரவிய பிறகும், அரசியல் துறையிலும் சற்று முன்னேற்றம் அடைந்த பிறகும், தமிழில் முடியும் என்று பறை சாற்றி அதற்கு உதாரணங்கள் மாத்திரம் கொடுத்துக் கொண்டிருந்தால், இந்த நாட்டு மக்களிடையும் மாணுக்கர்க

ளிடையும் விஞ்ஞான சாஸ்திர அறிவும், அதனுல் சமைந்த மனப் பான்மையும் விரிந்து பரவ எவ்வளவு காலமாகும்?

தமிழ் நாட்டுக் கலாசாலைகளில் விஞ்ஞான சாஸ்திரங்களைத் தமிழிலேயே கற்றுக்கொடுக்க, தீவிரமாகவும் சரியான முறையிலும் முயற்சிகள் செய்யப்பட வேண்டும். இந்தப் பணியை, கலைச் சொற்கள் ஜாப்தாவைத் தயார் செய்து துவக்குவது விரைவில் பயன்தரக்கூடிய வழியல்ல. நமக்கு வேண்டியது வெறும் சொல்லாக்கமல்ல; சாஸ்திர அறிவு முழுமையின் ஆக்கமே. விஞ்ஞானத் தொகுதியிலுள்ள ஒவ்வொரு சாஸ்திரத்திற்கும், தக்க பயிற்சியும் திறனும் உடையவர்களால் பாடப் புத்தகங்களைத் தமிழில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஆக்குவதற்கு எவ்வளவு பணம் தேவையா யிருந்தாலும், அதை, சர்க்காரும் பல்கலைக் கழகத்தாரும் கொடுக்க முன்வர வேண்டும். இவ்வாறு எழுதப் பெறும் புத்தகங்களில், புதிதாக ஆக்கப்படும் சொற்கள் தோன்றினல், அவை பொருத்தமாகவும், கருத்தைத் தெளிவாக்கும் முறையிலும் இருக்கின்றனவா என்று எளிதில் காணலாம். வெறும் சொற்களின் தொகுதி மாத்திரம் முதலில் ஆக்கப்படுவதால், அகாரணமான விருப்பு வெறுப்புக்களைத் தழுவியே அபிப்பிராயங்கள் கொடுக்க நேரிடும். மாணக்கர்களும் கற்றறிந்த மற்றவர்களும் கூடிய சீக்கிரத்தில் விஞ்ஞான சாஸ்திர அறிவைத் தாய்மொழி மூலம் பெறுவதற்குச் சாதகமான முறையில் புதுச் சொற்களின் அமைப்பு இருக்க வேண்டும். விஞ்ஞானச் சொற்களின் மூலக் கருத்தைத் துருவி, அதற்குச் சமமான தமிழ்ப் பதங்களை ஆக்கும் போது, அவை தற்கால நூல்கள் மூலமாயும், மக்களின் பேச்சு மூலமாயும், இலேசாய்ப் பரவக்கூடிய தன்மையை உடையனவா என்பதை முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். ஏற்கெனவே பழக்கத்தில் இருந்துவரும் சாஸ்திரப் பதங்கள்

எந்த மொழியைச் சேர்ந்திருந்தாலும் அவைகளை அப்படியே எடுத்தாள்வதுதான் முறை. 'தெர்மாமீடர்,' 'ஆசிட்' போன்ற சொற்களை ஆண்களும், பெண்களும், படித்தவர்களும், பாமரர்களும் தாராளமாய்க் கையாண்டு வருவதால், அவைகளுக்குப் பதிலாகத் தமிழ்ச் சொற்கள் ஆக்கப் புகுவது சரியில்லை. 'அனற்பதனி' 'காடி' என்ற சொற்களை ஆக்கி விடலாம். ஆனால் இவை மக்களின் பேச்சோடு சேர்ந்து இயங்குவதற்கு வெகு காலமாகும்.

## தமிழும் பிற மொழிச் சொற்களும்

ஏற்கெனவே, அரசியல், நீதி மன்றங்களின் நடவடிக்கைகள், இவைகளைத் தழுவி, அநேக பதங்கள் இந்துஸ்தானியிலிருந்தும், ஆங்கிலத்திலிருந்தும், பேச்சு வழக்காகத் தமிழில் கலந்திருக்கின்றன. இவ்விதமான பதங்கள், ஸ்ரீ. பவானந்தம் பிள்ளையால் இயற்றப்பட்ட சொல்லகராதியில் அநுபந்தங்களில் ஒதுக்கப்பட்டு, சுமார் ஆயிரம் பதங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சென்னை சர்வகலாசாலையால் தயார்செய்து பிரசுரிக்கப்பட்ட சொல்லகராதியில் புறக்கணிக்கப்படாமல் சேர்க்கப்பட்டிருப்பது ஒரு நல்ல அறிகுறியாகும். மேனாட்டு மொழியிலிருந்து சொற்களைத் தமிழில் தொகுக்கும் விஷயமாய்த் தனித் தமிழ்ப் பண்டிதர்களும், ஆங்கிலப் பயிற்சி பெற்ற தமிழ் வித்வான்களும், ஒரு திடமான தீர்மானத்துடன் முன்னேற்ற வழிகளைக் கைப்பற்றவில்லை. சாஸ்திரங்கள் சம்பந்தமாக ஆங்கிலச் சொற்களுக்குப் பதிலாகச் சரியான தமிழ்ப் பதங்களையோ, சொற்றொடர்களையோ தேர்ந்தெடுக்க அடிக்கடி முயற்சிகள் நடந்திருப்பினும், அவைகளால் விசேஷப் பயன் இன்னும் கிட்டவில்லை. சரியான தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடிப்பதுடன், அவைகளை நூல் வழக்காகவும் உலக வழக்காகவும் பரப்பி,

ஜனங்கள் எளிதில் அறியக்கூடிய நிலைமை ஏற்பட்டால்தான் திருப்திகரமாயிருக்கும்; ஏனென்றால், இக்காலத்தில் கல்வியைக் கற்கவும், கலைகளைப் பயின்று அநுபவிக்கவும், எல்லோராலும் கூடும். அந்நிய மொழியிலிருந்து சொற்றொடர்களை எடுக்கும் விஷயமாய்ச் சென்னை சர்வகலாசாலையின் நிர்வாக சபையார், சில வருஷங்களுக்கு முன், தமிழ்ப் படிப்பை நிர்ணயிக்கும் கழகத்தாரின் யோசனையின்பேரில், சில விதிகளைத் தயாரித்தார்கள்; அவை ஒப்புக்கொள்ளத் தக்கனவாயிருந்த போதிலும், மாணாக்கர்கள் தமிழ் வினாப் பத்திரங்களுக்குப் பதில் எழுதுவதற்காக இந்த விதிகள் ஏற்பட்டதால், அதிலிருந்து இலக்கிய வளர்ச்சிக்கு விசேஷப் பயன் இருந்ததாகத் தெரியவில்லை. அருளும் ஆர்வமும் படைத்த நூலாசிரியர்கள், புலவர்கள், இவர்களின் சிருஷ்டியாலே இந்தக் காரியம் நிலைத்துக் கைகூட வேண்டும். அப்படி ஏற்பட்டாலும், வடமொழியிலிருந்து தமிழ் பெற்றுக்கொண்ட அவ்வளவு அதிகமான சொற்களை மேனாட்டுப் பாஷைகளிலிருந்து இன்று நாம் எடுக்க வேண்டியிராது.

## தமிழும் தற்கால அறிவும்

முன் பாராவில் கூறியபடி, புதிய சொற் செல்வத்தைத் தேடத் தமிழ் மொழியைத் தற்காலம் பேணுபவர்கள், வேண்டிய முயற்சியைக் கருதாததால், புதிய சாஸ்திரங்களும் நவீன நாகரிகத்தின் இலட்சியங்களும் தத்துவங்களும் தமிழில் பரவவில்லை. கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ்நாட்டுக் கலாசாலை மாணாக்கர்களுக்குத் தற்கால நவீன சாஸ்திரங்கள் ஆங்கில மொழியிலேயே போதிக்கப்பட்டு வருகின்றன. கலாசாலையில் போதிக்கப்படாத சாஸ்திரங்களை ஆங்கிலம் தெரிந்த தமிழர் அந்தப் பாஷையின் மூலம் கற்றறிந்திருக்கிறார்கள். இருந்தபோதிலும், தற்கால சாஸ்

திரங்களைத் தழுவிய அறிவு தமிழ் மூலம் எவ்வளவு தூரம் பரவியிருக்கிறது என்பதை ஆராய்ந்தால் நமது தமிழரின் பரிதாபகரமான நிலைமை விளங்கும். ஒரு சில சாஸ்திரங்களில் மாத்திரம் சில பாடப் புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன.

## தமிழரின் பிதிரார்ஜிதம்

தமிழ் நாட்டில் ஆர்வமுள்ள புலவர்களும் அறிஞர்களும் இப்போது இல்லையா என்ற ஐயம் பிறக்கலாம். ஐயத்திற்கு இடமில்லை. பலர் தோன்றியிருக்கிறார்கள் என்பது உண்மை. ஏடுகளிலிருப்பதால் நாளடைவில் கெட்டு மறையக்கூடிய தமிழ் இலக்கியங்களை அச்சுப் புத்தகங்கள் மூலமாகப் பிரசுரம் செய்வதிலும், முறையாகத் தமிழைக் கற்றுப் போதிப்பதிலும், அவர்கள் தங்களுடைய பாண்டித்யத்தைச் செலவழித்திருக்கிறார்கள். தமிழிலுள்ள உயரிய காப்பியங்கள், பிற நூல்கள், உரைகள், இவை யெல்லாம் அச்சுப் புத்தகங்கள் வாயிலாக அநேகமாக வெளியாயிருக்கின்றன; இது அவசியமானதாயும் மகத்தானதாயுமுள்ள அரிய வேலை; பழைய வழியில், குருமுகமாக, முறையாய்த் தமிழ் கற்ற பண்டிதர்கள் இதில் ஈடுபட்டுத் தமிழ் நாட்டிற்கும் தமிழ் இலக்கியங்களுக்கும் அரிய சேவை செய்து கீர்த்தி பெற்றிருக்கிறார்கள். இவர்களில் தலைசிறந்து விளங்குபவர் மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் ஆவர்; பெரும்பான்மையாக இவரது முயற்சியாலும், காலஞ்சென்ற ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை முதலிய பிற அறிஞர்களின் முயற்சியாலும், சங்க கால இலக்கியங்கள் வெளிவந்திருக்கின்றன.

தமிழில் சிறந்து விளங்கும் இலக்கியங்களில் பெரும்பாலன அச்சில் வெளியாகிவிட்டன. தமிழர் தங்கள் பிதிரார்ஜிதத்தைக் கணக்கெடுத்துப் பார்த்திருக்கிறார்கள். இதைக்

கொண்டு வாழ, தற்கால உலகத்தில் சிறிதேனும் முடியாது. இக்காலத்திற்கு வேண்டிய கலைகளில் ஒரு பகுதியே தமிழர்களின் பிதிரார்ஜிதத்தில் இருக்கிறது.

## தமிழ் இலக்கிய உலகின் தற்கால நிலைமை

தமிழ் இலக்கிய உலகின் தற்கால நிலைமை என்ன? சிறந்த இலக்கியங்களைப் பொருள் பண்ணிக்கொள்ளப் பதவுரையும் பொழிப்புரையும் வியாக்யானங்களும் அடங்கிய பழைய நடையிலுள்ள உரை நூல்கள் இருக்கின்றனவே யொழிய அவைகளைப் பற்றி நவீன முறைகளில் செய்யப்படும் ஆராய்ச்சி நூல்கள் இல்லை. தமிழ் மாத்திரம் தனியாய்க் கற்ற பண்டிதர்களுக்குத் தற்கால இலக்கிய ஆராய்ச்சி முறைகளை அறியவும் முடியாமலிருக்கிறது. இவ்வித ஆராய்ச்சி நூல்களை ஆக்குவதற்குக் கிட்டத்தட்ட முதனூல்களைச் செய்வதற்கு வேண்டிய அளவு சிருஷ்டி சக்தியும் ஆழ்ந்த கல்வித் திறமையும் அவசியம். இலக்கியங்களை வசன நடையிலேயே எழுதுவதற்குக் கல்விமான்கள் ஆற்றல் பெற வேண்டும்; வசன நடைக்கு ஏற்றம் அளித்து, அந்த நடையில் என்றும் நிலைக்கக்கூடிய வசன காவியங்களையும் சிறந்த நூல்களையும் செய்யலாம் என்ற கொள்கையைப் புலவர்கள் கைக்கொள்ளவேண்டும். அருள் உணர்ச்சியும் இசைச் செல்வமும் அபரிமிதமாகப் பெற்ற மெய்ப் புலவர்களைத் தவிர, மற்றப் புலவர்களும் பண்டிதர்களும், செய்யுள் நடையைக் கைவிடுவதே அவர்கள் தமிழ்த்தாய்க்குச் செய்யும் பெருந் தொண்டு ஆகும். நவீன நாகரிகத்தால் தமிழர்களின் மனம் விகாசமடைந்து, அதனால் எழும் புதிய கருத்துக்களும் ஜீவ ஒளியும் இனித் தமிழ்ப் பாடலில் உயிரும் ரூபமும் பெற வேண்டுமே யொழிய, பழைய விஷயங்களைப் பற்றிப் பழைய முறைகளில் பாடல்களும் செய்யுட்களும் அவசியமில்லை.

இப்போது தமிழ்ப் பண்டிதர்களும் கலைஞர்களும் செய்யுட்களை இயற்றினால், அவை வெம்பி, உலர்ந்து, சுருங்கின காய்கள் போலிருக்குமே யன்றி, இன்பரசம் மிகுந்த தீஞ்சுவைக் கனிகளாய் இரா.

வசன நடையில் பலவித நூல்கள் இயற்றப்பட வேண்டும்; உயர்ந்த இலக்கியத் தன்மையுடைய வசன நடையில் பலவிதச் சுவைகளையும் புகுத்தலாம்; கவிச் சுவை, நகைச் சுவை, நாடகச் சுவை முதலிய சுவைகள் வசனங்களில் நிரம்பியிருக்கலாம். வசன நடை வளர்ச்சி பெறாததால், சமயங்கள், சமயக் கொள்கைகளிலிருந்து எழாத தனித் தத்துவங்கள், சமுதாய சாஸ்திரம், அரசியல், பொருளியல், நுண் கலைகள், சட்டங்கள், சரித்திரங்கள் முதலியவைகளைப் பற்றிய ஆராய்ச்சிகளடங்கிய சிறந்த இலக்கியங்கள் தோன்றவில்லை. பற்பல பெரிய பாகுபாடுகள் உள்ள விஞ்ஞான சாஸ்திரங்கள் சம்பந்தமாகவும், கணிதம் சம்பந்தமாகவும், இது வரை கண்டுபிடித்து வகுக்கப்பட்டிருக்கும் அறிவுகூடத் தமிழில் இல்லாத போது, அவைகளைப் பற்றி உயர்ந்த ஆராய்ச்சிகள் இல்லையென்று சொல்வது நகைப்பிற்கு இடந் தரும். விஞ்ஞான சாஸ்திரங்களைப் பற்றிய ஆரம்பப் பாடங்களை, கல்விச்சாலைகளில் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கச் சில புஸ்தகங்கள் மாத்திரம் வெளிவந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

எத்தனையோ வித சாஸ்திரங்களைப் பற்றித் தமிழில் நூல்கள் இல்லை. தமிழரிடம் தற்கால சாஸ்திரங்களைப் பற்றிய அறிவு தமிழில் பரவாததாலும், மேனாட்டு மொழியிலிருந்து அவசியமான சொற்களைத் தமிழ் ஆகருஷிக்காததாலுமே, தமிழர்களின் கலைகள் இன்று மிகுந்த வறுமையை அடைந்திருக்கின்றன. இருந்த போதிலும், எவ்வளவு நீண்டதோர் இரவுக்கும் முடிவு உண்டு என்ற ஆங்கில வாச

கத்திற்கு ஒப்ப, தற்காலத் தமிழ் இலக்கியம், காலத்தின் இயல்பால், நூதன ஒளியை அடைந்து, உயிர்பெற்று, தலை காட்ட ஆரம்பித்திருப்பதால், அதன் குணங்களைச் சுருக்கமாய் ஆராய்வோம்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

III

# தமிழ் இலக்கியம் - கவிதை

## 1. சுந்தரம் பிள்ளை

### தற்காலத் தமிழ்க் கவிகள்

நவீன நாகரிகத்தாலும், மேனாட்டுக் கலைகளாலும், தமிழரிடம் விளைந்த சக்தியால் எழுந்து மறைந்த கவிகளில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர் மூவர்: அவர்கள் சுந்தரம் பிள்ளையும், கிருஷ்ண பிள்ளையும், சுப்பிரமணிய பாரதியும் ஆவர்.

சுந்தரம் பிள்ளை 'மனோன்மணீயம்' என்ற ஓர் அரிய தமிழ் நாடகத்தை, ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இயற்றி வெளியிட்டார். தமிழில் நாடக இலக்கியங்கள் இல்லாதது ஒரு பெருங் குறை; வடமொழியிலிருந்து பல வித்க் காவிய முறைகளைக் கைக்கொண்ட தமிழ்ப் புலவர்கள், அம் மொழிக்கு ஒப்பிலாச் சிறப்பை அளிக்கும் கவி காளிதாஸரின் நாடகங்களையும், வேறு கவிஞர்களின் நாடகங்களையும் பின்பற்றி, இலக்கியங்களை இயற்றாம லிருந்திருப்பது மிகவும் ஆச்சரியமா யிருக்கிறது. நாடக இலக்கியங்களை இயற்றி, தமிழ்ப் பாஷைக்கு இந்தக் குறையைத் தவிர்க்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன், சுந்தரம் பிள்ளை மனோன்மணீயத்தை எழுதினார். அவர் திருவாங்கூர் மகாராஜாவின் கலாசாலையில் தத்துவ நூல்களைப் போதிக்கும் ஆசிரியரா யிருந்தார்; விரிந்த தத்துவ அறிவுடன், தமிழ்ப் பாண்டித்யமும் கவிதா சக்தியும் பெற்றிருந்தார்.

## மனோன்மணீயத்தின் நடை

மனோன்மணீயம் நாடக ரூபத்தையும் உடையையும் பெற்ற உயரிய காவியம்; காவிய இலக்கியமாகப் படிப்பதற்காகவே அதை எழுதியிருப்பதாயும், அரங்க மேடையில் நடிப்பதற்காகச் செய்யவில்லை யென்றும், ஆசிரியர் தமது முகவுரையில் சொல்லி, அகவல் நடையில் நாடகத்தை இயற்றினதற்கு இதைக் காரணமாகக் கூறியிருக்கிறார். ஆங்கில ஆசிரியர் லிட்டன் பிரபு (Lord Lytton's 'Secret Way') எழுதிய ஒரு சாதாரணப் பாட்டில் காணப்படும் கதையைத் தழுவி மனோன்மணீயம் எழுதப்பட்டிருக்கிறது. அது சொற் சுவையும் பொருட் சுவையும் மிகுதியா யிருக்கும் ஒரு நல்ல இலக்கியம். நூல் நாடக முறையில் செய்யப்பட் டிருந்த போதிலும், அதில் புதிய கருத்துக்கள் அநேகம் மலிந்திருந்த போதிலும், அதன் நடையும், கவிப் போக்கும், காவிய உறுப்புக்களும், கதைப் போக்கும் பெரும்பான்மையாகப் பழைய முறைகளையே தழுவியிருக்கின்றன.

## நாடக பாத்திரங்கள்

நாடக பாத்திரங்கள் வெகு திறமையுடனும் நுட்ப திட்பத்துடனும் சித்திரிக்கப்பட்டிருக்கின்றார்கள். தீய குணம், புத்தியுடனும் ஆற்றலுடனும் கலந்து, ஆயிரம் வழிகளில் திரிபுகளை யடைந்து குடிகொண்டிருக்கும் குடிலன், சமயோசிதம் போல் பேசி, ஆழ்ந்த சதி செய்து, திடமற்ற மனமுடைய அரசனைத் தன்வயமாக்கி, தன் பேராசைக்கு அவனையே கருவியாகக் கொண்டு, நயவஞ்சமாகச் சமரில் ஈடுபடச் செய்தான்; ஆனால் போர்க் களத்தில் துரோகம் செய்த தீவினை, அவனையே வந்து சூழ்வதும், எல்லோரும் சேர்ந்திருக்கும் சமயத்தில் அவனுடைய படுமோசம் விபரீதமாய் வெளியாவதும், கவியால் மிகுந்த அழகுடனும் விசேஷ

நாடகத் திறமையுடனும் அமைக்கப்பட்டிருக்கின்றன. குடிலன் நமது வெறுப்பையும், பலதேவன் நமது ஏளனத்தையும், சுந்தர முனிவர் நமது வணக்கத்தையும், புருஷோத்தமனும் மனோன்மணியும் நமது உள்ளன்பையும், ஜீவகன் நமது அன்பு கலந்த பரிதாபத்தையும், நடராஜனும் வாணியும் நாரணனும் நமது நன்மதிப்பையும் எளிதில் கவர்கிறார்கள். அநேக நாடக பாத்திரங்கள் வாயிலாக, ஆங்காங்கு வரும் பேச்சுக்கள் உயிரும் உணர்ச்சியும் மலிந்து நயமா யிருக்கின்றன. கனவில் மனோன்மணியைக் கண்டு காதலித்து, பின் அம்மடந்தை யாரென்று தெரியாமல், திண்டாடித் திகைத்திருக்கும் புருஷோத்தமன் துன்பமும் பேரவாவுங் கொண்டு சொல்லியிருக்கும் இத் தனிமொழியும், பெண்கள் ஆண்களைவிடப் பலவிதங்களில் உயர்ந்த சீலங்களைப் படைத்தவர்கள் என்று நடராஜன் நாரணனிடம் செய்த பிரசங்கமும் இவ்வகையைச் சேர்ந்தவை :

'யார்கொலோ அறியேம்! யார் கொலோ அறியேம்!
வார்குழல் துகிலொடு சோர, மாசிலா
மதி முகங் கவிழ்த்து நுதி வேற் கண்கள்
விரக தாபத்தால் தரள நீர் இறைப்பப்
பரிபுரம் அணிந்த பங்கயம் வருந்துபு
விரல் நிலங் கிழிப்ப, வெட்கந் துறந்து,
விண்ணணங்கு அனைய கன்னியர் பலர் என்
கண் முன் நின்று, அங்கு இரக்கினுங் கலங்காச்
சித்தம், மத்துறு தயிரில் திரிந்து,
பித்துறச் செய்த இப் பேதை யார்கொலோ!
எவ்வுலகினளோ! அறியேம். இணையிலா
நவ்வியும் நண்பும் நலனும் உடையவள்.
யார் கொலோ! நாள் பலவானவே! ஆ! ஆ!

விழிப்போடு என் கண் காணில் !— வீண் ! வீண் !
பழிப்பாம் பிறருடன் பகர்தல். பகர்வதென் ?
கனவு பொய்யெனக் கழறுவர். பொய்யோ ?
நனவினும் ஒழுங்காய் நாள் தொறுந் தோன்றும்.
பொய்யல, பொய்யல, ஐயம் எனக் கிலை.
நாள் தொறும் ஒரு கலை கூடி வளரும்
மதியென, எழில் தினம் வளர்வது போலும்.
முதல் நாள் முறுவல் கண்டிலம் ; கடைக்கணில்
ஆர்வம் அலை யெறி பார்வை அன்று இருந்தது.
நேற்றிராக் கண்ட தோற்றம் என் நெஞ்சம்
பருகினது, ஐயோ ! கரிய கூந்தலின்
சிறு சுருள் பிறை நிகர் நறு நுதற் புரளப்
பொரு சிலைப் புருவம் ஒரு தலை நெகிழ்த்துச்
செவ்வரி படர்ந்த மை வழி நெடு விழி
உழுவலோடு என் முகம் நோக்க எழுங்கால்,
என் நோக்கு எதிர்ப்படத் தன் நோக்கு அகற்றி,
வெய்யோன் வாரியில் விழுங்கால், துய்ய
சேணிடைத் தோன்றுஞ் செக்கர் போல், கன்னம்
நாணொடு சிவக்க, ஊர் கோள் நாப்பண்
தோன்றிய உவாமதி போன்று, அங்கு எழி லொளி
சுற்றிய வதனம் சற்றுக் கவிழ்த்தி,
அமுதம் ஊற்றிருக்குங் குமுத வாய் அலர்ந்து
மந்த காசந் தந்து அவள் நின்ற
நிலைமை என் நெஞ்சம் நீங்குவதன்றே !'

நடை பழைய முறையி லிருந்தபோதிலும் அதன் கம்பீரமும் கவிதை யழகும் நம்மைக் கவரவல்லன.

களங்களின் தொடுப்பும் அங்கங்களின் கோவையும் பாத்திரங்களைப் போல் அவ்வளவு சிறப்பாக ஆக்கப்பட்

டிருப்பதாய்ச் சொல்ல முடியாது; நடிப்பதற்காக நாடகம் வரையாதது இதற்குக் காரணமாக இருக்கலாம். கதையின் நேர் போக்குக்கும், பாத்திரங்களின் விகாசத்திற்கும் அவசியமில்லாத பல பாகங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மனோன்மணீயம் ஒரு கல்விமானால் ஆக்கப்பட்ட காவியமாயிருக்கிறது.

## சிவகாமி சரிதம்

அருள் உணர்ச்சியால் பொங்கி எழும் கவிச் சீவையையும், இசைத்தன்மையையும், சிவகாமி சரிதம் போன்ற சிற்சில பாகங்களில்தான் காணலாம். சிவகாமி சரிதம் ஓர் அருமையான பாட்டு. அதன் சலசலப்பான நடையும், இசைப்பான்மையும், கவிதை நயமும் இன்பத்தை அளிக்க வல்லன. பாட்டு, தனியாகப் பாடப்பட்டு இந்த நாடகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது போல் தெரிகிறது. இந்தப் பாட்டுக்கும் நாடகக் கதைக்கும் நிகழ்ச்சிகளுக்கும் ஒருவித சம்பந்தமும் இல்லை; இதிகாசத்தில் உபகதைகளுக்கு இடம் உண்டு; நாடகத்தில் இடம் இல்லை என்று சொல்லலாம். ஆனால், சிவகாமி சரிதத்தை, மனோன்மணீயத்திலிருந்து எடுத்துவிட ஒருவரும் சம்மதிக்க மாட்டார்கள். சிவகாமி, மறைந்து போன தன் காதலனைத் தேடி, காடு அடவி முதலியவைகள் எல்லாம் அலைந்து, இறுதியில் ஒரு முனிவரைச் சந்தித்து, அவர் முகத்தில் தன் கணவரின் சாயையைக் கண்டு, அவரிடம் தன் கதையைச் சொல்லும் இந்தப் பாட்டின் இனிமையான வாக்கு, திரும்பத் திரும்பப் படித்தாலும் சலிப்புக் கொடுப்பதில்லை. பாட்டில் ஊடுருவிப் பொதிந்து கிடக்கும் ஞான தத்துவம் மிகச் சாதுரியமாயும், மறைமுகமாயும், அமைக்கப்பட்டிருந்த போதிலும், அது பாட்டின் ஏற்றத்தை

அதிகப்படுத்தியிருக்கிறதா என்ற சந்தேகம் அடிக்கடி பிறக்கிறது.

## தமிழ் இலக்கியத்தில் சுந்தரம் பிள்ளையின் ஸ்தானம்

சுந்தரம் பிள்ளையின் காலத்தில், தேசீய இயக்கம் நாட்டில் அப்போதுதான் பிறந்து குழவிப் பருவத்தில் இருந்ததால், அதனுல் ஜனங்களிடம் தோன்றின மனப் பான்மையின் தன்மையும் ஒளியும் அவருடைய நாடகத்தில் நன்ருய்ப் புலப்படவில்லை. அவர் பழைய வாழ்விற்கும் புதிய இயக்கத்திற்கும் நடுவில் இருக்கிருர் என்று சொல்ல லாம். நூலின் பொருளில் தற்காலச் சுவை கொஞ்சம் காணப்பட்ட போதிலும், நடையில் அது இல்லை. மனேன் மணீயத்தைத் தவிர; அதைப் போன்ற வேறு பெரிய தமிழ் நூல் எதையும் சுந்தரம் பிள்ளை செய்யாததால், தற் காலத் தமிழ் இலக்கியத்தில் அவருடைய ஸ்தானத்தை நிர்ணயிப்பது கஷ்டமா யிருக்கிறது. இந்த நாடகத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு அவரை ஒரு பெரிய கவி என்று சொல்வதற்கில்லை. சிவகாமி சரிதத்தின் நயத்தை யுடைய பல பாட்டுக்களை அவர் எழுதியிருந்தால், நிலைமை வேருயிருக்கும். மொத்தமாகப் பார்க்குமிடத்து, மனேன் மணீயத்தின் கவிதை மிகச் சிறந்ததென்ருவது, அதன் நடை சக்தி வாய்ந்ததென்ருவது கூற முடியாது. நூல் பிர சுரிக்கப்பட்ட காலத்தில், அந்தக் காலத்துத் தமிழ் அறிஞர் களால் அது மிகுதியாய்ப் புகழப்பட்டது. இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. இன்றுவரை அதனேடு ஒப்பிடக்கூடிய தமிழ் நாடக நூல் யாதொன்றும் வெளிவந்ததில்லை.

3713




எச். ஏ. கிருஷ்ண பிள்ளை

## 2. கிருஷ்ண பிள்ளை

தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்கள் தமிழ் இலக்கியத்திற்கு அளித்த கவி கிருஷ்ண பிள்ளை. இவருக்கு முன்னால் மாயூரம் வேதநாயகம் பிள்ளை சில நூல்களைச் செய்யுள் நடையில் செய்திருந்தார்; இருந்தபோதிலும் அவரை ஒரு கவி என்பதைக் காட்டிலும், சிறந்த வசனகர்த்தர் என்று கொள்வது தான் உத்தமம்; இந்த முறையில் வேதநாயகம் பிள்ளை வசனப் பகுதியில் கவனிக்கப்படுவார். கிருஷ்ண பிள்ளை பாளையங்கோட்டையைச் சேர்ந்தவர்; வைஷ்ணவராய்ப் பிறந்து முப்பது ஆண்டுகள் வரை அம்மதத்தையே கைக்கொண்டு ஒழுகிப் பின்னால் கிறிஸ்தவ மதத்தைப் போற்றித் தழுவியவர். நல்ல கல்வித்திறனும் கவித்திறனும் படைத்தவர் கிருஷ்ண பிள்ளை. அவர் தமிழ் இலக்கியங்களையும், விசேஷமாக, கம்பனின் ராமாயணத்தையும் நன்றாய்ப் படித்துக் களித்து ரஸித்தவர்.

கிருஷ்ண பிள்ளை தமது கல்வியையும் கவிதா சக்தியையும் மத சேவையில் செலவழித்தார். கிறிஸ்தவ மத சம்பந்தமான இலக்கியங்கள் தமிழில் விசேஷமாக இல்லாததால் அவைகளை ஆக்குவதற்கு அரும் பாடு பட்டார். அவர் இயற்றிய நூல்களில் தலைசிறந்தது 'இரட்சண்ய யாத்ரிகம்' என்னும் காவியம். இதை, ஆங்கிலப் புலவர் ஜான் பன்யன் 'யாத்ரிகனின் முன்னேற்றம்' (John Bunyan's *Pilgrim's Progress*) என்ற தலைப்புடன் எழுதியிருக்கும் ஒரு சிறந்த கற்பனை நூலைத் தழுவி, கிருஷ்ண பிள்ளை பெருங் காப்பிய முறையில், சுமார் நாலாயிரம் செய்யுள்களில் செய்தார்.

### இரட்சண்ய யாத்ரிகம்

இந்தக் காவியத்திலிருந்து கிருஷ்ண பிள்ளையின் தமிழ்ப் புலமையும் கவிதா சக்தியும் நன்கு விளங்கும். அவர்

அநேக இடங்களில் கம்பனின் கம்பீரத்தையும், கற்பனையையும், வண்ணங்களையும், தேவாரங்களின் இசைப் பெருக்கையும், பக்தி யுணர்ச்சிக் கனிவையும் கையாள முயன்றிருக்கிறார். கவி, நூலின் முகவுரையில், தாம் செய்யுள் நடையைக் கம்ப ராமாயணத்தை அனுசரித்தே இயன்ற மாத்திரம் அமைத்திருப்பதாகச் சொல்லி, அதற்குக் காரணமாக, 'ஏனென்றால் கம்ப ராமாயணம் ஒன்றே கற்றோரெவரும் வியந்து புகழ்ந்து மெச்சத் தக்கது' என்று கூறுகிறார். இந்த முயற்சியில், கிருஷ்ண பிள்ளை சில இடங்களில் ஒருவாறு வெற்றி அடைந்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

தேவாரம், நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலியவற்றைப் பின்பற்றி, பக்திரஸம் ததும்பும் அநேகம் தோத்திரப் பாடல்களும் 'இரட்சண்ய யாத்திரிக'த்தில் காணப்படுகின்றன. 'இரட்சண்ய மனோகரம்' என்ற மகுடமிட்டுப் பல தோத்திரப் பாடல்கள் அடங்கிய ஒரு நூலையும் கிருஷ்ண பிள்ளை செய்திருக்கிறார். இப் பாடல்களில் இயேசுவைப் பற்றிப் பாடியிருக்கிறாரென்று ஒருவனுக்குச் சொல்லாவிட்டால், அவைகளைத் தேவாரப் பாடல்களாகவே அவன் கருதுவான். பாட்டுக்களின் பண்ணும் கட்டும் நன்றாய் அமைந்திருக்கின்றன. ஆசிரியர் மனங் கசிந்து பாடியிருக்கிறார் என்றும், வெறும் 'இமிடேஷன்கள்' அல்லது போலிப் பாட்டுக்கள் இல்லை என்றும் அவை தெளிவாய்க் காட்டுகின்றன. நல்ல தமிழ்ப் பண்பும் இசைப் பண்புமுடைய இந்தப் பாடல்கள் தமிழ் நாட்டுக் கிறிஸ்தவ தேவாலயங்களில் தினசரி பாடத் தக்கவை. உதாரணமாக, கீழ்க்கண்ட பாட்டுக்களைக் கொள்ளலாம்:

'அருள் பழுத்த திருமுக மண்டலத்தினனை
அளி நிறைந்த கமலலோசனத் தெம்மானைத்

தெருள் பழுத்த ஜீவமொழி கனிவா யானை
ஜென்ம விடாய் தணித்தருள் சீர்பாதத்தானை
மருள் பழுத்த மனத்தேனைத் தெருட்டினானை
வான்கதிக்கு வழிதிறந்த வலத்தினானை
இருள் பழுத்த நரகடைத்த எம்பிரானை
என்று கொலோ கண்குளிரக் காணு நாளே!

'ஓசைக்கடற் புவிக்குள்ளெனையொப்பாரொரு பாவி
ஆசைக்குமிரா ரென்ப தென்னகங் கண்டறியுண்
ஈசற்கொரு புதல்வா வெனக் கிரக்ஷண்ய [மை
புண்ணியனே!
பாசத் தடை விடுத்தெற் கருள் பாலி
கடைக்கணியே.'

ஆனந்த சைலப் படலத்திலுள்ள அடியிற் கண்ட பாட்டுக்களைப் படிக்கும் ரஸிகர்களுக்கு, கம்பனின் நடையும் தொனியும் ஞாபகம் வரும்.

'மலையெலாம் புனிதஞ் செல்லு
மருங்கெலா மகிழ்ச்சி தெண்ணீர்
நிலையெலாம் கருணை நீத்தம்
நெறியெலா நீதி மார்க்கம்
கலையெலாம் சுருதிப் பேச்சுக்
கனிவெலாம் தேவ பாஷை
தலையெலாம் ஆசீர் வாதம்
சார்பெலாம் பசும்பொற் கேணி.

'மாதவப் பள்ளி தோறும் வரன்முறைத்
தொழும்ப ரீட்டம்
பாதவப் புரைக டோறும் சுருதிதேர் பனவ ரீட்டம்
மேதகு கழகந் தோறும் விழுக்கலை மழவ ரீட்டம்
போதலர் பொய்கைதோறும் புகரறு மகளி ரீட்டம்.

'தண்ணளி கவிந்து வானந் தருமருண் மாரி கண்டார்
புண்ணிய ஜீவ கங்கை பொங்குநீர்ச்
சுனையுங் கண்டார்
நண்ணிய திசைக டோறு நன்மையுந் திருவு நட்பும்
கண்ணிய தருமத்தோடு களிநடம் புரியக் கண்டார்.'

## கவிதை உலகில்
## கிருஷ்ண பிள்ளையின் ஸ்தானம்

சுந்தரம் பிள்ளை கிருஷ்ண பிள்ளையைவிடச் சிறந்த கல்விமான்; ஆனால் செய்யுள்களை இலகுவாயும், விதவிதமாயும், இசையுடனும் இயற்றுவதில் கிருஷ்ண பிள்ளை சுந்தரம் பிள்ளையைவிட அதிக சாமர்த்தியம் பெற்றவர். இருந்தபோதிலும் கிருஷ்ண பிள்ளையை முதல்தரமான கவி என்று சொல்ல முடியாது. 'இரட்சண்ய யாத்ரிகம்' ஒரு சமய நூலாக ஆக்கப்பட்டிருப்பது இதற்கு ஒரு காரணமாய் இருக்கலாம். கிறிஸ்தவ சமய உண்மைகளையும் நீதிகளையும் தெளிவாக எடுத்துக் கூறி, அவைகளுக்குப் பிரசாரம் கூடச் செய்வதையே முக்கிய நோக்கமாக ஆசிரியர் கொண்டதால், கலைத் திறன் குறைவுபட்டு, கவிதையும் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான வரம்புக்குள்தான் அமைந்திருக்கிறது. பிரசாரத்தைக் கருதாவிட்டால், பரம சாயுஜ்யத்தைக் கருதிச் செல்லும் யாத்ரிகன் கதையில், இரட்சண்ய நவநீதப் படலத்திலுள்ள சமய தூஷணைப் பாக்களுக்கு இடமேது?* உத்வேகமும் உணர்ச்சியும் நிறைந்த வாக்கு இந்தக் காவியத்தில் அதிகமில்லை; கவிதை அனல் கொழுந்து விட்டு எரிவதைப் பார்க்க முடியவில்லை. பல பாட்டுக்கள் 'சப்'பென்றிருக்கின்றன. அநேகம் செய்யுள்கள், யாப்பின்

* சமீபத்தில் பிரசுரம் செய்யப்பட்ட ஒரு பதிப்பிலிருந்து இந்தப் பாட்டுக்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது.

அளவும் ரூபமும் பெற்ற வசனமே. கதா பாத்திரங்கள், மனிதர்களாயினும் சரி, தேவர்களாயினும் சரி, உயிருடன் சிருஷ்டிக்கப்படவில்லை. மொத்தமாகப் பார்க்குமிடத்து, தற்காலத் தமிழ்க் கவிதை உலகில் 'இரட்சண்ய யாத்ரிகம்' நிலைத்திருக்கும் என்றாலும், அதில் கவிதா சக்தியும், கற்பனையின் எழுச்சியும் விரிவும், காவியப் பண்பும் போதிய அளவு இல்லை.

## 3. சுப்பிரமணிய பாரதி

கவி ரீதியாகப் பார்க்குமிடத்து, மேலே குறிப்பிடப்பட்ட இருவரைக் காட்டிலும் சுப்பிரமணிய பாரதி மிகச் சிறந்தவர்; அருள் ஒளியை அளவற்றுப் பெற்றவர். தமிழில் இராமலிங்க சுவாமிக்குப் பின் தோன்றிய பெரிய இசைக்கவி பாரதியே. இராமலிங்க சுவாமி, கடவுள் பக்தியால் தம்மிடம் உதித்த உணர்ச்சியையே கவிதைப் பொருளாகக் கொண்டு, இசை நிறைந்த பாடல்களை, பழைய முறைகளை அநுஷ்டித்தும், சில புதிய காவிய உறுப்புக்களைக் கைக்கொண்டும், பாடிக் குவித்தார்; பாட்டுக்களில் காணப்படும் கருத்துக்கள் பழையனவே; ஞான தத்துவங்களுக்குள் ஒரு வித சமரஸம் உண்டாக வேண்டுமென்று அவர், பல தோத்திரங்களில் மனங் கசிந்து பாடியிருப்பதை ஒரு புதிய உணர்ச்சித் தன்மையாகக் கருதலாம். சுப்பிரமணிய பாரதியின் கவிதா சக்தி, கனிந்த தேசபக்தியான அமுதக் கடலில் பிறந்து நவீன நாகரிகமான வானின் ஒளியைப் பருகி, மலர்ந்தது.

### தேசீய மறுமலர்ச்சியும், கவிகளும்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் தேசீய இயக்கம் தோன்றினதால், சமுதாய உணர்ச்சி

யும், ஒற்றுமை உணர்ச்சியும், தேச பக்தியும் நாட்டில் பரவின. தங்கள் பண்டைக் கால நாகரிகத்தின் சிறப்பையும், கலைகளின் வளத்தையும், பாரத நாட்டின் புதல்வர்கள் அறிய அறிய, அவர்களிடம் நாட்டன்பும் சுதந்திர உணர்ச்சியும் வலுப்பெற்றன. சொந்த நாட்டின் நாகரிகம் கலைகள் இவை மீதுள்ள ஆர்வமும் மெய்யன்பும், அரசியல் துறையில் பூரண சுதந்திரம் அடைய வேண்டுமென்ற அவாவும், ஜனங்களிடம் பொங்கிப் பெருகவே, நாடெங்கும் பெரும் சக்தி வாய்ந்த ஓர் இயக்கம் வேரூன்றித் தளிர்த்து வளர்ந்தது. அதன் பயனாகப் பல இந்திய மொழிகளில் புதுக் கவிகள் தோன்றினார்கள். அவர்களில் வங்காளத்தைச் சேர்ந்த ரவீந்திரநாதரும் தமிழ் நாட்டைச் சேர்ந்த சுப்பிரமணிய பாரதியும் தலைசிறந்தவர்கள். ரவீந்திரநாதரின் புகழ் கடல் கடந்து பரவி, அவருடைய கவிதையின் மணம் பாரெங்கும் வீசிக் கொண்டிருக்க, சுப்பிரமணிய பாரதியின் தெய்விகப் புலமையைத் தமிழர்கள் கூடச் சரியாய் அறிந்து போற்றாமல் இருப்பது, தமிழ் மொழியின் துர்ப்பாக்கியமே. அவருடைய தேசீய கீதங்கள் நாடெங்கும் ஆர்வத்துடன் பாடப்பட்ட போதிலும், அவரைப் பொதுவாகப் புகழ்ந்து சில கட்டுரைகளும் சிறு நூல்களும் அடிக்கடி வெளிவந்த போதிலும், அவர் இறந்த தினத்தைத் தமிழ் நாட்டு ரேடியோ நிலையம் அவரது ஞாபகத்திற்குரிய ஒரு சுதினமாக்கிய போதிலும், ஒரு சிலர் அவரை மகா கவி என்று வானளாவப் புகழ்ந்து கொண்டிருந்த போதிலும், பாரதியின் கவித்திறனின் அழகையும் புஷ்டியையும் தமிழ் அறிஞர்களும் தமிழ் மக்களும் அறிந்தபாடில்லை.

விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதுபோல், கவிதையைப் பொழியும் திறனை, பாரதி அதி பால்யத்திலிருந்தே அருளாகப் பெற்றார். அவர், எட்டயபுரத்தில்

பிறந்து, தமிழில் தேர்ச்சி பெற்றிருந்த தம் தந்தையிடமிருந்து சிறு வயதிலேயே பாடங்கள் கற்று வளர்ந்து, தமிழ் நாட்டில் கிடைத்த கல்வியுடன் திருப்தி அடையாமல், அவசிய நிமித்தம் காசிக்குப் போக நேர்ந்தபோது, அங்கேயுள்ள ஓர் இந்து கலாசாலையில் கொஞ்ச காலம் பயிற்சி பெற்றார். உலகத்தையே பிரமிக்கச் செய்த ஆரியக் கலைகளுக்கு உறைவிடமாய் இருந்த புனிதமான காசி நகரில், பாரதி தமது வாலிபப் பருவத்தில் சில காலம் தங்கினார். கவிதைக் கடலில் எப்போதும் மிதந்துகொண்டிருக்கும் இன்பப் படகு போலுள்ள பாரதியின் மனத்தில், பாரத நாட்டின் பண்டைப் புகழாகிய ஜோதிப் பரிதியின் கதிர்களின் ஒளி பாய்ந்தது. அவருடைய கவிதைப் புலமை உருவும் உயிரும் பெற்று மலர்ந்தது; மணிமய கீதங்களைக் கொட்டும் ஆற்றல் பெற்றது. தமிழை முறையாய்க் கற்ற பாண்டித்தியம் பெற்றிரா விட்டாலும், தமிழ்க் கவிகளின் உயிரொளியைப் பாரதி அள்ளிப் பருகியிருந்தார்; தமிழ்ப் பண்பு அவர் உடன் பிறப்பு.

ஆராய்ச்சியின் பொருட்டு, பாரதியின் கவிதா சிருஷ்டியை, தேசீய கீதங்கள், ஈச்வரத் தோத்திரங்கள், தனிப் பாட்டுக்கள், கற்பனைச் சித்திரங்கள், காவியங்கள் என்று உத்தேசமாகப் பாகுபாடு செய்யலாம்.

## தேசீய கீதங்கள்

பாரதி இயற்றிய இலக்கியங்களில் தேசீய கீதங்களின் தொகுதிக்கு உயர்ந்த ஸ்தானம் உண்டு. பாரத நாட்டின் பண்டைப் பெருமையையும், தமிழ் நாட்டின் புராதனப் புகழையும் மானஸிகமாக உருவகப்படுத்தி, அதிலிருந்து பேரார்வம் பெற்று, நாட்டின் தற்கால நிலைமையை உன்னி, நெஞ்சம் கசிந்து மனம் உருகித் தம் தாய்நாடு எல்லாத்

துறைகளிலும் ஓங்கி நிமிர வேண்டுமென்று நினைந்து, நம்பிக்கை கொண்டு, களிப்பெய்தி, வீராவேசம் பெற்று, அதன் கீர்த்தியைப் போற்றியும், வருங்கால வெற்றியை வேண்டியும், தெள்ளிய நடையில், தீங்கவிச் சுவையைக் கலந்து, பொருளும் இசையும், மலரும் மணமும் போல் ஒளிரும்படி ஆக்கிப் பாடியிருக்கும் பாரதியின் தேசீய கீதங்களைப் போல் தமிழ் மொழியில் வேறில்லை. இவை ஆங்கில மொழியிலுள்ள தேசீய கீதங்களுக்குப் (Songs of Patriotism) பொருட் சுவையிலும், இசைச் சுவையிலும் எள்ளளவேனும் தாழ்ந்தவையில்லை. தமிழரின் கலைவளத்தின் சிறப்புக்களையும், சரித்திரத்தின் மாண்பையும் ஒரே சித்திரத்தில் நேர் நோக்காகப் பார்த்துப் பரமானந்தம் அடைய, 'செந்தமிழ் நாடு' என்ற பாரதியின் பாட்டைத் தவிர, தமிழில் வேறொன்றுமில்லை. பாரத நாட்டின் பழங் கீர்த்தியையும் தற்கால நிலைமையையும் சிந்தித்து, நாட்டன்பு கொண்டு, 'எந்தையுந் தாயும்', 'மன்னு மிமய மலை', 'நளிர் மணி நீரும் நயம்படு கனிகளும்' என்ற முதலடிகளையுடைய பாட்டுக்களிலும், 'பாரத மாதா திருப்பள்ளி யெழுச்சி', 'பாரத தேவியின் திருத் தசாங்கம்' என்ற மகுடங்களைப் பெற்ற பாட்டுக்களிலும், வேறு பாட்டுக்களிலும், இனிய ஓசைப் பெருக்கும் கவிதை ரஸமும் பொங்கும்படி பாடியிருக்கிறார். தேசீய கீதங்களின் இசைத் தன்மை அபாரமானது; அவைகளைத் தமிழ் நாட்டுச் சங்கீத வித்துவான்கள், தங்கள் கச்சேரிகளில் தமிழில் பாடும் என்னென்னவோ பாட்டுக்களுக்குப் பதிலாக, நல்ல கானச் சுவையுடனும், அர்த்த பாவம் விளங்கும்படியான தெளிவுடனும் பாடுவார்களானால், கேட்போர்களை ஒரு கண நேரத்தில் இளக்கிப் புளகாங்கித மாக்கிவிடலாம்.

கவிதா ரீதியிலும் இலக்கிய ரீதியிலும் பாரதியின் தேசீய கீதங்கள் அதிகச் சிறப்பை உடையன அல்ல என்

றும், நாட்டின் தற்கால அரசியல் நிலைமையில் மக்களின் தேச பக்தியை எழுப்புவதற்கு அவை சாதனமாயிருப்ப தால்தான் அதிக நயமுடையனவாகக் கருதப்படுகின்றன என் றும் சிலர் நினைக்கிறார்கள். இந்த எண்ணம் சிறந்த சிந்தனை யின் விளைவாக இருக்க முடியாது. தற்கால வாழ்க்கையின் அம்சங்களையும், சுக துக்கங்களையும் கவிதைக்குப் பொரு ளாகக் கையாள்வது சிலருக்குப் பிடிப்பதில்லை. கடவுளின் மீது காதலும், கன்னியர் மீது காதலும் பாட்டுக்குகந்த பொருளாய் இருந்து அற்புதமான கவிதையைச் சிருஷ்டிக்கக் காரணமாய் இருக்கக் கூடுமானால், நாட்டன்பும் அவ்வாறே இருக்கலாம். பாட்டு, இசைச் சுவையுடனும், நடை அழ குடனும், எளிய வாக்குடனும், கற்பனை நயத்துடனும், கனிந்த மன உணர்ச்சியைப் பிரதிபலிக்குமானால் அது நமது உள்ளத்தை எப்போதும் கவரக்கூடிய ஒரு சிருஷ்டி ஆகி விடும். திருவாசகம், திவ்யப் பிரபந்தம் இவைகளிலுள்ள சில பாட்டுக்களைப் பின்பற்றியே பாரதியின் சில தேசீய கீதங்களின் நடையும், த்வனியும், பாணியும் இருக்கின் றன. 'பாரத மாதா திருப்பள்ளி யெழுச்சி' இதற்கு ஓர் உதாரணம் :

'புள்ளினம் ஆர்த்தன ; ஆர்த்தன முரசம் ;
பொங்கிய தெங்குஞ் சுதந்திர நாதம் ;
வெள்ளிய சங்கம் முழங்கின கேளாய் !
வீதியெலா மணுகுற்றனர் மாதர் ;
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்தன்
சீர்த் திருநாமமும் ஓதி நிற்கின்றார் ;
அள்ளிய தெள்ளமு தன்னை யெம் அன்னை !
ஆருயிரே ! பள்ளி யெழுந்தருளாயே !'

— பாரதி

'கூவின பூங்குயில், கூவின கோழி,
குருகுக ளியம்பின, இயம்பின சங்கம்;
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படுகின்றது, விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழற் றாளிணை காட்டாய்!
திருப்பெருந்துறை யுறை சிவபெருமானே!
யாவரு மறிவரி யாயெமக் கெளியாய்!
எம்பெருமான் பள்ளி யெழுந்தருளாயே!'

— மாணிக்கவாசகர்

'புலம்பின புட்களும் பூம்பொழில்களின்வாய்,
போயிற்றுக் கங்குல், புகுந்தது புலரி,
கலந்தது குணதிசைக் கனைகட லரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்கொண்டு அடியிணைபணிவான்
அமரர்கள் புகுந்தனர், ஆதலில் அம்மா!
இலங்கையர் கோன் வழிபாடுசெய் கோவில்
எம்பெருமான் பள்ளி யெழுந்தருளாயே!'

— தொண்டரடிப்பொடி ஆழ்வார்

இசைச் சுவையிலும் இலக்கியச் சுவையிலும் பாரதியின் பாட்டு குறைந்திருக்கிறதா? அதன் எளிமைக்கு அதிகக் கவர்ச்சி இருப்பதாகவே தோன்றுகிறது.

'எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே — அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே — அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே.'



சுப்பிரமணிய பாரதி

'மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையு நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரா னருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவ மிஃதை யெமக்கிலை யீடே!'

இவை போன்ற பாட்டுக்களில் கவிதைச் சுவையும் பண்ணும் இல்லை என்று யாராவது சொல்லத் துணிவார்களானால், அவருடைய கலைப் பயிற்சியிலும் ரஸிகத் தன்மையிலும் குறைவு இருப்பதாகத் தீர்மானித்துவிடலாம். பாட்டுக்கள், அவைகளின் எளிமையினால் சாதாரணமானவை என்று தோன்றினாலும், மிக்க அர்த்த புஷ்டியை உடையன; எத்தனை கோடி உணர்ச்சி அலைகளையும் கற்பனைச் சித்திரங்களையும் நம் மனத்தில் எழுப்புகின்றன!

## தோத்திரப் பாட்டுக்கள்

தேசிய கீதங்களைவிட அதிக ஆர்வத்தையும், கருத்துச் செல்வத்தையும், கவிச் சுவையையும், மட்டிலாத பக்திப் பான்மையையும் பெற்றவை பாரதியின் தோத்திரப் பாட்டுக்கள். கண்ணன், முருகன், காளி, ஸரஸ்வதி, லக்ஷ்மி முதலிய தெய்வங்களைப் பற்றிப் பல பல புது முறைகளில், விதவிதமாக, பாரதி அன்புடனும் ஆற்றலுடனும் பாடியிருக்கும் கீதங்கள் மனத்தை யுருக்கும் தன்மையன. இவைகளில் கண்ணன் பாட்டு அருட்சுவையும் அளவற்ற கவிதா பாவமும் நிரம்பியுள்ளது. மனித இயற்கைக்கு இயல்பான பல பாவங்களில், கீதாசாரியனைத் தியானித்துப் பாரதி பாடியிருக்கும் பாக்களில் அநேகம் முதல்தரமானவை.

## கண்ணன் பாட்டு

கண்ணன் பாட்டு என்னும் தொகுதியில் சுமார் இருபத்தைந்து பாட்டுக்கள் இருக்கின்றன. பெரியாழ்வாரைப் பின்பற்றியே, பாரதி இத் தொகுதியைச் செய்திருக்கிருர் என்று வ. வெ. சு. ஐயர் கருதுவது ஒப்புக்கொள்ளத்தக்கது. ஆனல், பெரியாழ்வாரின் கவிதையின் அழகு, அவருடைய சமய வேட்கையிலிருந்தும் ஆழ்ந்த பக்தியிலிருந்தும் ஒளி பெற்றிருக்கிறது. பாரதியின் பக்திச் சுவை சமயத்தில் ஈடுபட்ட அநுபூதி முறையைச் சார்ந்ததல்ல; அவருடைய உணர்ச்சி கவிதா சக்தியிலிருந்து கனிந்திருக்கிறது. கண்ணனைத் தந்தையாகவும், தாயாகவும், தோழனுகவும், சேவகனுகவும், அரசனுகவும், சற்குருவாகவும் பாவித்துப் புனைந்திருக்கும் பாக்களில் கவிதையைவிடக் கருத்துப் பொலிவு அதிகமாயிருக்கிறது. அப் பரம்பொருளைக் குழந்தையாகவும், காதலனுகவும், காதலியாகவும் பாவித்திருக்கும் பாக்களில் ஐந்தாறு, பாரதியின் கவிதா சக்தியின் உச்சத்தைக் காட்டக்கூடியன. 'கண்ணம்மா - என் குழந்தை' என்ற பாட்டு அதி அற்புதமானது. மிக எளிய நடையில், எவர் மனத்தையும் கொள்ளை கொள்ளக்கூடிய இன்னிசைக் கவிதையுள்ள ஒரு பாட்டு. இதைப் போல் தமிழில் வேறில்லை.

'பிள்ளைக் கனியமுதே — கண்ணம்மா
பேசும் பொற் சித்திரமே!
அள்ளி யணைத்திடவே — என் முன்னே
ஆடி வருந் தேனே!

'கன்னத்தில் முத்தமிட்டால் — உள்ளந்தான்
கள் வெறி கொள்ளு தடீ!
உன்னைத் தழுவிடிலோ — கண்ணம்மா
உன்மத்த மாகுதடீ!

'இன்பக் கதைக ளெல்லாம் — உன்னைப் போல்
ஏடுகள் சொல்வ துண்டோ?
அன்பு தருவதிலே — உனை நேர்
ஆகுமோர் தெய்வ முண்டோ?

'மார்பி லணிவதற்கே — உன்னைப் போல்
வைர மணிக ளுண்டோ?
சீர் பெற்று வாழ்வதற்கே — உன்னைப் போல்
செல்வம் பிறிது முண்டோ?'

பாடப் பாடத் தெவிட்டாத இன்பம் தரும் கவிதை இது. குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுக்குக் கொடுக்கும் ஆனந்தத்தைப் பற்றி மிகச் சிறப்பாகச் சொல்லும்,

'குழலினிதியாழினி தென்ப தம் மக்கள்
மழலைச்சொற் கே ளாதவர்'

என்ற குறள் பாட்டுக்கூட பாரதியின் பாட்டைப் போல் அவ்வளவு மன எழுச்சியையும் களிப்பையும் கொடுக்கவில்லை. கண்ணனைக் காதலன் பாவத்தில் கொண்ட 'ஆசை முகம் மறந்து போச்சே' என்ற நெஞ்சை உருக்கும் பாட்டில் காணப்படும்,

'கண்கள் புரிந்துவிட்ட பாவம் — உயிர்க்
கண்ண னுரு மறக்க லாச்சு;
பெண்க ளினத்தி லிது போலே — ஒரு
பேதையை முன்பு கண்ட துண்டோ?

'தேனை மறந்திருக்கும் வண்டும் — ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் — இந்த
வைய முழுதுமில்லை தோழி.'

இந்த வரிகள் அருட் சக்தியில் தோன்றிய அமுதக் கவிதை. சாதாரண மக்கள், குழந்தைகள், பேசும் வார்த்தைகள் தான். இவைகளைக் கையாண்டு, கவி ரஸவாதம் செய்திருப்பதைக் காணலாம். கடவுளைப் பற்றி உருகி உருகிப் பாடியிருக்கும் மாணிக்கவாசகர், ஞானசம்பந்தர், ஆண்டாள், அப்பர், இராமலிங்க சுவாமிகள், இவர்கள் கவிதையின் உச்சத்தில் கனிந்திருக்கும் உணர்ச்சியின் அனல் - தன்மையை, எவ்வளவு சுலபமாகப் பாரதி,

‘கண்கள் புரிந்துவிட்ட பாவம் — உயிர்க்
கண்ண னுரு மறக்க லாச்சு’

என்ற வரிகளில் சமைத்துவிடுகிறார்!

## விடு கவிகள்

ஏராளமான தனிப் பாட்டுக்களை, பாரதி பல பல சமயங்களில் பாடியிருக்கிறார்; அவருடைய கீதங்களில் மிகச் சிறந்தவை அநேகம் இந்தப் பகுதியில் இருக்கின்றன. ரஷ்யாவை நெடு நாளாகக் கொடுங்கோல் புரிந்து ஆண்ட ஜார்களின் வம்சம் வீழ்ச்சி அடைந்து, அந்த நாட்டில் குடியரசின் கொடி எழுந்து ஓங்கிப் பறந்த கல்யாண வைபவத்தைக் கொண்டாடிப் பாரதி பாடியிருக்கும் பாட்டின் நடையின் கம்பீரமும், இசையின் பேரொலியும், பொருளின் திண்ணமும் எவரையும் கவர வல்லன. ‘சந்திரமதி பாட்டு’, ‘சொல்ல வல்லாயோ கிளியே’, ‘ஜய பேரிகை கொட்டடா’, ‘ஜயமுண்டு பயமில்லை, மனமே’, ‘வேண்டுமடி எப்போதும் விடுதலை’ என்ற முதலடிகளையுடைய பாட்டுக்கள், கானமயமாக்கப்பட்ட ஆழ்ந்த கருத்துகள்; தீஞ்சொல்லில் புகுந்து ஜோதிமயமாய் ஒளிரும் கீதாரத்னங்கள். பாரதியின் புதிய ஆத்திசூடி, முரசு, பாப்பாப் பாட்டு — இவை

நவீன ஒழுக்க லட்சியங்களையும் தத்துவங்களையும் எளிய நடையில் குழந்தைகளுக்கு எடுத்துரைக்கும் முறையில் சித்திரிக்கின்றன. இன்ப ரஸம் மிகுந்த செஞ்சொல் வளத்தைப் பெற்ற இன்னிசைப் பாட்டுக்களை மாத்திரம் இயற்ற பாரதி வல்லவர் என்று கருதுவது தவறு. 'ஊழிக் கூத்து' என்னும் பாட்டில், பல மண்டலங்கள் அடங்கிய இந்தப் பிரபஞ்சம் முடிவு பெற்று, பிரளயவாய்ப்பட்டு, உடைந்து, உருவற்று, ஊழிக் காலத்தை அடையும்போது, பராசக்தி தேவி நடனம் புரியும் காட்சியை, பாரதி வருணித்திருக்கும் மாண்பையும், அந்தப் பாட்டின் சப்த கம்பீரத்தையும், பயங்கரமான கற்பனையையும், பொருள் செறிந்த கருத்துகளையும், நேரில் வாசித்துப் பாடிச் சிந்தனை செய்து அறிய வேண்டுமே யொழிய வார்த்தைகளில் சொல்ல இயலாது. இந்தப் பாட்டில், பாரதியின் கவிதா சக்தி, தனது விசுவரூபத்தை நம் முன் காட்டி நிற்கிறது என்றுதான் சொல்ல முடியும்.

## குயில் பாட்டு

பாரதி, தமது அளவற்ற கற்பனா சக்தியைப் பறக்க விட்டுக் காவிய ரீதியில் சில அழகான சித்திரங்களைச் சமைத்திருக்கிறார்; இவைகளில் சிறந்தது குயில் பாட்டு. இந்தப் பாட்டில் அவருடைய கனிந்த கவிதா சக்தியும், கம்பீரமான கற்பனா சக்தியும், நெஞ்சை அள்ளும் கான சக்தியும், ஒருங்கே சேர்ந்து, வற்றாத ஊற்றிலிருந்து பொங்கும் அமுத வெள்ளமாய்ப் பெருக்கெடுத்திருக்கின்றன. கவி, திடீரென்று தம்மை மறந்து, கற்பனைச் சிறகுகள் பெற்று எழுந்து இன்பக் கனவுலகு எய்தி, நீலக் கடலோரமுள்ள ஒரு மாஞ்சோலையினுள் சென்று, அங்கிருந்த ஒரு குயிலைக் கண்டு மயங்கிக் காதல் கொண்டு, அதன் பாட்டைக் கேட்

டுப் பின் நேர்ந்ததை, அடிமுதல் அந்தம்வரை, தட்டுத் தடையின்றி மெல்லோசை வளத்துடனே வருணித்திருக்கும் கவிதை போல், பாரதியின் இலக்கியங்களிலேயே சிற்சில இடங்களில்தான் பார்க்கலாம். எவ்வளவு சக்தியுடன் பாரதி நகைச்சுவையைக் கையாள முடியுமென்று இந்தப் பாட்டில், குயில் குரங்கினிடமும் மாட்டினிடமும் காதல் செய்யும் பாகங்கள் காட்டுகின்றன.

குயில் பாட்டு, பாரதியின் சிறந்த நூல்களில் ஒன்று என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஒரு சிலர், அவருடைய கவிதா சிருஷ்டியில் மிகச் சிறந்தது இதுவே என்றும் கருதுகிறார்கள். நூலில் கூறப்படும் கதை, விந்தையாயும் ஒரு விதமாயும் இருந்தபோதிலும் குயில் பாட்டு அருமையான ஒரு காதல் காவியம். இக் காலத்தில் எழுதப்பெறும் காதல் பாட்டுக்கள், அகத்துறை முறைகளைப் பின்பற்றாது தற்காலப் பண்புடன் இருக்க வேண்டியது அவசியம். குயில் பாட்டின் மிகவும் முக்கியமான அம்சம், அதன் எளிய, சரளமான, கவிதை செறிந்த அகவல் போன்ற நடை. பொதுவாக, தமிழ் அகவல் நடைக்குச் சற்று விறைப்பாய் இருப்பது இயல்பு; சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீயத்தின் நடையும் இதற்கு விலக்கில்லை. ஆனால், குயில் பாட்டில் பாரதியின் நடை, இதற்கு முன் தமிழ் இலக்கியம் கண்டிராத ஒரு வெற்றியாய் அமைந்திருக்கிறது. பாட்டு முழுவதும் ஒரே இனிமையான வாக்கு; ஒரே கவிதை வெள்ளம்; வேகமும் நயமும் எந்த இடத்திலும் குறையவில்லை. சில தமிழ் அறிஞர்கள் தமிழ் என்றாலே இனிமை என்று பொருள் கூறி, தமிழ் மொழியின் இனிமையைக் காட்டுவதற்கு வேறு சான்று எதற்கு என்று கருதித் திருப்தியடைந்துவிடுகிறார்கள். திருவாசகத்தையும் குயில் பாட்டையும் பெற்ற தமிழ் மொழிக்கு இவ் விதமாய் வாதம் செய்வது

பேதைமையாகும். இந்த இரண்டு நூல்களும் தமிழின் இனிமையின் எல்லையைக் காட்டுகின்றன என்றுகூடச் சொல்லலாம். பெரியாழ்வார், ஆண்டாள் எழுதிய பாசுரங்கள் நெஞ்சை உருக்கும் தன்மையிலும், கவிதா பாவத்திலும், இவைகளைவிட ஒரு படி அதிகமாய்க்கூட இருக்கலாமோ என்று தோன்றினாலும், இனிமையிலும் ஓசை இன்பத்திலும் சற்றுக் குறைவாகவே இருப்பதை ஒருவரும் மறுக்க முடியாது.

குயில் பாட்டின் பொருளும் தத்துவமும் தெளிவாயில்லை என்று பலர் அபிப்பிராயப்படுவதில் கொஞ்சம் உண்மை இருக்கிறது. ஆனால், இது மாதிரியுள்ள கற்பனைச் சித்திரங்களில் பொருள் தெளிவாயிருப்பதில்லை. வாசகர்களும் தங்களுடைய கற்பனை சக்தியை எழுப்பிவிட்டு, எட்டும் அளவு பொருளை ஒருவாறு தெரிந்துதான் அநுபவிக்க வேண்டும். கனவில் தோன்றியதையே புனைந்திருப்பதாகக் கவி கூறுகிறார். குயில் முதலில் தன்னை ஒரு சோலையில் கண்ட மனிதனை ஆர்வத்துடன் காதலித்ததாகக் காட்டி, அவனை மயக்கித் தனக்கு அடிமையாக்கிப் பின்னால் இதே நாடகத்தை ஒரு குரங்கினிடமும் மாட்டினிடமும் செய்ததையும், இதைப் பார்த்துவிட்டு அதன் காதலன், பொய்க்காதல் பாடிய குயில் மீது வெறுப்புற்றுக் கோபாவேசத்துடன் அதைக் கொல்ல யத்தனிக்கும்போது, அக்குயில் தன் பூர்வ ஜன்மக் கதையை அவனுக்கு எடுத்துரைத்துப் பின் மாயமாய் உரு மாறி அழகே உருவெடுத்த ஒரு பெண்ணைத் தோன்றி மறைந்துவிட்டது என்பது கதை. இதற்கு நமது புத்தி சாதுரியத்தால் உட்பொருள் கூறினாலும், அது பாட்டின் அழகையும் இன்பத்தையும் கெடுக்குமே யொழிய அதிகப்படுத்தாது. காதலுக்கு மனிதன் அடிமையாவது போலவே மற்ற விலங்குகளும் அடிமையாகும்; காதல்

இல்லாத வாழ்வு பாழ்; காதலை எழுப்பி, அதை அனலாக்கிக் கொழுந்துவிட்டு எரியச் செய்யும் சக்திகளில் கானம் சிறந்தது; காதலின் வளர்ச்சியில் கபட நாடகங்கள் தோன்றலாம்; எதிர்பாராத இடர்கள் நேர்ந்து காதலின் இன்பச் சோலையைத் துன்ப இடுகாடாய் ஆக்கிவிடலாம்; காதல் இல்லாத மணம், மணமில்லாத, வர்ண வனப்பில்லாத புஷ்பம் போலாகும்; காதலைக் கற்புக்கும், கற்பைக் காதலுக்கும் அர்ப்பணம் செய்யும் ஆண், பெண்கள் உண்டு; இவர்களில் யார் சிறந்தவர் என்பதைத் தீர்மானம் செய்யவே முடியாது; இவை எல்லாம் குயில் பாட்டு பகர்கின்றது என்று சொல்லலாம்: ஆனால், பாட்டின் பொருள் தெளிவாய்விட்டதா என்ற கேள்வி நிலைத்திருக்கும். சிறந்த ஆங்கிலக் கவியான ஷெல்லி எழுதியிருக்கும் 'எபிசைகிடியான்' (Epipsychidian) என்ற அற்புதமான கவிதைச் சிறப்பு வாய்ந்த ஒரு காதல் பாட்டைப் பற்றி அதன் பொருள் தெளிவாயில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் அடிக்கடி சொல்வதுண்டு. இருந்த போதிலும் அந்தப் பாட்டை ஒருவரும் குறைவாகவே மதிக்க முடியாது; அதன் இசையும் கவிதையும் அவ்வளவு அபாரம்.

குயில் பாட்டிலிருந்து உதாரணங்கள் கொடுக்க வேண்டிய அவசியம்கூட இல்லை. பாட்டு கம்பீரமான கவிதா பாவத்துடன் துவக்கப்பட்டிருக்கிறது. குயிலின் பாட்டின் முதலடி,

'காதல், காதல், காதல்;
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்'

உலகம் தோன்றிய நாள் முதல் பல கவிஞர்கள் அநேக நூல்களிலும் காவியங்களிலும் பாடியிருக்கும் உணர்ச்சித்

தத்துவத்தை மூன்று எளிய வார்த்தைகளில் காட்டுகிறது. குயிலின் பாட்டையும் பேச்சையும் கேட்டவன் நிலைமை இது :

'கண்ட தொரு காட்சி கனவு நனவென் றறியேன்,
எண்ணுதலுஞ் செய்யேன் ;
இருபதுபேய் கொண்டவன்போல்
கண்ணு முகமுங் களியேறிக் காமனார்
அம்பு நுனிகள் அகத்தே யமிழ்ந்திருக்க,
கொம்புக் குயிலுருவங் கோடி பல கோடியாய்
ஒன்றே யதுவாய், உலகமெலாந் தோற்றமுற,
சென்றே மனைபோந்து, சித்தந் தனதின்றி,
நாளொன்று போவதற்கு
நான்பட்ட பாடனைத்தும்
தாளம் படுமோ ? தறி படுமோ ? யார் படுவார் ?
நாளொன்று போயினது. நானு மெனதுயிரும்,
நீளச்சிலை கொண்டு நின்றதொரு மன்மதனும்,
மாயக் குயிலும்அதன் மாமாயத் தீம்பாட்டும்,
சாயைபோ லிந்திரமா சாலம்போல், வையமுமாய்
மிஞ்சி நின்றோம்.'

இறுதியில் குயில் மறைந்து ஒரு ஜோதிப் பெண்ணாகி யதைக் கவிஞன் கண்ட காட்சி இது :

' ஆசைக் கடலின் அமுதடா ! அற்புதத்தின்
தேசமடா ! பெண்மைதான்
தெய்விகமாங் காட்சியடா !
பெண்ணொருத்தி அங்கு நின்றாள் ;
பேருவகை கொண்டுதான்

கண்ணெடுக்கா தென்னைக்
　　கணப்பொழுது நோக்கினுள்;
சற்றே தலைகுனிந்தாள். சாமீ! இவளழகை
எற்றே தமிழி லிசைத்திடுவேன்? கண்ணிரண்டும்
ஆளை விழுங்கும் அதிசயத்தைக் கூறுவனே?
மீள விழியில் மிதந்த கவிதை யெலாம்
சொல்லில் அகப்படுமோ?
　　தூயசுடர் முத்தையொப்பாம்
பல்லில், கனியிதழில், பாய்ந்த நிலவினை யான்
என்றும் மறத்தல் இயலுமோ?'

எளிய சிறு வார்த்தைகள். மிகவும் எளிய நடை. கவிதையோ இதற்கு முன் தமிழில் காணுத ஓர் அற்புதம்; கவிதை உலகில் ஒரு புது சகாப்தத்தின் உதயம்.

புலவர்கள் ஆச்சரியத்தைக் காட்டக் கையாளும் 'அந்தோ', 'ஐயகோ', 'மாதோ' என்றவைகளுக்குப் பதிலாகக் காணப்படும் 'சாமீ' என்பதின் சக்தியும் அழகும் சொல்லற்கரியன.

ராமனின் அழகைக் கண்ட மிதிலை மாதர்கள், 'கண்ணினுல் காதல் என்னும் பொருளையே காண்கின்ருேம்' என்று ஆனந்தித்தது போல், தற்காலத் தமிழர் குயில் பாட்டைக் கண்டு அதில் கண்ணினுல் காதல் என்னும் பொருளை மாத்திரம் காண்பதன்றி, காதல் என்னும் கவிதையையும் கானத்தையும் மனத்தாலும் செவியாலும் பருகுகிருர்கள் என்று சொல்லலாம். குயில் பாட்டுக்கு இந்தப் புகழுரை அதிகம் என்று சிலர் கருதலாம். ஆனுல், கவிதையை ரஸித்துக் கூறுகிறவர்களின் அபிப்பிராயங்களெல்லாம் அவர்களுடைய உணர்ச்சியையே சார்ந்திருக்கும்.

## பாஞ்சாலி சபதம்

காவிய ரீதியாக, பாரதி இயற்றிய 'பாஞ்சாலி சபதம்' என்னும் நூலைக் கடைசியாகக் கவனிப்போம். வியாஸ பாரதத்தில் துரியோதனன் முதலான கௌரவர்கள், பாண்டவர்களை வஞ்சகமாய்ச் சூதுக்கிழுத்து, அவர்களை அவமானப்படுத்திய பாகத்தை, எளிய நடையில், கவிதைச் சுவையுடனும் நாடகச் சுவையுடனும், புதிய கருத்துக்களுடனும் பாரதி எழுதியது ஒரு சிறந்த தமிழ்க் காவியம். பழங் கதைகளைக் கையாண்டு அவைகளுக்குப் புது ரூபமும் புத்துயிரும் கொடுப்பது கவித் தொழிலின் இயல்பு; பழைய கதைகளைப் புதிய காவியங்களாய்ப் புனைவது எளிதல்ல; அது ஜீவ ஒளியுடன் பிரகாசிக்கும் கவிதா சக்தியைப் பெற்றவர்களாலேயே முடியும். 'பாஞ்சாலி சபதம்' பாரதியின் கவித் திறத்தின் தனி வெற்றி.

நூலின் முகவுரையில் கவி சொல்லியிருக்கும் இந்த வாக்கியங்களை நன்ருய்ச் சிந்தனை செய்துகொண்டுதான் எந்த ரஸிகனும் இதை ஆராய்ச்சி செய்ய வேண்டும்: 'எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், இவற்றினையுடைய காவியம் ஒன்று தற்காலத்திலே செய்து தருவோன், நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்ருன். ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்.' இந்த லட்சியத்தை நிறைவேற்றுவதில், பாரதி ஜயமடைந்ததுமன்றி, தமிழ் மக்களுக்கு என்றும் தெவிட்டாத இன்பத்தைத் தரக் கூடிய ஒரு சிறந்த தமிழ்க் காவியத்தைச் சிருஷ்டி செய்திருக்கிருர். இது, தற்காலப் பண்பு மலிந்து நூதன முறையில் ஆக்

கப்பட்ட ஒரு பெருங் காப்பியம்; சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட வரிகளை உடையது. இதில் ரஸம் குறைந்த பாகங்கள் மிகக் குறைவு.

ஓர் இதிகாசக் கதையைக் காவிய மாக்குவதற்கு, பாரதி அநுஷ்டித்திருக்கும் நொண்டிச் சிந்து போன்ற சாதாரண நடை சரியான இலக்கியக் கருவி ஆகுமா என்று சிலர் சந்தேகப்படலாம். இது போன்ற விஷயங்களில் திட்டமான விதிகள் ஒன்றும் இருக்க முடியாது. பெருங் காப்பியங்க ளெல்லாம் பலவிதமான விருத்தப் பாக்களால் தான் ஆக்கப்பட வேண்டுமென்பது ஒரு விலக்கற்ற விதியல்ல. கடந்த ஆயிரத்து இருநூறு வருஷங்களாக, சில சில்லறைப் பிரபந்தங்களைத் தவிர முக்கியமான நூல்கள் யாவும் விருத்தப் பாக்களிலேயே செய்யப்பட்டுப் புலவர் களும் அதன் பரப்புக்கும் சக்திக்கும் கரை கண்டுவிட்டார் கள். இனிமேல் கவிகள் புது யாப்புக் கருவிகளைத் தேடிக் கொள்ள வேண்டும். விருத்த வண்ணங்களையே கையாண்டால் அளவைக் கருதி அவசியமில்லாத சொற்களையும் பாவங் களையும் அதிகமாய்ச் சேர்க்க நேரிடும். தற்காலத்திற் கேற்ற புதிய கருத்துகளையும் கற்பனைகளையும் அழகுறப் பொதிய புது யாப்பு முறைகள் தோன்றுவதில் குற்ற மொன்று மில்லை. புலவர்கள் தங்களுடைய சக்திக்கும் மனோபாவத்திற் கும் தகுந்தவாறு இலக்கிய நடையை அமைத்துக்கொள்ள வேண்டும். காவிய சிருஷ்டி வெற்றிகரமாய் முடிந்திருக் கிறதா என்றுதான் நாம் கவனிக்க வேண்டும். தமிழ்க் காவியங்களின் நடை கடினமாயும், கரடுமுரடாயும், சாதாரண மக்களுக்குப் புரியக்கூடாத முறையிலும்தான் இருக்க வேண்டுமென்று கருதும் தமிழ் அறிஞர்களுக்குப் பாஞ்சாலி சபதத்தின் இலக்கியச் சிறப்பையாவது சக்தியையாவது அறிய முடியாது. மிக எளிய வார்த்தைகளைக் கையாண்டு,

எல்லோரும் லேசாய்ச் சுவையுடன் வாசித்து அறியக்கூடும் முறையில், கற்பனை நிறைந்ததாயும், ஓசை இன்பம் மலிந்ததாயுமுள்ள கவிதையைச் சிருஷ்டிப்பதில் பாரதிக்கு நிகரானவர் தமிழ் இலக்கியத்திலேயே இல்லை என்று திட்டமாகச் சொல்லலாம். இந்த அம்சத்தில் கவி ஒரு புது சகாப்தத்தைத் தமிழ் இலக்கியத்தில் துவக்கியிருக்கிறார். அருணாசலக் கவிராயரின் ராம நாடகமும், கோபால கிருஷ்ண பாரதியின் நந்தன் சரித்திரமும், சாமானிய மக்கள் அறியக்கூடிய கீர்த்தனை முதலிய பாட்டுக்களில் ஆக்கப்பட்டிருந்தபோதிலும், அவை இலக்கியச் சுவையிலும் கவிதா பாவத்திலும் குறைந்திருப்பதால் உயர்ந்த இலக்கியங்கள் என்று கொள்ள முடியாது.

எந்த அம்சத்தில் பார்த்தாலும் பாஞ்சாலி சபதம் ஓர் உயர்ந்த காவியம். கல்விச் செருக்குடைய புலவர்கள் களிக்கும் கற்பனை முறைகளையும் அணிகளையும் கையாண்டு அவைகளைத் தெளிவாக்கி ரஸப்படுத்துவதில் பாரதி கைதேர்ந்தவர். ஸரஸ்வதி வணக்கத்தில், கவி அத் தெய்வத்தை,

‘வேதத் திரு விழியாள், — அதில்
மிக்க பல் லுரை யெனுங் கருமை யிட்டாள்,
சீதக் கதிர் மதியே — நுதல்
சிந்தனையே குழ லென்று டையாள்’

என்றும்,

‘கற்பனைத் தேனிதழாள், — சுவைக்
காவிய மெனுமணிக் கொங்கையினாள்’

என்றும் பாடியிருப்பது, பழைய புலவர்களை அவர்கள் முறையிலேயே வெல்லுவதாகும். சாதாரண மக்களின் பேச்சுக்களில் வரும் வார்த்தைகளுக்குள்ள சுயம்புவான இலக்கியச்

சுவையை இந்தக் காவியத்தில் பாரதி வெகுவாகப் பயன் படுத்தியிருப்பது போற்றத்தக்கது. அஸ்தினபுரத்து வீரர் களைப் பற்றி, 'கரி நூறினைத் தனி நின்று நொறுக்க வல்லார்' என்பதைப் போன்ற வரிகள் இதற்கு உதாரணம்.

பாரதத்திலுள்ள பாத்திரங்களின் குணங்களைப் பொது வாக மக்கள் தெரிந்திருப்பார்கள். பாஞ்சாலி சபதத்தில் பாரதி அவர்களைச் சிருஷ்டி செய்திருப்பதில் ஒரு தனிப் பட்ட உயிர்த் தத்துவம் சோபிக்கிறது. துரியோதனன் தீய குணங்களை உடையவனாக இருந்தபோதிலும், அவனை ஒரு வெறும் அயோக்கியனாகக் கவி சிருஷ்டிக்கவில்லை. இந்தக் காவியத்தில் துரியோதனன், தனது மறத் தொழிலுக்கும் பொறாமைக்கும் ஓர் அரசியல் தத்துவத்தை அடிப்படை யாக வைத்துக்கொள்கிறான். திருதராஷ்டிரன் அவனுக்குப் பலவிதமான புத்திகள் சொல்லுகிறான். பதிலாக அவன்,

'மன்னர்க்கு நீதி யொரு வகை — பிற
மாந்தர்க்கு நீதி மற் றோர் வகை.'

'குறைத லென்பது மன்னவர்க் கில்லை;
கூடக் கூடப் பின் கூட்டுதல் வேண்டும்;
பிறை யொன் றே யரசர்க் குண்டு, கண்டாய்:
பிறரைத் தாழ்த்து வதில் சலிப் பெய்தல்.'

'வெல்வதெங் குலத் தொழிலாம்; — எந்த
விதத்தினி லிசையினுந் தவறில்லை காண்!
நல் வழி தீய வழி — என
நாமதிற் சோதனை செயத் தகுமோ?'

என்று சொல்லி, மெக்கியவல்லி, ஹிட்லர் போன்றவர்கள் கூட மிரளும்படி, ஒரு லட்சியதாசனாக வாதாடுகிறான். பாண்ட வர்கள் ராஜசூய யாகம் செய்து பெற்ற பெருங் கீர்த்தியில்

துரியோதனன் கொண்ட பொறாமையே, பாரதப் போருக்குக் காரணமாதலால், அவன் பொறாமையால் படும் அவஸ்தையையும், அதனால் ஏற்பட்ட மனநிலையையும், கவி இதிகாசத்திற்கேற்ற விரிவுடன் அழகுபெறச் சித்திரித்திருக்கிறார்.

'— அந்தக்
காளை யருச்சுனன் கண்களிலும்
மாண்டகு திறல் வீமன் — தட
மார்பிலு மென திகழ் வரைந் துளதே!'

என்று துரியோதனன் சொல்லும் வரிகளுக்கு, அட்சர லட்சம் கொடுக்கலாம் என்று பழைய முறையில் சொன்னாலும் திருப்தி அளிக்கவில்லை.

விதுரன், தன் மனப்போக்குக்கு எதிராகத் தானே பாண்டவர்களை அழைக்கப் போக நேரும்போது நாட்டின் வளத்தை நோக்கியும், அது சமீபத்தில் ரத்த வெள்ளம் ஓடும் அமர்க்களமாகப் போவதை நினைத்தும் வருந்தி, தனக்குள்ளேயே சொல்லிக்கொள்ளும் 'நீல முடி தரித்த பல மலை சேர் நாடு' என்ற பாகமும், 'மாயச் சூதினுக்கே - ஐயன் மன மிணங்கிவிட்டான்' என்று ஆரம்பிக்கும் சூதாட்ட வருணனையும் மிகுந்த நாடகத்தன்மையுடன் இருக்கின்றன. நூலின் கடைசி பாகமாகிய துகிலுரிதல் சருக்கமும், சபதச் சருக்கமும் அதியற்புதமான சிருஷ்டிகள். இந்தக் கட்டத்தில் வில்லியையும் பாரதியையும் ஒப்பிட்டுப் பார்த்தால், பாரதியின் கவிதா சக்தியும், கற்பனை ஆற்றலும், நெஞ்சை உருக்கும் வன்மையும் நன்றாய்ப் புலப்படும். 'இவ்வளவுதானா வில்லியின் சக்தி!' என்றுகூட ஓர் எண்ணம் எழுகிறது. பாரதியின் காவியத்தில் இந்தச் சருக்கம், உயர்ந்த சோக நாடக

மாண்புடனிருக்கிறது. கேட்டாலே மனம் துணுக்கமடையும் அக்கிரமங்கள் ராஜசபையில் நடப்பதும், கற்றறிந்த பெரியோர், முதியோர் பலர் அவைகளைத் தடுக்க முடியாது, மனத் தாழ்வுற்றுப் பேடியர் போல் திறுதிறு என்று விழித்துக்கொண் டிருப்பதும், தர்மமே தலைசாய்ந்தது போல் யுதிஷ்டிரன் எல்லாவற்றையும் இழந்து தலைகுனிந்து திகைப்பதும், துரியோதனாதியர்களாகிய துஷ்டர்கள் தங்களுடைய சூழ்ச்சி பலித்ததென்று கொக்கரித்துக்கொண் டிருப்பதும், திரௌபதி சபைக்குள் பலாத்காரமாக இழுத்துவரப்பட்டு, உலகம் கேட்டிராத முறையில் அவமானப்படுத்தப்படுவதும், புஜபல பராக்கிரமத்தையே தெய்வமாகக் கொண்ட வீமன் குமுறி எழும் கோபத்தை அடக்க முடியாது தன் அண்ணன் தர்மனைப் பழித்துக் கூறுவதும், கீதையின் சிருஷ்டிக்குக் காரணபூதனாயிருந்த, வீரமே உருவெடுத்த அருச்சுனன், இவ்வளவு கொடுமைக்கிடையில், தன் மனத்தின் சமநிலையைக் காத்து வீமனைப் பார்த்து,

'மன மாரச் சொன்னாயோ? வீமா! என்ன
வார்த்தை சொன்னாய்? எங்கு சொன்னாய்?
யாவர் முன்னே?
கன மாருந் துருபதனார் மகளைச் சூதுக்
களியிலே யிழந் திடுதல் குற்ற மென்றாய்;
சின மான தீ யறிவைப் புகைத்த லாலே,
திரி லோக நாயகனைச் சினந்து சொன்னாய்.

"தருமத்தின் வாழ் வதனைச் சூது கவ்வும்;
தருமம் மறுபடி வெல்லும்" எனு மியற்கை
மருமத்தை நம்மாலே யுலகங் கற்கும்
வழி தேடி விதி இந்தச் செய்கை செய்தான்.

கருமத்தை மேன் மேலுங் காண்போம். இன்று
கட்டுண்டோம்; பொறுத் திருப்போம்;
காலம் மாறும்.
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்.
தனு வுண்டு காண்டீவ மதன் பேர்'

என்று சொல்லி அவன் கோபத்தைத் தணிப்பதும் அரிய நாடக சக்தியுடன் ஆக்கப்பட்டிருக்கின்றன. திரௌபதி கிருஷ்ண பகவானைத் துதி செய்யும் பாகம் நீளமாயிருப்பதால் சற்று விரஸமாய்த்தான் இருக்கிறது. மொத்தத்தில், பாஞ்சாலி சபதம் நாம் என்றும் போற்றக்கூடிய ஒரு சிறந்த தற்காலத் தமிழ்க் காவியம்.

## பாரதியின் புலமை

பொதுவாகக் கருதுமிடத்து, தமிழ் இலக்கிய உலகிற்கு சுப்பிரமணிய பாரதி ஒரு புதிய ஜோதியையும், சக்தியையும், தற்காலச் சுவையையும் தேடி அளித்தார்; ஒரு புதிய கவி பரம்பரையையும் துவக்கியிருக்கிறார். அவர் ஒரு நூதன சக்தியாதலால், அவருடைய பெருமையைப் பழைய முறைகளில் பழக்கம் பெற்ற தமிழ்ப் புலவர்கள் அறிய முடியாமல் இருக்கிறார்கள். நவீன யௌவன நாகரிகத்தின் கலைப் போக்கையும் கருத்துப் போக்கையும் சுவையுறக் கலந்து, பாமாலைகள் சூட்டித் தமிழ்த் தாயைப் பாரதியார் வணங்கினார். தமிழ்க் கவிதையின் நறுமணம் வாடிப் போய், செய்யுள்களை இயற்றுவதைச் செப்பிடு வித்தையைச் செய்வது போல் பயின்று, ஏட்டுக் கற்பனையை வைத்து, சத்தும் தற்காலப் பண்புமற்ற கவிதையை அளவுகோல்களால் ஆக்கும் மெய்ப்புலமையற்ற தமிழ்ப் புலவர்கள் திண்டாடிக் கொண்டிருக்கும் சமயம், பாரதி உண்மைக் கவிதையின் ஒளியைத் தமிழகமெல்லாம் வீசி எழுந்தார்.

## கவிதை

சுயம்புவான கவிதையின் குணங்கள் காலத்தால் மாறுபாடு அடைவதில்லை. கவிதையின் அங்கங்களும் அவைகளின் லட்சியங்களும், பாடப்படும் பொருள்களும், காலத்திற் கேற்றவாறும், கவிஞர்களின் சிருஷ்டி சக்திக்குகந்தவாறும், மக்களின் கலைருசிக்குத் தக்கவாறும் மாறுகின்றன. இவை கவிதைக்கு, கால - தேச - நாகரிக - வர்த்தமானங்களை அநுசரித்த அம்சங்களாயிருக்கின்றன. நிரந்தரமான அம்சத்தில், கவிதை இசையுடன் ஒளிரும் கற்பனையின் வாசகம்; கருத்தாலும் சொல்லாலும் இயற்கையின் அழகைப் பிழிந்தெடுக்கும் சக்தியின் கீதம்; பிரபஞ்சத்தின் எல்லையற்ற எழிலிலும் ஜோதியிலும் கவிஞர்களின் உள்ளத்தை மூழ்கிக் குளிப்பாட்டும் ஆவியின் மலர்ச்சி. இந்தத் தன்மைகளை, எந்தக் காலத்தில் தோன்றிய பெரிய கவிகளிடத்திலும் பார்க்கலாம். ஆனால், புதிய கற்பனை முறைகளையும், சந்தங்களையும், காலத்திற் கேற்ற கருத்து லட்சியங்களையும் கைக்கொள்ளும் ஆற்றல் கவிகளுக்கு இன்றியமையாதது. தன் காலத்துச் சக்திகளால் ஒரு கவி சிருஷ்டிக்கப்பட்டபோதிலும், அவன் தன் காலத்திற்கு அதீதமான லட்சியங்களைச் சிருஷ்டிக்க வல்லவன். இந்த இரண்டு விஷயங்களையும் வைத்துக்கொண்டு கவனித்தால் பாரதியை ஒரு பெரிய கவி என்றே கருத வேண்டும்.

பாரதி, எளிய நடையே சிறந்த கவிதைக்கு அழகு என்பதின் உண்மையை நிரூபணம் செய்தார். தற்காலக் கவிகள், தம் காலத்து வாழ்க்கையையும் கவிதைப் பொருளாய் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று காட்டினார். பழமையிலிருந்து புதுமைக்கு மாறிக்கொண்டிருக்கும் தமிழரின் அறிவின் ஒளிக்கு ரூபமும், இதயத்தின் ஒலிக்கு இசையும்

அளித்துப் பாரதி கவிதை புனைந்தார். நமது நாட்டின் தற்கால வாழ்க்கையைச் சார்ந்த பல அம்சங்களைப் பற்றியும், சமுதாய வாழ்வின் குறைகள், அவைகளை நீக்கும் முறைகள் முதலியன பற்றியும் அவர் பல பாட்டுக்கள் பாடியிருக்கிறார். 'புதுமைப் பெண்', 'பெண்மை', 'நெஞ்சு பொறுக்குதிலையே', 'நெஞ்சி லுரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி', 'ஆங்கிலப் பயிற்சி' முதலிய பாட்டுக்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவை. பாரதியின் தேசிய கீதங்கள்கூட, அவர் தற்கால வாழ்வையே முக்கியமான கவிதைப் பொருளாகக் கொண்டதின் பயன்தான். ஆனால், தற்கால வாழ்வின் மீதுள்ள மோகத்தாலும், சுதந்திர வேட்கையாலும் பாரதி நம் நாட்டின் பழமையை வெறுக்கவில்லை; அதன் கலைகளைத் திரஸ்காரம் செய்யவில்லை; தத்துவங்களை உதறித் தள்ளவில்லை. அவர் கடவுளை நம்பியவர்; கீதோபதேசத்தைக் கைக்கொண்டவர்; சக்தி வணக்கத்திலும் ஈடுபட்டிருந்தவர். கவிதை பொழிவதில் தமிழ்ப் பண்பை மறக்கவேயில்லை.

## தமிழ் இலக்கியத்தில் பாரதியின் ஸ்தானம்

இருந்தபோதிலும், கம்பன், காளிதாசன், வால்மீகி போன்ற ஒரு மா பெருங் கவி என்ற ஸ்தானத்தைப் பெறுவதற்குரிய ஒரு பெருங் காப்பியத்தைப் பாரதி தமது சக்திகளனைத்தையும் ஒருங்கே நிறுத்திச் செய்யவில்லை. இதற்கு, பால்யத்திலேயே அவர் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டதால் நேர்ந்த பலவித இடையூறுகளும், புலவர்களுக்குப் பிதிரார்ஜிதமாயிருந்து, அவரை நெருங்கித் தொடர்ந்து பழகிய வறுமையும், பெரும்பான்மையான தமிழ்ப் பண்டிதர்களும் அபிமானிகளும் போதியபடி ஆதரித்து அவருக்கு ஊக்கங் கொடாமையும், நாட்டின் சீர்கேடான நிலைமையும் காரணங்களாக இருக்கலாம். நயங் குறைந்த சில பாடல்களை அவர்

எழுதியிருந்தபோதிலும், அவருடைய புகழ் என்றும் அழி யாது என்று திட்டமாய்ச் சொல்லலாம். தமிழ் இலக்கியத் தில் பாரதிக்கு மேவியிருக்கும் உயர்ந்த ஸ்தானத்தைப் பற்றிச் சற்றேனும் சந்தேகம் கொள்ள இடமில்லை. 'பாஞ் சாலி சபதம்', 'குயில் பாட்டு', 'கண்ணன் பாட்டு' இவை களும், ஏனையவைகளில் மெருகு பெற்ற பொன் போல் ஒளி ரும் சுமார் ஐம்பது அற்புதமான சிறு பாட்டுக்களும் தமிழ் மொழி யுள்ளவரை நிலைத்திருக்கும். கம்பரையும் வள்ளு வரையும் நீக்கிவிட்டு, ஆறு பெரிய தமிழ்க் கவிகளைத் தெரிந் தெடுக்க வேண்டுமானால் அவர்களில் பாரதி நிச்சயமாய் ஒரு வரா யிருப்பார்.

## 4. தேசிகவிநாயகம் பிள்ளை

பாரதி ஆரம்பித்திருக்கும் கவிதைப் பரம்பரை நிலைத் துச் செழித்து ஓங்குமென்பதில் ஐயம் இல்லை. இப்போது ஜீவந்தர்களா யிருக்கும் தமிழ்க் கவிகளில் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்களான தேசிகவிநாயகம் பிள்ளையும், பாரதிதாசன் என்ற கனக-சுப்புரத்தினமும், நடை, சந்தம், கற்பனை முதலிய அம்சங்களில், பாரதியைப் பின்பற்றினவர்கள்; கவிதைப் போக்கிலும் பாவத்திலும், பாரதியின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். ஒரு புலவரின் நூல்களை, அவர் ஜீவந்தரா யிருக்கும்போதாவது, அவர் காலத்திலேயாவது சீர்தூக்கிப் பார்த்து ஆராய்ச்சி செய்வ தில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. பாரதி விஷயத்தில் அவர் அருள் - புலமையை அளவற்றுப் பெற்று ஒரு புதிய சகாப்தத்தையே தோற்றுவித்து மறைந்ததால் இக் கஷ்டம் இல்லை; மேலே குறிப்பிடப்பட்ட இரு புலவர்கள் விஷயத் தில் இருக்கத்தான் செய்கிறது. இருந்தபோதிலும் அவர்க

தேசிக விநாயகம் பிள்ளை

ளுடைய கவிதா சிருஷ்டியைப் பற்றிய ஆராய்ச்சி (பத்திரிகைகளில் தோன்றும் மதிப்புரைகள் போலல்ல) இந்த நூலுக்கு அவசியம்.

தேசிகவிநாயகம் பிள்ளை திருவாங்கூரைச் சேர்ந்தவர்; தமிழ் ஆசிரியராய்ப் பல வருஷங்கள் இருந்தவர். அவர் இயற்றியிருக்கும் பாட்டுக்கள், வெகு சமீபத்தில்தான் தொகுக்கப்பட்டு 'மலரும் மாலையும்' என்ற மகுடத்துடன் ஒரு நூலாக வெளிவந்திருக்கின்றன. தேசிகவிநாயகம் பிள்ளை ஒரு நல்ல தற்காலத் தமிழ்க் கவி என்பதற்கு இந்த நூல் சான்று பகர்கிறது.

## அவருடைய பாட்டுக்கள்

பெரிய காவியம் ஒன்றையும் தேசிகவிநாயகம் பிள்ளை செய்யவில்லை. அவர் எழுதியிருக்கும் சற்றுப் பெரிய பாட்டுக்களில் 'கருணைக் கடல்', 'பாரசீகக் கவி யமுதம்' இவை இரண்டும் சிறந்தவை; 'அன்பின் வெற்றி', 'தன் மகனை யிழந்த தாய்க்குப் புத்தர் உபதேசித்தல்' அடுத்தபடிதான். முதலிரண்டும் ஆங்கிலக் கவிகளைத் தழுவி ஆக்கப்பட்டிருந்த போதிலும், கவிதைப் போக்கிலும், பாவத்திலும், கனிந்த தமிழ்ப் பண்பையும் சுவையையும் பெற்றிருக்கின்றன. செய்யுள் நடை இனிமையுடனும் எளிமையுடனும் மெருகிடப்பட்டிருக்கிறது. புத்தர்பிரான், பிம்பிசார மன்னன் யாகசாலைக்குப் போகும் ஆடுகளைப் பின்தொடர்ந்து போய், வேள்வியில் நடைபெற இருக்கும் ஆட்டுப் பலியை நிறுத்தி அவைகளுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்த உலகம் போற்றும் கதை, அழகுடனும் சக்தியுடனும் ஆக்கப்பட்டிருக்கிறது. உமர் கய்யாம் முதலிய பாரசீகக் கவிகளின் ரஸம் ததும்பும் இன்னிசைப் பாடல்களைத் தமிழ்க் கவிதை யாக்கியிருப்பது, தேசிகவிநாயகம் பிள்ளை தமிழுக்குச் செய்த ஒரு தனித்

தொண்டு ஆகும். பாரசீகப் பாடல்களின் இசையும், கருத்துக்களும், தத்துவமும் பிள்ளையவர்களின் பாட்டுக்களில் நன்ருய்ப் பிரதிபலிக்கின்றன. வாழ்க்கை அநித்தியம், உயிரெல்லாம் ஒன்று என்ற தத்துவங்கள் பலவிதமான கவிதா பாவங்களில் பாடப்பட்டிருக்கின்றன.

'வாராய் நண்பா! வருத்தமெனும்
வாடைக் காலப் போர்வையினை,
நேரா வருமிவ் வசந்தமெனும்
நெருப்பில் வீசி எறிவாயே,
தேரா வாழ்வின் பறவையினும்
செல்லுந் தூரம் சிறிதேயாம்,
பாராய், பாராய், பறவையதோ
பறக்கச் சிறகும் விரித்ததடா.

'மண்ணை ஒருநாள் ஒருகுயவன்
மயக்கிப் பிசையும் வேளையிலே
திண்ணை யருகு சென்றிருந்தேன்
செய்யும் தொழிலும் கண்டிருந்தேன்
" அண்ணு! மெல்ல, மெல்ல "என
அமைந்த அழுகைக் குரல்கேட்டேன்
கண்ணிற் காணு நாவாலே
களிமண் கரைவ தென வுணர்ந்தேன்.

'உண்ட வெறியில் முன்னொருநாள்
உண்ட கலத்தை உடைத்தெறிந்தேன்
துண்டு துண்டாய்ப் போனகலம்
துணிந்து மெல்ல எனைநோக்கிப்
" பண்டு யானும் உன்வாழ்வைப்
பாரில் அடைந்தேன், நீயுமெனக்(கு)

அண்டும் இந்த வாழ்வைஇனி
அடைவாய் உண்மை" என்றதடா.'

இந்தப் பாட்டுக்களைப் புனைந்தவர் தமிழ் இலக்கியத்திற்கு ஒரு நூதனப் பொலிவை அளிக்க முயற்சி செய்திருக்கிறார் என்று சொல்லத் தேவையில்லை.

## சிறு பாட்டுக்கள்

தேசிகவிநாயகம் பிள்ளையின் சிறு பாட்டுக்களில் சில முதல்தரமானவை. 'பாட்டுக் கொருபுலவன் பாரதியடா' என்ற உணர்ச்சி ததும்பும் பாட்டில், பாரதியின் கவிதையின் பெருமைக்கும் வெற்றிக்கும், ஒரு கவிஞனே எய்தக்கூடிய ஆர்வத்துடனும் கற்பனை வளத்துடனும், தொடுத்திருக்கும் பாமாலை ஒன்றை மாத்திரம் பிள்ளையவர்கள் செய்திருந்தாலும் அவருடைய கவிதை - அனல் விளங்கும். பாரதியின் கவிதா சிருஷ்டிக்கு, இந்தப் பாட்டு கவிதையில் ஆக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சி போலவே இருக்கிறது. படிப்பும் பட்டணவாசமும் இல்லாத ஒரு பட்டிக்காட்டான் வாயில் இந்தப் புகழுரையைப் போட்டிருப்பதற்கு அர்த்தம் இல்லாமல் இல்லை.

'கிளி', 'மலர்கள்', 'குழந்தை', 'ஆறு' முதலியவை சிறந்த நயமுடையவை. 'ஆறு' ஆங்கிலக் கவி 'குட்ரிச்' என்பவரின் அதி அற்புதமான ஒரு பாட்டின் பாவத்தையும் கருத்தையும் பின்பற்றி இருக்கிறது. ஒரு நதி, பேசும் திறமை பெற்று, தன் வாழ்க்கையின் சலிப்பு இல்லாத நடையையும், உலகத்திற்கு உயிரும், உணவும், பசுமையும் கொடுக்கும் பாக்கியத்தை இறைவன் தனக்கு அளித்திருப்பதில் கர்வம் கொண்ட பான்மையையும், மனிதனை ஏளனம் செய்வது போல் தோன்றும்படியாகச் சொல்லும் இந்தப் பாட்டு கற்றோர்க்கு இன்பம் தரவல்லது.

'கல்லும் மலையும் குதித்துவந்தேன் — பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்
எல்லை விரிந்த சமவெளி — எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.'

'அல்லும் பகலும் அலைந்து வந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்
நில்லும் எனக்கினி நேரமில்லை — இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும்அம்மா.'

கவிதையை ரஸிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் பாடல்களை மாணிக்கங்களாக மதிப்பார்கள்; பாட்டும் நடையும் ஓசையும் ஆற்று நீர் பாய்வது போல் இருப்பது புலப்படும்.

'மலரும் மாலையும்' என்ற தொகுதியில் 'சமூகம்' என்ற தலைப்பில் காணப்படும் பாட்டுக்கள் நன்றாயிருந்த போதிலும், அவை அரசியல், சமூக, சீர்திருத்தப் பிரசாரத்திற்காகவே எழுதப்பட்டு, அது காரணம்பற்றி இலக்கியச் சுவையிலும் கவிதைச் சுவையிலும் கொஞ்சம் குறைவுற்றிருக்கின்றன. ஒரு நல்ல கவிக்குரிய குணமும், நயமும், இன்பத்தை உண்டாக்கும் சக்தியும், செய்யுளின் கட்டும் தேசிகவிநாயகம் பிள்ளையின் பாடல்களில் விளங்குகின்றன. அளவில், ஒரு பெரிய கவி என்பதற்கு அவசியமான சிருஷ்டியை இன்னும் செய்து இவர் அந்த ஸ்தானத்தை அடைவார் என்று நம்புகிறோம்.

## 5. பாரதிதாசன்

செம்மையான கட்டும் (Form), நடையும், இசைச் சுவையும், தமிழ்ப் பண்பும் உடைய கவிதையைப் புனைவதில் தேசிகவிநாயகம் பிள்ளை பாரதிதாசனைவிடச் சிறந்தவர். ஆனால்



'பாரதிதாசன்'

கனக சுப்புரத்தினம்

வெறிகொண்ட மன எழுச்சியைச் சித்திரிப்பதிலும், வார்த்தைகளைக் கொட்டும் ஆவேசத்திலும், வாழ்க்கையைச் சார்ந்த பல அம்சங்களையும் லட்சியங்களையும் கவிதைப் பொருளாக அமைத்துக்கொள்வதிலும், கருத்து வன்மையிலும், அனல் தன்மைபெற்ற தற்காலச் சுவையிலும், பாரதிதாசன் பிள்ளையவர்களைவிட அதிகத் திறம் படைத்தவர் என்று தோன்றுகிறது. இப்படிச் சொல்வதினால் எந்தக் கொள்கைகளை — அவை அறிவு இயக்கம், சுயமரியாதை இயக்கம், எதைச் சார்ந்திருந்தாலும் சரி — பாரதிதாசன், தம் பாட்டுக்களில் போற்றி நம் நாட்டு மக்களுக்கு லட்சியங்களாக இருக்க வேண்டுமென்று கொண்டாடுகிறாரோ, அவை எல்லாம் சிறந்தவை, ஒப்புக்கொள்ளத் தக்கவை என்றல்ல. இந்த நூலில் பாரதிதாசனை ஒரு தற்காலத் தமிழ்க் கவி என்ற முறையில் தான் நாம் கவனிக்க வேண்டும்.

## சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

பாரதிதாசன் அல்லது கனக - சுப்புரத்தினம் புதுச்சேரியைச் சேர்ந்தவர்; தமிழ் ஆசிரியராய் இருந்தவர். பாரதி அந்த ஊரில் இருக்க நேர்ந்தபோது, அவருடன் நெருங்கிப் பழகி, கவிதை புனையும் ஆற்றல் பெற்று அவருடைய நன்மதிப்பையும் பெற்றிருந்ததாக, பாரதிதாசன் கவிதைகளடங்கிய நூலின் முகவுரை கூறுகிறது. கவி, தமக்குப் 'பாரதிதாசன்' என்ற புனைபெயர் கொடுத்துக் கொண்டதிலிருந்து அவருக்குப் பாரதி மீதுள்ள உணர்ச்சி வெளியாகிறது. பாரதிதாசன் 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்ற ஒரு பாட்டைக் காவிய பாவத்தில் எழுதித் தம்முடைய கொள்கைகளை விளக்குகிறார். இது வேகத்துடன் எழுதப்பட்டிருக்கும் ஒரு கற்பனைச் சித்திரம்; பாரதிதாசனின் கவிதா சக்தியின் ஆவேசத்திற்கும் குணங்

களுக்கும் இந்தப் பாட்டு நல்ல உதாரணம். குப்பன் - ஒரு தமிழ் வாலிபன் - சஞ்சீவி பர்வதம் என்ற பெயருடைய ஒரு மலையில், தன் காதலி வஞ்சியை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான். வஞ்சி வருகிறாள். குப்பன் அவளைத் தழுவச் சென்றான். வஞ்சி அவனைத் தடுத்து, மலை மீதேறி இரண்டு மூலிகைகளை முதலில் கொண்டுவர வேண்டுமென்று தீர்மானமாய்ச் சொல்லிவிடவே, குப்பன் ஓடோடியும் போய் மூலிகைகளைக் கொண்டுவருகிறான். ஒன்றை அவர்கள் தின்கிறார்கள்; மற்றவர்கள் பேசுவதைக் கேட்கும் சக்தி பெற்றார்கள். வஞ்சி, ஆங்கிலேயன் ஒருவன் இந்தியர்களின் நிலைமையைப் பற்றிப் பேசினதைக் கேட்டாள். நமது நாட்டைப் பற்றிச் சிந்தனை கொண்டாள். மூலிகையைக் கொண்டுவந்த சந்தோஷத்தில் குப்பன் அவளை முத்தமிடப் போகும்போது, அங்கு ஆரவாரத்துடன் எழுந்த ஒரு சப்தம் அவனைத் திடுக்கிடச் செய்தது. ஒரு பாகவதர், ராமாயணக் கதையில் அநுமார் சஞ்சீவி பர்வதத்தைக் கொண்டுபோகும் கட்டத்தைப் படித்துப் பிரசங்கம் செய்துகொண்டிருந்த சப்தம் அது. குப்பன், தான் நின்றுகொண்டிருக்கும் சஞ்சீவி பர்வதத்திற்குத்தான் ஆபத்து வந்துவிட்டதென்று வருத்தமுற்று நடுநடுங்கினான். வஞ்சி அவனது மூடத்தனத்தைப் பரிகாசம் செய்து, ராமாயணக் கதையில்தான் பர்வதம் எடுக்கப்பட்டதே யொழிய, அவர்கள் வாழ்க்கையைப் பாதிப்பதற்கு ஒன்றும் நேரவில்லை என்று அவனுக்கு நிரூபணம் செய்தாள். குப்பனுக்கும் ஞானோதயமாயிற்று. இதுதான் கவியின் கற்பனையின் சுருக்கம். பாட்டு, மொத்தத்தில், சக்தியுடன் எழுதப்பட்டிருக்கிறது; ஆனால், கவிதை செம்மையான கட்டுடனும் ஓசை வளத்துடனும் நடையழகுடனுமில்லை; இவைகளை ஆசிரியர் வேகத்திற்கும், ஆவேசத்திற்கும் அர்ப்பணம் செய்துவிட்டார்

என்று சொல்லலாம். கவிதையில், நல்ல இலக்கியச் சுவையுடைய வார்த்தைகள், சாதாரண வார்த்தைகள், கொச்சை வார்த்தைகள், எல்லாம் தட்டுத் தடையின்றிச் சேர்ந்து கலந்து ஒரு சக்தியைப் பெறுகின்றன. கவி தம் லட்சியங்களையும், நூதனக் கருத்துக்களையும் பிரசாரம் செய்யவேண்டுமென்று ஆவேசத்துடன் இருப்பதால், அவை ஆணித்தரமாயும், வாசிப்போர் மனத்தில் படும்படியாயும், திட்பமாயும் வரையப்பட் டிருக்கின்றன. கவிதையின் அழகை நோக்கி, தெளிவு கைவிடப்படவில்லை. இது காரணம் பற்றியே, பாரதிதாசன் கவிதையில் நடையும், பாவமும் சில இடங்களில் வசனப் பான்மையைப் பெற்றுவிடுகின்றன.

ஓர் ஆங்கிலேயன், மற்றொருவனிடம், நம் நாட்டைப் பற்றிச் சொல்வதாகக் காணப்படும் பாகம் ரஸமாயுள்ளது :

'ஓ! என் சகோதரரே! ஒன்றுக்கும் அஞ்சாதீர்!
நாவலந் தீவு நமைவிட்டுப் போகாது ;
வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்கள்என்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்;
ஆகையால் எல்லாரும் அங்கே தனித்தனிதான்.
ஏகமன தாகிஅவர் நம்மை எதிர்ப்பதெங்கே?
பேதம் வளர்க்கப் பெரும் பெரும்பு ராணங்கள்!
சாதிச்சண் டைவளர்க்கத் தக்கஇதி காசங்கள்!
கட்டிச் சமூகத்தின் கண்ணவித்துத் தாமுண்ணக்
கொட்டி அளக்கும் குருக்கள் கணக்கற்றார்.
தேன்சுரக்கப் பேசிஇந்து தேசத்தைத் தின்னுதற்கு
வான்சுரரை விட்டுவந்த பூசுரரும் வாழ்கின்றார்.
இந்த உளச்சேற்றை, ஏறாத ஆழத்தை,
எந்தவிதம் நீங்கி நமைஎதிர்ப்பார்? இன்னமும்,
சிந்தனா சக்தி சிறிதுமின்றி மக்களுக்குத்

தம்தோள் உழைப்பிலே நம்பிக்கை தானுமின்றி
ஊறும் பகுத்தறிவை இல்லா தொழித்துவிட்டுச்
சாறற்ற சக்கையாய்ச் சத்துடம்பைக் குன்றவைத் [துப்
பொற்புள்ள மாந்தர்களைக் கல்லாக் கியேஅந்தக்
கற்கள் கடவுள்களாய்க் காணப் படும்அங்கே.
இந்த நிலையிற் சுதந்தரப் போர்எங்கே?
கொந்தளிப்பில் நல்லதொரு கொள்கை முளைப்ப தெங்கே?
"தேகம் அழிந்துவிடும்; சுற்றத்தார் செத்திடுவார்;
போகங்கள் வேண்டாம்; பொருள் வேண்டாம், மற்றவிதம்
பாழுலகம் பொய்யே; பரமபதம் போ" என்னும்
தாழ்வகற்ற எண்ணுங்கால் சாக்குருவி வேதாந்தம்.
சாதிப் பிரிவு சமயப் பிரிவுகளும்,
நீதிப் பிழைகள் நியமப் பிழைகளும்,
மூடப் பழக்கங்கள் எல்லாம் முயற்சிசெய்தே
ஓடச்செய்தால் நமையும் ஓடச்செய்வார் என்பேன்.'

இறுதியில், ராமாயணம் கேட்டுக்கொண்டிருக்கும் கூட்டத்தைக் குப்பனும் அவன் காதலியும் குருவுமாகிய வஞ்சியும் பார்த்ததையும், அப்போது அவர்களுக்குள் நடந்த சம்பாஷணையையும் நகைச் சுவையுடனும் வாக்கு வன்மையுடனும் கவி வருணித்திருப்பது கவனிக்கற் பாலது:

'மாளிகை யினுள்ளே மனிதக் கூட்டத்தையும்,
ஆளிவாய்ப் பாகவதன் அங்கு நடுவிலே
உட்கார்ந் திருப்பதையும், ஊர்மக்கள் செல்வதை [யும்,
பட்டைநா மக்காரப் பாகவதன் ரூபாயைத்

தட்டிப்பார்க் கின்றதையும், சந்தோஷம் கொள்வ
[தையும்
கண்டார்கள்; கண்டு கடகடவென் றேசிரித்தார்.
வண்டு விழியுடைய வஞ்சி யுரைக்கின்ருள்:
"வானளவும் அங்கங்கள், வானரர்கள், ராமர்கள்,
ஆனது செய்யும் அநுமார்கள், சாம்பவந்தர்,
ஒன்றல்ல; ஆயிரம் நூல்கள் உரைக்கட்டும்.
விசுவரூ பப்பெருமை, மேலேறும் வன்மைகள்,
உஸ்என்ற சத்தங்கள், அஸ்என்ற சத்தங்கள்,
எவ்வளவோ நூலில் எழுதிக் கிடக்கட்டும்.
செவ்வைக் கிருபை செழுங்கருணை அஞ்சலிக்கை
முத்தி முழுச் சுவர்க்கம் முற்றும் உரைக்கட்டும்.
இத்தனையும் சேரட்டும் என்ன பயனுண்டாம்?
உள்ள பகுத்தறிவுக் கொவ்வாத ஏடுகளால்
எள்ளை அசைக்க இயலாது. மானிடர்கள்
ஆக்குவதை ஆகா தழிக்குமோ? போக்குவதைத்
தேக்குமோ? சித்தம் சலியாத் திறன் வேண்டும்.
மக்கள் உழைப்பில் மலையாத நம்பிக்கை
எக்களிக்க வேண்டும் இதயத்தில்! ஈதன்றி
நல்லறிவை நாளும் உயர்த்தி உயர்த்தியே
புல்லறிவைப் போக்கிப் புது நிலைதேடல் வேண்டும்.
மக்கள் உழைக்காமுன் மேலிருந்து வந்திடுமோ?
எக்கா ரணத்தாலும் இன்மையிலே உண்மை
யுண்டோ?" '

' "ஏஏஏ நான் இன்றைக் கேளனத்துக் காளானேன்
நீயேன் இதையெல்லாம் நிச்சயமாய்ச் சொல்ல
ராமா யணமென்ற நலிவு தருங்கதை [வில்லை?
பூமியிலி ருப்பதைஇப் போதே அறிகின்றேன்.

நம்பத் தகாதவெலாம் நம்பவைத்துத் தாங்கள்நலம்
சம்பா திக்கின்ற சரித்திரக் காரர்களால்
நாடு நலிகுவதை நான் இன்று கண்டுணர்ந்தேன்.
தோடு புனைந்த சுடர்க்கொடியே நன்றுசொன்னாய் !
நல்ல இமயம், நலங்கொழிக்கும் கங்கைநதி,
வெல்லத் தமிழ்நாட்டின் மேன்மைப் பொதியமலை,
செந்நெல் வயல்கள், செழுங்கரும்புத் தோட்டங்கள்,
தின்னக் கனிகள், தெவிட்டாப் பயன்மரங்கள்,
இன்பம் செறிந்திருக்கும் இப்பெரிய தேசத்தில்
முப்பத்து முக்கோடி மாந்தர்கள் மொய்த்தென்ன ?
செப்பும் இயற்கை வளங்கள் செறிந்தென்ன ?
மூடப் பழக்கம், முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவ தென்றோ ? உயர்வதென்றோ ? நானறியேன்.''

## பிற பாட்டுக்கள்

'பில்கணீயம்' என்ற வடமொழி நூலைத் தழுவி எழுதப்பட்டிருக்கும் பாட்டும், 'வீரத் தாய்' என்ற நாடகமும், நயங்களுடன் இருப்பதோடுகூட, பாரதிதாசன் கவிதையின் பொதுவான குணங்களையும் நன்றாய்க் காட்டுகின்றன. இவருடைய சிறு பாட்டுக்களில் சில நல்ல கவர்ச்சியைப் பெற்றிருக்கின்றன; அவைகளில் கற்பனை அழகும் ஓசை இன்பமும் காணப்படுகின்றன; கருத்துப் பான்மைக்கும் லட்சியப் பொலிவுக்கும் பிரதானம் இருக்கிறதே யொழிய, வெறும் இலக்கியச் சுவைக்கும், புலவர்கள் பரம்பரை கையாண்டிருக்கும் எட்டுக் கற்பனைக்கும், இலக்கில்லாத உணர்ச்சிக்கும் முக்கியம் இல்லை. இந்த அம்சம் பாரதிதாசன் கவிதைக்குள்ள கவனிக்கத்தக்க குணம். அவருடைய காதல் பாட்டுக்களில் சில, கனிந்த உணர்ச்சிச் சித்திரங்கள். 'மாங்

தோப்பில் மணம்' இந்த இனத்தைச் சேர்ந்தது. ஆனல், நல்ல ஜாதியைச் சேர்ந்த வைரம், நீலம் முதலிய ரத்னங்களில் வருண மாசுக்கள் ஏற்படுவன போல், அநேக பாட்டுக்களின் சுவையையும், கவிதை எழிலையும் பிரசார ஆவேசம் குறைத்து மங்க வைத்திருக்கிறது. உலகம் தோன்றின நாள்முதல், மகாகவிகளும் வீரர்களும் போற்றிவந்த புனிதமான காதல் தத்துவத்தின் அகண்டமான தன்மையையும், தெய்விக மாட்சியையும், இந்தப் புரட்சிக் கவியின் பாட்டுக்களில் காண முடியவில்லை. சாதாரணமாக வாலிபர்களும், யுவதிகளும், ஒருவரை ஒருவர் கண்டு, நேசித்து, மோகங் கொள்ளும் உணர்ச்சி எல்லாம், கலையும் ஒழுக்கமும் சமைந்திராத மனித இயற்கையைச் சார்ந்திருந்தபோதிலும், காதல் இல்லை. காதலுக்காக உயிரையும் தியாகம் செய்த ஆண்களும் பெண்களும் காவியங்களில் உண்டு; வாழ்க்கையிலுங் கூடச் சிலரைக் காணலாம். ஆனல், சமுதாயத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பிறக்கும் நேச உணர்ச்சி எல்லாம் காதலைச் சார்ந்ததென்றும், அதற்குப் பெற்றோர்கள் முதலியவர்களிடமிருந்து தடை ஏதாவது ஏற்பட்டால், அது கொடுமை என்றும், அநியாயக் கட்டுப்பாடு என்றும் சித்திரிப்பது, கலைப் பான்மைக்கு ஒவ்வாததுமன்றி, மக்கள் கூட்டங்களின் மானஸ தத்துவங்களின் நுட்பங்களைக் கவனிக்காத அர்த்தமற்ற பிரசாரமாகும்.

பலவிதமான தற்கால விஷயங்களைப் பற்றிப் பாடப்பட்டிருக்கும் சில விடு பாட்டுக்கள் சுவையுடன் இருக்கின்றன. 'பத்திரிகை' என்னும் மகுடத்தில் காணப்படும் இந்தப் பாட்டுக்கள் நன்ருய் இருக்கின்றன :

'காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்

பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்!
ஊரினை, நாட்டை, இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே!

'அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள்எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப் பெண்ணே, உன்
நலம் காணார் ஞாலம் காணார்.'

## பாரதியும் பாரதிதாசனும்

பாரதியைப் புதுமைக் கவி என்று சொல்வதுண்டு. உண்மையில் அவர் புதுமைக் கவி மாத்திரமல்ல; ஒரு தற்காலக் கவி; தேசியக் கவி; புரட்சிக் கவியும் கூடத்தான். கவிதையை அமைக்கும் முறைகளிலேயே அவருடைய புரட்சித்தன்மை வெளியாகிறது; புலவர்கள் கையாண்ட பழைய முறைகளை உதறித் தள்ளினார். தமது பாட்டுக்களிலும் நூல்களிலும் அவர் போற்றி யிருக்கும் லட்சியங்களும் விரவியிருக்கும் கருத்துக்களும் புரட்சித் தன்மையன. 'தனி யொரு மனிதனுக்கு உணவிலை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்', 'ஆத்திரங் கொண்டவர்க்கே - சாத்திர முண்டோடீ', 'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று பாடினவர்

புரட்சி ஆவேசம் பெற்றவர் தான். பாரதிதாசனைப் பாரதியின் சிஷ்யன், கவி பரம்பரை என்று கருதினால், சில அம்சங் களில் அவர் குருவுக்கு மிஞ்சிய சிஷ்யனாகவே தோன்று கிறார்; புதுமைக்கும் புதுமையாகவே விளங்குகிறார். வெறும் புதுமையில் வெளிச்சம் உண்டா? தற்கால அறி வால் சமைந்த மனப்பான்மை இந் நாட்டு மக்களிடம் தோன்றி, மூடப் பழக்க வழக்கங்கள் எல்லாம் தொலைந்து, சமூகத்திலுள்ள பலவித அநீதிகளும் காரணமற்ற கட்டுப் பாடுகளும் அழிய வேண்டுமென்றும், ஆண்களும் பெண் களும் சமமானவர்களென்றும், எல்லோரும் கல்வி ஒளி பெற்று, நவ நாகரிகத்தின் நன்மைகளை அடைந்து, வாழ்க் கையின் இன்பம் நுகர்ந்து, நமது நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டு ஒரு புது வாழ்வை எய்த வேண்டுமென்றும் பாரதி பாடி யிருந்தபோதிலும், அவர் பாரத நாட்டின் பெருமை யையும், கலைகளையும், வேதங்களையும், உபநிடதங்களையும், காவியங்களையும், இதிகாசங்களையும் இகழ்ந்ததில்லை. பாரதி தாசனோ இந்த அம்சத்தில் அவருக்கு மாறுபட்டிருக்கிறார். சமுதாயத்திலுள்ள அநீதிகளை நீக்கி, சுதந்திரம், சமத் துவம், சகோதரத்துவம் முதலிய கொள்கைகளை நிலை நிறுத்துவதற்கான முயற்சி வேண்டும். ஆனால், சமுதாயத் தின் அடிப்படையான தத்துவங்களைத் தகர்த்தெறிந்துவிட வேண்டுமென்றும், கட்டுப்பாடுகள் எல்லாவற்றையும் தொலைத்துவிட வேண்டும் என்றும் அவாவும் பாரதிதாச னின் அதீதப் புரட்சித்தன்மை, அவர் போற்றும் பகுத் தறிவுக்கு ஒவ்வாது என்று சிந்தனை செய்பவர்களுக்குப் புலப்படும். உலகத்தில் நடக்கும் கொடுமைகளைப் பார்த் துக் கடவுளைக்கூட சிலர் நம்பாமல் இருக்கலாம். ஆனால், பயிற்சி பெற்ற மனித இயற்கைக்குக் கலைகளைப் போற்றாம லிருக்க முடியாது. கலைகள் மனிதனின் சக்திகளின் எல்லை

யைக் காட்டும். வளம் பெற்ற இயற்கையும், மனிதனின் பகுத்தறிவால் எட்டிக்கூடப் பார்க்க முடியாத ஆர்வத்தாலும் சக்திகளாலும் தோன்றின கலைகளும், மக்களுக்கு உலப் பிலாத இன்பத்தைக் கொடுத்துக்கொண் டிருக்கின்றன. வால்மீகி, கம்பன் இவர்களின் தெய்விகக் கவிதைக்குப் பொருளாயிருந்த ராமாயணத்தைப் பற்றி,

‘ ராமாயணம் என்ற நலிவுதரும் கதை
பூமியிலிருப்பதை இப்போதே அறிகின்றேன் ’

என்று சொல்லப்பட்டிருப்பது, குப்பனின் ஞானோதயம் தானே என்று நகைத்துவிட்டிருப்பதைவிட வேறு என்ன செய்ய முடியும்? பாரதிதாசன் கவிதையில் பாரதியின் ஆவேசம் பூராவும் இருக்கிறது; அவருடைய கலைச் செறி வும், பாட்டின் கட்டும், மெருகும், உயர்ந்த கற்பனை நயமும், இன்னிசையும் குறைவாகவே காணப்படுகின்றன. பாரதி தாசன் கவிதை காட்டாறுகளின் போக்குப் போலவே இருக் கிறது. அவர் தமது பெயருக் கொப்ப, உண்மையாகவே பாரதிதாசனாக விளங்கி, தற்காலத் தமிழ் இலக்கியத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்று, அவருடைய பாட்டுக்களைப் படித்துக் களித்தவர்கள் விரும்புவார்கள்.

## 6. செய்யுட் புலவர்

திரு. நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை ஜனங்களால் போற் றப்படும் தேசீயப் பாட்டுக்கள் சில எழுதி யிருக்கிறார். சுவாமி சுத்தானந்த பாரதியார் செய்யுள் நடையில் நூல்களை ஆக்கிக்கொண் டிருக்கிறார். சில அம்சங்களில் புது முறை யில் எழுதும் இவர்களுடைய கவிதா சக்தியை வருங் காலமே காட்ட வேண்டும்.

பாட்டுக்களும் காவியங்களும் வெகு காலமாக யாப்பு முறைகளை அநுசரித்தே புனையப்பட்டிருந்த போதிலும், கவிதைக்கு இந்த அம்சம் இன்றியமையாததா என்பதைப் பற்றி மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருந்துவருகின்றன. தத்துவ முறையில், கவிதைக்குச் செய்யுள் நடை அல்லது யாப்பு அவசியமில்லை என்றுதான் பெரும்பான்மையான மேனாட்டுப் புலவர்கள் கருதுகிறார்கள். இருந்தபோதிலும், செய்யுள் நடையிலுள்ள நூல்கள் எல்லாம், கவிதா பாவத்தை, அந்த நடையின் காரணத்தாலேயே அடைகின்றன என்ற கருத்து நிலவிவந்திருக்கிறது. செய்யுள் - புலமை வேறு, கவிதைப் புலமை வேறு என்று நாம் உணர வேண்டும்.

தமிழைக் கற்றுத் தேர்ந்த சில கல்விமான்கள் செய்யுள் நடையில் இலக்கியங்களைச் செய்திருக்கிறார்கள். இவர்களில் காலஞ்சென்ற மாயூரம் வேதநாயகம் பிள்ளை, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், திருவாளர்கள் வெ. ப. சுப்பிரமணிய முதலியார், மஹாவித்துவான் ரா. ராகவையங்கார் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் நால்வரும் அநேக ஆண்டுகளாகத் தமிழ் வளர்ச்சிக்குப் பல துறைகளிலும் அரிய சேவை செய்து தமிழரின் நன்மதிப்பைப் பெற்றவர்கள். ஆனால், இவர்களைத் தற்காலத் தமிழ்க் கவிகளாகக் கருதி ஆராய்ச்சி செய்வது இந்த நூலின் வரம்புக்குட்பட்டதில்லை. வேதநாயகம் பிள்ளை 'நீதி நூல்', 'சமரஸக் கீர்த்தனை' முதலிய செய்யுள் நூல்களை எழுதினார். சூரியநாராயண சாஸ்திரியார் 'பாவலர் விருந்து', 'தனிப்பாசுரத் தொகை' என்ற இரண்டு செய்யுள் நூல்களை இயற்றியிருக்கிறார். சிறந்த தமிழ்ப் புலவரான டாக்டர் போப் இந்த நூல்களின் நயங்களை வியந்து போற்றியிருக்கிறார். சாஸ்திரியார் செய்யுள் நடையில் 'மான விஜயம்' என்ற

நாடகத்தையும் ஆக்கினர். வெ. ப. சுப்பிரமணிய முதலியார் 'சுவர்க்க நீக்கம்' என்ற விருத்தப்பா நூலில் ஆங்கிலப் புலவன் மில்டனின் பெரிய காவியத்தின் ஒரு பாகத்தை மொழி பெயர்த்திருக்கிறார். இதன் நயங்களை டாக்டர் போப்பும், காலஞ்சென்ற சுந்தரம் பிள்ளையும் புகழ்ந்திருக்கிறார்கள். சுப்பிரமணிய முதலியார் 'கோம்பி விருத்தம்', 'அகலிகை வெண்பா' என்ற செய்யுள் நூல்களையும் ஆக்கியிருக்கிறார். 'அகலிகை வெண்பா'வைத் தமிழ் அறிஞர்கள் பலர் புகழ்ந்து மெச்சியிருக்கிறார்கள். கதையில், ஆசிரியர் ரஸம் பெறச் செய்திருக்கும் சில மாறுதல்கள் கவனிக்கற்பாலன. ரா. ராகவையங்கார் செய்திருக்கும் செய்யுள் நூல்களில் 'பாரி காதை' குறிப்பிடத்தக்கது. மேலே குறிப்பிட்ட நூல்கள் எல்லாம் சீரிய கல்விமான்களால் புனையப்பெற்ற செய்யுள் நூல்கள்; நடை, பொருள், கற்பனை யாவும் பழைய முறையைச் சேர்ந்தவை; அவைகளில் உணர்ச்சி ததும்பும் கவிதை அதிகமாயில்லை. எவ்வளவு கல்வியிருந்த போதிலும், கவிதை புனையும் சக்தி அதிலிருந்து வராது; அது அருளாகச் சில செல்வர்களுக்குக் கிட்டும்; கவிதை உள்ளம் இயற்கையான படைப்பு. வித்துவான்கள் உழைப்பினலும், பாண்டித்தியத்தின் மகிமையினலும் செய்யுள் நூல்களை ஆக்கிக் கவிகளாகி விடலாம் என்று சொல்வது தவறு.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை

# IV

# தமிழ் இலக்கியம் - வசனம்

## தமிழும் வசன நடையும்

உயர்ந்த இலக்கியங்களை வசன நடையில் அமைக்கும் முறை தமிழ்ப் புலவர்களிடம் இருந்ததில்லையென்று முன்னால் சொல்லப்பட்டிருக்கிறது. இலக்கணங்கள்கூட செய்யுள் நடையில் சூத்திரங்களாகச் செய்யப்பட்டன. உரையாசிரியர்களே, வசன நடையை, அவசியத்தின் நிமித்தம் நேர்மையுடனும் சக்தியுடனும் கையாண்டிருக்கிறார்கள். மதநூல்களின் உரைகளில், தர்க்கரீதியாய்ச் செய்யப்பட்ட வாதங்களை, வசன நடையில் அடுக்கடுக்காகக் காணலாம். பழைய வசனங்கள், சந்திவிகாரங்களின் முழுப் பிரயோகத்தாலும் வேறு காரணங்களாலும் அநேகமாக மிகவும் கடினமாயிருக்கின்றன ; இலேசாய்ப் பொருள் தெளிவாகும் முறையில் இல்லை. பண்டிதர்களல்லாத தற்காலத்தவர்களுக்கு உரைகளுக்கு உரைகள் தேவையாயிருக்கும். வசன நடை ஒரு முக்கியமான இலக்கிய உறுப்பு என்றும், அதை நன்றாய் இயற்றுவதற்கு, அதிக அளவு நுண்ணிய கலை உணர்ச்சியும், கற்பனா மனோபாவமும், ஒலி அழகும், கல்வித் திறனும் அவசியம் என்றும் கூறும் கொள்கைகள் நம் முன்னோர்களிடம் இல்லை. வசனத்தை, பலவித நடைகளிலும், சுவையுடனும், நுட்பமான கலைத் திறத்துடனும் ஆக்கலாம். வாக்கியங்களை அர்த்த புஷ்டியுடனும், சொல்நயத்துடனும், பாகங்களின் அளவும் கோவையும் நேர்மையுடன் அமைக்கப்பட்ட அழகுடனும் எழுதி,

ஒன்றுக்குப் பின்னால் ஒன்றை இயல்பாகக் கருத்துக்கள் வளரும்படி, சுவையுடன் கோப்பது, வசன நடைக்கு இன்றியமையாதது.

தமிழில், உரைகளையும் சமய சம்பந்தமான வாதங்களடங்கிய நூல்களையும் தவிர்த்துப் பார்த்தால், வீரமாமுனிவர் எழுதிய நகைச்சுவை ததும்பும் பரமார்த்த குரு கதைதான் முதல் வசன நூலாய் இருக்கலாமென்று கருதப்படுகிறது. இதே காலத்தில் இயற்றப்பட்ட ஆனந்தரங்கப் பிள்ளையின் தினசரி வசன நடையில் இருக்கிறது.

## சமீப காலத்திலுள்ள தமிழ் வசனம்

தாண்டவராய முதலியார் எழுதிய பஞ்சதந்திரக் கதைகளும் ஒரு நல்ல வசன நூல். இராமலிங்க சுவாமிகளும் நல்ல வசன நடையில் மனுமுறை கண்ட வாசகம் போன்ற ஓரிரண்டு நூல்களை இயற்றியிருக்கிறார்; அன்றியும் பல கடிதங்களில் வசன நடையை நன்றாய்க் கையாண்டிருக்கிறார். தமிழரின் முன்னேற்றத்திற்கு, வசன நடை அபிவிருத்தி அவசியமென்று சென்ற நூற்றாண்டில் வற்புறுத்தினவர்களில் சிறந்த தமிழ் வித்துவானாயிருந்த ஆறுமுக நாவலரின் பெயர் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது. அவர், சைவ சமய சம்பந்தமான பெரிய புராணம், திருவிளையாடல் புராணம் முதலிய அநேக நூல்களை வசன நடையில் எழுதினார். நாவலரின் வசனம் இலக்கண முறைகளை அனுசரித்து ஒழுங்காக எழுதப்பட்ட நடையை உடையது; பொருளில் தற்காலப் பான்மை ஒன்றும் இல்லாவிட்டாலும் அவருடைய நடையின் எளிமை போற்றத்தக்கது; கடந்த நூற்றாண்டில், மத வேறுபாடுகளால் தோன்றிய வாதாடும் வாசகங்கள் தமிழ் வசன நடையின் வளர்ச்சிக்குச் சாதனமாயிருந்தன.

## வசன நூல்கள்

தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் வசன நடையில் வெளிவந்திருக்கின்றன. ஆனால், அவைகளில் மிகச் சில நூல்களிலேதான் நல்ல இலக்கியத் தன்மையைக் காணலாம். பொருள் விசேஷத்தாலும், நடையின் செம்மையாலும் எல்லோருடைய மரியாதையையும் கவனத்தையும் கவர்ந்த நூல்கள் அதிகமில்லை. சரித்திரங்கள், இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், நவீனக் கதைகள், வியாசங்கள், விஞ்ஞான சாஸ்திர விளக்கங்கள், நுண்கலை ஆராய்ச்சிகள், சமுதாய சாஸ்திர ஆராய்ச்சிகள் முதலியவைகளில், பெரிய இலக்கியங்கள் என்றும் நிலைக்கக்கூடிய பெருமையுடன் வசன நடையில் தோன்றலாம். ஆங்கிலத்தில் கிப்பன் (Gibbon) என்னும் சரித்திராசிரியன் எழுதிய 'ரோமாபுரி ஏகாதிபத்தியத்தின் க்ஷீணமும் வீழ்ச்சியும்' என்ற நூலைப் போலவும், பிராட்லி (Bradley) என்பவர் ஷேக்ஸ்பியரின் சோகரஸம் பொருந்திய நாடகங்களைப் பற்றி எழுதியிருக்கும் ஆராய்ச்சியைப் போலவும், அலங்கார வசன நடை சிருஷ்டியிலேயே ஆர்வமும் மோகமும் கொண்ட ரஸ்கின் (Ruskin) எழுதியிருக்கும் வசனத்தைப் போலவும், ராபர்ட் பால் (Robert Ball) என்பவர் 'வானங்களின் கதை' என்று ரஸம் ததும்ப ஆக்கியிருக்கும் நூலைப் போலவும், பெர்னார்ட் ஷா, எச். ஜி. வெல்ஸ், பெர்டிரான்டு ரஸ்ஸல் (Bernard Shaw, H. G. Wells, Bertrand Russell) இவர்கள் எழுதிய சமுதாய சாஸ்திர ஆராய்ச்சி நூல்களைப் போலவும் வசன காவியங்கள் தமிழில் என்று உண்டாக்கப்படுமோ தெரியவில்லை. தமிழரின் அறிவும், கலைகளும், சிருஷ்டி சக்தியும், இப்போதிருப்பதைவிட அநேக மடங்கு அதிகமானாலொழிய நமது ஆசை வீண் கனவாகும். தமிழ் மொழிக்கு இப்போது கவிஞர்களைவிட,

வசனக் கலைஞர்களே பெரும்பாலும் தேவை ; ஆனந்தத்தைக் கொடுக்கும் நயம் பெற்ற கவிதை தமிழில் வேண்டிய அளவு இருக்கிறது.

தமிழிலுள்ள தற்கால வசன நூல்களை, இலக்கியத் தன்மையுள்ள வசனங்கள், ஆராய்ச்சி நூல்கள், நாவல்களும் சிறு கதைகளும், நாடகங்கள் என்று நான்கு பாகங்களாகப் பிரித்துக் கவனிக்கலாம். நல்ல இலக்கியத் தன்மையைப் பெற்ற வசனகர்த்தர்களா யிருந்து மறைந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் வேதநாயகம் பிள்ளை, வீராசாமி செட்டியார், பி. ஆர். ராஜமையர், கவி சுப்பிரமணிய பாரதி, வ. வெ. சு. ஐயர் ஆகிய ஐவரே.

## வேதநாயகம் பிள்ளை

மாயூரம் வேதநாயகம் பிள்ளை ஒரு சிறந்த தமிழ்ப் புலவர். அவர் 1826-ம் வருஷத்தில் திருச்சி ஜில்லாவில் ஒரு கிராமத்தில் பிறந்தவர். அவர் தமிழும் ஆங்கிலமும் கற்று, சர்க்கார் உத்தியோகத்தில் நீதி இலாகாவில் மொழி பெயர்ப்பாளராகவும் பின்னுல் முனிசீப்பாகவும் இருந்து, பதவியில் இருந்தபோதும், பின்னுல் பென்ஷன் பெற்றுக் கொண்டிருந்தபோதும், தமிழ் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டார். மகா வித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை, திருவாவடுதுறை பண்டார சந்நிதியாயிருந்து நல்ல தமிழ்ப் புலமை பெற்றிருந்த சுப்பிரமணிய தேசிகர், தாமோதரம் பிள்ளை முதலிய மகா பண்டிதர்களால் பெரிதும் போற்றப்பட்ட தமிழ்ப் புலமையைப் பெற்றவர் வேதநாயகம் பிள்ளை. அவருடைய நூல்களில் ஆங்கிலப் பயிற்சியின் பலனும், தற்காலத்தின் பண்பும் தெளிவாய்க் காணப்படுகின்றன. 1876-ம் வருஷத்தில் வெளிவந்த, அவருடைய பிரதாப முதலியார் சரித்திரத்துடன்தான், தற்காலத் தமிழில் இலக்

கியம் பிறக்கிறது. அதற்கு முன்னாலே அவர் சில செய்யுள் நூல்களைச் செய்திருந்தபோதிலும், அவருக்குத் தமிழ் இலக்கியத்தில் ஒரு வசனகர்த்தர் என்ற ஸ்தானமே நிலைத்திருக்கும்.

## பிரதாப முதலியார் சரித்திரம் தற்கால நாவலா ?

பிரதாப முதலியார் சரித்திரத்தைத் தமிழில் தோன்றிய முதல் நாவல் என்று சொல்வதுண்டு. இந்த நூல் சாதாரணமான ஒரு நாவல் மாத்திரம் அல்ல; நாவல் நூல்களைவிட அதிக விரிவான நோக்கத்தை உடைய உன்னதமான ஒரு வசன காவியமாயும் இருக்கிறது. அதை நாவல் இனத்தில் சேர்க்கக்கூடாது. ஏனென்றால், நாவல் என்ற முறையில் அதை நுட்பமாய்க் கவனித்தால், சில குறைகள் எளிதில் தென்படும். கதை வளர்வதில் இயற்கையான தன்மையாவது, வேகமாவது, போதிய சுவாரஸ்யமாவது, நுண்ணிய கலைப்பாங்காவது இல்லை: ஒரு நாவலில் இருக்கக்கூடாத உப கதைகளும் விடு கதைகளும் விஸ்தாரமாக வரையப்பட்டு மலிந்து கிடக்கின்றன; இவை நூலுக்கு ஒரு புராணத் தன்மையைக்கூட அளிக்கின்றன என்று சொல்லலாம். பாத்திரங்கள் உயிருடனும் உணர்ச்சியுடனும் இல்லை. கதைப் போக்கில் கனிந்த நாடகத் தன்மை இல்லை. தெய்விகமாய் நேரும் சம்பவங்கள் அடிக்கடி கதாநாயகன் கதாநாயகி இவர்களின் இடர்களைத் தீர்த்து வாசிப்போர்களுக்குச் சற்று மன நிம்மதியைக் கொடுத்தபோதிலும், அவை நாவல் கலைக்கு ஒவ்வாத முறையில் மிகவும் அதிகமாய் இருக்கின்றன. தேவராஜப் பிள்ளை, பிரதாப முதலியார் வீட்டில், காணாமற்போன தன் மகன் கனக சபையைக் கண்டுபிடிப்பதும், சம்பந்தி முதலியாருக்குத் தம் மகள் ஞானாம்பாளைத் தாசில்தாரின் ஆட்கள் பலாத்காரமாய்த் தூக்கிச் சென்றதிலிருந்து,

பிரதாப முதலியாரும் ஆண்டிச்சி அம்மாளும் அகஸ்மாத்தாய் மீட்டுவதும், பிரதாப முதலியார் தாசில்தாரைக் கொலை செய்ததாக விசாரணை செய்ய வந்த அதிகாரி, தம் மனைவி ஆண்டிச்சி அம்மாளைக் காண நேருவதும், ஒருவரும் தெரியாமல் ஓடிப் போன பிரதாபனும் ஞானம்பாளும், போன இடத்தில் தற்செயலாய் தேவராஜப் பிள்ளையைக் காணுவதும், யானை மீது வேட்டைக்குச் சென்ற பிரதாபன் விக்கிரமபுரிக்குச் செல்ல நேர்ந்ததும், அவனைத் தேடிச் சென்ற ஞானம்பாள், ஆண் வேஷம் போட்டுக்கொண்டு விக்கிரமபுரிக்குப் போன சமயம், ஒரு யானை அவள் கழுத்தில் மாலையிட்டதின் நிமித்தம், அவ்வூருக்கு எதிர்பாராத முறையில் அரசனாவதும், அங்கே அவர்கள் சந்தித்து வாழ்ந்த ரகசிய வாழ்வும், பின்னால் ஞானம்பாள் வைசூரியால் மரணமடைந்ததாக அவளுடைய பந்துக்கள் வருத்தமுற்றிருக்கும்போது, அவளுக்குப் பின்வந்த விக்கிரமபுரி அரசி அவளைக் கொண்டு வந்து விடுவதும், விக்கிரமாதித்தன் கதை போன்ற பழைய காலக் கதைகள் போல இருக்கின்றனவே யொழிய, தற்கால நாவல்களுக்குப் பொருத்த மில்லாததாயும், நம்பக் கூடாததாயுமுள்ள சம்பவத் தொகுதியாய் இருக்கின்றன. பிரதாப முதலியார் சரித்திரத்தை ஒரு தற்காலத் தமிழ் நாவல் என்ற முறையில் கவனிப்பதற்குப் பதிலாக, எந்தக் குறிப்பிட்ட இலக்கிய இனத்தையும் சேராத ஒரு வசன காவியம் என்று பார்த்தால் அதன் ஏற்றம் விளங்கும்.

## நூலின் நடை

பிரதாப முதலியார் சரித்திரத்தில்தான், தற்காலத் தமிழ் வசன நடை முதலாக உரு எடுத்திருக்கிறது. இந்த நடையில் எவ்வித விறைப்பும் இல்லை. அதில் இலக்கியச் சுவை ததும்புகிறது. வாக்கியங்கள் நல்ல சொற்களால்

தொகுக்கப்பட்டு, திறட்டின்றி, சிக்கல்களின்றி நேராகச் சுவையுடன் கருத்துகளைத் தெளிவுபடுத்திக்கொண்டே வளர்கின்றன ; அவைகளின் கட்டும் அமைப்பும் நேர்த்தியாய் இருக்கின்றன. கடினமான வார்த்தைகள், கொச்சை வார்த்தைகள், உலக வழக்கற்றுப் பண்டை நூல்களிலேயுள்ள பதங்கள் தேடிப் பார்த்தாலும் இல்லை. வேதநாயகம் பிள்ளையின் தமிழ் வசன நடை, இன்றும் மற்றவர்களுக்கு ஒரு மாதிரியாயும் வழி காட்டியாயும் இருக்கிறது. பிரதாப முதலியார் சரித்திரத்தில் உணர்ச்சியும் கவிதைச் சுவையும் மிகுந்த சிகரங்கள் இல்லாவிட்டாலும், வசனம் நயத்தில் ஓர் எல்லைக்குக் குறையாமல் ஆரம்பம் முதல் முடிவு வரையில் தெளிவுடனும், சக்தியுடனும், நல்ல தமிழ்ப் பண்புடனும் இருக்கிறது. வடமொழிப் பதங்களின் பிரயோகத்தில் பொருத்தமும், அழகும், நிதானமும் துலங்குகின்றன. இந்த நூலில் நகைச் சுவை பல இடங்களில் விளங்கி வாசிப்போருக்கு இன்பம் கொடுக்கிறது. ஆங்காங்கே காணப்படும் துண்டு துணுக்குகள் சிரிப்பை உண்டாக்குகின்றன.

## பொருட் செறிவு

வெறும் நடை நயத்தால் மாத்திரம் ஒரு நூல் ஜனங்களின் மனத்தைக் கவர முடியாது. பிரதாப முதலியார் சரித்திரத்தின் பொருட் செறிவு எல்லாராலும் போற்றக்கூடியது. சுமார் எழுபத்தைந்து வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட இந்த நூலில் உள்ள கருத்துகள் எல்லாம், முற்போக்குடையனவாயும், தற்காலப் பான்மை பெற்றனவாயுமிருப்பது வேதநாயகம் பிள்ளையின் தீர்க்கபுத்தியையும் சிந்தனை சக்தியையும் காட்டுகிறது. சமய வேட்கை, அவருடைய புலமைக்குச் சாந்தமயமான ஓர் ஒளியைக் கொடுத்திருக்கிறது. நமது நாட்டின் வாழ்வு மேனாட்டு நாகரிகத்தால் பாதிக்கப்பட்

டிருப்பதையும், அதனால் அநேக மாறுதல்கள் நமது சமுதாயத்தில் நேரக்கூடியதையும் அவர் நன்கு அறிந்திருந்தார். சமுதாய அமைப்பும், பழக்க வழக்கங்களும், நாகரிகப் போக்கும் மாறினபோதிலும், மனிதனின் வாழ்வு சநாதநமான ஒழுக்கத்தையே அடிப்படையாகக் கொள்ளவேண்டுமென்ற லட்சியத்தையே அவர் கைக்கொண்டார். கடவுள் பக்தி, கற்பின் சிறப்பு, ஆண்களுக்கும் - முக்கியமாகப் பெண்களுக்கும் - கல்வியின் அவசியம், ஒழுக்கத்தின் சீலம், நல்ல அரசாட்சியின் லட்சியம், நீதியின் நேர்மை, நியாயவாதிகளின் கடமை, தாய்மொழிப் பற்று முதலிய பல விஷயங்களைப் பற்றி, கதாபாத்திரங்களின் வாயிலாக ஆசிரியர் வெளியிட்டிருக்கும் திண்ணமான கருத்துக்கள், வெறும் பழைய பஞ்சாங்கம் இல்லாமல், செம்மையாயும், பகுத்தறிவுக்கு உகந்தனவாயும், தற்கால மக்களின் மனத்தைக் கவரக் கூடிய முறையிலும் வரையப்பட்டிருக்கின்றன. நியாயவாதிகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் அத்தியாயம் இன்றும் கொஞ்சமேனும் ருசி குறையாதிருப்பதை வாசிப்போர் அறியலாம். தமிழ் நாட்டு நீதிமன்றங்களில், தமிழ் நீதிபதிகள் முன்பு, தமிழ் நியாயவாதிகள் ஆங்கிலத்தில் வாதாடுவதைப் பற்றி (இன்றும் நிலைமையில் மாறுதல் இல்லை) அவர் மனம் நொந்து எழுதியிருப்பது எந்தத் தமிழன் நெஞ்சையும் உருக்கும். இந்தக் கிறிஸ்தவத் தமிழ்ப் புலவர், நமது மக்கள் தாய்மொழியை அசட்டை செய்வதைப் பற்றி உணர்ச்சியுடன் கூறியிருப்பது கவனிக்கற்பாலது:

'இங்கிலீஷ் அரசாட்சியில் வக்கீல்களைப் போலவே மற்ற உத்தியோகஸ்தர்களும், வித்தியார்த்திகளும் சுதேச பாஷைகளை நிகிர்ஷ்டம் செய்கிறார்கள். "ஓண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியைத் துரத்தினது போல" இங்கிலீஷ், பிராஞ்சு முதலிய அந்நிய பாஷைகள் மேலிட்டு, தேச பாஷைகளின் சீரைக் குலைத்துவிட்டன.........................



ஆறுமுக நாவலர்

......எண்ணிறந்த தேவாலயங்களும், பிரமாலயங்களும், அன்ன சத்திரங்களும், நீர்வளமும், நிலவளமும், நாகரிகமும், ஆசார நியமங்களும் நிறைந்த இந்தத் தமிழ் நாடு மற்றைய நாடுகளிலும் விசேஷமென்றும், அப்படியே தமிழ் பாஷையும் சர்வோத்கிருஷ்டமான பாஷையென்றும் சகலரும் அங்கீகரிக்கிறார்கள். அகஸ்தியர் நாவிலே பிறந்து, ஆரியத்தின் மடியிலே வளர்ந்து, ஆந்திரம் முதலிய பாஷைகளின் தோழமை பெற்று, சங்கப் புலவர்கள் நாவிலே சஞ்சரித்து, வித்துவான்களுடைய வாக்கிலே விளையாடி, திராவிட தேசம் முழுவதும் ஏக சக்ராதிபத்யஞ் செலுத்திவந்த தமிழ் அரசியை இப்போது இகழலாமா? நம்மைப் பெற்றதும் தமிழ்; வளர்த்ததும் தமிழ்; நம்மைத் தாலாட்டித் தூங்கவைத்ததும் தமிழ்; நம்முடைய மழலைச் சொல்லால் நமது தாய் தந்தையரைச் சந்தோஷிப்பித்ததும் தமிழ்...........மாதா வயிறு எரிய மகேசுர பூஜை செய்வது போல், சொந்த பாஷைகளைச் சுத்தமாக விட்டு, ராஜபாஷைகளை மட்டும் படிப்பது அநுசிதமல்லவா? அநேகர் தங்கள் சுய பாஷைகளில் தங்களுடைய கையெழுத்துக்களைக் கூடப் பிழையில்லாமல் எழுத அசக்தர்களாய் இருக்கிறார்கள். சிலர், தமிழ்ப் பாஷை தெரியாமலிருப்பது தங்களுக்கு கெளரவமாகவும், அந்த பாஷையை அறிந்திருப்பது தங்களுக்கு அகெளரவமாகவும் எண்ணுகிறார்கள்...........இங்கிலீஷ், பிராஞ்சு முதலிய பாஷைகளைப் போல், தமிழில் வசன காவியங்கள் இல்லாதிருப்பது பெருங் குறை என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். அந்தக் குறையைப் பரிகரிப்பதற்காகத்தான், எல்லாரும் ராஜ பாஷைகளும் தமிழும் கலந்து படிக்க வேண்டுமென்று விரும்புகிறோம். ராஜ பாஷைகளும் சுதேச பாஷைகளும் நன்றாக உணர்ந்தவர்கள் மட்டும் உத்தமமான வசன காவியங்கள் எழுதக்கூடுமேயல்லாது இதரர்கள் எழுதக்கூடுமோ?'

'தமிழுக்கு ஆபத்து' என்று சொல்லிக்கொண்டு சிலர், அந்த மொழிக்குக் கடந்த ஆயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு மேலாக மதிப்பரிய வளத்தையும் புஷ்டியையும் கொடுத்துக் கொண்டிருக்கும் வடமொழி மீதும், இக் காலத்தில் வட

நாட்டில் பேசப்படும் ஹிந்தி மொழி மீதும் துவேஷப் பிர சாரம் செய்யும் போலி மொழிப் பற்று தாண்டவமாடும் இக்காலத்தில் வேதநாயகம் பிள்ளையின் உத்கிருஷ்டமான தமிழ்ப்பற்றைத் தெரிய எவ்வளவு மகிழ்ச்சி எற்படுகிறது! பிரதாப முதலியார் சரித்திரத்தை எழுதி அவர் தமிழ்த் தாய்க்குச் செய்த தொண்டு அரியது. அந்தப் புத்தகத்தின் பதினொன்றாவது பதிப்பு 1940-ம் வருஷம் வெளிவந்ததி லிருந்து அதன் நயங்களைத் தமிழர் நன்றாய் அறிந்திருக்கிறார் கள் என்று துலங்குகிறது.

## வீராசாமி செட்டியார்

அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் சென்ற நூற் றாண்டின் பிற்பகுதியிலிருந்த ஒரு சிறந்த தமிழ்ப் புலவர். அவர் சென்னை இராஜதானிக் கல்லூரியில் தமிழில் ஆசிரிய ராய் இருந்தார். அவர் இயற்றிய விநோத ரஸ மஞ்சரி, நல்ல வசன நடையில் எழுதப் பெற்ற இருபது வியாஸங்களடங்கிய ஓர் அருமையான நூல். அதில், பெரும்பான்மையாக, தமிழ்க் கவிகள், கம்பர், ஔவையார், ஒட்டக்கூத்தர், புக ழேந்தி, காளமேகம் இவர்களைப் பற்றித் தமிழ் நாட்டில் எழுந்த ரஸமான கதைகளடங்கிய வியாஸங்களும், ஒழுக்க நெறியைப் பற்றிய சில கட்டுரைகளும் இருக்கின்றன. அவை களில் பொருள் நயம் இருப்பினும், அதைவிட நூலின் வசன நடையின் நயமே இங்கு கவனிக்கத்தக்கது. அந்த வசன நடையைக் கதம்ப நடை என்று சொல்லலாம். தட்டுத் தடை யின்றி வாக்கியங்கள் எழுந்து, ஒரு காலாட் படையின் போக்குப் போல் நடத்தல்; பெரும்பான்மையாக வட மொழிப் பதங்களையும், சிறுபான்மையாக, தெலுங்கு, ஹிந் துஸ்தானி மொழிகளின் பதங்களையும், தமிழுடன் அழகு பெறக் கலந்து, வாக்கியங்களை வாசிக்கும்போது ஒரு கம்பீர

மான ஓசைப் பெருக்கை உண்டாக்குதல்; உவமைகள், அலங்காரங்கள் முதலியவைகளை ஆங்காங்கே தொகுத்து, கவிதைச் சுவையையும் கற்பனைச் சுவையையும் வியாஸங்களில் நிரப்புதல்; பழமொழிகளை இடையிடையே சந்தர்ப்பமறிந்து தூவுதல்; இவை வீராசாமி செட்டியாரின் வசன நடையின் சில குணங்கள். அதை எளிய நடை என்றே சொல்லத் துணியலாம். சிறு வார்த்தைகளை உபயோகப் படுத்திச் சிறு வாக்கியங்களைச் செய்வதினால் மாத்திரம் நடை எளிதாகிவிடாது; சப்த புஷ்டியுடைய வார்த்தைகளைக் கையாண்டு நீண்ட வாக்கியங்களை ஆக்குவதினால் மாத்திரம் நடை கடினமாகாது. வாக்கியப் போக்கு நேரே யில்லாமலும், உலக வழக்கில் இல்லாத அபூர்வமான பதங்கள் பிரயோகிக்கப்பட்டும், பொருள் தெளிவாய்ப் புலப்படாதபடி கருத்துத் துறட்டுகள் மலிந்தும் இருக்கும் நடையே கடினமான நடை.

விநோத ரஸ மஞ்சரியைப் படிக்க ஆரம்பித்தால், அதை முடித்துவிட வேண்டுமென்ற ஊக்கமும் அவாவும் உண்டாகின்றன. அதில் காணப்படும் விஷயங்களைத் தமிழர் என்றும் போற்றிப் படிப்பார்கள். கவிகளைப் பற்றிய கதைகள் அதி ருசிகரமாய் இருக்கின்றன. விநோத ரஸ மஞ்சரியில் ஹாஸ்யச் சுவை ததும்புகிறது; பழைய கதைத் துணுக்குகளை ஆசிரியர் கூறி நகைப்பது வாசித்தோர் மனத்தை விட்டகலாது. பழைய கருத்துகளையே விளக்கிக் காட்டும் இந்நூலின் வசன நடை இலக்கியச் சுவையைப் பெற்றிருக்கிறது. ஓர் இலக்கிய நடை அதை இயற்றிய புலவனின் மனோ பாவத்தையும் கலை ருசியையும் தழுவினதாதலால் அதை அப்படியே மற்றவர்களால் கையாள முடியாது; கையாளுவதும் உசிதமில்லை. வீராசாமி செட்டியாரின் வசன நடை இக் காலத்திற்குப் பொருத்தமில்லை என்பது உண்மையா யிருந்தபோதிலும், அதில் நயமில்லை என்று சொல்ல முடியாது. அவர் பழைய முறைகளையே அநுசரித்த பண்

டிதர் என்பதையும், ஆங்கிலப் பயிற்சி இல்லாதவர் என்பதையும், அவருடைய நூலின் பொருளில் தற்காலச் சுவை அதிகமாயில்லை என்பதையும் மறக்கக்கூடாது. அவருடைய நூலுக்கு நல்ல பிழையற்ற பதிப்பு இல்லாதது ஒரு குறையே. அவருடைய வசன நடையின் ஓர் அம்சத்திற்கு இந்த வாக்கியம் நல்ல உதாரணம்.

'ஒரு பெண், தன் பேதமை காரணமாக உலகத்தில் அந்நியராகிய செல்வரின் படாடோபங்கண்டு, நெய்க் குடத்தைத் தலையில் வைத்து எண்ணமிட்டவனைப் போல, நாம் இந்தச் சீமான் பக்ஷம் சேர்ந்தால், யாதொரு வருத்தமுமின்றி, எக்காலமும் வேளை தவறாது, பால் பழங்களுடனே நெய்யாரக் கையார நல்ல ராஜ போஜனம் உண்டு சுகித்து, வாசனைத் திரவியங்களால் நலங்கிட்டுக்கொண்டு, பனி நீரில் ஸ்நாநம் செய்து, இரு பக்கத்துமுள்ள கரைக்கும் முன்தானைக்கும் விலையுயர்ந்த முத்து, பச்சை, கெம்பு, வயிரங்கள் வரிசை வரிசையாகக் கோத்து இடையிடையே நெருங்க மல்லிகை, தாமரை, குமுதம் போல விசித்திரமான பூச்சமைத்து, பிடித்தால் பிடிக்குள் அடங்கும்படி, அதிக நாணயமாகிய இழையால் ஆயிரம் பொன் பெற்ற இந்திர வர்ணப்பட்டென்னும் பொற்சரிகைச் சேலையுடுத்து, முத்துக்கச்சுப் பூண்டு, மேகம் போலக் கறுத்துத் தழைத்து நெய்த்து நெரிந்து சுரிந்து நீண்டு சுருண்டு கடை குழன்ற கூந்தலை, வாசனை சேர்ந்த மயிர்ச் சாந்து பூசி, தங்கச் சீப்பு சிக்கங் கோல் கொண்டு சீவிச் சிக்கறுத்து வாரி வகிர்ந்து, திவ்ய பரிமள புஷ்பமாலைகளை வைத்து முடித்து, நெற்றியில் ஜவ்வாது திலகமிட்டு, கண்ணுக்கு மையெழுதி, கழுத்துக்கு கஸ்தூரி பூசி, மார்புக்குச் சந்தனத்தால் தொய்யில் வரைந்து, தோளுக்கு விற்கோலந் தீட்டி, காலுக்கு செம்பஞ்சூட்டி, கன்னத்திற்குக் கறுப்பெழுதி, உலகமெல்லாம் விலை மதிக்கத்தக்க நவரத்தின கசிதமாகிய தலைப்பணி, செவிப்பணி, நுதற்பணிகளும், ஆரகேயூரங்களும் ஜாஜ்வல்லியமாய்ப் பிரகாசிக்க, கைகளில் பொற்சரி, பொற்கடகங்கள் விளங்க, கால்களில் ரத்தினச் சதங்கை, ரத்தினச் சிலம்புகள் கலீர்

கலீரென்று ஒலிக்க, நாசியில் வச்சிரநத்து வச்சிர மூக் கணிகள் கண்ணுகூசும்படி தகதகவென்று ஜொலிக்க, கேசாதி பாத பரியந்தம், பொன் காய்த்தாற் போலத் தோன்ற, மெய்யிற் பூசிய சந்தன குங்கும கற்பூர கதம் பாதி பரிமள வர்க்கம் காத தூரம் கமகமவென்று மணக்க, வலது முன்கையிற் பற்றிய பூங்கொத்தில் பஞ்சவர்ணக் கிளி கொஞ்ச, அண்ட கோளத்தை அளாவப் பளிங்கினுல் கட்டப்பட்ட மலை போலும், பெரிய ஏழடுக்கு உபரிகை யில், மாணிக்கமயமான சித்திர மேடை மீது, தாதிமார் காம்பரிந்து பரப்பிய மெல்லிய புஷ்பத்தின் மேல், வடிவிற் சிறந்த சில பெண்கள் மேகலை தாங்க, சில பெண்கள் சாமரை போட, சில பெண்கள் ஆலவட்டம் அசைக்க, சில பெண்கள் தாம்பூலம் மடித்து நீட்ட, சில பெண்கள் பவளக் காளாஞ்சியேந்த, சில பெண்கள் ஆரத்தி யெடுக்க, சில பெண்கள் கைலாகு கொடுக்க, சில பெண்கள் நிலப் பாவாடை விரிக்க, சில பெண்கள் பிடித்துவரும் ஆணி முத்துப் பந்தலின் கீழ்ப் பூங்கொடி போல் இடையசைய, அன்னம் போல் அடிபெயர்த்து, மதரதிபோற் கைவீசி, கலாபத்தை விரித்து மயில் உலாவி நடக்கிறது போல் உடல் குலுங்கச் சொகுசாகச் சாரியுலாவி, நாம் வைப் பாட்டியானுலும் கொண்ட பெண்டாட்டியாகிய கண் ணுட்டி போலிருந்து, சம்பிரமத்துடனே சகல போகமும் அநுபவித்துக்கொண்டு நல்ல சீமாட்டியாய் வாழலாமே, இதை விட்டு இந்தத் தரித்திரம் பிடித்த காமாட்டிப் படு வானைக் கட்டிக்கொண்டு அழுவானேன் என்று வீண் எண்ணங் கொண்டு, கற்பழிய, தன்னைக் கைப்பிடித்த வறியவனுகிய கணவனைக் கைவிடக் கருதி, அவன் மனம் வெறுக்கக் கொள்ளிகொண்டு சுடுவது போலக் கடுஞ் சொற் சொல்லி, சீறுமாறு பண்ணலாகாது.' \\

வாக்கியத்தின் நீளத்தைப் பார்த்து ஒருவரும் பயப்பட வேண்டாம். இது மாதிரி வாக்கியங்களை ஆங்கில வசனக் கலைஞர்களான டிக்வின்சி (De Quincey), ரஸ்கின் (Ruskin) போன்றவர்கள், வார்த்தைகளால் சமைத்த மாடமாளிகை கள் போல் வரைந்திருக்கிருர்கள். இந்த வாக்கியத்தில், ஆசிரியர் அர்த்தமில்லாமல் அகராதியிலிருந்து வார்த்தை

களை எடுத்து அடுக்கி வெறும் சப்தஜாலம் செய்யவில்லை. ஓர் அலங்காரமான சித்திரத்தையே சமைத்திருக்கிறார். முன்னாளில் அழகுடைய மங்கையர், அரசர்களுக்கு அல்லது பிரபுக்களுக்கு ஆசை நாயகிகளாய்ப் போக நேர்ந்தால் அவர்கள் அநுபவிக்கக்கூடிய நிலைமையின் சித்திரம் இது; மோட்டார்களும், சினிமாக்களும், 'க்ரீம்'களும், 'பவுடர்' களும் தோன்றியிருக்கும் இன்று சித்திரம் வேறு விதமாய் இருக்கும். எவ்வளவு செல்வம், இன்பம், ராஜ போகம் கிடைத்தபோதிலும் பெண்கள் கற்பை இழக்கலாகாது என் பதை வாக்கியத்தின் சக்தியே காட்டுகிறது.

## பி. ஆர். ராஜமையர்

சென்ற நூற்றாண்டின் இறுதியில், தமிழ் இலக்கிய மண்டலத்தில் ஒளியுடன் தோன்றி, இரண்டு மூன்று ஆண்டுகள் வரை ஜோதிமயமாய்ப் பிரகாசித்துத் திடீரென மறைந்தவர் பி. ஆர். ராஜமையர். இவர், 'கமலாம்பாள் சரித்திரம்' என்ற அரிய இலக்கியச் சுவை ததும்பும் வசன நூலை ஆக்கித் தமிழ்த் தொண்டு புரிந்து, தமிழர் செய்த துர்ப்பாக்கியத்தால், தமது 26-வது வயதில் அகால மரணம் அடைந்தார். இவர் 1872-ம் வருஷத்தில் வத்தலகுண்டு கிராமத்தில் பிறந்து, மதுரையிலும், சென்னை கிறிஸ்தவ கலாசாலையிலும் பயின்று, பட்டம் பெற்று, ஜீவனார்த்தமாக ஓர் உத்தியோகத்தில் அமர்ந்தார். ராஜமையர், ஆங்கிலக் கவி ஷெல்லி முதலியோரின் பாட்டுக்களிலும், தமிழ்ப் புலவர் களின் பாடல்களிலும், விசேஷமாகக் கம்ப ராமாயணத்தின் கவிதை இன்பத்திலும் அதிகமாய் ஈடுபட்டிருந்தார். அதி பால்யத்திலேயே இவர் வேதாந்த விசாரணைகளில் பற்றுக் கொண்டு, யோகம் முதலிய விருத்திகளில் தமது முழு கவ னத்தையும் செலுத்தி, கவிதை ஆராய்ச்சியையும் இலக்கிய



பி. ஆர். ராஜமையர்

சேவையையும் கைவிட்டார். இப்படிச் செய்தது சரியா என்று கவனிப்பது நமக்கு அவசியமில்லை. கவிதையாலும் கலைகளாலும் ஏற்படும் இன்பத்தைவிட ஆத்மஞானம் விளைவிக்கும் இன்பம் மிகச் சிறந்தது என்று பல பெரியார்களும் புலவர்களும் கருதியிருக்கிறார்கள்.

## கமலாம்பாள் சரித்திரம்

கமலாம்பாள் சரித்திரம் நயம் பொருந்திய நாவலாயிருந்தபோதிலும், அதை ஒரு வசன நூல் என்ற முறையிலேயே கவனித்துவிடலாம். தமது வாழ்க்கை அநுபவங்களையும் தத்துவங்களையும் விளக்கும் நோக்கத்துடன் இந்தக் கதையை எழுதியிருப்பதாக ஆசிரியர் கூறியிருந்தபோதிலும், அதனால் கதையின் அமைப்பும், போக்கும், ரஸமும் குறையவில்லை ; சாதாரண பிரசார மனப்பான்மை மேலிட்டு நூலின் இலக்கியச் சுவையையும் கலைப் பாங்கையும் கெடுத்துவிடவில்லை. கமலாம்பாள் சரித்திரத்தில், தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு கிராமத்தின் வாழ்வும், ஓர் உயர் குடும்பத்தின் வாழ்வும், அப்படியே பெயர்த்து எடுக்கப்பட்டு, நமது கண்முன் தத்ரூபமாய் ஒளிரும் சித்திரங்களாக, அளவற்ற சக்தி சிருஷ்டியுடன் ஆக்கப்பட்டிருக்கின்றன.

## பாத்திரங்கள்

கமலாம்பாள் சரித்திரத்தில் வரும் பாத்திரங்கள் ஜீவகளையுடன் விளங்குகிறார்கள். தற்காலத் தமிழ் இலக்கிய சிருஷ்டியில் சிரஞ்சீவித் தன்மை பெற்ற ஆடுசாபட்டி அம்மையப்ப பிள்ளையை யார்தான் மறக்க முடியும்? அவரை நினைத்த மாத்திரம் நமக்கு எவ்வளவு ஆனந்தமும் குதூகலமும் உண்டாகின்றன! எவ்வளவு அற்புதமான நகைச் சுவையுடனும் கனிந்த பரிவுடனும் இவர் சிருஷ்டிக்கப்பட்டிருக்

கிறார்! இவர் நமது அன்புக்குரியவர் ஆகிறாரே யொழிய, ஏளனத்திற் காளாகவில்லை என்பது ஆசிரியரின் கலைத் திற னைக் காட்டுகிறது; அவருடைய நகைச் சுவையின் வெற்றி யும் கூடத்தான். பாத்திர சிருஷ்டியில் பேயாண்டித் தேவன் மற்றொரு வெற்றி. அவன் தீயொழுக்கத்தில் ஈடுபட்டிருந் தாலும், அது அவனது குலத் தொழில் என்ற எண்ணம், நமக்கு அவன் மீது ஏற்படக்கூடிய வெறுப்பைக் குறைக் கிறது. அவனுடைய கம்பீரமும், வாக்குப் பிறழாத தன் மையும், உத்தியோகஸ்தர்களையும் கிராமவாசிகளையும் நடு நடுங்கச் செய்து கிலியில் ஆழ்த்திய மறத் திறனும் அவனை ஒரு வீரனாகவே ஆக்குகின்றன. பால்ய விவாகம் எல்லாம் பொம்மைகளின் கல்யாணம் போலத்தான் என்றும், ஒரு சமுதாயக் கொடுமை என்றும் வாதாடும் சமூக சீர்திருத்தப் பண்டிதர்களுக்கு, ஸ்ரீநிவாசனும் லட்சுமியும், விவாக காலம் முதலே ஒருவரை ஒருவர் நேசித்து, இன்பத்துடன் காதல் வாழ்க்கையை நடத்தியதின் கவிதையை அறிய முடியாமல் இருக்கலாம். கதாநாயகியான சுற்புக்கரசி கமலாம்பாள் படும் கஷ்டங்கள் கல்லையும் உருக்கவல்லன. வாழ்க்கையில் எதிர்பாராத துன்பங்களை அநுபவித்து, அதன் சிறுமையை உணர்ந்து, அந்த வாழ்க்கையையே தமது ஞானாசாரியனாகக் கொண்டு, முத்துசுவாமி ஐயர் ஆத்ம ஞானம் பெறுவது கனிந்த பண்புடன் இருக்கிறது. பொன்னம்மாள், கிரா மத்து வம்பர் மகா சபைப் பெண்கள், பாட்டிகள் முதலி யோர்களின் சித்திரங்கள் வாசிப்போர் மனத்தில் நன்றாய்ப் பதிந்துவிடுகின்றன. வாழ்க்கையில் நேரக்கூடிய சுக துக் கங்களாலும் விபத்துக்களாலும், இந்த நூலின் கதா பாத்தி ரங்கள் பாதிக்கப்பட்டு, களிப்பு அடைவதும், துன்பம் எய்துவதும் இயற்கைக்கு ஒத்த முறையில் வரையப்பட் டிருக்கின்றன. ஒழுக்கமும் சீலமும் உடையோர், தீயோர்

செய்த சூழ்ச்சிகளில் அகப்பட்டு, மனம் உடைந்து சோகத்தில் ஆழ்ந்து தத்தளிப்பதும், பின்னால் கதை வளர்ந்து, சூரியனைக் கண்ட பனி போல், இடர்க்கணம் நீங்கி இன்பம் பெறுவதும், அசம்பாவிதப் பான்மை இல்லாமல் நடைபெறுகின்றன. இப்போதுள்ள தமிழ் நாவல்களில் கமலாம்பாள் சரித்திரம்தான் தலைசிறந்தது. சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட இந்த நூலின் ரஸம் இன்றும் எள்ளளவேனும் குறையவில்லை. எத்தனை தரம் படித்தாலும் சலிப்பு ஏற்படுவதில்லை.

## நூலின் வசன நடை

கமலாம்பாள் சரித்திரத்தின் வசன நடையில், கற்றோர்க்கு இன்பம் பயக்கும் இலக்கியச் சுவை ததும்புகிறது. அந்த நடை நேர்மையுடனும், சப்த புஷ்டியுடனும், பொருள் தெளிவுடனும் இருக்கிறது; சில இடங்களில் கவிதைத் தன்மையும் பெறுகிறது. வாக்கியங்கள், சில இடங்களில் குதிரை நடையை யொத்த வேகத்துடனும், வேறு சில இடங்களில் யானை நடையைப் போன்ற கம்பீரத்துடனும் நடக்கின்றன. அவைகளின் ஓசை அழகு நம்மை அடிக்கடி கவர்கிறது. ஜெல்லிக்கட்டு, சமுத்திரக் கரை வருணனை இந்த நூலின் நடைக்கு நல்ல உதாரணங்கள்:

> 'மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் "ஜெல்லிக்கட்டு" என்ற ஒரு வேடிக்கை உண்டு. அது என்னவெனில், இருநூறு முந்நூறு மாடுகளை ஒரு தொழுவில் அடையப் போட்டு, அவற்றை ஒன்றொன்றாய் கழுத்தில் ஒரு உருமால் கட்டி வெளியில் விட்டுப் பிடிக்கிறதுதான். அது பட்டிக்காட்டு மனிதர்களுக்கு ஒரு பெரிய திருவிழாவாகையால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடுவார்கள். ஜெல்லிக்கட்டு என்று சொல்லிவிட்டால் போதும், அவர்களுக்கு உண்டாகும் உற்சாகத்திற்கு எதுவும் ஈடில்லை.

என்ன வேலையிருந்தாலும், அதை யெல்லாம் போட்டு விட்டு, சந்தனப் பூச்சென்ன, மருக்கொழுந்து மாலைக ளென்ன, கோடி வேஷ்டிகளென்ன, இவ்வித சம்பிரமங் களுடன், விரல்களில் எல்லாம் வெள்ளி மோதிரங்களைக் கணக்கில்லாமல் அணிந்துகொண்டு கையில் சோட்டாத் தடிகளுடன் திரள்திரளாய்ப் புறப்பட்டு வந்து, மரக் கொம்புகள், வண்டிக் கூடுகள், வீட்டுக் கூரைகள், மதிற் புறங்கள், ரஸ்தாப் பாதைகள், எங்கும் ஏராளமாய் நிரம்பி விடுவார்கள். புருஷர்களுக்குத்தான் இந்த உற்சவம் என்று நினைக்க வேண்டாம். ஸ்திரீகளும், கூர்மையான மூக்குள்ள மனிதர்களைக் கூப்பிடு தூரம் தூரத்தத்தக்க மஞ்சளெண்ணெய், வேப்பெண்ணெய் முதலிய வாசனைத் தைலங்களைத் தடவிக்கொண்டு, செவந்திமாலை, புதுப் புடைவை, பாசிமணி, பட்டோலை முதலிய சர்வாபரண பூஷிதராய் புருஷருடன் வேற்றுமை தெரியாது வந்து நெருங்கி விடுவார்கள். பளபளவென்று சீவித் தைலம் தடவிய கொம்புகளுடன், உடல் நிறைய புஷ்பமாலைகள் ஏராளமாய் அணிந்து, கழுத்தில் உருமாலும், கம்பீரமான நடையும், பயங்கரமான பார்வையும் கொண்டு, கண்டோர் ரிஷபராஜர்கள் என்று சொல்லும்படியான உயர்ந்த ஜாதி மாடுகள் தொழுவுக்குள் நெருங்குவதும், அங்கு நின்று உருமால் கொண்டு ஓட்டோட்டமாய் ஓடுவதும், மனிதர் கள் அவற்றின் மேல், உயிரை வெறுத்துப் பாய்ந்து அவற் றைப் பிடிப்பதும், பிடித்து உருமாலைக் கழற்றிக்கொண்டு "ஹாய்" என்று முடுக்குவதும், மனிதர்களை அவைகள் தூக்கிப் போட்டுவிட்டு அலட்சியமாய் ஓடுவதும், நாகரிக மற்ற அந்த மனிதர்களுக்குக் கண்கொள்ளாக் காட்சியா யிருக்கும்.

*　　*　　*

'ஸ்ரீநிவாசனும் லட்சுமியும் அடிக்கடி சமுத்திரக் கரைக்குப் போவதுண்டு. குழந்தைகள் தாய் மடி மீதேறி, மண்டிபோட்டு நின்று பாய்ந்து விளையாடுவது போல், அலை களாகிய, குச-லவன் இவர்களைப் போன்ற குழந்தைக் கூட்டங்கள், தாயாகிய கடலின் மடி மீது ஏறி நின்று, ஓடி யாடிப் பாய்ந்து, கரையின் மீது தவழ்ந்து, மணலை வாரி

ஜலத்திலும், ஜலத்தை வாரி மணலிலும் போட்டுக் கரு மணல் மத்தியில் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் எப்படியோ, அப்படிச் சிறிய அளவற்ற பொன் மணல்கள் பிரகாசிக்க, பற்பல விசித்திர கோலங்களை இயற்றி, நுரைத் தொகையையும் முத்தையும் சிந்தி, நத்தைகளையும், சங்குகளையும், கட்டைகளையும் உருட்டிப் புரட்டிப் பரப்பிப் புதைத்து, ஒரு கணமும், ஓய்வொழிவில்லாத, இவ்வித பால்ய லீலைகளைச் செய்துகொண் டிருக்கின்ற கடற் கரைக்கு ஒரு நாள் அந்திப்பொழுதில் ஸ்ரீநிவாசனும் லட்சுமியும் வந்தார்கள். அன்று அஸ்தமன அழகை யான் என் என்று சொல்வேன்! பகல் முழுவதும் காணக் கண் கூசும் காந்தியுடன் ஆகாயம் பூமியாகிய இவ்விரு உலகங்களையும் தனது ஆக்ஞைக்குள்ளடக்கித் தனியரசு புரிந்த கம்பீரச் செல்வனாகிய சூரியன், விருத்தாப்பிய தசையடைந்து, அஜ - ரகு - திலீபாதி யரசர்களைப் பார்த்துத் தானும் ராஜ்யத்தை விட்டுத் தவம் செய்யக் கருதினான் போல், சாந்தஸ்வரூபமாய் மாறிச் செந்தாமரை போல் மலர்ந்த தனது இனிய முகத்தை யாவரும் காணக் காட்டி, அர்க்கியாதிகளால் தன்னை வாழ்த்தும் தனது பிரஜைகளிடமிருந்து விடைபெற்று, செவ்வானமாகிய செஞ்சடை புனைந்து தனியே செல்ல, 'இதுவும் உனது திருவிளையாடலே' என்று பிரமிப்படைந்த பக்த கணங்கள், ஆறு, குளம், வீடுகள்தோறும் கைகூப்பி நின்று, 'யாரே உன் அதிரேக மாயை யறிவார்' என்று கடவுளைப் போற்றினார். கடற்கரையிலோ, இன்று நம் உத்தியோகம் இத்துடன் ஒழிந்ததென்று, தங்களுடைய மீன் நிறைந்த வலைகளுடன், கட்டைமரங்களையும் படகுகளையும் கரையில் சேர்த்துச் செம்படவர்கள் திரைகடலோடித் தாங்கள் தேடிய திரவியத்தை, கூடையுங் கையுமாய்த் தங்களை வழி பார்த்து, வந்தவுடன் கைகொட்டி நின்ற தம் பெண்டுகள் பிள்ளைகளுடன் பங்கு பகிர்த்து நின்றனர் ஒரு சார்........

"மானினம் வருவ போன்றும் மயிலினந் திரிவ
போன்றும்
மீனினம் மிளிர்வ போன்றும் மின்னினமிடைவ
போன்றும்"

பொம்மெனப் புகுந்த ஆங்கிலேய மாதர்கள், தோகை போன்ற உடையும், அன்னம் போன்ற நடையும், கிள்ளை போன்ற மொழியுங்கொண்டு தங்களுடைய (அல்லது பிறருடைய) நாயகர்களோடு கைகோத்து, உரையாடி நடையாடினர் ஒரு சார். பள்ளிக்கூடத்துப் படிக்கும் பாலர் சிலர், கங்கைக்குப் போன கடாவின் கதையாய்க் கடற்கரையிலும் புஸ்தகங்களுடன் கட்டியழுதனர் ஒரு சார். வாலிபக் கணவர் சிலர், தம் சிறு மனைவிமாரோடு கடல் காணத் துணிந்து கரையை யணுக, அங்கு யாரேனும் எதிர்ப்பட்டால், தம் நோக்கு அகற்றித் தலைநாணி, ஏதோ குற்றம் செய்தவர் போல நெஞ்சும் மார்பும் பதைபதைக்க, மணற்புறத்துப் பதுங்கினர் ஒரு சார். நாடுகள்தோறும் ஓடி யலையும் லாட ஜனங்கள் கடலைத் தொழுது கைகூப்பி னர் ஒரு சார். அடக்குவாரற்று ஆடியோடும் அலைகளை யும், களிமயக்குற்றுக் கன்று போல் துள்ளிக் கடற்கரை யில் நித்திய வசந்தம் செய்து வீசாநின்ற வாலிபக் காற்றை யும் கண்டு, தாமும் உற்சாகச் செறிவுற்றுத் தனியிடம் அடைந்து, தம்மோசையைக் கடலோசை விழுங்குமென்று துணிவேறிப் பாடத் தெரியாதாரும் பாடினர் ஒரு சார். சிலர், அங்கு வீசும் தென்றலைப் போல் ஓடியுலாவி ஓயாது அடிக்கும் அலைகளைப் போல் குதித்து விளையாடினர். சிலர் தனியே உட்கார்ந்து தங்களுடைய குடும்ப ரகசியங்களை அலைகளுடன் சொல்லி யாறினர்.'

கமலாம்பாள் சரித்திரத்தில் ஊடுருவிக் கிடக்கும் ஆத்ம ஞான தத்துவம் தற்கால வாசகர்களுக்குச் சற்று விரஸமாய்த் தோன்றலாம். ஆனால் இந்த அம்சம், முன்வந்து நிற்காம லும், கதையின் ரஸத்தையாவது கலைப் பாங்கையாவது குறைக்காமலும் இருக்கிறது; அது சினிமாக்களிலிருக்கும் பின்னணி சங்கீதம் போன்று இன்பம் தருகிறது. ஆசிரி யர் அர்த்தமற்ற, லட்சியமற்ற ஒரு வெறும் கதையை சிருஷ் டிக்காமல், அந்தக் கதையிலேயே அதன் கதைத் தன்மைக் கும், நாடகத் தன்மைக்கும், இலக்கியச் சுவைக்கும் பங்கம் ஏற்படாமல், ஆத்ம தத்துவ விளக்கத்தைப் பொதிந்து வைத்

திருப்பது அவருடைய சிருஷ்டி சக்தியின் திறனையே காட்டுகிறது.

## வசன கர்த்தா பாரதி

வேதநாயகம் பிள்ளை, வீராசாமி செட்டியார், ராஜமையர் இவர்கள் வசன நடையில் இலக்கியச் சுவையும், தற்காலச் சுவையும், நேர்மையும் இருந்தபோதிலும், ஒருவிதமான கனத்தன்மையும், லாகவமின்மையும் காணப்படுகின்றன. தமிழ் வசன நடைக்கு இவ்வித கனத்தன்மையை ஒழித்து ஒரு புதிய ஒளியைக் கொடுத்தது சுப்பிரமணிய பாரதியே. அவர், கவிதையில் ஒரு புது சகாப்தத்தை உண்டாக்கியது போல், வசனத்திலும் ஒரு நூதன திணுசை சிருஷ்டி செய்தார். ஆங்கில இலக்கிய ஆராய்ச்சி வல்லவர்களில் ஒருவராகிய செயின்ட்ஸ்பரி (Saintsbury) என்பவர், ஷெல்லியைப் பற்றி எழுதும்போது, அவர் எவ்வளவு பெரிய கவியோ, அவ்வளவு பெரிய வசன கர்த்தாவுமாக இருக்கிறார், என்று சொல்லிய கருத்து, சுப்பிரமணிய பாரதிக்கும் அநேகமாகப் பொருந்தும். அவருடைய வசனங்களும் கட்டுரைகளும் தொகுக்கப்பட்டு இரண்டு தனி நூல்களாய்ப் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளில் ரவீந்திரநாதரின் சிறு கதைகளுக்குள்ள பாரதியின் மொழிபெயர்ப்புகள் சேர்க்கப்படவில்லை. இருந்தபோதிலும் இந்த நூல்கள் தமிழுருக்கு ஓர் அருமையான விருந்தாகும்.

## ஞானரதம்

குயில் பாட்டைக் காவிய ரீதியில் சிருஷ்டித்த பாரதியின் கற்பனை சக்தி, விரிந்து, ஞானரதம் என்னும் சித்திரத்தை வசனத்தில் சிருஷ்டித்திருக்கிறது. இலக்கியச் சிறப்பை மாத்திரம் கவனித்தால் இப்போது தமிழில் இருக்கும் வசன நடை நூல்களில் ஞானரதம் தலைசிறந்தது.

இந்தக் கதையில் பாரதியின் கற்பனை யழகின் உச்சத்தைக் காணலாம். ஞானரதத்தில் ஓர் லட்சிய உலகை அவர் சிருஷ்டித்திருக்கிறார்; அது ஓர் இன்ப உலகமும் கூடத் தான். அதற்கும் மனித உலகிற்கும் வெகு தூரம்; ஆனால் நெருங்கிய சம்பந்தமும் உண்டு. ஒவ்வொருவருக்கும், இன்ப சாதனங்கள் அவரவர்களிடமே இருக்கின்றன என்றும், நிர்மலமான இன்பமும் பொங்கும் உள்ளக் களிப்பும் பிறர் அளிக்கக்கூடியவையல்ல என்றும், மனிதன் தன் மனத்தை அடக்கி, புத்தியை உபயோகித்து, ஞானம் பெற்று, அதன் தூண்டுதல்படியே நடப்பானால் வாழ்க்கையின் உண்மை யான லட்சியங்கள் கைகூடி இன்பத்தைப் பெறலாமென்றும் ஞானரதம் போதிக்கிறது. இந்த நூலில் பாரதியின் வசன நடை சக்தி வாய்ந்த எளிய நடை; இதற்கு முன்னால் தமிழி லுள்ள வசனத்திற்கு முற்றிலும் மாறுபட்டுப் புதிய குணங் களைப் பெற்றது; இன்னிசைத் தன்மையும் கவிதைச் சுவையும் நிரம்பிய நடை; ஓர் ஓடையின் தெள்ளிய தண்ணீர் கற் பாறைகளின் மீது சலசலவென்று பாய்வது போலுள்ள செந்தமிழ் நடை; எளிய பதங்களுடைய எளிய வாக்கியங் கள்தான்; ஆனால் அர்த்த புஷ்டியிலும், சக்தியிலும், கலைப் பான்மையிலும் அபாரமானவை. பாரதியின் வசன நடை யில் அவர் கவிதையின் குணங்களைக் காணலாம். அவருக் குப் பின்னால் தோன்றிய பலர் அந்த நடையைப் பின்பற்றி எழுத முயன்றிருக்கிறார்கள்; வெற்றி அடையவில்லை. இருந்த போதிலும், தமிழ் வசனம் சாதாரண மக்கள் அறியக்கூடிய எளிய நடையில்தான் இருக்க வேண்டுமென்ற கொள்கை நிலைத்துவிட்டது.

கவலைகளால் மனிதன் படும் அவஸ்தையைப் பற்றி ஞானரதத்தின் ஆரம்பத்தில் பாரதி எவ்வளவு அழகாகச் சொல்லியிருக்கிறார்!

'இந்த உலகத்துக் கவலைகளை நினைக்கும்போதே நெஞ்சம் பகீர் என்கிறது. அவற்றுக்குள்ள விஷ சக்தியை என்னென்பேன்? ஒருவனது முகத்திலுள்ள அழகையும், குளிர்ச்சியையும், இளமையையும் இந்தக் கவலைகளே அழித்துவிடுகின்றன. கண்களின் ஒளியை மாற்றிப் பசலையும், உடல் நிறம் மங்குதலும் உண்டாக்கிவிடுகின்றன. நெற்றியிலே வரிகளும், கன்னங்களிலே சுருங்கல்களும், இந்த நீசக் கவலைகளினாலேயே ஏற்படுகின்றன. எனது தொண்டையின் இனிய குரல் போய், கடூரமான கரகரப்புச் சத்தம் உண்டாகிறது. மார்பிலும், தோளிலும் இருந்த வலிமை நீங்கிப்போய் விடுகிறது. இரத்தம் விரைவாக ஓடுதலின்றி, மாசு நீரோடை போல மந்தம் அடைகின்றது. கால்களில் தீவிரமில்லாமல் போய் விடுகிறது. கவலைகள் என்ற விஷ ஜந்துக்கள் ஒருவனுடைய சரீரத்தை உள்ளூர அரித்துவிடுகின்றன. சரீரத்தை மட்டுமா? அறிவையும் பாழாக்குகின்றன. மறதியை அதிகப்படுத்திவிடுகின்றன. முக்கியமான செய்திகளெல்லாம் நல்ல சந்தர்ப்பத்திலே நினைவிற்கு வராமல் போய்விடுகின்றன. படித்த படிப்பெல்லாம் பாலைவனத்திலே பெய்த மழை போல நிஷ்பலமாய்விடுகின்றது. அறிவிலே பிரகாசமில்லாமல், எப்போதும் மேகம் படர்ந்தது போலாய்விடுகிறது. யோசனை தட்டுகிறது. ஐயோ! இந்தக் கவலைகளாகிய சிறிய சிறிய விஷப் பூச்சிகளுக்குள்ள திறமை, வைத்திய சாஸ்திர நிபுணர்கள் கூறும் மகா கொடூரமான, கண்ணுக்குத் தெரியாத நோய்ப்பூச்சிகளுக்குக்கூடக் கிடையாது.'

பார்வைக்குச் சாதாரணமாய் நாமும் எழுதிவிடலாமே என்று தோன்றுகிறது. ஆனால் உண்மையில் தமிழ் இலக்கியம் இதற்கு முன்னால் கண்டிராத வசன நடை இது; சுத்த, செம்மையான இலக்கிய மணம் வீசும் வாசகம்; அருள் உணர்ச்சியின் வாக்கு. யாப்புக்குள்ளடங்காத கவிதைக்குத் தற்காலத் தமிழ் இலக்கியத்தில் பாரதியின் கடல் வருணனை ஓர் அற்புதமான உதாரணம்:

'எதிரே கடல்; சந்திரகிரணங்களால் ஜோதியுயிர் கொடுக்கப் பெற்ற அலைகள். வெள்ளை மலர்கள் புனைந்து, புஷ்பக் குன்றுகள் கிடப்பது போலத் தோன்றிய கப்பல்கள். தூரத்திலே, அன்னங்கள் மிதப்பது போல மிதந்த இன்பப் படகுகள். மேலே சந்திரன்; வெள்ளிமேகங்கள்; இம்மேகங்களிலே சில வலைகள் பரப்பியிருப்பது போலத் தோன்றும்; சில அலைகளடிப்பதுபோ லிருக்கும்; ஒன்று பூச் சிதறியது போலத் தோன்றும்; கீழே மிதக்கும் படகுகளுக்கு வானக் கண்ணுடியிலே தோன்றும் சாயைகள் போலச் சில மிதந்து செல்லும். இனி நக்ஷத்திரங்கள்! வானக் கடலிலே வெடித்தெழுந்த வைரங்கள்! சிதறுண்ட இன்பங்கள்! வானப் பொய்கையிலே மனமெனும் சிறிய வண்டு போய் ஒளித் தேன் குடிப்பதற்கமைந்த எண்ணில்லாத மலர்கள்! திசையென்ற அனந்த வஸ்துவுடன், ஈசனறிவு என்ற அனந்த வஸ்து தாக்கியபோது பொறித்தெழுந்த சுடற் பொறிகள்!'

## சந்திரிகையின் கதை

பாரதியின் எல்லா நூல்களிலும் அவருடைய வசன நடையின் தனிச் சிறப்பைக் காணலாம். சந்திரிகையின் கதை ஓர் உயர்ந்த நாவல். அது அரைகுறையாய், முற்றுப் பெறுமலிருந்தும், அதன் நயம் குறையவில்லை. முதல் அத்தியாயத்தில் வேளாண்குடியில் பூகம்பம் நேர்ந்த நிகழ்ச்சியைப் பாரதி வருணித்திருப்பது ஓர் உயிருள்ள சித்திரம். சந்திரிகையின் சரித்திரம் ஆரம்பிக்கப்படாததால், இப்போதிருக்கும் பாகத்திற்குக் கதாநாயகி விசாலாக்ஷியே. பூகம்பத்திலிருந்து தப்பினவளாகிய, புருஷன் மணமறியாத இந்த ஏழைக் கைம்பெண், தன் கொடூரமான ஜாதிக்கட்டுக்கு விரோதமாய், மனோதைரியத்துடன், வாழ்க்கைக்குத் துணையாய்க் கணவனைத் தேடி இன்புற வேண்டுமென்று, வீரேசலிங்கம் பந்துலுவிடம் போய், அங்கே டிப்டி கலெக்டர் கோபாலயங்காரை மணக்கலாமென்று

எழுந்த நினைப்பை, வேலைக்காரி இடைச்சிப் பெண் மீது தீராத மையல் அவர் கொண்டதால், கைநழுவவிட்டு, பின்னால் பால்ய சந்நியாசி நித்தியானந்தரைப் பார்க்க நேர்ந்து, அவர் மீது காதல் கொண்டு, அவரைக் காஷாய வேடத்தை உதறிப் பெயரையும் மாற்றச் செய்து, கல்யாணம் செய்துகொண்டு, களிப்புடன் இல்லறத்தை நடத்திக்கொண் டிருக்கும்போது, கடவுளே கைம்பெண்களுக்குக் கருணை காட்ட அச்சப்படு கிறார் என்ற எண்ணத்திற்கு ஆதாரம் கொடுப்பது போல், அவள் புருஷனுக்குப் பைத்தியம் பிடித்துவிட, அதனால் அவள் வாழ்க்கை சிதறுண்டதைப் பாரதி, கனிந்த மன வுணர்ச்சியுடன் எழுதும் நேர்த்தி மிகச் சிறந்தது. நூல் முழுவதும் கலையின் ஒளி வீசுகிறதேயொழிய, பிரசாரத்தின் நிழலை அங்குக் காணோம். ஒரு கதையைச் சொல்லுவதில் பாரதியின் எளிய நடை எவ்வளவு சக்தி வாய்ந்திருக்கிற தென்று சந்திரிகையின் கதையிலிருந்து அறியலாம்.

நவ தந்திரக் கதைகளில் சாதாரண மக்கள் நகைத்து, அநுபவிக்கக்கூடிய தெளிந்த ஹாஸ்யச்சுவை நிரம்பியிருக் கிறது. மற்ற நூல்களில் ஆங்காங்கு கவியின் நேர்த்தியான நகைச் சுவையைக் காணலாம். ரவீந்திரநாதரின் சில சிறு கதைகளுக்குப் பாரதி செய்திருக்கும் தமிழ் மொழிபெயர்ப் புகள் அற்புதமானவை. அந்தக் கதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்புகளைவிடத் தமிழ் மொழிபெயர்ப்புகள் பன் மடங்கு சிறந்தவை என்பது வாசித்தால் விளங்கும். பாரதி யின் வசன நூலின் இரண்டாவது பாகத்தில், அவர் நமது நாட்டின் தற்கால வாழ்வு சம்பந்தமாய் எழுதிப் பத்திரிகை களில் பிரசுரித்த அநேக கட்டுரைகள் தொகுக்கப்பட்டிருக் கின்றன. இலக்கியம், கலைகள், அரசியல் நிலைமை, சமுதாய முன்னேற்றம், மொழி வளர்ச்சி, சங்கீத வளர்ச்சி முதலிய பல விஷயங்களைப் பற்றிப் பாரதி கொண்டிருந்த தெளிவான

கருத்துக்களை இந்த நூலில் காணலாம். அவை முற்போக்கா யும் ஒப்புக்கொள்ளத் தக்கனவாயு முள்ளன. பாரதி தமிழ் வசன நடையைப் பற்றி எழுதுவதாவது:

> 'தமிழ் வசன நடை ............ பிறந்து பல வருஷமாகவில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். ஆதலால், இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாயிருக்கும்படி முயற்சிகள் செய்ய வேண்டும். கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமமானது என்பது என்னுடைய கக்ஷி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம், எதை எழுதினாலும் வார்த்தை, சொல்லுகிற மாதிரியே அமைந்து விட்டால் நல்லது.'

பாரதி தமது வசன நூல்களில் இந்தக் கொள்கையையே கையாண்டு பெரும் வெற்றி அடைந்திருக்கிறார். தற்காலத் தமிழ் வசன நடை பாரதியின் நடையைப் போல் எளிமையுடனும் சக்தியுடனும் இருக்க வேண்டும். ஆனால் வேறு விதமான நல்ல வசன நடைகளும் சுவையுடன் இருக்கலாம் என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

தற்காலத் தமிழ் இலக்கியத்தில் மிகச் சிறந்த வசனக் கலைஞன் பாரதியே என்று மேலே கூறியதிலிருந்து விளங்கும்.

## வ. வெ. சு. ஐயர்

காலஞ் சென்ற வ. வெ. சு. ஐயரைத் தமிழர், ஒரு தேசபக்தசிகாமணியென்றும், கர்ம வீரரென்றும் அறிவார்கள். அவர் திருச்சி ஜில்லாவில் பிறந்து வளர்ந்து, ரங்கூனில் வக்கீல் தொழில் பார்த்து, 'பாரிஸ்டர்' தேர்ச்சி பெறுவதற்காக இங்கிலாந்துக்குப் போய், அங்குள்ள இந்திய தேசீய அமிதவாதிகளுடன் சேர்ந்து பழகிவிட்டு, ஐரோப்



வ. வெ. சு. அய்யர்

பிய நாடுகள் வழியே தாய்நாடு திரும்பி, சில காலம் புதுச்சேரியில் தங்கிப் பின்னல் சென்னைக்கு வந்து, அதுமுதல், பாபநாசம் நீர்வீழ்ச்சியில் வீர மரணம் அடையும் வரையில் செய்த அரிய தேசீயத் தொண்டு எல்லோருக்கும் தெரியும்.

## அவர் புலமை

வ. வெ. சு. ஐயருடைய அபாரமான புலமையையும் கலை ரஸிகத்வத்தையும் மிகச் சிலரே உணர்ந்திருக்கிருர்கள். அவர் தமிழ், ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம், பிரெஞ்சு, க்ரேக்க முதலிய பாஷைகளிலுள்ள சிறந்த இலக்கியங்களைக் கற்று நன்ருய் ரஸித்தவர். ஐயர் ஒரு பெரிய கலைஞானி. தமிழ் மொழியிலும் கலைகளிலும் அவருக்கு உண்மையான அன்பு உண்டு. அவர் நல்ல நிதான குணத்தைப் பெற்ற இலக்கிய ஆராய்ச்சியாளர். தமிழிலுள்ள கலைஞானத்தை மற்ற நாட்டினருக்கு உணர்த்த வேண்டுமென்ற அவாவைப் பெற்றவர்; சிறந்த தமிழ் இலக்கியங்களை நவீன முறையில் கற்றுத் தேர்ந்தவர். அவர் கவி பாரதிக்கு நல்ல துணைவராயும் நண்பராயும் இருந்தார். பாரதியின் கவிதா சக்தியை வ. வெ. சு. ஐயர் கொஞ்சங்கூடப் பெற்றிராவிட்டாலும், அவர் ஆழ்ந்த கலைஞானமும் ஆராய்ச்சித் திறனும் படைத்தவர். வள்ளுவரின் திருக்குறளை வ. வெ. சு. ஐயர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிருர். குறளுக்கு இப்போது ஆங்கிலத்திலுள்ள மொழிபெயர்ப்புகளில் ஐயரின் மொழிபெயர்ப்பு தான் சிறந்தது என்பது அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட துணிபு.

## மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்

ஐயர் தமிழில் அநேக நூல்களை நயத்துடன் இயற்றியிருக்கிருர். அவைகளில் உயர்ந்த இலக்கியத் தன்மையையும் ஒப்பற்ற பெருமையையும் உடையது, மங்கையர்க்கரசியின்

காதல் முதலிய கதைகளடங்கிய நூல். ஐயர் அதன் முகவுரையில், 'கதைகள் கவிதை நிரம்பியவாய், ரஸபாவோபேதமாய் இருக்கவேண்டும் என்பது எனது அபிப்பிராயம்' என்று எழுதியிருப்பதை மனத்தில் வைத்துக்கொண்டு நூலைப் படித்தால் அதன் ஏற்றம் விளங்கும். வ. வெ. சு. ஐயரின் தமிழ் வசன நடை எளிதாயும், அழகாயும், கம்பீரமாயுமுள்ளது; கவிதைச் சுவையும் கற்பனைச் சுவையும் நிரம்பியது; அது கதைப்போக்குக் கேற்றவாறும், சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தவாறுமுள்ள தன்மைகளைப் பெற்று மாறிக்கொண்டேயிருக்கும்; காதில் கணீர், கணீர் என்று ஒலித்துக்கொண்டு, இனிமையான சப்தப் பெருக்கை உண்டாக்கச் செய்யும் திண்மையான வாக்கியங்களடங்கிய நடை. தகுந்த வடமொழிப் பதங்கள் அதிகமாய்ப் பிரயோகிக்கப்பட்டிருப்பதினால் ஐயரின் தமிழ் வசன நடைக்கு ஒரு தனிப்பட்ட அழகும் சக்தியும் ஏற்பட்டிருக்கின்றன; இந்த அம்சம் அந்த நடைக்கு ஒரு குறைவு என்று கருதுகிறவர்களும் உண்டு. ஓர் இலக்கிய நடை அதை ஆக்குவோன் கலைப் பயிற்சிக்கும் மனோ பாவத்திற்கும் தகுந்தபடிதான் அமையும். இப்படித்தான் இருக்க வேண்டுமென்று விதிகளைக் கையாண்டு ஒருவன் தன் இலக்கிய நடையை அமைத்தால் அதில் சத்து இராது; அவனுடைய சக்தி விளங்காது. பாரத நாட்டின் பண்டை நாகரிகத்தின் இலட்சியங்களின் ஒளியையும், தத்துவத்தையும் அவர் நன்கு அறிந்து கைப்பற்றினவராயினும், அவருடைய கருத்துக்களும், மனோ பாவமும் நவீனக் கலைகளைத் தழுவியன.

## சிறு கதைகள்

சிறு கதைகள் என்ற முறையில் வ. வெ. சு. ஐயரின் கதைகளுக்கு அதி உன்னதமான ஸ்தானம் உண்டு; அவை

போல, அவ்வளவு உணர்ச்சிப் பெருக்குடன் எழுதப்பட்டிருக்கும் கதைகள் தமிழில் அதிகமாய் இல்லை. சிறு கதை, மேல்நாட்டு இலக்கிய தினுசுகளில் ஒன்று. அதில் கதைப் போக்கு சுருக்கமா யிருக்கும். பாத்திரங்களும் மிகச் சிலரே. அவர்களுடைய உணர்ச்சியையும், பாவங்களையும், நுட்பமான நாடகச் சுவையுடன் தோற்றுவிக்கும் சிறு காட்சிகளடங்கின சித்திரமே ஒரு சிறு கதை. வாசிப்போர் மனத்தில் கதையுடன் ஒருமைப்படக்கூடிய உணர்ச்சி எழ வேண்டும். அநேக இடங்களில் கதைப் போக்கும் பாத்திரங்களின் குணங்களும் அநுமானிக்க வேண்டியதாய் இருக்கும். சிறு கதைகள் வாசிப்பதில் ஒரு கிளர்ச்சி உண்டாகிறது; உணர்ச்சியும் பொங்கி எழுகிறது. இதற்குச் சாதனமா யிருப்பதற்கு, சிறு கதை ஆசிரியர்கள் தங்களுடைய வசன நடையில், ஆங்காங்கே கவிதா பாவத்தைப் புகுத்துவது வழக்கம். கலைத் தேர்ச்சியில் வல்லவர்கள்தான் இந்த முறையை ருசியுடனும் வரை யறிந்தும் அநுஷ்டிப்பார்கள். வ. வெ. சு. ஐயர் இந்த முறையைக் குற்றமற்றுக் கையாண்டிருக்கிறார். ஐயரின் கதைகள் தெய்விகக் காதல் மணத்தை வீசி, மலர்ந்து திகழும் வாடா இலக்கிய மலர்க் கொத்து. உலகம் தோன்றிய நாள் முதல் காதலின் பெருமையைப் பற்றிப் பாடாத கவி இல்லை; எழுதாத புலவன் இல்லை. சிறு கதைத் தினுசை முதலாக ஐயர் கையாண்டபோது, அதற்குக் காதலைப் பொருளாகக் கொண்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஐயரின் காதல் கதைகள் வாசிப்போரின் மனத்தை உருக்கி, அப்படியே கொள்ளை கொள்கின்றன; அவை அரிய கற்பனை ஆர்வத்துடன் எழுதப்பட்டிருக்கின்றன. 'கமல விஜயம்', 'குளத்தங்கரை அரசமரம்', 'லைலா மஜ்னூன்',* 'அனார் கலி',* நிகரற்ற சிறு கதைகள். வேறெந்த மொழியிலுமுள்ள சிறு

* இவை இரண்டும் பிற மொழியிலிருந்து எடுத்த கதைகள்.

கதைகளுக்கு இவை தலை கவிழ்க்க வேண்டாம். சிறு கதைகள் புனைவதில் ஐயர், அவருக்குப் பின்னால் வந்தவர்களுக்கு நல்ல வழி காட்டியாய் இருந்திருக்கிறார்.

## வேறு வசன நூல்கள்

சிறு கதைகளைத் தவிர வேறு நல்ல சிறு வசன நூல்களையும் வ. வெ. சு. ஐயர் ஆக்கினார். ப்ளேடோ (Plato), சாக்ரடீஸ் (Socrates), சந்திர குப்தன், அசோகன், புக்கர் வாஷிங்க்டன் இவர்களின் சரித்திரங்களை அவர் எழுதியிருக்கிறார்; தமிழரின் அறிவு விரிய வேண்டுமென்பது அவரது முக்கிய நோக்கம். அமெரிக்கப் புலவர் எமர்ஸன் (Emerson) எழுதியிருக்கும் தன்னம்பிக்கை (Self-reliance) என்ற வியாஸத்தை அவர் தமிழில் மொழிபெயர்த்தார். இது ஓர் அற்புதமான மொழிபெயர்ப்புமன்றி, நல்ல தமிழ் வசன நடையையும் பெற்ற நூல். தற்காலக் கருத்துக்களை சக்தியுடனும் அழகுடனும் அவர் தமிழுக்குக் கொண்டுவந்திருக்கிறார். அவருடைய வசனத்திற்கும் மொழிபெயர்ப்புத் திறனுக்கும் இந்த உதாரணத்தைப் பார்க்கலாம்:

'மனிதன் மருள்கின்றான். நையப் பாட்டுப் பாடுகிறான். முதுகு வளையாமல் நிற்கமாட்டேன் என்கிறான். நான் இப்படி நினைக்கிறேன், நான் இப்படித்தான் இருப்பேன் என்னாமல், ஒரு ரிஷி அல்லது மகாத்துமாவை உதாரணங் காட்டுகிறான். ஒரு பச்சைப் பசும் புல்லின் தாள், அப்பொழுது நெகிழ்ந்துகொண்டிருக்கும் ரோஜா முகை, இவைகளைக் காணும்போது வெட்கித் தலைகுனிந்து விடுகிறான். இதோ இந்த ஜன்னல் வழியாகத் தெரிகின்றனவே, இந்த ரோஜா மலர்கள் முன்காலத்து ரோஜா மலர்களைப் பற்றிப் பேசுவதில்லை. தங்களை நோக்கியே தான், அவை மலர்ந்திருக்கின்றன. இன்று அவை பரம்பொருளின் சன்னிதானத்தில், பரம்பொருளோடுகூட நின்றுகொண்டிருக்கின்றன. ரோஜா மலர் வேறொன்றையும் பற்றிச் சிந்தியாமல் கேவலம் தானேயாக இருக்கிறது.

அது மலர்ந்திருக்கும் நேரம், ஆதியோடந்தமாக அது சம்பூரணமான நிலையிலேயே நிற்கிறது. ஒரு குருத்து தளிர்க்கும் முன்னர், அதன் பிராணன் அனைத்தும் அதனுள் பொங்கிக் கொந்தளித்துக்கொண்டிருக்கின்றது. விரிந்த மலரில் அதைவிட அதிகமானது ஒன்றுமில்லை. காய்ந்துபோன வேரிலும் அதைவிட ஒன்றும் குறைவாக இல்லை. அது எப்பொழுதும் ஒரே ரீதியாகத் தனக்குள்ளே களிக்கின்றது. பிரகிருதியைக் களிப்பிக்கிறது. ஆனால் மனிதனோ, ஒன்று நாளையைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கிறான், அல்லது போனதை நினைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான். நிகழ் காலத்தில் ஆனந்தத்தை அநுபவிக்க மாட்டேன் என்கிறான்.'

தற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வ. வெ. சு. ஐயர், பலவேறு துறைகளில் ஆர்வத்துடன் ஆற்றியிருக்கும் தொண்டு மறக்கமுடியாதது. அவரது உண்மையான பெருமையைத் தமிழர் போற்றவேண்டும்.

## சுத்தானந்த பாரதி

இப்போது ஜீவந்தர்களாயிருக்கும் தமிழ் வசன கர்த்தர்களில் சுவாமி சுத்தானந்த பாரதியும், மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரும் குறிப்பிடத் தக்கவர்கள். சுத்தானந்த பாரதியார் ஒரு மேதாவி; யோகி; பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்து பரந்த அறிவையும், எழுதும் ஆற்றலையும் பெற்றவர். அவர் ஏராளமான நூல்களைத் தமிழில் செய்யுள் நடையிலும், வசன நடையிலும் இயற்றியிருக்கிறார்; வசனத்தில் அவர் எழுதியிருக்கும் நூல்கள் ஐம்பதுக்கு மேலிருக்கும். நூற் பொருளாக அவர் எடுத்துக் கொண்டிருக்கும் விஷயங்கள் அநேகம். திருவள்ளுவர், கம்பர், இளங்கோவடிகள், காளிதாசர், இத்தாலியக் கவி டாந்தே (Dante) முதலிய தெய்வப் புலமையுடையவர்களின் வரலாறுகள் எழுதப்பட்டு, அவர்களுடைய நூல்களின் பல பாகங்

கள் தமிழ் வசனத்தில் ஆக்கப்பட்டிருக்கின்றன. திருமூலர், அரவிந்தர் இவர்களுடைய யோக சித்தி மர்மங்களைப் பற்றிப் புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. கவி தாகூர், ராமலிங்க சுவாமி இவர்களைப் பற்றியும் சுத்தானந்த பாரதியார் எழுதியிருக்கிறார். இவைகளைத் தவிர நாடகங்கள், கதைகள், நூல் விளக்கங்கள், சுருக்கங்கள் அநேகம் எழுதப் பட்டிருக்கின்றன. சிறந்த பிரெஞ்சுப் புலவர் விக்டர் ஹ்யூகோ (Victor Hugo) எழுதியிருக்கும் இரண்டு ஒப்பற்ற நூல்களை, 'ஏழை படும் பாடு', 'இளிச்சவாயன்' என்ற மகுடங்களுடன் சுத்தானந்த பாரதியார் தமிழில் இயற்றி யிருக்கிறார்.

சுத்தானந்த பாரதியின் நூல்களில் ஒவ்வொன்றுக்காவது, அல்லது அவைகளில் சிறந்தவைகளுக்காவது, தனிப்பட்ட ஆராய்ச்சி எழுத இந்த நூலில் இடமில்லை. அவருடைய இலக்கிய சிருஷ்டி சம்பந்தமாகச் சில பொதுவான தன்மைகளை இங்கே குறிப்பிடலாம். அவர் கொஞ்சகாலம் வ. வெ. சு. ஐயருக்குத் துணைவராயும் நண்பராயும் இருந்தார். ஆனால் அவர் இப்போது எழுதிக்கொண்டிருக்கும் நூல்களில், ஐயரின் திடமான இலக்கிய ஆராய்ச்சி முறைகளைக் காணமுடியவில்லை. சுத்தானந்த பாரதியின் நூல்களில் ஐயருடைய அறிவின் விரிவையும் பரப்பையும் பார்க்க முடிகிறது; அதற்குத் தகுந்த ஆழமும் சிந்தனைத் தெளிவும் இல்லை. அவர் புத்தகங்களில் எல்லாம் சில குறிப்பிட்ட கருத்துக்கள், தத்துவங்கள், சொற்கள், சொற்றொடர்கள், கற்பனைகள் திரும்பத் திரும்ப வருகின்றன. எந்த விஷயத்தைப் பற்றிச் சுத்தானந்த பாரதி எழுதினாலும், யோகத்தினால் அவருக் கேற்பட்டிருக்கும் மனப்பான்மையையும், சித்த விருத்தியின் சாயையையும் பார்க்கலாம். ஆரம்பம் முதல் அடிவரையில் ஒரே உணர்ச்சிப் பரவசம் வாசகத்தில் அமைந்

திருக்கிறது. ஓர் இசைவாணன் உச்சி ஸ்தாயியிலேயே பாடிக்கொண்டிருந்தால், பாட்டு நல்லதாயிருந்தாலும் கேட்போர்கள் சலிப்பு அடையக்கூடும்.

இருந்தபோதிலும், அன்பு நிலையத்திலிருந்து வெளி வரும் நூல்களில், சுத்தானந்த பாரதியார், தமிழ் வசன நடையைப் பலவித பாவங்களில், சக்தியுடனும் ஆவேசத்துடனும், சில இடங்களில் கவிதைப் பான்மையுடனும் கையாள்கிறார் ; எழுதும் வன்மையில் சிறப்பு இருக்கிறது. இவருடைய புலமையில் அனல் - தன்மை ஜொலிக்கிறது. இவர் இலக்கிய சிருஷ்டியை நிதானத்துடன் ஆராய்வதற்கு இன்னும் கொஞ்ச காலம் போக வேண்டும். சமய வேட்கை, யோகம், ஞானம், தத்துவம் முதலியவைகளில் ருசியில்லாதவர் கூட, சுத்தானந்த பாரதியார் மகா கவிகளைப் பற்றி ஆக்கியிருக்கும் நூல்களைப் படித்து இன்புறலாம். விக்டர் ஹ்யூகோவின் நாவல்களை, இவர் தமிழில் ஆக்கியிருக்கும் 'ஏழை படும் பாடு,' 'இளிச்சவாயன்' திறமையுடன் எழுதப்பட்டிருக்கின்றன ; அவைகளின் நடையின் எளிமையும் சக்தியும் எவரையும் கவரவல்லன. 'இளிச்சவாயன்' ஒரு கைதேர்ந்த வல்லவனின் சிருஷ்டி ; குருட்டுத் தயாவிற்கும், இளிச்சவாயனாகிய க்வின் ப்ளேனுக்கும் வளர்கின்ற நிர்மலமான காதலும், க்வின் ப்ளேன் பணக்காரனாகி அவன் வாழ்க்கை மாறுவதும், ராணியின் தங்கையான ஜோசேன், இளிச்சவாயன் மீது ஆசைகொண்டு அவனை வரவழைத்து அவனுடன் செய்த காமக் களியும், கனிந்த நாடகத் தன்மையுடன் சித்திரிக்கப்பட் டிருக்கின்றன. இந்த இரண்டு நூல்களையும் எழுதினவர், தற்காலத் தமிழ் இலக்கியத்திற்கு நூதன செல்வத்தைத் தேடி யளித்து அருந்தொண்டு ஆற்றியிருக்கிறார்.

## டாக்டர் உ. வே. சாமிநாதையர்

மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரைத் தெரியாத தமிழர் இல்லை. இவர் தமிழுக்குச் செய்த பணி முன்னால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள தமிழ் வித்துவான்களில் தலைசிறந்தவர் இவரே. மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் சிஷ்யராயிருந்து முறையாய்த் தமிழைக் கற்று, கடந்த அறுபது ஆண்டுகளாக, ஏடுகளிலிருந்த அரிய பண்டைக் கால இலக்கியங்களைத் தேடிச் சோதனை செய்து அவைகளைச் சிறந்த பதிப்புகளில் பிரசுரித்திருக்கிறார். இவர் செய்திருக்கும் இந்த மகத்தான சேவையை எவ்வளவு புகழ்ந்தாலும் அது மிகையாகாது.

கடந்த பத்து வருஷங்களில் டாக்டர் சாமிநாதையர் அநேக தமிழ் வசன நூல்களை எழுதியிருக்கிறார். இந்த நூல்களில் காணும் வசனம், சிறப்பான குணங்களையும், எளிய நடையையும் பெற்றிருப்பது தமிழருக்கு ஓர் எதிர்பாராத இன்பம். ஏன் எதிர்பாராதது என்பதற்குக் காரணம், டாக்டர் சாமிநாதையரே சென்ற வருஷம் வெளிவந்த 'நினைவு மஞ்சரி' என்ற வசனத் தொகுதியின் முகவுரையில் சொல்கிறார்:—'என் இளமை முதல் என் ஞாபகம் முழுவதும் செய்யுள் நூல்களிலேயே ஊன்றி யிருந்தமையால், வசன நூல்களில் என் கருத்து அதிகமாகச் செல்லவில்லை.' இருந்தபோதிலும் தற்காலத்தில், வசன நூல்களே அதிகமாக வழங்கி மக்களுக்கு அறிவும் இன்பமும் கொடுக்கின்றன என்பதை, இந்த மகா பண்டிதர் தமது விருத்தாப்பிய தசையில் தெரிந்து, அநேக வசன நூல்களைச் செம்மையான நடையில் இயற்ற முன் வந்திருப்பது, தற்கால சக்தியின் ஒரு வெற்றி என்றே சொல்ல வேண்டும்.



மஹாமஹோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

டாக்டர் சாமிநாதையர் முன்னல் வசனங்களை எழுதாதவர் அல்லர். தாம் பதிப்பித்த இலக்கியங்களாகிய ஜீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை முதலியவைகளில் அந்தந்த நூல்களிலுள்ள கதைச் சுருக்கத்தை வசனத்தில் கொடுத்திருக்கிருர். ஆனல் அந்த வசனத்திற்கும், இப்போது இவர் எழுதும் தமிழ் வசனத்திற்கும் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. முன்னல் இவர் எழுதியிருப்பது, பழைய முறைகளைக் கையாண்டு ஆக்கப்பட்ட கடினமான, விறைப்பான பண்டிதர் தமிழ்; சாதாரண மக்கள் வாசித்து லேசாகப் பொருள் தெரிந்துகொள்ளக் கூடாதது. சென்ற பத்து வருஷங்களாக இவர் எழுதியிருப்பது தற்காலத் தமிழ் வசனம். எளிய வார்த்தைகள், எளிய நடை, நேர்மையான வாக்கியப் போக்கு, இவைகளே கையாளப்பட் டிருக்கின்றன. தம்மைப் போன்ற ஒரு மகா பண்டிதர் இந்த மாதிரி தமிழ் எழுதலாமா என்றுகூட இவர் ஆரம்பத்தில் ஐயப்பட்டிருக்கக்கூடும். ஐயத்தைத் தைரியமாய்த் துரத்தியதால், இன்று தற்காலத் தமிழின் சிருஷ்டியில் ஒரு நல்ல பங்கு எடுத்துக்கொள்ள முடிந்தது.

டாக்டர் சாமிநாதையர் சமீபத்தில் எழுதியிருக்கும் வசன நூல்களில், மகா வித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையின் சரித்திரத்திற்கு உன்னதமான ஸ்தானம் உண்டு. எப்படிச் சங்க நூல்களையும் பழைய காவியங்களையும் முதல் முதலாக அச்சேற்றிப் பதிப்பித்த பெருமை இவருக்குரியதோ, அதே மாதிரி தமிழில், ஒரு தமிழ்ப் புலவரின் வாழ்க்கைச் சரித்திரத்தை விஸ்தாரமாக வசனத்தில் எழுதிய பெருமையும் இவருக்குத்தான் உரியது. இந்த நூலின் வசன நடை எளிதாயும், பண்டிதர்கள் கையாளும் அமைப்புத் துறட்டுக ளில்லாமலும் இருக்கிறது. அநேக இடங்களில் நல்ல இலக்கியச் சுவையையும் காணலாம்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மீது இவருக்கிருந்த குரு பக்தியையும் அன்பையும் பார்த்தால் இவரை ஒரு 'பாஸ்வெல்'* என்று சொல்லலாம். அவருடைய அபாரமான புலமையை இவர் வியந்து, கணக்கற்ற இடங்களில் போற்றியிருக்கிறார். கடந்த மூன்று நான்கு தலைமுறைகளிலுள்ள தமிழ்ப் புலவர்களின் வரலாறுகளும், தமிழ் வளர்ச்சி சம்பந்தமான நிகழ்ச்சிகளும் இந்த நூலில் ஒருவாறு காணப்படுகின்றன. சில சம்பவங்கள் நகைச் சுவையைக் கிளப்பக் கூடியனவாயுள்ளன. சூரைமாநகர்ப் புராணம் பாடியபோது, ஜனங்கள் மகா வித்வானிடம் வந்து ஒவ்வொரு பாடலும் நாலடிக்குக் குறையக் கூடாதென்று தெரிவித்துக்கொண்டது ரஸமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நூலும், அவருடைய வசனத் தொகுதிகளான 'நான் கண்டதும் கேட்டதும்', 'புதியதும் பழையதும்', 'நல்லுரைக் கோவை', 'நினைவு மஞ்சரி' இவைகளும், இவர் இப்போது பத்திரிகையில் பிரசுரித்துவரும் தம் வாழ்க்கைச் சரித்திரமும், இவரை ஒரு தற்காலத் தமிழ் வசனகர்த்தராக ஆக்கிவிட்டன. இந்த நூல்களில் காணப்படும் தமிழ் நாட்டைச் சேர்ந்த பல புலவர்கள், சங்கீத வித்துவான்கள், மதத் தலைவர்கள், பிரபுக்கள், நீதிபதிகள் முதலிய பிரபலஸ்தரைப் பற்றிய சம்பவங்களையும், குணவிளக்கங்களையும், துண்டு துணுக்குகளையும், தமிழர் போற்றிப் படிப்பார்கள்.

## ஏனைய வசனகர்த்தர்கள்

தமிழ் வளர்ச்சிக்கு நல்ல தொண்டு புரிந்த ஏனைய வசன கர்த்தர்களில் சுவாமி வேதாசலத்தையும், காலஞ் சென்ற வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரையும் குறிப்பிடலாம்.

---

*ஆங்கிலப் புலவரான டாக்டர் ஜான்ஸனின் சரித்திரத்தை எழுதிய சிறந்த நண்பர்.

இருவரும் சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையில் ஆசிரியர்களா யிருந்த ஆங்கிலம் கற்ற சிறந்த தமிழ் வித்துவான்கள். சுவாமி வேதாசலம் பெரும்பாலும் சமய விஷயங்களைப் பற்றி, வாதப் பிரதிவாத பாவத்துடன் நூல்களை இயற்றியிருக் கிறார்; அறிவு விஷயங்களைப் பற்றிச் சில கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். இவர் தமது நடையில் வடமொழிப் பதங்களை விலக்கியே எழுதுகிறார். இருந்தபோதிலும் அது சில இடங்களில் சக்தி வாய்ந்திருக்கிறது. சூரியநாராயண சாஸ்திரியார் 'மதிவாணன்' முதலிய வசன நூல்கள் இயற்றியிருக்கிறார். இவர்கள் இருவரும் பழைய முறையி லேயே உரைநடையைக் கையாண்டிருக்கிறார்கள்; இவர்க ளுடைய தமிழ் தற்காலத் தமிழ் அல்ல. சூரியநாராயண சாஸ்திரியார் பண்டிதர் எழுதும் தமிழ் நடையைக் கண்டித் திருந்த போதிலும், தாம் அந்த நடையைக் கைவிடவில்லை. உதாரணமாக 'மதிவாண'னில் வரும் இந்தப் பாராவைப் பார்க்கலாம்:

> அப்போழ்தத்துக் கரியமாலனைய காளையொருவன் விரைந்து அவட்குப் பின்புறம் போந்து அவடன் விழிக ளிரண்டையுந் தன்னிருகையா லிறுகப் புதைத்துக் கொண்டு நின்றான். அன்னணமொருவன் கண்புதைத்த துணர்ந்த அந்நங்கை, 'விடுதி விடுதி விடுதி' என்று மெல் லெனக் கூறினள். அதற்கவன், 'இதுவே நந்தமக்கேற்ற நல்ல விடுதி' என்று கூறி நகைத்தனன். நகைத்தலும் அவள், 'மாயவ! இஃதுனக்குத் தக்கதன்று. நின் பெருந் தன்மையோடேலாது. என்னை விட்டுவிடு. அல்லாக்கால் யான் உரத்த குரலினில் எந்தையைக் கூவுவேன்' என்று வெகுண்டனள் போலக் கூறினள். உடனே மாயவன் தன் னிரு கரங்களையும் வாங்கிக்கொண்டு, அவட்கு முன்புறம் போந்து, 'அம்மா! கயற்கணீ! அடியேன் மீதும் அத்துணை வெகுளியோ!' என்றனன். இது கேட்ட கயற்கணி, 'யான் நன்றாய்க் கோதி முடித்திருந்த கூந்தலவிழ்ந்து குலைந்து விட்டதே! இனி யென் செய்வது?' என்றாள். அதற்கு

> மாயவனுடனே, 'கொண்டலுங் கறுத்து நிகர்க்கலாது தங் கண்ணீர் சொரிந்து உருவழியுமாறு புரியும் நின் கூந்தலை யான் சீவி முடிக்கின்றேன்' என்று அவளது கூந்தலைப் பற்றப் புகுமளவினில், அவள் சிறிது விலகிக்கொண்டு நின்று, 'நீ என்னைத் தவிர்த்து வேறெம்மங்கையையுங் கனவினும் விழையேன் என்று சொக்கலிங்கப்பெருமா னறியச் சத்தியஞ்செய்து வாய்மொழி கூறினாலன்றி நீ என் கூந்தலைத் தொடற்பாலை யில்லை' என்றாள்.

பல இடங்களில் பழைய தமிழ் நடை, பண்டிதர் தமிழ் நடை, விறைப்பான நடை என்றெல்லாம் நாம் பிரஸ்தாபித் திருக்கிறோமாதலால், அதற்கு ஒரு தக்க உதாரணம் மேலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை எழுதினவர் ஆங்கிலங் கற் றவரே. இவர் நூல்களில் ஒன்றேனும் தற்காலத் தமிழ் இலக்கியத்திற்குரியதாய் இல்லாவிட்டாலும், சாஸ்திரியார் தம் காலத்தில் தமிழ் வளர்ச்சிக்காகவும் தமிழின் கௌரவத் திற்காகவும் பாடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# V

# தமிழ் இலக்கியம் - வசனம்

## இரண்டாம் பகுதி

### இலக்கிய ஆராய்ச்சி

ஆங்கிலத்தில் 'லிடெரரி க்ரிடிஸிஸம்' (Literary Criticism) என்ற சொற்ருெடருக்குச் சரியாக நாம் இலக்கிய ஆராய்ச்சி என்பதை உபயோகிக்கலாம். இது ஒரு தனிப் பட்ட கலை; சாஸ்திரமுங் கூடத்தான். இலக்கியத்தின் அடிப்படையான தத்துவங்களை ஆராய்ந்து, அது மனித னுக்கு இன்பம் கொடுக்கும் மர்மத்தை அறிவது உண்மை யான இலக்கிய ஆராய்ச்சி யாகும். இவ்வித அடிப்படை யான தத்துவங்களை வைத்துத்தான் நூல்களின் நயத்தைப் பரிசீலனை செய்ய வேண்டும். ஒரு பாட்டு நன்ருயிருக் கிறது, அது இன்பம் கொடுக்கிறது என்று சொல்லிக் கொண்டே யிருந்தால் மாத்திரம் போதாது. அந்தப் பாட் டில் என்ன இருக்கிறது, அது ஏன் எனக்கு இன்பம் தருகி றது, அந்தப் பாட்டிலிருந்து நான் இன்பம் அடைவது சரியா என்ற வினுக்களை எழுப்பி, அவைகளுக்கு விடைகளை யும் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த முறையில் பார்த் தால் இலக்கிய ஆராய்ச்சிக் கலை இன்னும் தமிழ் நாட்டில் பிறக்கவே யில்லை யென்று சொல்லலாம். துருக்கி தேசத்துப் பண்டைக் கால மக்கள், மலை, ஆறு, கடல், சூரியன், சந்தி ரன், எதைப் பார்த்தாலும் ஆச்சரியப்பட்டு, 'கடவுள் பெரு மையே பெருமை!' என்று சொல்லுவார்களாம். அது போல்

நம் முன்னோர்கள் எந்த நூலைக் கண்டாலும் அதை ஆக்கிய புலவர்களின் பெருமையை ஒரே தன்மையில் மதித்துப் புகழ்ந்தார்கள். அவர்களுக்கு எல்லா நூல்களும் சிறந்தவை; சொற்சுவையும் பொருட்சுவையு முள்ளவை; எல்லாக் கவிகளும் பெரியவர்கள்; அவர்கள் வாக்கு எல்லாம் தெய்வ வாக்கு. புலவர்களை ஒப்பிட்டுப் பார்த்து ஏற்றம் தாழ்வு கண்டுபிடிப்பதில் கம்பரும் கவிச் சக்கரவர்த்தி தான்; ஒட்டக்கூத்தரும் சயங்கொண்டாரும் கவிச் சக்கரவர்த்திகள் தான்! இந்த மனப்பான்மைதான் இன்னும் தமிழறிஞர்களிடம் பெரும்பான்மையாகக் குடிகொண்டிருக்கிறது. தற்காலத் தமிழ் இலக்கியம் செழித்து வளர்ச்சியைப் பெற்றுக்கொண் டிருந்தபோதிலும், அதற்குப் புஷ்டி கொடுக்கக்கூடிய இலக்கிய ஆராய்ச்சி இன்னும் அபிவிருத்தி அடையவில்லை.

மேல்நாடுகளில் வழங்கிவரும் நவீன ஆராய்ச்சி முறைகள் தமிழருக்குப் புதியன. ஆனால் இலக்கியங்களை ஆராய்ச்சி செய்வது தமிழ்ப் புலவர்களுக்குப் புதிதன்று. காவியங்கள் எல்லாம் செய்யுள் நடையிலிருப்பதால், அவைகளுக்குப் பதவுரை பொழிப்புரை செய்வதும், மேற்கோள்கள் சொல்வதும், அவைகளிலுள்ள அணி, அலங்காரங்கள், திணைப் பாகுபாடுகள் முதலியவற்றை விளக்குவதும், கதைப் போக்கைத் தழுவிய வேறு கதைகளையும் உபகதைகளையும் கூறுவதும், பாட்டுக்களுக்கு விசேஷ அர்த்தம் சொல்லுவதுமே, முன் காலத்தில் ஆராய்ச்சியாகக் கருதப்பட்டன. இவ்வித ஆராய்ச்சியின் பயனாக, தமிழில் இப்போதுள்ள உரைகள் ஆக்கப்பட்டன. தற்காலத்தில் இலக்கிய ஆராய்ச்சி செய்வது என்பது நூல்களுக்கு உரைகள் எழுதுவது அன்று; அதைவிட அதிகக் கஷ்டமாயும், நுட்பமாயும், விரிந்ததாயுமுள்ள ஒரு வேலையாகும். ஒரு காவியம் சம்பந்த

மாக, அதன் அமைப்பு, நடை, கவியின் உள்ளத்தில் எழுந்த சக்தியால் அது சிருஷ்டி பெற்ற நேர்மை, அதன் சிருஷ்டிக்கு அநுகூலமா யிருந்த சூழ்நிலே, சந்தர்ப்பங்கள், கவியின் மனோபாவம், கவிதையின் அழகு, பாத்திரங்களின் குணகுணங்கள், கதைப்போக்கின் தன்மை, மொத்தமாக ஒரு காவியம் ரஸிகர்களின் மனத்தில் உண்டாக்கும் ஆனந்தம், இவைகளைப் பற்றி, நுண்ணிய கலே - ருசியுடனும், கற்பனைத் திறனுடனும் வரைவதே தற்கால இலக்கிய ஆராய்ச்சி முறையின் முக்கிய அம்சம். ஒரு கவியை அவர் காலத்திலுள்ள கவிஞர்களுடனும், அவர் இனத்தைச் சேர்ந்த கவிஞர்களுடனும், மற்றக் கவிஞர்களுடனும் ஒப்பிட்டுத் தராதரங்களைச் சோதிப்பது அந்த முறையின் மற்றோர் அம்சம். ஆகையால் நவீன இலக்கிய ஆராய்ச்சிக் கலேக்கு வெறும் பாண்டித்தியம் மாத்திரம் போதாது; கற்பனு சக்தியும் சிருஷ்டி சக்தியும் வேண்டும். இவ்வித ஆராய்ச்சிகளைத் தமிழ் இலக்கியங்கள் இன்னும் பெறவில்லே. தமிழிலுள்ள மிகப் பெரிய இலக்கியங்களான கம்ப ராமாயணம், குறள், சிலப்பதிகாரம், ஜீவக சிந்தாமணி போன்ற நூல்களுக்குச் சரியான முறையில் எழுதப் பெற்ற இலக்கிய ஆராய்ச்சிகளே தோன்றவில்லே.

## இலக்கிய சம்பந்தமான ஆராய்ச்சி

இலக்கிய ஆராய்ச்சியும் இலக்கிய சம்பந்தமான சரித்திர ஆராய்ச்சியும் ஒன்றல்ல. அடிப்படையான கலேத் தத்துவங்களை அளவுகோல்கள் போல் வைத்து நூல்களின், காவியங்களின், குணகுணங்களையும் கவிதையையும் பார்ப்பது தான் இலக்கிய ஆராய்ச்சி. சிந்தாமணியின் கவிதை நயம் எத்தன்மையது, இதைவிடக் கம்பரின் கவிதை அதிக நயத்தைப் பெற்றிருக்கிறதா, அப்படியானுல் எந்த அம்சங்

களில் என்றெல்லாம் கவனிப்பது இலக்கிய ஆராய்ச்சி. சிந்தாமணியும் கம்ப ராமாயணமும் எப்போது எழுதப்பட்டன என்று கவனிப்பது இலக்கிய சம்பந்தமான சரித்திர ஆராய்ச்சி.

தமிழ் இலக்கியங்களுக்கு வேறொரு துரதிர்ஷ்டமும் வாய்த்திருக்கிறது. அநேக கவிகளைப் பற்றி அவர்கள் பெயர்களையும், சிருஷ்டித்த நூல்களையும் தவிர வேறொன்றும் திட்டமாகத் தெரியவில்லை. வெவ்வேறு காலங்களில் இருந்த கவிகள் ஒரே காலத்தி லிருந்ததாகச் சில விநோத மான கர்ண பரம்பரைக் கதைகளும் இருக்கின்றன. தெய்வத்தின் அருளால், பயிற்சி யில்லாதவர்கள், சிறு குழந்தைகள்கூட, கவிகளாய்விட்டதாகக் கதைகள்; கடவுளே நேரில் தோன்றி முதலடிகளைக் கவிகளுக்கு எடுத்துக் கொடுத்துக் கடாக்ஷம் செய்ததாகக் கதைகள், தமிழ் நாட்டில் நிலவி வருகின்றன. இலக்கிய வளர்ச்சியின் சரித்திரத்தைத் தெளிவாகவும், கோவையாகவும், பூரண மாகவும் தெரிய மார்க்கமில்லை.

தமிழ் நாட்டு அரசாங்கங்களின் சரித்திரங்களைப்பற்றிய குழப்பமும் முற்றும் தெளிந்தபாடில்லை. அரசர்களுக்கும் புலவர்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்திருந்ததால் இலக்கியங்கள் ஏதாவது வழி காட்டுகின்றனவா என்று சரித்திரக்காரர்கள் தேட ஆரம்பித்தார்கள். இந்த நிலைமையில் கடந்த ஐம்பது வருஷங்களுக்கு மேலாகத் தமிழ்ப் பண்டிதர்களும், வித்துவான்களும், சரித்திர ஆசிரியர்களும், ஐரோப்பிய விற்பன்னர்களுள்ளிட்ட பலரும், மேலே குறிப்பிட்டிருக்கும் குறைகளை நீக்கப் பெருமுயற்சியுடன் இலக்கியங்கள், சிலாசாசனங்கள், இவைகளின் உதவியைக்கொண்டு ஆராய்ச்சி செய்து, ஒருவாறு பலனும் அடைந்திருக்கிறார்கள். இது உண்மையான ஆராய்ச்சிக்கு இன்றியமையாத

பூர்வாங்கமான வேலையா யிருப்பதால் முக்கியமானது. இதில் ஈடுபட்ட பல தமிழ்ப் பண்டிதர்களும், ஆங்கிலப் பயிற்சியுள்ள தமிழ்ப் புலவர்களும் பல விஷயங்களைப் பற்றிக் கட்டுரைகள் எழுதி, மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் நடத்தப்படும் 'செந்தமிழ்'ப் பத்திரிகையிலும், வேறு பத்திரிகைகளிலும், ஆங்கிலப் பத்திரிகைகளிலும், தனிப் புத்தகங்களிலும் வெளியிட்டிருக்கிறார்கள். இவைகளை விவரமாய்க் கவனிப்பது இந்த நூலுக்கு அவசியமில்லை. இவை பழைய நடையில் எழுதப்பட்டவை ; சொற்களும் வாக்கியங்களும் இரும்பினால் செய்யப்பட்ட அங்கிகளைப் போட்டுக்கொண்டு நிற்பது போல விறைப்பாய் இருக்கின்றன. பொருள் எவ்வளவு அருசியாயும், மனத்தைக் கவரக்கூடாததாயும் இருந்தாலும், அதையும் எளிய நடையில் நேர்த்தியாய் எழுதும் மேல்நாட்டு அறிஞர்களின் முறைகளைத் தமிழ் அறிஞர்கள் பின்பற்ற வேண்டும். மேலே குறிப்பித்த ஆராய்ச்சிகளில் பெரும்பாலானவை ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டிருக்கின்றன. எழுதியவர்களில் கனகசபைப் பிள்ளை, சுந்தரம் பிள்ளை, கே. ஜி. சேஷையர், கால்ட்வெல், ஹல்ஷ், வெங்கையா, கோபிநாதராவ், கிருஷ்ணசாமி ஐயங்கார், பி. டி. ஸ்ரீநிவாஸையங்கார் முதலானவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள். தமிழில் இவ்வித ஆராய்ச்சி செய்தவர்களில் ஸ்ரீமான்கள் மு. ராகவையங்கார், ரா. ராகவையங்கார், காலஞ் சென்ற கே. எஸ். ஸ்ரீநிவாஸ பிள்ளை குறிப்பிடத் தகுந்தவர்கள்.

நவீன முறையில் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டிருப்பதாகப் பிரசுரித்த சில நூல்களை நோக்கினால், முதனூல்களுக்கு வசனத்தில் ஒரு சுருக்கமும், அவைகளின் தன்மைகளைப் பற்றிப் பொதுவாக ஒரு புகழ்ச்சியுமே காணப்படுகின்றன. பெரிய காவியங்களுக்கும் இலக்கியங்களுக்கும், வசனச் சுருக்கங்கள் அவசியமாயிருந்த போதிலும், அவை

ஆராய்ச்சிகளாகா. தமிழ் இலக்கிய ஆராய்ச்சி சம்பந்தமாக, நவீன முறையில் முதல்தரமான நூல் இதுவரையிலும் தமிழில் வெளிவரவில்லை. ஆங்கிலங் கற்ற தமிழ்ப் புலவர் களில் சிலர், தமிழ் இலக்கியங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார்கள். பல புதிய கருத்து வளங்களை ஆங்கிலத்தில் எழுதுவது தமிழில் எழுது வதைக் காட்டிலும் லகுவானது என்ற முறையிலோ, அல்லது ஆங்கிலம் கற்றவர்கள் தமிழ் நூல்களின் நயங்களை அறியவேண்டுமென்ற நோக்கத்துடனோ, அவர்கள் எழுதி யிருப்பதாகக் கருதலாம். இந்த இனத்தில் வ. வெ. சு. ஐயர் கம்பனைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் நூல் தலைசிறந்தது. அதில் அவர் கம்ப ராமாயணத்தைப் பற்றி ஒரு நல்ல ஆராய்ச்சியைச் செய்து, அந்த நூலின் பல பாடல்களுக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பும் கொடுத் திருக்கிறார். இந்தப் புத்தகத்தில் ஆசிரியர் கம்ப ராமாயணப் பாத்திரங்களின் குண விபாகங்களைப் பற்றிக் கூர்மையுடனும் தெளிவுடனும் வரைந்திருக்கிறார்.

## இப்போதுள்ள ஆராய்ச்சி நூல்கள்

தமிழில் தற்கால முறைகளை அநுசரித்த முதல்தர மான இலக்கிய ஆராய்ச்சி நூல் இல்லாவிட்டாலும், இப்போ திருக்கும் சில நூல்களைக் கவனிக்கலாம். சென்ற நூற்றாண் டின் இறுதியில் திருவாவடுதுறை மடத்து வித்துவானா யிருந்த சபாபதி நாவலர் 'திராவிடப் பிரகாசிகை' என்ற ஒரு நூலை எழுதினார். ஆசிரியர் என்ன நோக்கத்துடன் இந்த நூலை எழுதியிருந்த போதிலும், அது ஓர் இலக்கிய ஆராய்ச்சி நூலாகவே முடிந்தது. சபாபதி நாவலர் அதீத மான சமயப் பற்றுடைய சைவர். சமய சம்பந்தமில்லாத இலக்கியத்தை மதிக்காத கூட்டத்தைச் சேர்ந்தவர். ஆகை

யால், அவர் தமிழ் இலக்கியங்களின் காலம், தாராதரம், இவைகளைப்பற்றிச் சொல்லும் அபிப்பிராயங்களைத் தற்காலத் தமிழர் கொஞ்சமும் ஒப்புக்கொள்ள முடியாது. இருந்த போதிலும் 'திராவிடப் பிரகாசிகை' பழைய முறையில் ஆற்றலுடன் எழுதப் பெற்ற ஓர் ஆராய்ச்சி நூல். தமிழ் மொழி, இலக்கணம், இலக்கியம், இவை சம்பந்தமாயுள்ள அடிப்படையான கொள்கைகளைப் பற்றி, அவர் தம்முடைய அபிப்பிராயங்களைத் திட்பத்துடன் சொல்லி, அவைகளுக்கு மாறுபட்ட கருத்துக்களைத் தாக்கி வாதாடுகிறார். தமிழ் இலக்கியத்திலுள்ள எல்லா முக்கிய நூல்களையும் குறிப்பிட்டு அவைகளைப்பற்றிச் சுருக்கமான குறிப்புக்களும் எழுதியிருக்கிறார். காலஞ்சென்ற செல்வக்கேசவராய முதலியார் எழுதிய நூல்களில் கம்பரைப் பற்றியிருக்கும் ஒரு சிறு நூல் நல்ல முறையில் இருக்கிறது. காலஞ்சென்ற அனவரதவிநாயகம் பிள்ளை சில இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் 'தமிழ்ப் பெருமக்கள் வரலாறு' என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார். வேறு சில அறிஞர்களும் சில இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள்.

'கம்ப ராமாயண ரசனை' என்ற மகுடத்துடன் வ. வெ. சு. ஐயரால் எழுதப் பெற்று முற்றுப் பெறாத கட்டுரையே தற்காலத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி நூல்களில் தலைசிறந்தது. அதில் அவர் கம்ப ராமாயணத்தின் காவிய அமைப்பைப் பற்றி நுண்ணிய அறிவுடனும், நல்ல ரஸிகத் தன்மையுடனும் விளக்கி, கம்பனை, வால்மீகி, ஹோமர் முதலிய மகா கவிகளோடு ஒப்பிட்டு, அநேக அம்சங்களில் கம்பன் அவர்களை வென்றிருக்கிறான் என்று நிரூபணம் செய்யும் கலைத்திறன் அபாரமானது. அவர் செய்திருக்கும் ஆராய்ச்சி புதுமையாகவும், தற்கால முறைகளைத் தழுவியும் இருக்கிறது. இவருக்கு முன்னுலுள்ள வேதநாயகம் பிள்ளை, கிருஷ்ண

பிள்ளை, ராஜமையர் போன்ற புலவர்கள், கம்பனை வாயார புகழ்ந்திருந்தபோதிலும், அக் கவியைத் தற்கால இலக்கியக் கொள்கைகளைக் கையாண்டு ஆராய்ந்து, மற்ற மகா கவிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில்லை.* கேவலம் மொழிப் பற்றால் வ. வெ. சு. ஐயர் தம்முடைய அபிப்பிராயத்தைக் கூறவில்லை; பல வருஷங்களாகச் செய்த ஆழ்ந்த ஆராய்ச்சியின் பயனாகவே அவர் கம்பனைப் பற்றிய முடிவுக்கு வந்தார். அவர் கைக்கொண்ட இலக்கியத் தத்துவ முறைகளைக் கையாண்டு, அவரைப் பின்பற்றிக் கம்ப ராமாயண ஆராய்ச்சியை விஸ்தரிக்க மற்றவர்கள் முன்வரவில்லை. இப்போது கம்பன் பாட்டுக்களின் நயங்களைப் பற்றிப் பிரசங்கங்கள் நடைபெறுகின்றன; நூல்களும் ஒன்றிரண்டு வெளிவந்திருக்கின்றன. கம்பனைப் புகழ்வது ஒரு சடங்கு போலாகி, எங்கு பார்த்தாலும் கம்பன் விழாக் கொண்டாட்டங்கள் ஆடம்பரத்துடன் நிகழ்கின்றன. தமிழ் அறிஞர்களும் ரஸிகர்களும், கம்பனுக்கும் தமிழுக்கும் செய்ய வேண்டிய அவசியமான சேவையை மறந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டுப் பண்டிதர்களுக்கு நவீன முறையில் கம்ப ராமாயணத்தை ஆராய்ச்சி செய்ய வழி காட்ட வேண்டியது கம்பனைப் போற்றுகிறவர்களின் கடமையாகும். கம்பனைப் பற்றி உற்சாகம் இருக்கிறது; ஆவேசம் கிளம்புகிறது; ஆனால் இலக்கிய ஆக்க வேலை மனப்பான்மையைப் பார்ப்பதற்கு அரிதாயிருக்கிறது. ஆங்கிலங் கற்ற தமிழ் வித்துவான்கள், நவீன முறைகளை அநுசரித்துத் தமிழ் இலக்கியங்களை

---

* 1909-ம் வருஷத்தில் வெளிவந்த திரு. செல்வக்கேசவராய முதலியாரின் **கம்பநாடர்** என்ற நூலில் இந்த வாக்கியம் காணப்படுகிறது:— 'கம்பர், கற்பனா சக்தியிலும் வருணனை யலங்காரங்களிலும் மில்டனுக்கு (Milton)க் குறைந்தவரல்லர்; யூரோப்பியர்களுடைய ஆதி கவியான ஹோமருக்கு (Homer) எவ்விதத்திலும் இளைப்பவரல்லர். ப்ரபஞ்ச விலாஸப் புலமையில் ஒருவாறு ஷேக்ஸ்பியரோடொத்தவர் (Shakespeare).'

ஆராய்ச்சி செய்து, தமிழில் ஆராய்ச்சி நூல்கள் எழுதுவதே அவர்கள் தமிழ் மொழிக்குச் செய்யக்கூடிய பெரிய தொண்டு.

## நாவல்களும் சிறு கதைகளும்

தமிழ் வசன நடையில் வெளிவந்திருக்கும் நூல்களில் பெரும்பாலானவை நாவல்கள். இந்த இனத்தில் நூற்றுக் கணக்கான புத்தகங்கள் தோன்றியிருக்கின்றன. நாவல் என்பது மேல் நாட்டு இலக்கியப் பாகுபாடுகளில் ஒன்று. அங்கே அது நல்ல வளர்ச்சியைப் பெற்று மிக உன்னதமான ஸ்தானத்தை அடைந்துள்ளது. தன்னுடைய சித்திரத்தைத் தானே பார்த்து ஆனந்திக்கும் இயல்பு மனிதனுக்கு உண்டு. தன் இயற்கை, தான் வாழும் வாழ்க்கை, இவைகளின் வேறுபாடுகளை மனிதன் இலக்கியங்களில் பார்த்து அனுபவிக்க விரும்புகிறான். இந்த விருப்பத்தினாலே, படிப்புப் பரவாத காலத்தில் கதைகளைக் கேட்கவும், படிக்கத் தேர்ச்சி பெற்ற காலத்தில், அவைகளை வாசிக்கவும் அவன் அபிலாஷை கொள்கிறான். மேல்நாட்டு இலக்கிய முறைகளின்படி, நாவல் என்பது ஒரு பெரிய கதை; ஒருவருக்கொருவர் சம்பந்தமுள்ள பல பாத்திரங்களின் வாழ்க்கையில், ஒரு பெரும் பகுதியை முழு விவரங்களுடன் விஸ்தரிக்கும் சித்திரம். பிரெஞ்சு, ரஷ்ய மொழிகளிலுள்ள நாவல்களில் ஒவ்வொன்றும் ஆயிரக்கணக்கான பக்கங்கள் அடங்கியிருக்கும். நாவல்களில் இரு வகையுண்டு. மனித வாழ்க்கையின் தன்மையை உள்ளபடியே பார்த்துப் புனைவது ஒரு வகை; ஆசிரியன் தனது கற்பனா சக்தியால் தன்னைச் சுற்றியிருக்கும் வாழ்க்கைக்கு ஒரு நூதன ஒளியை அளித்துத் தன் மனோபாவத்தால் சிருஷ்டித்தல் மற்றொரு வகை. இரண்டு வகைகளிலும் பல உயர்ந்த நாவல்கள் மேல் நாட்டு மொழிகளில் காணப்படுகின்றன.

சாதாரண ஜனங்களுக்கு இலக்கியப் பயிற்சியில்லாததை முன்னிட்டு அவர்கள் வாசிப்பதற்காக, மயிர்ச்சிலிர்ப்பு உண்டாக்கக்கூடிய பலவிதமான கதைகளும் எண்ணிறந்தனவாய் எழுதிக் குவிக்கப்படுகின்றன. மேல் நாடுகளில் இயற்றப்படும் இவ்வித நாவல் குப்பைகளைப் பார்த்து, அவைகளிலுள்ள கதைகளுக்குப் புனைபெயர்களைக் கொடுத்து, தமிழ் நாட்டிலும் பலர் நாவல்களை எழுதியிருக்கிறார்கள். விதவிதமான மகுடங்களைப் பெற்ற இவ்வித நாவல்களில் நல்ல வசன நடையாவது, இலக்கியத் தன்மையாவது, நுட்பமான கலைப்பாங்காவது இல்லை. இவைகளை எழுதுபவர்கள், விற்கும் பண்டத்தைச் செய்யும் தொழிலாளிகள் போல்தான்; அரைகுறைப் படிப்புள்ள ஆண் பெண்கள் எதைப் படிக்க விரும்புகிறார்களோ அதையே, பொருள் லாபத்தை உத்தேசித்து, நாவல் ஆசிரியர்கள் எழுதித் தள்ளுகிறார்கள்.

நாவல் எழுதுபவர்கள் நல்ல கலை ருசியையும், கற்பனைத் திறனையும், விரிந்த அறிவையும், மனித இயற்கையின் ஆழ்ந்த தன்மையையும் திரிபுகளையும் பற்றித் தெள்ளிய ஞானத்தையும் பெற்றிருக்க வேண்டும்; தங்கள் சொந்த நாட்டு நாகரிகத்தையும், சமுதாய வாழ்வையும், சரித்திரத்தையும் நன்றாய்த் தெரிந்திருக்க வேண்டும்.

தற்காலத் தமிழ் நாவல்களெல்லாவற்றையும் மொத்தமாகக் கண்டித்தலாவது, குறை கூறுதலாவது இந்த நூலின் நோக்கமில்லை. நயமுடைய சில நாவல்களும் இருக்கின்றன. நயமில்லாதவை அநேகமுங்கூட, மேல் நாட்டில் சாதாரண ஜனங்கள் வாசித்து இன்புறும் நாவல்களைவிட மிகத் தாழ்ந்தவை என்று சொல்லமுடியாது. தமிழ் நாட்டின் குப்புசுவாமி முதலியார்களும், ரங்கராஜுக்களும், துரைசாமி ஐயங்கார்களும், கோதைநாயகி அம்மாள்களும், ஆங்கில நாட்டிலுள்ள 'சார்லஸ் கார்வைஸ்'கள் (Charles Garvice),

'பிலிப்ஸ் ஓப்பன்ஹீம்' (Phillips Offenheim), 'வில்லியம் லா க்வேக்' (William Le Queux), 'செக்ஸ்டன் ப்ளேக்' களைவிடக் குறைந்தவர்களல்லர். அவர்கள் எழுதியிருக்கும் நாவல்களைக் கவனித்தால் எல்லோரும் ஒரே இனத்தார்களென்று விளங்கும்.

பொதுவாக, தமிழ் நாவல்களுக்காவது, அவைகளில் மிகச் சிறந்தவைகளுக்காவது மதிப்புரை எழுதுவது இந்த நூலுக்கு அவசியமில்லை. நாவல்களினால் தற்காலத் தமிழ் இலக்கியம் எந்த விதத்தில் புஷ்டியடைந்திருக்கிறது என்பதை மாத்திரம்தான் இங்கு கவனிக்க வேண்டும். இந்த முறையில் மூன்று சிறந்த நூல்களைக் குறிப்பிட வேண்டியது அவசியம். அவை நல்ல இலக்கியத் தன்மையுடன், தமிழ் நவீனகத்தின் மும்மணிகளாய்த் திகழ்கின்றன. வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரமும், ராஜமையரின் கமலாம்பாள் சரித்திரமும், மாதவையாவின் பத்மாவதி சரித்திரமும் நல்ல நாவல்கள். இவைகளில் முதலிரண்டைப் பற்றியும் முன் பகுதியில் விஸ்தாரமாகக் கவனித்திருக்கிறோம். காலஞ் சென்ற அ. மாதவையா ஆங்கிலமும் தமிழும் நன்றாய்க் கற்ற அறிஞர். அவர் அநேக நூல்களைத் தமிழில் இயற்றியிருக்கிறார். அவைகளில் சிறந்தது பத்மாவதி சரித்திரம்; விஜய மார்த்தாண்டம் அதற்கு அடுத்தபடிதான். பத்மாவதி சரித்திரம் நல்ல முறையில் எழுதப் பெற்று, இலக்கியச் சுவை ததும்பும் நாவல். கதை ரஸத்துடன் இருப்பதுமன்றி, பாத்திரங்களும் நயத்துடன் சித்திரிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ் நாட்டின் சமுதாய வாழ்க்கை அடைந்த மாறுதல்களை இந்த நூல் நன்றாய்க் காட்டுகிறது. மாதவையாவின் வசன நடை செம்மையானது; அது கூடுமானவரை எளிதாயிருந்தபோதிலும் பண்டிதர் தமிழ் போல் சிற்சில இடங்

களில் இருக்கிறது. பத்மாவதி சரித்திரத்திற்கு, தமிழ் நாவல் உலகத்தில் நிலைத்த ஸ்தானம் ஏற்பட்டுவிட்டதென்று சொல்லலாம். இருந்தபோதிலும், நாவல் கலை, தமிழ் நாட்டில நன்ருய் வேரூன்றிச் செழித்து ஓங்கவில்லை. தமிழ் நாட்டில் இப்போது உயர்ந்த நாவல் ஆசிரியர்கள் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்; தமிழ் நாட்டு வாழ்க்கையின் பலவிதமான அம்சங்கள் இன்னும் சிறந்த நாவல் சிருஷ்டிக்குப் பொருளாக அமையவில்லை. ஆயினும் நாவல் கலையை அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற ஆர்வம் காணப்படுகிறது.

சொந்த நாட்டு வாழ்க்கையைப்பற்றிச் சிறந்த நாவல்கள் இல்லாவிட்டாலும், பிற பாஷைகளிலுள்ள நல்ல நாவல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படுகின்றன. தற்கால இலக்கியத்தில் வளம் பெற்ற வங்காளி பாஷையிலுள்ள உயர்ந்த நாவல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பவர்கள், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உபகாரமாயிருக்கிருர்கள். பங்கிம் சந்திர சட்டர்ஜி, சரத் சந்திர சட்டர்ஜி, இவர்களுடைய நாவல்கள் எல்லாம் அநேகமாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. தாகூரின் நாவல்கள் சிலவும், ஹிந்தி ஆசிரியர் ப்ரேம்சந்தின் நாவல்கள் சிலவும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த மொழிபெயர்ப்புகள் எல்லாம் தமிழருக்கு ஓர் அரிய விருந்தாகும். மூல நூல்கள் நல்ல இலக்கியத்தன்மையுடனும், சுவையுடனும் கதை வளத்துடனுமிருக்கின்றன; மொழிபெயர்ப்புகளும் பெரும்பாலாக நல்ல முறையில் ஆக்கப்பட்டிருக்கின்றன. இப்போதுள்ள நிலைமையில், தமிழில் பத்து நல்ல நாவல்களைத் தேடி எடுக்க வேண்டுமாளுல், அவைகளில் பாதி வங்காள நாவல்களின் மொழிபெயர்ப்புகளா யிருக்கும்.

தமிழ் நாட்டின் இலக்கியச் சரித்திரத்தை ஊன்றிப் பார்த்தால் ஒரு தலைமுறைக் கொருதரம்தான் நல்ல நாவல்

தோன்றும் போல் தெரிகிறது. பிரதாப முதலியார் சரித்திரம் தோன்றி இருபது வருஷங்களுக் கப்புறம்தான் கமலாம்பாள் சரித்திரம் எழுதப்பட்டது; அதற்குச் சுமார் இருபது ஆண்டுகளுக்குப் பின்தான் பத்மாவதி சரித்திரம் பிறந்தது. கடந்த இருபது வருஷங்களுக்குள் தமிழரின் வாழ்க்கை அநேக துறைகளில் மாறுதல்களை அடைந்திருக்கிறது. அரசியல் துறையில் புதுச் சக்திகளும் இயக்கங்களும் தோன்றியிருக்கின்றன; ஏனைய துறைகளிலும் வாழ்வு விரிந்து மாறிக்கொண் டிருக்கிறது. படிப்பு அதிகமாகப் பரவிக்கொண் டிருந்தபோதிலும் அதற்குத் தக்கபடி மக்களிடம் ஒற்றுமை இல்லை. பொதுநல உணர்ச்சியும் கட்டுப்பாடும் குறைந்துகொண்டு வருகின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் வாலிபர்களின் ஊக்கத்தைக் கெடுத்து அவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு கசப்பைக் கொடுத்துக்கொண் டிருக்கிறது. அநேக பேசும் படங்கள் தமிழில் தோன்றி நாடகக் கலையை மாய்த்ததுமன்றி, மக்களின் கலை ருசியையும் ஒழுக்க உணர்ச்சியையும் பாழாக்கிக்கொண்டு வருகின்றன. இப்படி மாறிக்கொண்டிருக்கும் தமிழ் நாட்டின் வாழ்வைப் பிரதிபலிக்கும் உயர்ந்த நாவல்களைக் காணோம். கல்கி எழுதியிருக்கும் 'கள்வனின் காதலி', 'தியாகபூமி' வாசிப்பதற்கு ரஸமாயிருந்த போதிலும், கலைத் திறனுடன் ஆக்கப்பட்ட நாவல்கள் அல்ல.

## சிறு கதைகள்

நல்ல தற்கால நாவல்கள் தமிழில் குறைவாகவேயிருந்த போதிலும், சிறு கதைகள் சென்ற சில வருஷங்களாக ஏராளமாய் எழுதப் பெற்று வருகின்றன. சிறு கதை யென்றால் அளவில் சிறிய நாவல் என்றாவது, நாவல் என்றால் அளவில் பெரியதாயிருக்கும் கதை என்றாவது நினைப்பது தவறு.

சிறு கதை ஒரு தனிப்பட்ட இலக்கியத் தினுசு; இதன் முக்கிய லட்சணங்கள் முன்னால் கூறப்பட்டிருக்கின்றன. தமிழில் முதலாவதாகச் சிறு கதைகளை எழுதினவர் காலஞ் சென்ற வ. வெ. சு. ஐயர். அதற்கு முன்னால் மாதவையா, தமிழ் நாட்டு வாழ்க்கையைப் பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறு கதைகள் எழுதியிருந்தார். இவை சமூகச் சீர்திருத்தப் பிரசாரத்திற்கு எழுதப்பட்டன. ஆர்வத்துடனும் நல்ல இலக்கியச் சுவையுடனும் வ. வெ. சு. ஐயர் தமது சிறு கதைகளை எழுதினார். இவைகளின் நயம் முன்னால் சொல்லப் பட்டிருக்கிறது. இப்போது சிலர் இவைகளின் ஏற்றத்தை உணராமல் குறைவாகவே மதிக்கிறார்கள். இப்படிச் செய்வது முற்றிலும் தவறு. தற்காலத் தமிழ் இலக்கியத்தில் வ. வெ. சு. ஐயரின் கதைகள் நிலைத்திருக்கும்.

கல்கி ஹாஸ்யச் சுவையுடன் நல்ல சிறு கதைகளை எழுதி யிருக்கிறார். இவருடைய இலக்கிய சிருஷ்டியை மொத்தமாகக் கவனித்தால், ஆரம்பத்தில் இவர் எழுதின 'ஏட்டிக்குப் போட்டி', 'சாரதையின் தந்திரம்' முதலிய கதைகளும், நகைச் சுவை ததும்பும் கட்டுரைகளும், பின்னால் எழுதப் பெற்றவைகளைவிட, அதிக நயத்தைப் பெற்றவை. அவைகளில், நவீன நாகரிகத்தாலும், தேசீய இயக்கத்தாலும் மோதுண்ட தமிழரின் வாழ்க்கையைத் தமக்குப் பொருளாகக் கொண்டு, அதன் பல அம்சங்களின் வேடிக்கைகளையும், விநோதங்களையும், விபரீதங்களையும், எளியதாயும் நகைச் சுவை நிரம்பியதாயுமுள்ள ஒரு வசன நடையைக் கையாண்டு, கல்கி நன்றாய்க் காட்டியிருக்கிறார். தமிழர் கல்கியின் மூலம் நகைச் சுவை இன்னதென்று அறிந்து அனுபவித்து வந்தார்கள். நகைச் சுவையுடன் எழுதக்கூடிய தமது சாதுரியத்தைப் பத்திரிகைகளுக்கு வேண்டிய அவசரத்துடனும், பரபரப்புடனும், பிரசார மனப் பான்மையுடனும்,

பல விஷயங்களைப் பற்றி எழுதுவதில் பூராவும் உபயோ கித்து விடாமல், நிதானத்துடனும் நிரந்தரமான இலக்கியத் தன்மையுடனும் கல்கி எழுதவேண்டுமென்று தமிழ் அபிமா னிகள் எதிர்பார்ப்பார்கள்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார் எழுதியிருக் கும் சில சிறு கதைகள் தொகுக்கப்பட்டுப் பிரசுரம் செய்யப் பட்டிருக்கின்றன. குடியின் கேடு, தீண்டாமை விலக்கு இவை போன்ற விஷயங்களை ஜனங்களின் மனத்தில் வலியுறுத்தவே இவர், பல சமயங்களில் இந்தக் கதைகளைப் புனைந்திருந்த போதிலும், அவை நயமாயும், ரஸமாயும், வேகத்துடனும் எழுதப்பட்டிருக்கின்றன.

கடந்த ஐந்தாறு ஆண்டுகளில் நூதன தினுசான சிறு கதைகள் தமிழில் அதிகமாய் எழுதப் பெற்று, மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து வருகின்றன. பத்திரிகைகள் ஏராள மாய் இருப்பது இதற்கு ஒரு காரணம் என்று தெரிகிறது. நல்ல சிறு கதைகள் எழுதியிருப்பவர்களில் 'புதுமைப் பித்தன்', பிச்சமூர்த்தி, பி. எஸ். ராமய்யா, சிதம்பர சுப்பிரமணியன், ரா. ஸ்ரீ. தேசிகன், கு. ப. ராஜகோபாலன், க. நா. சுப்பிரமணியம், கி. வா. ஜகந்நாதன், தி. ஜ. ரங்க நாதன், தி. நா. சுப்பிரமணியன், த. நா. குமாரசுவாமி குறிப் பிடத் தக்கவர்கள். அநேகமாக எல்லாருடைய கதைகளும் தொகுக்கப்பட்டுத் தனி நூல்களாகச் சமீபத்தில் வெளிவந் திருக்கின்றன. இதற்கு முன்னுள்ள சிறு கதைகளில் காணாத சில குணங்கள் இவைகளில் விளங்குகின்றன. சிறு கதை அமைக்கும் கலைப் பண்பு (Technique) மேல்நாட்டு ஆசிரியர்களைப் பின்பற்றி இருப்பதைப் பார்க்கலாம். அநேக உயர்ந்த மேல்நாட்டுச் சிறு கதைகளும் தமிழில் மொழி பெயர்க்கப்பட் டிருக்கின்றன.

நமது நாட்டில் அநேகர், தங்கள் தங்கள் செல்வம், உத்தியோகம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி சௌகரி

யங்களையும் வசதிகளையும் செய்துகொண்டு அவரவர் வாழ்க்கையை நடத்திவந்த போதிலும், லக்ஷக் கணக்கான மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க வீடின்றி, கிராமங்களிலும் நகரங்களிலும் இழி தொழில்கள் செய்து கஷ்டப்படுகிருர்கள். அநேகர் பிச்சை யெடுத்துத் தங்கள் வயிற்றைக் கழுவி, நோய்வாய்ப்பட்டுத் தெருக்களில் அலேந்து திரிவது நகரங்களில் நடைபெறும் ஒரு தினசரி விழா ஆகும். துன்பம் நிறைந்த இவர்களது வாழ்க்கை விடியா இருளா யிருக்கிறது. கற்பனைக் கதைகளைப் புனையும் ஆசிரியர்கள் உயர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் இன்ப துன்பங்களைப் பற்றியே எழுதுவது வழக்கம். மேலே குறிப்பிட்ட எழுத்தாளர்களில் சிலர் வேறு பாதையில் நடக்கலானுர்கள். மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை இவர்கள் மனத்தை இழுத்தது ; கதைகள் எழுதினுர்கள்.

சிறு கதைகளைப் புனையும் திறனை இயற்கையாகவே 'புதுமைப் பித்தன்' பெற்றிருக்கிருர் ; இவர் கதை யுள்ளம் படைத்திருக்கிருர் என்றே சொல்லலாம். அநேக கதைகள் சக்தியுடன் எழுதப்பட் டிருக்கின்றன ; பயங்கரமான காட்சிகளும் சித்திரங்களும் நம் கண்முன் எழுகின்றன. இவர் அரிய கற்பனு சக்தி படைத்திருக்கிருர் ; ஆனுல் இவருடைய வசனம் அதற்குத் தகுந்த செம்மையான இலக்கியக் கருவியாக இன்னும் அமையவில்லை. சிறு கதைக் கலைப் பண்புக்கு, நடையில் அடக்கம் வேண்டும். இடையிடையே வரும் ஆசிரியரின் சொந்த அபிப்பிராயங்கள், விளக்கங்கள், நகைப்புகள், குத்தலான வேடிக்கைகள் இவைகளுக்கு இடம் கிடையாது. போதிய கலைத்திறனைப் பெற்ருல் நாளடைவில் தற்காலத் தமிழ் இலக்கியத்தில் இவர் ஒரு சக்தியாக விளங்கலாம். மேலே குறிப்பிட்ட மற்ற எழுத்தாளர்களின் கதை

களில் சில சிறந்தவை; தற்காலத் தமிழரின் வாழ்க்கைச் சித்திரங்கள். நடை சிறு கதைகளுக்குரிய முறையில் எளியதாயும் சக்தி வாய்ந்ததாயும் இருக்கிறது. கதைகளில் ருசியும் கலைப் பாங்கும் காணப்படுகின்றன.

பொதுவான ஓரிரண்டு விஷயங்களை மாத்திரம் இங்கு சொல்ல வேண்டும். சிறு கதைகள் எல்லாம் சித்திரங்கள். அவைகளை ஆக்குவதற்குக் கலைத்திறன் வேண்டும். அவை வாசிப்போரின் உணர்ச்சியைக் கிளப்பக்கூடியனவாயிருக்கும். அப்படிக் கிளப்பப்படும் உணர்ச்சி, பாவத்தில் ஒருமைப்பட் டிருக்கவேண்டும். இதற்கு வசனம் சில சமயங்களில் கவிதைப் பான்மைக்கு உயரலாம். அப்படி உயர்வது, மேகத்தின் நடுவில் மின்வெட்டுவது போலிருக்க வேண்டும். காவியங்களிலே பொருத்தமாயிருக்கும் உபமானங்களைப் போட்டு நீண்ட வருணனைகளைச் சிறு கதைகளில் புகுத்தக் கூடாது. அடக்கத்துடன் அமைக்கப்பட்ட வாசகம் உணர்ச்சியின் அனலைக் காட்டும். சிறு கதைகளை மாத்திரம் எழுதித் தற்காலத் தமிழ் இலக்கியத்தில் சிறந்த நூலாசிரியர் என்னும் ஸ்தானம் பெற முடியுமா என்பது சந்தேகம்தான். ஆகையால் சிறு கதை ஆசிரியர்கள், மேல்நாடுகளில் எழுதப் பெறும் முறையில் பெரிய நாவல்களைத் தமிழ் நாட்டு வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டு எழுத முன்வர வேண்டும்; அப்போதுதான் அவர்களுடைய புலமை விரிந்து இறுகும்.

## நாடகங்கள்

தமிழில் நாவல்கள் எவ்வளவு அதிகமாய் இருக்கின்றனவோ, அவ்வளவு குறைவாக நாடக இலக்கியங்கள் இருக்கின்றன. இதற்குக் காரணங்கள் பலவுள. கலைவளம் நிரம்பியிருந்த பண்டைக் காலத்திலேயே நாடகங்கள் இல்லை

என்றால், கலைவளம் மங்கியிருக்கும் இக் காலத்தில், அவை இல்லாமல் இருப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. பொதுவாக, கதைகளை நீளமாய் நாவல்களாய் எழுதுவதைவிட நாடகங்களாய் எழுதுவது கடினமானது. ஒரு கதைக்கு நாடக ரூபமும் நாடகத் தன்மையும் கொடுப்பதற்கு, மிகுந்த கற்பனைத் திறனும் ரஸபாவமும் வேண்டும். உணர்ச்சியையும் கதைப் போக்கையும் நாடக பாத்திரங்கள் மூலமாய்க் காட்ட வேண்டுமாதலால், ஆசிரியரின் சொந்தக் கூற்றுக்கு இடமிராது. நாடக அமைப்பு எளிதில் செய்யக் கூடியதல்ல. நாடகத்திற்கு உயிராயுள்ள காட்சி பாவத்தை சிருஷ்டி செய்வது ஓர் அரிய கலை. பாத்திரங்களின் குணவிபாகங்களை அவர்களுடைய சம்பாஷணைகளிலும் நடிப்பிலும் காட்ட வேண்டும்; ஒரே காட்சியில் பல பாத்திரங்கள் நடிக்க நேரிடுமாதலால் அவர்களுடைய குணங்கள் பரிணமித்து நமது கண்முன் விகாசமடைவது, ருசியுணர்ச்சியைத் தழுவியும் தகுந்த ரஸபாவத்தை யுடையதாயும் இருக்க வேண்டும். நாடக பாத்திரங்களின் உணர்ச்சி விம்மும்போதும் விழும் போதும், வாசிப்போரின் மனத்திலும் அதே நிலை உண்டாக வேண்டும்.

சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீயத்தைக் கவிதைப் பகுதியில் கவனித்திருக்கிறோம். வசன நடையில் எழுதப் பெற்ற நாடகங்களில் திரு. ப. சம்பந்த முதலியாரின் நூல்கள் குறிப்பிடத் தக்கவை. அவர் சுமார் நாற்பது நாடகங்கள்வரை இயற்றியிருக்கிறார். பழைய காலத்துக் கதைகளும், தற்காலச் சமூக வாழ்க்கையும் நாடகங்களுக்குப் பொருள்களாய் அமைந்துள்ளன. தமிழ் நாடக மேடை சீர்கேடான நிலைமையில் இருந்ததால், அதை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், அரங்க மேடையில் நடிப்பதற்காகவே இவை எழுதப்பட்டிருக்கின்றன. நடிப்பதற்கு உதவி

யாக, இந்த நாடகங்கள் தமிழ்நாட்டு நடிகர்களுக்கு எழுத்து மூலம் வாசகங்களைக் கொடுத்திருக்கின்றன. நாடக பாவம் இந்நூல்களில் நிறைந்திருக்கிறது. சம்பந்த முதலியாரின் நாடகங்களைச் சிறந்த நாடக இலக்கியங்கள் என்ற முறையில் ஆராய்ச்சி செய்வது உசிதமாய் இராது.

## பத்திரிகைகளும் தமிழ் வளர்ச்சியும்

பத்திரிகைகள் வாயிலாக வசன நடை வளர்ச்சி பெறுவது இயல்பு. சில பாஷைகளில் பத்திரிகாசிரியர்களே வசன நடைக்கு ஆரம்பத்தில் சிருஷ்டி கர்த்தர்களா யிருந்து அதைப் போஷித்திருக்கிறார்கள். ஆங்கில மொழியில், பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய பத்திரிகைகளையும் துண்டுப் பிரசுரங்களையும் எழுதினவர்கள்தான் அம் மொழியிலுள்ள வசன நடைக்கு நேர்மையையும், சக்தியையும், புஷ்டியையும் அளித்திருக்கிறார்கள். ஸ்பெக்டேடர் (The Spectator) என்ற ஒரு பத்திரிகையை அக் காலத்தில் நடத்திய அடிஸன் (Addison), ஸ்டீல் (Steele)என்பவர்கள், தற்கால ஆங்கில வசனத்திற்குத் தந்தையர்களாய் இருந்தார்கள் என்று சொல்வதுண்டு.

தமிழ் நாட்டில் பத்திரிகைகள் தோன்றி சுமார் அறுபது வருஷங்கள் ஆகின்றன. தற்கால நவீன நாகரிகத்தின் ஜீவக் கருவிகளில் பத்திரிகை ஒன்று; அது நமது நாட்டிற்குப் புதிது. அநேக பத்திரிகைகள் தமிழில் தோன்றி ஜனங்களின் அரசியல் உணர்ச்சியையும் அறிவையும் வளர்த்திருக்கின்றன; நவீனக் கலைகள் நாட்டில் பரவுதற்கு ஒருவாறு உதவியும் செய்திருக்கின்றன. பெரும்பான்மையான மக்களுக்கு எழுத்தறிவு இல்லாததால் பத்திரிகைகளின் வளர்ச்சி தடைப்பட்டு, மிக மெதுவாய் நடைபெறுகிறது. இன்று தமிழ்ப் பத்திரிகைகளுக்குப் போதிய வசதிகளும்,

பொதுஜன ஆதரவும் இல்லை; பலவிதமான இடையூறுகளும் இருக்கின்றன. ஆங்கிலம் கற்றவர்கள் தமிழ்ப் பத்திரிகைகளைப் படிப்பதில்லை; ஆனால் அவர்கள் பேசுவது எல்லாம் தேசியம்தான். அபிப்பிராய பேதங்கள் இருப்பது இயல்பு என்று உணரும் மனப்பான்மை நாட்டில் வெகுவாகப் பரவாததால், ஜனங்கள் தங்கள் கொள்கைகளுக்கு மாறுபட்ட கருத்துக்களை எழுதும் பத்திரிகைகளைப் படிப்பதில்லை. இருந்தபோதிலும், மக்களிடம் கல்வியும் அரசியல் உணர்ச்சியும் இன்னும் வளர வளர, தமிழ்ப் பத்திரிகைகள் சக்தி பெற்று உன்னதமான நிலைமையை அடையும் என்பதில் ஐயம் இல்லை.

தமிழ்ப் பத்திரிகைகள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ் வசன நடையின் முன்னேற்றத்திற்கும் ஒரு நல்ல சாதனமாய் இருந்திருக்கின்றன. தமிழ் வசன நடையைத் திறமையுடன் கையாண்ட பாரதியும், வ. வெ. சு. ஐயரும் பத்திரிகைத் தொழிலில் கொஞ்ச காலம் கலந்து கொண்டிருந்தார்கள். பாரதியின் அநேக கட்டுரைகளையும் கதைகளையும் வெளியிட்ட பெருமை 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு உரியது. திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரும், வ. வெ. சு. ஐயரும், 'தேச பக்தன்' பத்திரிகையின் மூலம் தமிழ் வளர்ச்சிக்குச் சேவை புரிந்திருக்கிறார்கள். இன்று கதைகள் எழுதுவதில் திறம் பெற்றவர்கள் பத்திரிகைகள் மூலமாகவே எழுதிக்கொண்டிருக்கிறார்கள். கம்பன் கவிநயத்தைப் பற்றி பி. ஸ்ரீ. ஆசார்யார் பத்திரிகைகளில் பல வருஷங்களாக எழுதியிருக்கிறார். 'இதய ஒலி' என்னும் நூலில் திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் எழுதியிருக்கும் நல்ல கட்டுரைகளும் பத்திரிகைகளில் வெளிவந்தன. தமிழர் வாழ்க்கை சம்பந்தமான நல்ல சித்திரங்கள், 'எஸ். வி. வி.,' 'வ. ரா.' இவர்கள் பத்திரிகைகளில் வரைந்துகொண்

டிருக்கிறார்கள். இவை 'வாழ்க்கையே வாழ்க்கை', 'நடைச் சித்திரம்' என்ற மகுடங்களுடன் புத்தகங்களாக வெளிவந்திருக்கின்றன. கடந்த பல வருஷங்களாகத் தமிழ்ப் பத்திரிகைகள் மூலம் அநேக கட்டுரைகளை எழுதி, தமிழரின் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டு, அதிலுள்ள குறைகளை நகைத்தும் கண்டித்தும் வரும் 'வ.ரா.' தமிழ் வசன நடைக்கு ஒரு புதிய சக்தியையும் பொலிவையும் அளித்திருக்கிறார். இன்னும் பல அறிஞர்களும் எழுத்தாளர்களும் தங்களுடைய கட்டுரைகளைப் பத்திரிகைகள் மூலம் வெளியிடுகிறார்கள்.

பத்திரிகைகள் தமிழ் வசன நடைக்கு ஒருவிதமான லாகவத்தைக் கொடுத்திருக்கின்றன. அவை பல புதிய வார்த்தைகளைத் தமிழுக்குக் கொண்டு சேர்த்திருக்கின்றன. அவசியத்தின் நிமித்தம் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் சொல்லாக்கப் புலவர்களாக நேரிடுகிறது; மொத்தத்தில் இந்த வேலையை அவர்கள் நன்றாய்ச் செய்திருக்கிறார்கள். கடந்த ஐம்பது ஆண்டுகளில் தமிழுக்குப் புதிய சொற் செல்வத்தை அதிகமாய்த் தேடிவைத்த பெருமை தமிழ்ப் பத்திரிகைகளுக்கே உரியது. பத்திரிகை ஆசிரியர்கள், அறிஞர்களின் மகாநாடுகளைக் கூட்டிப் பண்டை நூல்களைச் சோதனைசெய்து நிகண்டுகளைப் புரட்டிப் புதுச் சொற்களை ஆக்குவதில்லை; புதிய கருத்துக்களைச் சொல்லப் புதிதான வார்த்தைகளைக் கண நேரத்தில் தயார் செய்துவிடுவார்கள். இவைகளில் அநேகம் நன்றாயும் தெளிவாயும் இருப்பதுமன்றி இலக்கியத்திலும் சேர்ந்துவிடும். இந்த அம்சத்தில் இலக்கிய வளர்ச்சிக்குப் பத்திரிகைகள் செய்யும் சேவை போற்றத்தக்கது.

## VI

# முடிவுரை

இதுவரை செய்த ஆராய்ச்சியிலிருந்து தமிழரின் தற்கால இலக்கியச் செல்வத்தின் வளமும் போக்கும் ஒருவாறாகத் தெரியவரும். விசேஷ அருள் வாய்ந்த புலவர்களை நோக்கினால் சுப்பிரமணிய பாரதி ஒருவரையே பார்க்கலாம். வசனகர்த்தர்களும் மிகச் சிலரே இருக்கிறார்கள்.

தற்காலத் தமிழ் இலக்கிய சம்பந்தமாக, முன் பகுதிகளில் பொருத்தமாகச் சொல்லக்கூடாத சில விஷயங்களை இங்கு குறிப்பிடலாம். தமிழ் வளர்ச்சிக்கு ஆங்கிலப் பாதிரிகளில் சிலர் அரும்பாடு பட்டிருக்கிறார்கள். இவர்களில் தலை சிறந்தவர் கால்ட்வெல். அவர் திருநெல்வேலிச் சீமையில் 'பிஷப்'பாக இருந்தவர். அவர் எழுதிய இலக்கண நூல் (Comparative Dravidian Grammar) அவருடைய கூர்மையான ஆராய்ச்சித் திறனையும் விரிந்த பாண்டித்தியத்தையும் காட்டுகிறது. அதற்கப்புறம், அது போன்ற சிறந்த ஓர் ஆராய்ச்சி நூல் வெளிவரவில்லை. தமிழ் மீது டாக்டர் போப்புக்கு உண்டான ஆர்வத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவர் திருக்குறள், நாலடியார், திருவாசகம் முதலிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். கீர்த்தி பெற்ற ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் தமிழ்ப் போதகாசிரியராக இருந்தார்.

காலஞ் சென்ற மகா மகோபாத்தியாய ம. வே. ராமானுஜாசாரியார் வியாஸ பாரதம் பூராவையும் தமிழில் மொழிபெயர்த்துப் பதிப்பித்தது ஒரு முக்கியமான நிகழ்ச்சி. பாரதத்தைக் காவியங்களாகத் தமிழில் பெருந்தேவனாரும்,

வில்லிபுத்தூராரும், நல்லாப்பிள்ளையும் ஆக்கியிருக்கிறார்கள். உலகத்திலுள்ள மிகப் பெரிய நூலும், பாரத நாட்டின் பண்டை நாகரிகத்தின் களஞ்சியமுமாயுள்ள பாரதம் முழுவதற்கும் வசனத்தில் தமிழ் மொழிபெயர்ப்பு கொடுத்தவர் தமிழ் இலக்கியத்திற்கு அரிய சேவை செய்திருக்கிறார். இது போல் வால்மீகி ராமாயணத்திற்கும் மொழிபெயர்ப்புகள் ஸ்ரீ நடேச சாஸ்திரிகளாலும், நரசிம்மாசாரியாராலும், ஸி. ஆர். ஸ்ரீநிவாஸையங்காராலும் வேறு வித்துவான்களாலும் செய்யப்பட்டிருக்கின்றன. மகாகவியான வால்மீகியைத் தமிழர் படித்து இன்புறுவதற்கும், அவரைத் தக்க முறையில் கம்பனுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் இந்த மொழி பெயர்ப்புகள் மிகவும் பயன்படும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் தயாரிக்கப்பட்ட தமிழ் 'லெக்ஸிகன்' என்ற மிகப் பெரிய அகராதி வெளிவந்திருப்பது, குறிப்பிடத்தக்க ஒரு பெரிய நிகழ்ச்சி. இதைப் பதிப்பித்த திரு. எஸ். வையாபுரிப் பிள்ளைக்கும், அவருக்குத் துணையாயிருந்த பல வித்துவான்களுக்கும் தமிழ் உலகம் கடமைப்பட்டிருக்கும். அதில் சாதாரணமாகப் பேச்சில் வழங்கும் எல்லாச் சொற்களும் சேர்க்கப்பட்டிருப்பது போற்றத்தக்க அம்சங்களில் ஒன்று. இந்த அகராதிக்கு 'Concise Oxford Dictionary' போன்ற ஒரு நல்ல சிறு பதிப்பு அவசியம். தமிழிலுள்ள அகராதிகளின் சரித்திரத்தைப் பற்றி, திரு. வையாபுரிப் பிள்ளை நயமுள்ள ஒரு சிறு நூலை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார்.

தமிழ் வளர்ச்சிக்காக ஆங்காங்கே பல சங்கங்கள் தோன்றி வேலை செய்துவருகின்றன. இவைகளில் மதுரைத் தமிழ்ச் சங்கம் முதன்மையானது; அது செய்திருக்கும் சேவை பாராட்டத் தக்கது. கரந்தைத் தமிழ்ச் சங்கமும் தமிழ் வளர்ச்சிக்காக வேலை செய்திருக்கிறது.

மொத்தமாகக் கருதுமிடத்து, தமிழிலுள்ள தற்கால இலக்கியம் வளத்திலும், புஷ்டியிலும் குறைவுபட்டிருக்கிறது என்பதை எளிதில் காணலாம். தமிழரின் கலைவாழ்வைச் சில நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து, அதை நாளடைவில் மங்கச் செய்து, அதிலிருந்த ஜீவ ஒளியையும் சுவையையும் மாய்த்த க்ஷீணம் இன்னும் அகன்றபாடில்லை. பண்டைத் தமிழரின் சமுதாயத்திற்கு ஒரு பேரொளியையும் பரிபூரணத் தன்மையையும் அளித்த வீரமும், ஆர்வமும், வாழ்க்கையினின்று இன்பத்தை நுகரும் தாகமும், இப்போது தமிழரின் வாழ்வில் மறைந்திருக்கின்றன. பிற்காலத்தில் தோன்றி, அவர்களின் மனப்பரப்பைச் சுருக்கி இறுகச் செய்த மதாசார வேறுபாடுகளும் பழக்க வழக்கங்களும், இன்றும் குடிகொண்டு, சமுதாயத்தைப் பல துறைகளிலும் பந்தப்படுத்திக்கொண் டிருக்கின்றன. நவீன நாகரிகத்தின் உள்ளொளியைப் பூராவும் பருகவும், விஞ்ஞான சாஸ்திர அறிவால் விளையும் சக்தியை எல்லா அம்சங்களில் பெறவும், முடியாமல் தமிழர் தத்தளித்துக்கொண் டிருக்கிறார்கள். தமிழரின் வாழ்வு, இப்போது தேய்ந்து உயிரற்று இருப்பது போல், அவர்களுடைய சரித்திரத்தில் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை.

நமது கண்ணெதிரே மற்ற நாடுகளும் சமுதாயங்களும் அதி வேகமாக முன்னேற்ற மடைந்தும், தங்களுடைய கலைகளைச் செழிக்கச் செய்துகொண்டிருந்தும், தேசீய சுதந்தரமின்மையாலும், வெகு காலமாய் நமக்குப் பிதுரார்ஜிதமாயிருந்து, நல்ல ஊக்கத்தையும் முயற்சியையும் கெடுக்கக்கூடிய 'எல்லாம் ஈசன் செயல்' என்ற அசட்டு ஞானப்பித்தால் சமுதாயத்தில் ஏற்பட்ட மந்தத்தாலும், நாம் சீக்கிரம் அபிவிருத்தி அடைய முடியவில்லை. பத்தியம் சாப்பிடும் நோயாளி ஒருவன், தன்னைச் சுற்றியுள்ளவர்கள் ருசியான

பண்டங்களைத் தின்னும்போது, சபலத்துடனும் கிலேசத்துடனும் பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பது போல் நமது நிலை இருக்கிறது. ஆகையால் நமது கலை வாழ்வு குன்றியிருப்பதில் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. இருந்தபோதிலும், முன்னேற்றக் குறிகள் காணப்படுகின்றன. கடந்த அறுபது வருஷ காலத்தில் தமிழ் நாட்டில் நிகழ்ந்திருக்கும் இலக்கிய வளர்ச்சியைக் கவனித்தால், வருங்காலத்தைப் பற்றி நம்பிக்கையே உதிக்கிறது.

தமிழரின் கலைகள், சில பண்டைக் கால இலக்கியங்களைத் தவிர, பெரும்பாலும் சமயங்களாலும், சமய இயக்கங்களாலும் விளைந்த சக்திகளால் ஆக்கப்பட்டன என்று முன்னால் கூறப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் சமயங்களும் சமய இயக்கங்களும் ஒளி குன்றி உயிரற்றுத் தளர்ந்து போனதால், அவற்றால் கலை வளர்ச்சியையும் இலக்கிய வளர்ச்சியையும் அபிவிருத்தி செய்ய மார்க்கம் இல்லை. வருங்காலத்தில், சமயத்திற்குப் பதிலாகச் சுதந்திர வாழ்வினாலும், நவீன விஞ்ஞான சாஸ்திரங்களைத் தழுவிய நாகரிக வாழ்வினாலும் விளையும் சக்திகளாலும் இயக்கங்களாலும் தமிழரின் கலை வாழ்வு ஆக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

வருங்காலத்தில் கல்வி பெருகப் பெருக, தமிழரிடம் பிறந்திருக்கும் நூதன இலக்கிய உணர்ச்சி வலுத்து, இலக்கியத் தன்மை, முறைகள், உறுப்புக்கள், இவைகளின் தாரதம்யங்களைப் பற்றி, அறிவாளிகள் கோஷ்டியில் திட்டமான அபிப்பிராயங்கள் ஏற்படும். தமிழ் நூல்கள் பல துறைகளிலும் ஏராளமாய் எழுதப்படும். இலக்கிய ஆராய்ச்சிக் கலை செழித்தோங்கி ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாயும் துணையாயும் இருக்கும். உண்மையான கற்பனா சக்தியையும் நவீன நாகரிக ஒளியின் ஆற்றலையும் படைத்த ஆசிரியர்களையே ஜனங்கள் நோக்குவார்கள். வசன நடைக்கு உயர்வு ஏற்படும்.

அதில் அரிய நூல்கள் தோன்றும். வாழ்க்கையின் பலவித அழகுகளையும், வர்ணங்களையும், பகட்டுகளையும், தித்திப்புகளையும், கசப்புகளையும், மாறுதல்களையும், நாவல்களும் சிறுகதைகளும் காட்டும். கவிகள் புதிய ஆர்வத்துடன் நவீன வாழ்க்கையின் இன்பத்தைப் பாடிக் காவியங்களைச் சிருஷ்டிப்பார்கள். மங்கிப் போயிருக்கும் தமிழரின் சௌந்தரிய உணர்ச்சி மறுபடியும் பிரகாசித்து அவர்களுடைய கலைகளுக்குப் புத்துயிரையும் திவ்ய ஜோதியையும் அளிக்கும்.

3713

# பெயர் அட்டவணை


பக்கம்

அசோகன் 144
அடியார்க்கு நல்லார் 23, 24
அடிஸன் 171
அண்ணாமலை ரெட்டியார் 43
அபுல்காஸிம் மரக்காயர் 42
அப்பய தீக்ஷிதர் 34
அப்பர் 7, 82
அருணகிரிநாதர் 43
அருணாசலக் கவிராயர் 43
அருள் நந்தி சிவாசாரியார் 21
அலாவுதீன் 29
ஆசார்யார், பி. ஸ்ரீ. 172
ஆண்டாள் 11, 82, 85
ஆழ்வார்கள் பன்னிருவர் 8
ஆளவந்தார் 21
ஆறுமுக நாவலர் 116
ஆனந்தரங்கப் பிள்ளை 116
இராமலிங்க சுவாமி 34, 73, 82, 116, 146
இராமாநுஜர் 21, 29
இளங்கோவடிகள் 145
இளம்பூரணர் 23
உமர்கய்யாம் 99
உமறுப் புலவர் 42
எமர்ஸன் 144
'எஸ். வி. வி.' 172-73
ஐயர், வ. வெ. சு. 27, 80, 118, 140-145, 146, 158, 159, 160, 166, 172.
ஒட்டக்கூத்தர் 27, 124, 154

பக்கம்

ஔவையார் 124
கச்சியப்பர் 28
கடிகை முத்துப் புலவர் 42
கம்பர் 10, 26, 27, 70, 112, 124, 145, 154, 158, 159, 160
கரிகாலன் 6
கலியாணசுந்தர முதலியார், திரு. வி. 172
கலிலியோ 47
'கல்கி' 165, 166, 167
கல்லாடர் 23
கவி குஞ்சர பாரதி 40
கனகசபைப் பிள்ளை 157
கால்ட்வெல் 157, 174
காளமேகம் 124
காளிதாசர் 145
கிப்பன் 117
கிருஷ்ணசாமி ஐயங்கார் 157
கிருஷ்ணதேவராயர் 31
கிருஷ்ண பிள்ளை 63, 69, 72, 73, 159
கிருஷ்ணையர், திருக்கோடிகாவல் 40
குப்புசுவாமி முதலியார் 162
குமரகுருபரர் 34
குமாரகம்பனன் 30
குமாரசாமிப் பிள்ளை, சுன்ணாகம், அ. 53
குமாரசுவாமி, த. நா. 167
கோதைநாயகி அம்மாள் 162

பக்கம்
கோபாலகிருஷ்ண பாரதி 43
கோபிநாத ராவ் 157
சங்கரர் 20
சந்தா சாகிப் 32
சந்திரகுப்தன் 144
சபாபதி நாவலர் 158, 159
சம்பந்த முதலியார், ப. 170
சயங்கொண்டார் 28, 154
சரத் சந்திர சட்டர்ஜி 164
சரப சாஸ்திரிகள் 40
சாக்ரடீஸ் 144
சாமா சாஸ்திரி 40
சாமிநாதையர், மஹாமஹோபாத்தியாய, டாக்டர், உ. வே. 59, 145, 148-50
சாயனர் 33
சார்லஸ் கார்வைஸ் 162
சிதம்பர சுப்பிரமணியன் 167
சிதம்பரநாத முதலியார், டி. கே. 172
சிவஞான முனிவர் 34, 41
சுத்தானந்த பாரதியார், சுவாமி 112, 145-47
சுந்தரம் பிள்ளை 63, 68, 84, 114, 157, 170
சுப்பராம ஐயர் 40
சுப்பிரமணிய ஐயர், பட்டணம் 40
சுப்பிரமணிய தேசிகர் 118
சுப்பிரமணிய பாரதி 63, 73-98, 103, 110-112, 118, 135-40, 141, 172
சுப்பிரமணிய முதலியார், வெ. ப. 113, 114
சுப்பிரமணியம், க. நா. 167
சுப்பிரமணியன், தி. நா. 167

பக்கம்
சூரியநாராயண சாஸ்திரியார், வி. கோ. 113, 150-52
செக்ஸ்டன் ப்ளேக் 163
செயத்காதர் மரக்காயர் 42
செயின்ட்ஸ்பரி 135
செல்வக் கேசவராய முதலியார் 159
சேக்கிழார் 10, 27
சேனாவரையர் 23
சேஷையர், கே. ஜி. 157
ஞான சம்பந்தர் 7, 82
டாந்தே 145
டி க்வின்சி 127
தாண்டவராய முதலியார் 116
தாமோதரம் பிள்ளை, ராவ் பகதூர், சி. வை. 59, 118
தாயுமான ஸ்வாமிகள் 34
தியாகையர் 40
திரிகூடராசப்பகவிராயர் 43
திருத்தக்க தேவர் 10
திருமலை நாயக்கன் 37
திருவள்ளுவர் 4, 145
துரைசாமி ஐயங்கார் 162
தேசிகவிநாயகம் பிள்ளை 98-102
தேசிகன், ரா. ஸ்ரீ. 167
தோலாமொழித் தேவர் 10
நல்லாப் பிள்ளை 175
நாயனு பிள்ளை 40
நாயன்மார்கள் 9, 27
நெடுஞ் செழியன் 6
பங்கிம் சந்திர சட்டர்ஜி 164
பரஞ்சோதி முனிவர் 28
பரிமேலழகர் 23, 24
பவானந்தம் பிள்ளை 57

பக்கம்
பாரதிதாசன் (கனக-சுப்பு ரத்தினம்) 98, 102-112
பாஸ்வெல் 150
பிச்சமூர்த்தி 167
பிராட்லி 117
பிலிப்ஸ் ஓப்பன்ஹிம் 163
புகழேந்தி 27, 124
புக்கர் வாஷிங்க்டன் 144
'புதுமைப் பித்தன்' 167, 168, 169
புஷ்பவனம் 40
பெரிய வாச்சான் பிள்ளை 24
பெரியாழ்வார் 11, 80, 85
பெருந்தேவனார் 174
பெர்டிரான்டு ரஸ்ஸல் 117
பெர்னார்ட் ஷா 117
பேராசிரியர் 23, 24
போப், டாக்டர் 113, 114, 174
ப்ரூனோ 47
ப்ரேம்சந்த் 164
ப்ளேடோ 144
மகா வைத்தியநாதையர் 40
மலிக்காபர் 29, 30
மாணிக்கவாசகர் 7, 82
மாதவையா, அ. 163, 166
மாத்வாசாரியார் 21
மில்டன் 114
மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, மகாவித்வான் 41, 118, 149
மீனாக்ஷி ராணி 32
முகமது துக்லாக் 30
நக்கீரர் 23
நச்சினார்க்கினியர் 23, 24
நடேச சாஸ்திரிகள் 175
நரசிம்மாசாரியார் 175

பக்கம்
முத்துசாமி தீக்ஷிதர் 40
முத்துத்தாண்டவர் 40
மெக்கியவல்லி 92
மெய்கண்டதேவர் 21
ரகுநாத சேதுபதி, மன்னர் 42
ரங்கநாதன், தி. ஜ. 167
ரங்கராஜு 162
ரவிவர்ம குலசேகரன் 30
ரவீந்திரநாதர் 74, 135, 139, 146, 164
ரஸ்கின் 117, 127
ராகவையங்கார், மு. 157
ராகவையங்கார், மஹா வித்வான், ரா. 113, 114, 157
ராபர்ட் பால் 117
ராம அமாத்யர் 39
ராமலிங்கம் பிள்ளை, நாமக்கல் 112
ராமானுஜாசாரியார், மஹா மஹோபாத்தியாய, ம. வே. 174
ராமையா, பி. எஸ். 167
ராஜகோபாலன், கு. ப. 167
ராஜகோபாலாசாரியார், சக்கரவர்த்தி 55, 167
ராஜமையர், பி. ஆர். 118, 128-135, 160, 163
லிட்டன் பிரபு 64
'வ. ரா.' 172, 73
வால்மீகி 112, 159
விக்டர் ஹ்யூகோ 146-147
வில்லிபுத்தூரார் 28, 93, 175
வில்லியம் லாக்வே 163
வீணை தனம் 40
வீர பல்லாலன் 30
வீரமாமுனிவர் 42, 116

பக்கம்
வீராசாமி செட்டியார், அஷ்டாவதானம் 118, 124-128, 135
வெங்கையா 157
வெல்ஸ், எச். ஜி. 117
வேங்கடமாகி, பண்டித 39
வேதநாயகம் பிள்ளை, மாயூரம் 69, 113, 118-124, 135, 159, 163
வேதாசலம், சுவாமி 150, 151
வேதாந்த தேசிகர் 34
வையாபுரிப் பிள்ளை, எஸ். 175
ஜகந்நாதன், கி. வா. 167

பக்கம்
ஜான் பன்யன் 69
ஜான்ஸன், டாக்டர் 150
ஸ்ரீநிவாஸம் பிள்ளை, கே. எஸ். 157
ஸ்ரீநிவாஸையங்கார், பி. டி. 157
ஸ்ரீநிவாஸையங்கார், ஸி. ஆர். 175
ஷெல்லி 86, 128, 135
ஷேக்ஸ்பியர் 117
ஸ்டீல் 171
ஹல்ஷ் 157
ஹிட்லர் 49, 92
ஹோமர் 159

3713